
# பிரதேச செயலக
# புதிய கட்டடத் திறப்பு விழா
# சிறப்பு மலர்



## வடமராட்சி வடக்கு
## பருத்தித்துறை
## 2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலக

# புதிய கட்டடத் திறப்பு விழா

## சிறப்பு மலர்

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம்
பருத்தித்துறை

வடமராட்சி வடக்கு,

பருத்தித்துறை.

யாழ்ப்பாணம்
விசேட சேர்க்கைப் பகுதி

2008

பொதுசன நூலகம்
-9 AUG 2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| மலரின் பெயர் | :- | பிரதேச செயலக புதிய கட்டடத் திறப்பு விழா சிறப்பு மலர். |
| உரிமை | :- | பிரதேச செயலகம் வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை. |
| பதிப்பு | :- | 2008 யூலை, 14 |
| அட்டை வடிவமைப்பு | :- | திரு ஸ்ரூடியோ, பருத்தித்துறை. |
| கணனி வடிவமைப்பு | :- | திருமதி. சி. பத்மலோஜினி. |
| அச்சுப்பதிப்பு | :- | தமிழ்ப்பூங்கா அச்சகம்,<br>பிரதானவீதி, நெல்லியடி, கரவெட்டி. |
| அளவு | :- | 182 x 257 |
| பிரதிகளின் எண்ணிக்கை | :- | 500 |
| பக்கங்கள் | :- | XII + 195 |
| Title | :- | Pirathesa Seyalaka Puthiya Kaddada<br>Thirappu Vizha Sirappu Malar. |
| Copy Rights | :- | Divisional Secretariat,<br>Vadamaradchi North,<br>Point Pedro. |
| Edition | :- | 2008, July, 14. |
| Cover design & Art | :- | Thiru Studio, Point Pedro. |
| Computer Design | :- | Mrs. S. Pathmaloginy. |
| Printers | :- | Tamil Poonka Printers<br>Main Street, Nelliady, Karaveddy. |
| Size | :- | 182 x 257 |
| No of Copies | :- | 500 |
| Pages | :- | XII + 195 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி வடக்கு
# பிரதேச கீதம்

பல்லவி

வாழ்க பல்கலை வளம் தரும் ஆலயம்
வாழ்க வளருக வாழியவே வாழியவே

**அனுபல்லவி**

உள நலம் தானறியும் உன்னத நிர்வாக
வள நிறை கோயில் வனப்புடன் வாழியவே

**சரணம்**

கடல் பனை வளமிகு துறைமுக மடியில்
கலங்கரை கோபுர உயர் முடி வீடு
வடமராட்சி வடபிரதேசம் நாளும்
உயர்வொடு செயலகம் எழும் தினம் நீடு - வாழியவே

தலமது சிறக்கவே! நலமது பெருகவே!
புலம்புகழ் பேறுயர் கல்லூரி தன்னோடு
கலைமிளிர் முத்தமிழ் வித்தகர் உருவாகும்
நிலைதனை பகரும் திருமுக பெறு பூமி - வாழியவே

அருங்கலை கவினுயர் ஆடல் பாடல்
தருமுடற் பயிற்சி தக்கதற் கலையும்
விருப்புடன் வேண்டி விளையுமே மேன்மை
இருப்பினை தன்னகம் ஊற்றென தருமே - வாழியவே

வித்தகர் வான்புகழ் சத்தியம் தான் குறி
சித்திகள் எழுபலர் சொத்துக ளாயுளோர்
எத்தனை செழுமை எம்மனம் புகழும்
நித்தியம் வாழ்த்தும் நிதமறி வோமே - வாழியவே

**ஆக்கம் :**

**அல்வையூர் கே. ஆர், திருத்துவராஜா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி வடக்கு பிரதேச மலர்க்குழு

- திரு. இ. வரதீஸ்வரன் - பிரதேச செயலாளர், தலைவர்.
- திருமதி. உஷா சுபலிங்கம் - உதவி பிரதேச செயலாளர்
- திருமதி. சுகுணலினி விஜயரத்தினம் - கலாசார அலுவலர், மலர் ஆசிரியர்.
- திரு. மு. சிறீபதி - ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர்.
- திரு. பா. மீனாட்சிசுந்தரம் - ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்
- திரு. இரா. பஞ்சலிங்கம் - திரைப்பட, நாடக, சாஹித்திய எழுத்தாளர்.
- திரு. பா. இரகுவரன் - ஆசிரியர் யா / ஹாட்லிக்கல்லூரி.
- திரு. சி. சிவபாலசிங்கம் - கிராம அலுவலர்.
- திரு. இ. அன்ரனி - சமுர்த்தி முகாமையாளர்.

## காணிக் கொள்வனவுக்குழு

- திரு. ந. சோமசுந்தரம் - ஓய்வுபெற்ற பரு. நகராட்சி மன்ற செயலாளர்.
- திரு. வ. பழனிவேல் - ஓய்வுபெற்ற தபாலதிபர்.
- திரு. க. முருகையா - நிர்வாக அலுவலர்
- திரு. ந. கணேசலிங்கம் - விவாகப் பதிவாளர்
- திரு. எஸ். சின்னையா - ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்.
- திரு. ஆ. நடராசா - தொண்டைமானாறு சமூகத் தொண்டர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி வடக்கு பிரதேச மலர்க்குழு



இருப்பவர்கள் (இ – வ) :– திருமதி. சு. விஜயரத்தினம், திரு. இரா. பஞ்சலிங்கம் திரு. இ. வரதீஸ்வரன், திருமதி. உ. சுபலிங்கம், திரு. மு. சிறீபதி

நிற்பவர்கள் (இ–வ) :– திரு. சி. சிவபாலசிங்கம், திரு. இ. விக்னேஸ்வரமூர்த்தி, திரு. பா. மீனாட்சிசுந்தரம், திரு. இ. அன்ரனி , திரு. பா. இரகுவரன்.

## பிரதேச செயலக காணிக் கொள்வனவுக் குழு



இருப்பவர்கள் (இ – வ) :– திரு. ப. பழனிவேல், திரு. ந. சோமசுந்தரம், திரு. இ. வரதீஸ்வரன் (பி.செ), திரு. க. முருகையா, திரு. ந. கணேசலிங்கம்.

நிற்பவர்கள் (இ–வ) :– திரு. எஸ். சின்னையா, திரு. ஆ. நடராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் உள்ளே...


| | பக்கங்கள் |
|---|---|
| ☞ ஆசிச் செய்திகள் | |
| ☞ வாழ்த்துச் செய்திகள் | |
| ☞ பிரதேச செயலரின் உள்ளத்திலிருந்து.... | |
| ☞ மலர் ஆசிரியரின் இதயத்திலிருந்து.... | |
| ☞ பிரதேச செயலாளரின் அறிக்கை | 01 - 08 |
| ☞ வடமராட்சி வடக்குப் பிரதேச செயலக வரலாற்றுப் பின்னணிகள் | 09 - 19 |
| ☞ பிரதேச செயலகத்தின் செயற்பாடுகள் | 20 - 32 |
| ☞ சமூக சேவைப் பிரிவின் கீழ் பிரதேச செயலகங்களினால் ஆற்றப்படும் சமூக சேவை உதவிகள் | 33 - 36 |
| ☞ வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவையின் வளர்ச்சிப் பாதையில்.... | 37 - 45 |
| ☞ வடமராட்சி வடக்கு பிரதேச மட்ட சிறுவர் செயற்பாடுகள் | 46 - 55 |
| ☞ சுனாமி அபிவிருத்தித் திட்டங்களும், சமூக பொருளாதார மாற்றங்களும் | 56 - 70 |
| ☞ கவிதை "அரச சேவையில் காலத்தின் தேவை" | 71 - 72 |
| ☞ சிறுகதை "முன்மாதிரியாய்....." | 73 - 78 |
| ☞ மறைந்துபோகும் தெருமூடி மடங்களும், யாழ்ப்பாணத் தமிழரது - பண்பாட்டு விரிசல்களும். | 79 - 86 |
| ☞ 'அண்ணாவி தம்பையா' - கலைஞனின் வாழ்வினூடாக - 'விலாசக் கூத்து' பற்றிய ஒரு பார்வை. | 87 - 92 |
| ☞ நெஞ்சை விட்டகலாத மறைந்த கலைஞர்கள் | 93 - 100 |
| ☞ எல்லோருக்கும் கல்வி - என்ற இலக்கிற்கு ரியூசன் சவாலா? / விடியலா? | 101 - 108 |
| ☞ நிலைமாற்றச் சடங்குகளுக்கிடையிலேயும், நிலைமாறா சமூக அமைப்புக்கள் - மாதனைக் கிராமத்து 'புதுமனைப் புகுதல்' - ஒரு மானிடவியல் நோக்கு. | 109 - 112 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ வடமராட்சியின் கலாசாரப் பாரம்பரியம்மிக்க வீட்டு முகப்புகளும்,
- நாற்சார் வீட்டின் அமைப்புத் தோற்றமும், பயன்பாடும். 113 - 118

☞ வடமராட்சி வடக்கில் நாட்டுக் கூத்து 119 - 123

☞ வடமராட்சி வடக்கின் பாரம்பரிய கலைகள் சில... 124 - 127

☞ வடமராட்சி வடக்கு பிரதேச செயலகப் பிரிவில்
- றோமன் கத்தோலிக்க திருமறை. 128 - 138

☞ பொது நிர்வாகத் துறையில் மீள் - பொறிமுறை நிர்வாகம் 139 - 149

☞ வடமராட்சி பிரதேசத்தை உள்ளிட்ட இயற்கை வளங்கள்
- ஓர் மீள்நோக்கு..... 150 - 161

☞ காணி மாவட்ட பதிவகங்களின் செயற்பாடுகளும், பணிகளும் 162 - 165

☞ மனித நேயத்தை எடுத்தியம்பும் பண்பாட்டுச் சின்னங்கள் 166 - 167

☞ தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய
- சித்திரத் தேர்ச் சிற்பங்கள் 168 - 169

☞ வடமராட்சியின் தனித்துவம் மிக்க இயற்கைத் தோற்றங்கள் 170 - 171

☞ வடமராட்சி வடக்கிலுள்ள மக்களால் ஆக்கப்பட்ட நூல்கள் 172 - 178

☞ வடமராட்சியில் சிறுதெய்வ வழிபாடு 179 - 190

☞ வடமராட்சி மண்ணின் சாதனையாளர்கள் 191 - 193

☞ நன்றிகள் 194 - 195



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்

# பிரதம குருமார்களின் நல்லாசிகள்!



அன்புடையீர்!

"கநகரஜித சக்ரம் பாசுராரம்ய சக்ரம், கிரிவரகுருசக்ரம்,
கேசவஸ்வாமிஸ் சக்ரம், அசுரநிதன சக்ரம்,
- காலதண்டாக்னிசக்ரம்,
பவது பவதுசக்ரம், பாந்த்தவவோவிஷ்ணு சக்ரம்,!!

அவனருளாலே அவன்தாழ் வணங்கி.



எல்லாம் வல்ல எம்பெருமான் வல்லிபுரச்சக்கரமாயவன் தாழ்பணிந்து வடமராட்சி வடக்கு வாழ் மக்களுக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையாக இருந்து செயலாற்றி தற்போது பிரதேச செயலகம் என உயர்வடைந்துள்ள அரசாங்க சேவையானது, நிரந்தரக்கட்டடம் ஒன்றில்லாத பெருங்குறையுடன் செயலாற்றி வந்துள்ளது. இக்குறையை நிவர்த்திக்கும் முகமாக 2004 ஆண்டு மார்ச் மாதமளவில் பொதுமக்கள், நலன் விரும்பிகளின் பங்களிப்புடன் சொந்தமாக நிலம் பெற்று புதியகட்டடம் ஒன்றை அமைப்பதற்கான அஸ்த்திவாரம் இடப்பட்டு இன்றுவரை வளர்ந்து நவீனவசதிகளுடைய புதிய செயலகக்கட்டடமாக உருவாகியுள்ளது.

இதன் திறப்பு விழாவை முன்னிட்டு வெளியிடப்படுகின்ற சிறப்பு மலருக்கு ஸ்ரீ வல்லிபுரசக்கரரூப மாயவனின் நல்லாசிகளைக் கூறிக்கொள்கின்றோம். மாயவனின் நல்லாசிகளுடன் நல்வாழ்த்துக்களையும் கூறிக்கொள்கின்றோம்.

நன்றி.

சுபம்.

மக்கள் சேவையே மகேசன் சேவை

**இப்படிக்கு**
**தங்களுண்மையுள்ள**
**பிரம்மஸ்ரீ ச. க. சுதர்சனக் குரு J.P.**
**பிரம்மஸ்ரீ ச. க. புருஷோத்தமக் குரு J.P.**
**பிரதம குருமார்கள்.**

ஸ்ரீ ஆழ்வார் பீடம்,
ஸ்ரீ வல்லிபுரக் கோவில்,
புலோலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய
## பிரதம குருவின் ஆசிச்செய்தி

# மலர் சிறக்க மனம் உவக்க



மனிதன் பிறரிடம் அன்பு செலுத்தச்சேவை செய்வது இறை வணக்கமாக அமைகின்ற பொழுது அவனும் திருப்தி அடைய மற்றயவர்களும் திருப்தி அடைய ஓர் ஆனந்தம் பிறக்கின்றது. அது அலகு இல்லாதது. இச்செயலகம் நிறுவுவதற்கு வடமராட்சி தெற்கு மேற்கு செயலகப் பிரிவில் இருந்து சந்நிதி முருக பக்தனான நில அளவையாளர் மனமுவந்து அளப்பனவு செய்து வரைபடம் தயாரித்துக் கொடுத்தமை கூடச் சந்நிதியானின் அனுக்கிரகத்தின் தொடக்க தொடர் எனினும் மிகை இல.

இந்த வகையில் ஆரம்பமான சந்நிதி முருக அனுக்கிரகம் திறப்பு விழா மலர் காண்பதில் தலைப்பெய்தி நிற்கிறது என்பதே அவன் செயல். இதை அத்துவித வஸ்துவாகிய இறைவனுடன், அத்துவிதப்பட்டு இருக்கும் உயிர் தனது அத்துவிதத்தின் பொருட்டு பிறிதொன்றாகிய மாயையுடன் அத்துவிதப்பட வேண்டிய கட்டாய தேவை ஒன்று உள்ளது. அதன் ஓர் அங்கமாக இப்பிரதேச செயலகம் புதிய கட்டடத்திறப்பு விழாவும் அதன் சிறப்பு மலர் வெளியீடும் அமைகின்றது. இது மக்களின் சேவைக்கு ஆகிய விஸ்தரிப்பு. எல்லாம் ஈசன் செயல். "எம் கடன் பணி செய்து கிடப்பதே." எல்லாம் வல்ல சிவகுருநாதன் திருமால் மருகன் திருவருளுரு குரு சந்நிதி முருகன் செயல் என்று அவரின் உள்ளன் பதித்திட்டிந்த இவ் அகமுக ஆசிச்செய்தியை மலர் வெளியீட்டுக்குழுத் தலைவரும் பிரதேச செயலருக்கும் இச்செயலகப் பணிகள் பரந்து விரிந்து மக்களுக்குப் பன்முகப்பணிகள் செய்து உதவவேண்டும் என்று வணக்கத்துடனும் அன்புடனும் பணிவுடனும் அனுப்புவதில் மட்டற்ற நன்றிமறவா மகிழ்வெய்துகின்றனம்.

மலர் சிறக்கும் மனம் உவக்கும்

**இவண்,**
**ஆறுமுகசாமி ஐயர் சிவசண்முகம் ஐயர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னைநாள் பருத்தித்துறை மறைக்கோட்ட குருமுதல்வரின்

# ஆசிச் செய்தி



வடமராட்சி பிரதேச செயலக புதிய கட்டிடத் திறப்பு விழா சிறப்பு மலரில் ஆசிச்செய்தி வடிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

பலகாலங்களாக வடமராட்சியில் சொந்தக் காணியில் ஒரு பிரதேச செயலகம் இல்லாமல் இருந்தநிலை கவலைக்குரியதாகும். பிரதேச செயலாளரும் அவரது பணியாளர்களும் எவ்வளவு சிரமத்தின் மத்தியில் பணியாற்றினர் என்பதை கடந்த எட்டு ஆண்டுகளாக நான் அறிவேன்.

இக்குறை நீங்க இப்பிரதேச மக்கள் கரம் கொடுத்து ஒரு காணியை வாங்க உதவிசெய்தது பாராட்டுதற்குரியதாகும். இக்காணியைப் பெற்றதனால், ஓர் அழகான பெரிய கட்டிடம் அமைக்க உதவிகிடைத்து, வேலைகள் பூர்த்தியாகி சிறப்புற அமைந்தது இறைவனது இரக்கமே, மக்கள் பெற்ற பாக்கியமே. இப்படியான ஓர் நிரந்தரமான கட்டடம் மக்கள் அனைவரின் தேவைகளை இலகுவாகவும் விரைவாகவும் திறமையாகவும் நிவர்த்தி செய்யும் என்பது உண்மையே. இப்பிரதேச பணியகத்துக்கு தேவையான நவீன கருவிகள் கிடைக்க இறைவன் பலரை முன்வரச்செய்வார் என்று நம்பி வேண்டுகின்றேன்.

இப்பணியகத்தில் பணியாற்றும் பிரதேச செயலாளரையும் மற்றும் பணியாளர்களையும் இறைவன் நிறைவாக ஆசீர்வதிப்பாராக; கடவுளின் அன்புப்பணியை இவர்கள் பொறுப்பெடுத்துச் செய்கின்றார்கள். இவ்வளவு காலமும் பொறுப்போடு செய்தது போன்று இனிவருங் காலத்திலும் செய்வார்கள் என்றும் மக்கள் இவர்கள் ஊடாக தங்கள் தேவைகள் நிறைவாக்கப்பெற்று திருப்தியடைவார்கள் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

இறைவனின் வழிநடத்தலும் அருளும் ஆசீரும் என்றும் உங்கள் வடமராட்சி பிரதேசசெயலகத்துக்கும், அங்கு பணியாற்றுகின்ற பிரதேச செயலாளருக்கும், பணியாளருக்கும் கிடைப்பதாக;

"மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்." வேதாகமம், மாற்கு 10 : 45

**அருட்திரு. பயஸ் இருதயதாஸ்**

முன்னைநாள் பருத்தித்துறை
மறைக்கோட்ட குரு முதல்வரும்
பருத்தித்துறைப் பங்குத்தந்தையும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி சித்ருபானந்தா அவர்களின்
# ஆசிச் செய்தி

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக கட்டடத் திறப்பு விழாவிற்கு ஆசிச் செய்தி அளிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். தூய அன்னை ஸ்ரீசாரதாதேவியின் 150 வது நிறைவையொட்டி கொழும்பு ராமகிருஷ்ணமிஷன் இலங்கைக்கிளையின் அப்போதய தலைவர் தவத்திரு சுவாமி ஆத்மகணானந்தர் யாழ்ப்பாணம் வருகைதந்திருந்தார். அந்தச்சமயம் பிரதேசசெயலர் திரு. ஆ. சிவசுவாமி அவர்கள் கலந்து ஆலோசித்து ஸ்ரீமத்சுவாமி ஆத்மணானந்தர் அவர்களை இப்புதிய கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டும்படி அழைத்தோம். பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவருளால் சுவாமியும் மனம் உவந்து இப்பணியை நிறைவேற்றினார். இன்று மிக அழகாக செயலகம் நிறைவேறி இருப்பது கண்டு மகிழ்ச்சி அடையாமல் ஒருவரும் இருக்க முடியாது. பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் திருவருளால் பிரதேச செயலர் திரு. இ. வரதீஸ்வரனும் சக அலுவலர்களும் சகல நலன்களும் கிட்டும் வண்ணம் இப்புனித நன்நாளில் மனதார வேண்டுகின்றோம்.

இறைபணியில்
அன்புள்ள
அன்னையின் அடியவன்
**சித்ருபானந்தா.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය / தொலைபேசி / Telephone: 021-222 2235

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 021-222 2355

E-mail: gajaffna@sltnet.lk

දුරකථනය පොදු / பொது தொலைபேசி / General Telephone: 021-222 2233, 021-222 2234

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.

මගේ අංකය / எனது எண் / My No.: GA/JF/02 | ඔබේ අංකය / உமது எண் / Your No.: | දිනය / திகதி / Date: 12.06.2008

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



வடமராட்சி வடக்கு, பருத்தித்துறைப் பிரதேச செயலக புதிய கட்டடத் திறப்பு விழாவை முன்னிட்டு வெளியிடப்படுகின்ற சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதனையிட்டுப் பெருமகிழ்வு அடைகின்றேன்.

அரச அலுவலகங்கள் பொதுமக்களுக்கான தேவைகளை நிறைவேற்றுவதற்காகச் சேவையாற்றுவன. இவை பொதுமக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு பல்வேறு தேவைகளை நிறைவேற்றும் அடிப்படை அலகுகளாகும்.

தனக்கென சொந்தமான காணியின்றி பொதுக்கட்டடங்களிலும் தனியார் வீடுகளிலும் இயங்கிவந்த இவ் அலுவலகம் இன்று பொது மக்களது நன்கொடையினால் சொந்தக் காணியில் தரமானதும் கம்பீரமானதும் மிக நேர்த்தியானதுமாகக் காட்சியளிக்கின்றது. இந்நிரந்தரக் கட்டடமானது அதன் செயற்பாட்டின் நிலைபேற்றுக்கும், ஸ்திரத் தன்மைக்கும் வழிகோலும் எனலாம்.

நிரந்தரக் கட்டடத்தில் தொடங்கவிருக்கும் பிரதேச செயலகத்தின் செயற்பாடுகள் உலகத் தரத்திற்கு உயர வேண்டும் என்பதோடு எதிர்காலத்தில் அதன் செயற்பாடு ஏனையவற்றுக்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டும் என்பது என் வேணவா. அல்லலுறும் மக்களுக்கு ஆறுதலளிக்கும் வகையிலும் வடமராட்சி வடக்கு பிரதேச செயலக அலுவலர்களினதும், வெளிக்களக் கடமைகளில் ஈடுபடும் கிராம சேவை அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், ஏனைய சகல உத்தியோகத்தவர்களினதும் செயற்பாடுகள் அர்ப்பணித்த, இருதய சுத்தியான கடமை உணர்வுடன் அமைய வேண்டும். அத்துடன் இப்பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு நிறைவையும் நிம்மதியையும் பெற்றுத்தர நிரந்தரக் கட்டடத்தில் செயற்படவிருக்கும் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்திற்கு என் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாழ்க வளமுடன், வளர்க அதன் பணி

க.கணேஷ்
அரசாங்க அதிபர் / மாவட்ட செயலர்,
யாழ் மாவட்டம்.

க.கணேஷ்
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலதிக அரசாங்க அதிபரின்
# வாழ்த்துச் செய்தி



பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் புதிய கட்டிடவேலைகள் நிறைவு செய்யப்படுகின்றமை குறித்து மிகவும் மகிழ்வுறுகின்றேன். தமது நீண்டகாலப் பங்களிப்பை இதற்கு வழங்கிய பொதுமக்களும், பல நிறுவனங்களின் அதிகாரிகளும், இச்செயலக அலுவலர்களும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஒரு விடயம் இது வாகும். விடாது முயன்றால் வெற்றி காணலாம் என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணமாகவும் அமைந்துள்ளது. இதற்குப்பலரதும் உன்னதமான பங்களிப்பும் உறுதுணையாகி உள்ளது. காரியாதிகாரியின் செயலகமாகவும், உதவி அரசாங்க அதிபரின் செயலகமாகவும் பின்பு தரமுயர்த்தப்பட்டு பிரதேச செயலகமாகவும் செயற்படும் இச்செயலகம், நீண்டகாலமாக வாடகைக்கட்டடங்களில் இடநெருக்கடிக்கும் மத்தியில் செயற்பட்டு வந்துள்ளது. புதிய கட்டடத்துக்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் நான் இப்பகுதியில் பிரதேச செயலராகப் பணியாற்றியுள்ளமையால் அக்கால நினைவுகளையும் கலந்து எழுதுவது பொருந்துமென நினைக்கின்றேன்.

திரு. க. சண்முகநாதன் அவர்கள் யாழ் அரசாங்க அதிபராக இருந்தபோது இக்கட்டடத்துக்கான முதற்றொகுதி நிதிக்கு ஏற்பாடு செய்வதில் அக்கறைகாட்டி அதற்கென காணியொன்றை ஏற்பாடு செய்யுமாறு அறிவித்திருந்தார். எனினும் உகந்ததொரு காணி இன்மையால் தனியாரின் காணியொன்றைச் சுவீகரிக்கும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டது. இச்சுவீகரிப்புக்கு நீண்டகாலம் எடுக்குமென்பதால் மக்களும், அரசசேவையாளரும் இணைத்து நிதிவழங்கி அக்காணியை வாங்கி வழங்கினர். இதற்கென ஒரு காணிக் கொள்வனவுக்குழு ஆரம்பிக்கப்படமுன்னரே நெல்லண்டைப் பகுதியில் வாழ்ந்து அமரராகிவிட்ட திரு. நடராசா என்னும் அன்பர் தனது உடனலம் குன்றிய நிலையிலும் கூட, தனது மகனின் துணையுடன் தானே பிரதேச செயலகத்துக்கு வந்து கணிசமானதொரு தொகை நிதியை முதலில் வழங்கியமை பொதுமக்களுக்கிருந்த ஆர்வத்துக்கு ஓர் உதாரணமாகும். பின்பு உருவாக்கப்பட்ட காணிக்கொள்வனவுக்குழுவின் செயற்பாடும் ஆரோக்கியமானதாக இருந்தது. அதன் தலைவராகவிருந்த முன்னாள் உதவி அரசாங்க அதிபராகிய அமரர். S. முருகேசம்பிள்ளை அவர்களது உன்னதமான முயற்சியால் துரிதமாக நிதி சேகரிக்கப்பட்டு அந்நிதியில் இக்காணி பெறப்பட்டதுடன், கருத்தரங்கு மண்டபமொன்றும் அதில் அமைக்கப்பட்டு, மின்சாரவசதியும் ஏற்படுத்தப்பட்டது.

பொதுத்தேவைக்கு இக்காணியை வழங்கும் ஆர்வத்தினால் எதிர்பார்க்கப் பட்டவிலையைவிட மிகக்குறைந்த விலைக்கு வழங்கிய காணி உரிமையாளரின் பெருந்தன்மை பாராட்டத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருத்தித்துறை ஸ்ரீசாரதா ஆச்சிரமத்தின் சுவாமிகள் - சுவாமி சித்ருபானந்தா அவர்களது ஆசியுடனும், பின்னர் அரசாங்க அதிபராகப் பதவியேற்றிருந்த திரு. செ. பத்மநாதன் அவர்களது நல்லாதரவுடனும் இக்கட்டடத்துக்கான அத்திவாரக்கல் நடப்பட்டது. பொதுநிர்வாக உள்நாட்டிலுவல்கள் அமைச்சின் முதற்றொகுதி நிதி கிடைத்ததும் கட்டிடவேலை ஆரம்பிக்கப்பட்டது. அடுத்தடுத்த ஆண்டுகளில் மிகுதிநிதி இருதொகுதிகளாக அவ்வமைச்சிடமிருந்து பெறப்பட்டது. இவ்வேலைக்கான நிதியைப் பெறுவதிலும் சிறப்பாக இவ்வேலையை நிறைவேற்றுவதிலும் கடந்த மூன்று ஆண்டுகளாக அரிய முயற்சிகள் எடுத்துவந்த திரு. க. கணேஷ் யாழ் அரசாங்க அதிபர் அவர்கள் இவ்வேலை முற்றுப் பெறுவதற்கு முக்கிய காரணகர்த்தாவாக இருந்தார் எனக் கூறுவது மிகையாகாது. இக்காலகட்டத்தில் இப்பிரதேச செயலகத்தின் பொறுப்புக்களை ஏற்றிருந்த உதவிப்பிரதேச செயலர் திரு. சு. வசந்தகுமார் அவர்களும், தற்போதைய பிரதேசசெயலர் திரு. இ. வரதீஸ்வரன் அவர்களும் தமது பங்கினைச் செலுத்தினர். திரு. இ. வரதீஸ்வரன் இக்கட்டடம் எடுப்பான தோற்றத்துடன் துரிதமாக நிறைவேற்றப்படவேண்டுமென்பதில் மிகுந்த அக்கறை காட்டியுள்ளார்.

மத்திய அரசின் கட்டடதிணைக்களத்தின் யாழ் மாவட்ட பிரதம பொறியியலாளர்கள் இக்கட்டட வேலையின் மூன்று கட்டங்களும் நிறைவேற்றப்படுவதில் சிறப்பான பணியை ஆற்றியுள்ளனர்.

இவ்வேலையை மேற்கொண்ட ஒப்பந்தகாரர்கள் - குறிப்பாக V.T. Construction நிறுவனத்தினர். தாம் ஏற்றுக்கொண்ட கட்டடவேலைகளைத் துரிதமாக நிறைவேற்றியுள்ளனர். இப்பிரதேசசெயலகத்தின் அலுவலர்கள், விசேடமாகக் கிராம அலுவலர்கள் காணிக்கொள்வனவுக் குழுவின் துரிதசெயற்பாட்டுக்கு உறுதுணையாக இருந்து வகித்தபங்கும் குறிப்பிடத்தக்கது. இங்கு குறிப்பிடப்படாத இன்னும்பலர் இம்முயற்சியில் பங்களிப்புச் செய்துள்ளனர். மொத்தத்தில், மூலதனவேலைகளைச் செய்வதில் இம்மாவட்டத்தில் மிகக்கூடுதலான இடர்பாடுகள் பல இருந்த வேளையிலும் கூட, பலநிறுவனங்களைச் சார்ந்தவர்களும், ஆர்வலர்களும் பங்காளர்களாக ஒருங்கிணைந்து எடுத்த கடும் முயற்சிகளினதும், காட்டிய ஆர்வத்தினதும் பலனாக நீண்டகாலமாக உணரப்பட்டு வந்த தேவையாகிய பிரதேச செயலகத்துக்கே உரியதான ஒரு புதிய கட்டடத்தின் வேலை நிறைவு செய்யப்படுகின்றது. இதற்கென பங்களிப்புச்செலுத்திய அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

இதில் தம்மையும் முக்கிய பங்காளர்களாக இணைத்துக்கொண்ட இப்பிரதேச மக்களுக்கு இப்பிரதேச செயலகம் மேலும் சிறப்பாகச் சேவைகளை வழங்குவதற்கான வாய்ப்பும் அதிகரிக்குமெனத் திடமாக நம்புகின்றேன்.

**ஆ. சிவசுவாமி**
மேலதிக அரசாங்க அதிபர்,
யாழ் மாவட்ட செயலகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

My Number

Your Number

Telephone :021-2222644

யාපනය විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

P.O. Box 57, Thirunelvely Jaffna.

# யாழ் பல்கலைக்கழக துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி




பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் புதிய கட்டடத் திறப்புவிழாச் செய்தி மகிழ்ச்சி தருகின்றது.

செயலகத்து கட்டடவிரிவாக்கம் என்பது சமுதாயத்துடனான அதன் உறவுக்களத்தின் விரிவாக்கமாகும். அவ்வாறே பணிபுரியும் சூழமைவின் அழகு வசதிகளினடியாகவே பணியாளர்களின் ஆர்வமும் செயல்வண்ணமும். இந்தவகையில் செயல்திறனான எங்கள் பிரதேசச் செயலர் திரு. இ. வரதீஸ்வரனின் தலைமைத்துவத்தில் புதிய உத்வேகத்துடன் பருத்தித்துறை செயலகப் பணிகள் வெற்றிபெற என் அன்பான வாழ்த்துக்கள்.

பேராசிரியர் என்.சண்முகலிங்கன்
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கலைகம்

VICE CHANCELLOR
University of Jaffna
JAFFNA, SRI LANKA





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட நீதிபதி அவர்களின்
# வாழ்த்துச் செய்தி



வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்திற்கான புதிய கட்டடம் கட்டி நிறைவு செய்யப்பட்டு, திறப்பு விழாவினை நடாத்துவதை அறிந்து மிகவும் மனமகிழ்ச்சி அடைகின்றேன். வடமராட்சிப் பிரதேசம் பல வளங்களையும் சிறப்புக்களையும் கொண்டிருப்பதுடன் பல கல்விமான்களையும், புத்திஜீவிகளையும் அளித்த பெருமைக்கு உரியதாகும்.

காலங்களின் மாற்றங்களிற்கு ஏற்ப தேவைகளும் மாறுகின்றன. மாற்றங்களினூடு அபிவிருத்தி ஏற்படுகின்றது. சமூகத்தில் சகல மாவட்டங்களிலும் வாழுகின்ற சகலருக்கும் நன்மையைச் செய்வதன் பொருட்டே அரசாங்கத்தினது பொது நிர்வாக அதிகாரம், பிரதேச மட்டத்தில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. நிர்வாகம் சிறப்பாகவும், ஒழுங்காகவும் நடைபெறுவதற்கு வசதி செய்யும் முகமாக சொந்தச் செலயகக் கட்டடங்களை அமைக்க அரசு நிதியொதுக்கிவருகின்றது.

இதுவரை காலமும் தனியார் கட்டடங்களில் பல நெருக்கடிகளின் மத்தியில் சேவையாற்றி வந்த பிரதேச செயலகம், இன்று தனக்கென அமைக்கப்பட்ட புதிய கட்டடத் தொகுதியில் சேவையாற்ற ஆரம்பிக்கின்றமையை எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன்.

வடமராட்சிப் பகுதியின் சகல வளங்களையும் ஒன்றிணைத்து இப்பிரதேச வாழ் மக்களிற்கு நிறைவான சேவையை வழங்க வாழ்த்துக்கள் கூறுவதுடன் செயலக சேவைகள் சிறப்புற அமைய இறைவன் அருள்புரிய வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

**க. அரியநாயகம்**
மாவட்ட நீதிபதி,
பருத்தித்துறை.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை வர்த்தக சமூகத்தினரின்
# வாழ்த்துச் செய்தி



நீண்ட பாரம்பரியம் கொண்ட வர்த்தக மையமாக, வடமராட்சியின் பிரபல்யம் வாய்ந்த பெருநகரப் பகுதியாக பருத்தித்துறை நகரம் பன்னெடும் காலமாக இருந்து வந்துள்ளது. மூல்லைத்தீவு, திருகோணமலை, கொட்டியாரம், மூதூர், மட்டக்களப்பு, இந்தியா, பர்மா, (ரங்கூன்) போன்ற பகுதிகளில் இருந்து வத்தைகள். கப்பல்கள் மூலம் வணிகர்கள் பலர் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை துறைமுகங்கள் வாயிலாக நெல், அரிசி, மட்பாண்டங்கள், பலசரக்கு, புடவைவகைகள், கட்டடப்பொருட்கள் என்பவற்றை கொண்டுவந்தும் இங்கிருந்து பனம்பண்டங்கள் புகையிலை போன்ற இப்பகுதி உற்பத்திப் பொருட்களை ஏற்றியும் வாணிபம் செய்ததை அறிவோம்.

அக்காலகட்டங்களில் பருத்தித்துறை நகரத்தில் கடைத்தொகுதிகளாக பலசரக்கு வாணிபம், புடவை வாணிபம், நகை வாணிபம், சிறந்த மரக்கறி சந்தை, மீன்சந்தை, சுவையான தட்டை வடை, அப்பம், தோசை போன்றவற்றை விற்பனை செய்யும் உணவுச் சாலைகள் என்பன சிறப்பாக நடைபெற்று வடமராட்சிப் பகுதி மக்களின் ஒட்டுமொத்த நுகர்வுத் தேவையினை பூர்த்திசெய்து வந்தமை வரலாறு என்பதும் பருத்தித்துறை நகரத்திற்கு அளவிடமுடியா பெருமையும் கூட.

கடந்த 03 தசாப்த காலமாக இடம்பெற்றுவரும் யுத்த நிலைமைகள் காரணமாக இந்நகரம் அளவிடமுடியாத பொருளாதார இழப்புகளையும், பின்னடைவுகளையும் கண்டுள்ளது. கடின உழைப்பை மேற்கொண்டு வந்த விவசாயிகள், மீனவர்கள் ஆகியோரின் உயிர் இழப்புக்கள், உடமை இழப்புக்கள் தொழில் இழப்புக்கள், இப்பிரதேச வணிகர்களின் தொழிலினை நலிவடையச் செய்துள்ளதோடு அவர்களது கடைக் கட்டிடங்கள் சேதப்படுத்தப்பட்டும் சந்தைக்கட்டிடங்கள் உடைக்கப்பட்டும், எரியூட்டப்பட்டும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பொருத்தமான கட்டிடங்கள் சந்தை என்பன இன்றி வர்த்தக நடவடிக்கைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

இன்று இப்பிரதேசத்தில் அரசாங்க அதிபர், பிரதேச செயலர் மற்றும் பொதுமக்கள் நலன் விரும்பிகள் ஆகியோரது அர்ப்பணிப்போடு கூடிய நன்முயற்சியால் இப்பிரமாண்டமான அழகிய பிரதேசசெயலக கட்டடத்தொகுதி பருத்தித்துறை நகரத்தை மெருகூட்டும் வகையிலும், இப்பிரதேசமக்களின் அன்றாட அத்தியாவசிய தேவைகளை முன்னெடுப்பதற்கு வசதியாகவும் அமைக்கப்பட்டு திறப்பு விழா நடைபெறுவது மிகவும் மகிழ்ச்சியான விடயமாகும்.

இவ்வண்ணம்

பருத்தித்துறை வர்த்தகர்கள் சார்பில்

**க. தங்கராசா**

(ஜெயகணேசா ஸ்ரோர்ஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலரின் உள்ளத்திலிருந்து....



மக்களை முன்னிலைப்படுத்தும் நல்லாட்சி நிர்வாக முறையில் இந்நாட்டின் வரலாற்றில் முன் எப்போதும் இல்லாதவாறு பிரதேச நிர்வாகம் முதன்மைப்படுத்தப் படுகின்றது. 'மணியகாரர்' முறையில் ஆரம்பித்த பிரதேச நிர்வாகம் இன்று ' பிரதேச செயலகம்' என்ற பரவலாக்கப் பட்ட அதிகாரங்களைக் கொண்ட அமைப்பினூடாக மக்களின் காலடிக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றது.

மிக நீண்ட காலமாக பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கென சொந்தமான கட்டடம் இருக்கவில்லை என்பதை உணர்த்த பிரதேச மக்கள் காணிக்கொள்வனவுக் குழுவின் பற்றுறுதிமிக்க செயற்பாட்டினூடாக காணியைக் கொள்வனவு செய்து நன்கொடையளித்த செயற்பாடு எமது முதல் நன்றிக்குரியதாகும். மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஆ. சிவசுவாமி அவர்கள் இப்பிரிவில் பிரதேச செயலாளராக கடமையாற்றிய காலத்தில் இக்காணியில் புதிய கட்டடத்திற்கான அத்திவாரம் இடப்பட்டது. கட்டடவேலைகள் முடிவுறுவதற்கு வேண்டிய நிதிகளை ஒதுக்கித் தந்து அவ்வப்போது கட்டட வேலைகளைப் பார்வையிட்டு ஆலோசனைகள் வழங்கிய அரசாங்க அதிபர் திரு. க. கணேஷ் அவர்கள் எமது நன்றிக்குரிவர்கள். மேலும் கட்டடத் திணைக்களத்தை (மத்திய அரசு) சார்ந்த பிரதம பொறியியலாளர் மற்றும் உத்தியோகத்தர்களின் சிறப்பான மேற்பார்வையில் நேர்த்தியான கட்டுமானப் பணிகளை மேற்கொண்ட V.T கட்டட ஒப்பந்தகாரரும் எமது நன்றிக்குரியவர்கள்.

கட்டட திறப்பு விழாவினை முன்னிட்டு சிறப்பு மலர் வெளியீடு செய்ய வேண்டும் என்ற எமது பேராவினை நிறைவேற்றித் தந்த மலர்க்குழுவினருக்கும் ஆக்கங்களையும் ஆசிச்செய்திகளையும் வாழ்த்துச் செய்திகளையும் தந்துதவியவர்களுக்கும் எமது சிறப்பான நன்றிகள். மேலும் இக்கட்டட திறப்பு விழாவினை வெகுசிறப்பாக நடாத்த உதவிய எமது செயலக உத்தியோகத்தர்கள், வங்கிகள், வர்த்தக சமூகத்தினர், கிராம அமைப்புக்கள் அனைவருக்கும் எமது சிரம் தாழ்த்திய நன்றிகள்.

இன்றைய உலகின் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய வகையில் வளர்ச்சியடைந்துவரும் புதிய தொழில்நுட்ப முறைகளினூடாக மிக விரைவானதும் வினைத்திறனுடையதுமான சேவைகளை வழங்க அர்ப்பணிப்புடனும் பயனுறுதியுடனும் அனைவரும் ஒத்துழைப்போம் வாரீர்.

**இ. வரதீஸ்வரன்,**
பிரதேச செயலாளர்,
வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் ஆசிரியர் இதயத்திலிருந்து.....




வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தின் புதிய கட்டடத் திறப்புவிழாவுடன் பிரதேச மலர் ஒன்றினை ஆக்கி வெளியிடவேண்டும் என்ற பிரதேச செயலாளர் அவர்களின் சிந்தனையின் வெளிப்பாடு, இன்று உங்கள் கைகளில் இம்மலர் மலர்வதற்குக் காரணமாக அமைந்தது. வடமராட்சி வடக்கின் மணம் கமழும் மலராக அமைய வேண்டும் என்பது மலர்க்குழுவினரின் எண்ணம்.

மிகக் குறுகிய காலத்தில் வெளியிடப்படும் இம்மலரில் பிரதேச செயலகம் தொடர்பான வரலாறுகள், அபிவிருத்தி செயற்பாடுகள், சமூக பொருளாதார மாற்றங்கள் போன்றவற்றுடன் மக்களின் மிக முக்கியமான தேவைகள், கல்வி, கலை, பண்பாடு, சடங்குகள், இயற்கை வளங்கள், இயற்கைத் தோற்றப்பாடுகள், பிரதேசத்தில் உள்ளவர்களுக்குக் கிடைத்த சில பாராட்டுக்கள், சாதனைகள் போன்ற பல விடயங்களை உள்ளடக்கியதாக இம்மலர் மலர்ந்துள்ளது.

பிரதேசத்தில் உள்ள அருமையான அவசியமான, ஏற்கனவே வெளியீடு செய்யப்படாத விபரங்கள் குறிப்பிடத்தக்க அளவு இம்மலரில் உள்ளடக்கி உள்ளோம். மலர்க் குழுவினரின் ஆக்கமும் ஊக்கமும் இம்மலரை ஆக்குவதற்கு உந்துசக்தியாக அமைந்தது. இம்மலர் பிரதேசத்தில் உள்ளவர்களுக்கு பயனுள்ள ஒரு மலராக அமையும் என்பது எனது நம்பிக்கை.

**திருமதி. சு. விஜயரத்தினம்.**
மலர் ஆசிரியர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலாளரின் அறிக்கை

## வடமராட்சி வடக்குப் பிரதேசம்

இலங்கையின் வடபகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடக்குப் பகுதியான வடமராட்சிப் பிரதேசத்தின் வடக்குப் பகுதியில் அமைந்திருப்பதே வடமராட்சி வடக்குப் பிரதேசமாகும். வல்லிபுரக் கோவில் தொடக்கம் தொண்டைமானாறு வரை அமைந்துள்ள இப்பகுதி நீண்ட கடற்பரப்பை உடையது. பருத்தித்துறைப் பிரதேசம் புவியியல் ரீதியாக அதன் இருபக்கங்களும் இரண்டு வெவ்வேறான கடல்களால் சூழப்பட்டுள்ளது. வடக்கே அமைதியாக இருக்கும் ஆழம் குறைந்த பாக்கு நீரிணையும், கிழக்கே குமுறிக் கொண்டிருக்கும் வங்காள விரிகுடாவையும் கொண்டுள்ளது. இவ்விரு கடல்களும் சந்திக்கும் இடம் முனை என்றும் அவ்விடத்திலுள்ள கிராமம் மூர்க்கம் என்றும் அழைக்கப்படுகின்றது. அவ்விடத்தில் நின்று கடலைப்பார்க்கும் ஒருவர் தனது இடதுகைப்பக்கம் அமைதியான கடல் ஒன்றையும் வலதுகைப்பக்கம் கொந்தளிக்கும் கடலொன்றையும் ஒரேநேரத்தில் அவதானிக்கக்கூடிய ஓர் அபூர்வ இடமாக பருத்தித்துறை அமைந்துள்ளது.

## பரப்பளவும் எல்லைகளும்

வடமராட்சி வடக்குப் பிரதேசமானது 35 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய 50.2 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டதாகும். இதன் வடக்கு எல்லையாகப் பாக்கு நீரிணையும், கிழக்கு எல்லையாக வங்காளவிரிகுடாவும், தெற்கு எல்லையாக கரவெட்டி, மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவுகளும், மேற்கு எல்லையாக கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவும் காணப்படுகின்றது.

## சனத்தொகை

1981 ஆம் அண்டு குடித்தொகைக் கணிப்பீட்டின் பிரகாரம் இப்பிரதேசத்தின் சனத்தொகையானது 53621 ஆகும். இது வடமராட்சிப் பிரதேசத்தின் சனத்தொகையில் 44.2 சதவீதமாகவும் யாழ்மாவட்டத்தின் சனத்தொகையில் 7.2 சதவீதமாகவும் உள்ளது. 2007 ஆம் ஆண்டு வடமராட்சி வடக்கு பிரதேசத்தின் மதிப்பிடப்பட்ட சனத்தொகை 51638 ஆகும். இதில் 9147 மக்கள் வேறுபிரதேசங்களிலிருந்து இப்பிரிவிற்கு இடம்பெயர்ந்து வாழ்பவர்களாவர்.

## புதிய பிரதேச செயலகக் கட்டடம்

இப்பிரதேச செயலகத்திற்கென சொந்தமான காணி இல்லாததால் நிரந்தரக் கட்டடம் அமைக்க முடியாமல் நீண்டகாலமாக பொதுக்கட்டடங்களிலும் தனியார் வீடுகளிலுமே இச்செயலகம் இயங்கி வந்துள்ளது. 2001.05.03 இல் பொதுமக்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கொடை மூலம் பிரதேச செயலகம் அமைப்பதற்கென 12 பரப்புக்காணி ரூபா 12 இலட்சம் பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்டது.

இக்காலப்பகுதியில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த திரு. செ.பத்மநாதன் அவர்களினதும் பருத்தித்துறை பிரதேச செயலாளராக இருந்து தற்போது யாழ். மேலதிக அரசாங்க அதிபராக இருக்கும் திரு. ஆ. சிவசுவாமி அவர்களுடையதும் பெருமுயற்சியினால் இக்காணியில் புதிய கட்டடம் அமைப்பதற்கான ஒருபகுதி நிதிபெறப்பட்டு 2004.03.19 இல் அடிக்கல் நாட்டப்பட்டு கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் நாட்டில் ஏற்பட அசாதாரண சூழ்நிலைகளினாலும் நிதிப்பற்றாக்குறையினாலும் மாடிக்கட்டட கூரைவேலைகள் முடிவடைந்தநிலையிலும் உள்ளக வேலைகள் முடிவடையாமல் இருந்தன.

தற்போதைய அரசாங்க அதிபர் திரு.க. கணேஷ் அவர்களால் எடுக்கப்பட்ட பெரு முயற்சியினால் 2007 ஆம் அண்டில் ரூபா 14 மில்லியன் ஒதுக்கப்பட்டு கட்டடத் திணைக்கள (மத்தி) உத்தியோகத்தர்களின் சிறப்பான மேற்பார்வையில் V. T கட்டட ஒப்பந்தகாரர்களினாலும் கட்டட வேலைகள் வெகுசிறப்பாக பூர்த்தியடைந்து 2008.07.14 ஆம் திகதி அரசாங்க அதிபர் திரு. க. கணேஷ் அவர்களினால் செயலகம் திறந்து வைக்கப்படுகிறது.

## சமுர்த்தி

இலங்கையில் தேசிய வறுமை தணிப்புத் திட்டமாக சமுர்த்தித் திட்டம் 1995இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் பின்வரும் 03 அணுகுமுறை அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

1) கிராமிய உட்கட்டமைப்பு வசதியை விருத்தி செய்தல்
2) நலச் சேவை நடவடிக்கை
3) சேமிப்பு முதலீட்டு நடவடிக்கைகளை விருத்தி செய்தல்.

எமது பிரதேச செயலகப்பிரிவில் சமுர்த்தித் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு ஏதுவாக 1997 இல் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களாக 105 பேரும் 1998இல் சமுர்த்தி முகாமையாளர்களாக 08 பேரும் நியமனம் பெற்றனர். சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் 1999 இல் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக தரம் உயர்த்தப்பட்டனர். எனினும் தற்போது இப்பிரதேச செயலகப் பிரிவில் 06 சமுர்த்தி முகாமையாளர்களும் 49 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கடமைபுரிகின்றனர். சமுர்த்தித் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் பிரிவுகளாக பிரதேச செயலக சமுர்த்திப்பிரிவு, சமுர்த்தி மகாசங்கம், சமுர்த்தி வங்கிகள் ஆகியன காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமிய உட்கட்டமைப்பு வசதியை விருத்தி செய்யும் முகமாக இப்பிரதேசத்தில் விவசாய வீதிகள் புனரமைப்பு, விவசாயக்கிணறுகள் புனரமைப்பு, மண் அரிப்பை குறைக்கும் முகமாக படிக்கட்டுகள் அமைத்தல், வீடமைப்பு போன்ற பணிகள் இடம் பெற்றுள்ளன.

நலச்சேவை நடவடிக்கைகளாக 3810 குடும்பங்கள் வறியகுடும்பங்களாக இனம் காணப்பட்டு சமுர்த்தி முத்திரைகள் மூலம் மாதாந்த நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் சமுர்த்தி சமூக பாதுகாப்பு காப்புறுதித்திட்டமும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

சமுர்த்தி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இச்செயலகப்பிரிவு இரு வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 2003.03.05 ஆம் திகதி வல்வெட்டித்துறை சமுர்த்தி வங்கியும் 2003.07.14ம் திகதி பருத்தித்துறை சமுர்த்தி வங்கியும் ஸ்தாபிக்கப்பட்டது. இவ்வங்கிகளில் பங்கு, அங்கத்தவர் சேமிப்பு, அங்கத்தவர் அல்லாத சேமிப்பு, குழுச்சேமிப்பு, சிறுவர் சேமிப்பு, திரிய மாதா சேமிப்பு, சிசுரக்க சேமிப்பு போன்றவற்றின் மூலம் வைப்புக்கள் திரட்டப்படுகின்றன. இவற்றின் மூலம் மீன்பிடிக்கடன், விவசாயக்கடன், சுயதொழில் கடன், ஜனபுபுதுக்கடன், நுகர்வுக்கடன் போன்ற கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

## விதாதா வள நிலையம்

விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சினால் நாட்டின் அனைத்து பிரதேசங்களையும் கவனத்திற் கொண்டு கிராமிய மட்டங்களில் விதாதாதொழில்நுட்ப வளநிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது. விதாதா வளநிலையம் என்ற சிங்கள பதத்தின் பொருள் "விஞ்ஞான தொழில்நுட்ப வள நிலையம்" என்பதாகும்.

விஞ்ஞான தொழில்நுட்ப அறிவையும் பிரயோகத்தையும் கிராமிய மட்டங்களுக்கு விஸ்தரித்துச் செல்லும் வகையில் இலக்குகளையும் நோக்கங்களையும் கொண்டதாக செயற்படுகின்றன. பயனுள்ள தொழில்நுட்ப வாய்ப்புக்களை நாட்டின் சகல பகுதிக்கும் கிடைக்கக் கூடியதாக செய்து படித்த இளைஞர், யுவதிகளினதும் கிராமிய உற்பத்தியாளர்களினதும் நலன்களை மேம்படுத்தி விரிவான செயற்றிட்டங்களை ஏற்படுத்தவே இந்த விதாதா வள நிலையம் நிறுவப்பட்டுவருகின்றது. இதனூடாக "கிராமத்துக்கு தொழில்நுட்பம்" என்ற கோட்பாடு வலுப்பெற்று வருகின்றது.

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்குரிய முதலாவது விதாதா வள நிலையம் பொலிகண்டியில் அமைந்துள்ள பல நோக்கு மண்டபத்தில் ஆரம்பிப்பதற்கு முதற்கட்டமாக திருத்த வேலைகளுக்கு 2007 ஆம் ஆண்டு 272000 ரூபாவும், நிலையத்துக்கு தேவையான காரியாலய தளபாட கொள்வனவுக்கென 694000 ரூபா 2008ம் ஆண்டு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சினால் நிதி வழங்கபட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருத்தித்துறை பிரதேச மக்களின் பயிற்சிக்கென 2007 ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற 15000 ரூபாவில் உணவு பதனிடும் பயிற்சியும், கணனி பாதுகாப்பும், பாவனையும் என்ற பயிற்சியையும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2008 ஆம் ஆண்டு உணவுபதனிடுதல், தையல் இயந்திரம் திருத்துதல், கணனி வலையமைப்பினை மேற்கொள்ளல், Internet, E - mail அறிமுகப்படுத்துதல் போன்ற பயிற்சிகளை வழங்குவதற்காக ரூபா50000 விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

## நிறுவனங்களும் வங்கிகளும்

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகிய மூன்று கணனிமயமாக்கப்பட்ட அரச வங்கிகள் பருத்தித்துறை நகரில் அமைந்துள்ளன. வல்வெட்டித்துறையில் மக்கள் வங்கியின் இன்னோர் கிளை இயங்கிவருகின்றது. புலோலி, பருத்தித்துறை ஆகிய இரு பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் இப்பிரிவில் சிறப்பான சேவையாற்றிவருகின்றன. வடமராட்சி பனை வளக் கூட்டுறவுச் சங்கமும் வடமராட்சி கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கமும் சிறந்த சேவையினை ஆற்றிவருகின்றன. அல்வாய் மேற்கில் அமைந்துள்ள திக்கம் வடிசாலை மதுபான உற்பத்தியில் ஈடுபட்டுவருகின்றது.

இலங்கை போக்குவரத்து சபை டிப்போ பருத்தித்துறையில் அமைந்துள்ளது. யாழ் மாவட்டத்தில் பருத்தித்துறை டிப்போவின் சேவை மிக முக்கியமானதொன்றாக குறிப்பிடப்படுகின்றது. வீதி அபிவிருத்தி அதிகாரசபை, காணிப்பதிவகமும் மேலதிக மாவட்ட பதிவகமும் இப்பிரிவில் இயங்கி வருகின்றன.

## வைத்தியசாலைகளும் மருந்தகங்களும்

ஆதார வைத்தியசாலை மந்திகையிலும் மாவட்ட வைத்தியசாலை வல்வெட்டித்துறை ஊறணியிலும் அமைந்துள்ளன. மத்திய மருந்தகம் ஒன்றும் ஆயுர்வேத மருந்தகம் ஒன்றும் இலவச ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் நான்கும் இப்பிரிவில் உள்ளன.

## உள்ளூராட்சி மன்றங்கள்

இப்பிரதேசத்தில் பருத்தித்துறை நகரசபை, வல்வெட்டித்துறை நகரசபை ஆகிய இரு நகரசபைகள் இயங்குகின்றன. பருத்தித்துறை பிரதேசசபை இப்பிரிவில் இயங்கினாலும் இதன் நிர்வாக எல்லை பருத்தித்துறை பிரிவிலும் மருதங்கேணி பிரிவிலும் பரந்துள்ளது. இப்பிரதேசசபை புலோலி, குடத்தனை, செம்பியன்பற்று ஆகிய மூன்று உப அலுவலங்களைக் கொண்டு இயங்குகின்றது.

## கிராம மட்ட நிறுவனங்கள்.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 17 கிராம அபிவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கங்களும் 28 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் 23 கமக்காரர் அமைப்புக்களும் 07 சிறுவர் கழகங்களும் 70 சனசமூக நிலையங்களும் இயங்கிவருகின்றன. மேலும் இப்பிரிவில் இதுவரை 12 வலிந்துதவு நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன.

## வணக்கஸ்தலங்கள்

இப்பிரிவில் 93% மக்கள் இந்துக்களாகவும் மிகுதி 7% மக்கள் கிறிஸ்தவம் மற்றும் ஏனைய மதங்களைச் சார்ந்தவர்களாகவும் உள்ளனர். இந்துக்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு கிராமத்திலும் பல்வேறு தெய்வங்களுக்கும் ஆலயங்கள் அமைத்து வழிபாடு செய்வது சிறப்பம்சமாகும். சில குடும்பங்கள் தமது குல தெய்வங்களை வீடுகளில் வைத்தும் வழிபாடு செய்து வருகின்றனர்.

வரலாற்றுப்புகழ்பெற்ற ஆலயங்களான தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயம், ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம், பொலிகண்டி கந்தவனக் கடவை கந்தசுவாமி ஆலயம் என்பன இப்பிரிவில் இருப்பதால் மக்கள் இவ் ஆலயங்கள் மீது மிகுந்த பற்றினையும் ஈடுபாட்டினையும் கொண்டு இவ் ஆலய உற்சவங்களில் பெருந்திரளாகப் பங்குபற்றி இறையருளைப் பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

இப்பகுதியில் உள்ள கிறிஸ்தவ ஆலயங்களில் தும்பளை புனிதமரியன்னை ஆலயம், பருத்தித்துறை தொம்மையப்பர் ஆலயம் என்பன பிரசித்தமானவையாகும். இங்கு இந்துக்களும் கிறிஸ்தவர்களும் காலங்காலமாக மிகவும் நெருங்கிய உறவினைக் கொண்டிருப்பதும் ஒருவரின் சமயத்தை மற்றவர் மதிப்பதும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

## சமூக சேவைகள்

இச்செயலகத்தினால் 2351 வறியவர்களுக்கு பொதுசனமாதாந்த உதவிப்பணம் மாதாந்தம் வழங்கப்படுகிறது. 13 பேர் காசநோய்க் கொடுப்பனவினையும் 03 பேர் தொழுநோய்க் கொழுப்பனவினையும் 41 பேர் புற்றுநோய்க் கொடுப்பனவையும் பெறுகின்றனர். சமூக பாதுகாப்பு சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் இவ்வாண்டு 374 பேர் புதிதாக இணைந்துள்ளனர். 2007ம் ஆண்டு சமூகபாதுகாப்பு சுயதொழில் ஓய்வூதியத்திட்டத்தில் இச்செயலகம் அதிகூடிய பயனாளிகளை இணைத்து மாவட்டத்தில் முதலாம் இடத்தைப்பெற்றுக்கொண்டதுடன் ஜனாதிபதி விருதினையும் பெற்றுக் கொண்டது.

2007ஆம் ஆண்டில் 222 பேர் சமூகசேவைகள் அமைச்சின் வேலைத்திட்டத்தின் கீழ் சுயதொழிலுக்காக தலா 10,000 ரூபா வினைப்பெற்றுக்கொண்டனர். இவ்வாண்டிலும் 75 பேருக்கு இந்நிதி வழங்கப்படவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுனாமி வேலைத்திட்டங்கள்

கடந்த மூன்று ஆண்டுகளில் சுனாமி வேலைத்திட்டங்களுக்காக இப்பிரிவில் ரூபா 3126.5 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இதனை பின்வரும் அட்டவணை மூலம் காட்டலாம்.

### சுனாமி மீள்கட்டுமான நடவடிக்கைகள்

| துறைகள் | மில். ரூபா |
|---|---|
| வீடமைப்பு | 2468.0 |
| பொதுமண்டபங்கள் | 59.5 |
| உற்பத்தி நிலையங்கள் | 6.5 |
| சனசமூக நிலையங்கள் | 5.7 |
| ஆரம்ப சுகாதார நிலையங்கள் | 21.5 |
| முன்பள்ளிகள் | 19.8 |
| மீனவர் திட்டங்கள் | 13.6 |
| விவசாயத்திட்டங்கள் | 1.1 |
| குடிநீர்த்திட்டங்கள் | 3.8 |
| சந்தை | 80.0 |
| வாழ்வாதாரத்திட்டங்கள் | 12.0 |
| படகுகள், இயந்திரங்கள் | 375.0 |
| பாடசாலைக்கட்டடங்கள் | 60.0 |
| மொத்தம் | 3126.5 |

சுனாமி தொடர்பான வேலைத்திட்டங்கள் இவ்வாண்டிலும் தொடர்கின்றன. வீதிகள். பாலங்கள் என்பவற்றின் அபிவிருத்தி, மின்சாரம் வழங்கல் என்பனவும் சுனாமித் திட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட பொழுதிலும் அவற்றின் பெறுமதிகள் மேல் அட்டவணையில் சேர்க்கப்படவில்லை.

## பிரதேச செயலக வருமான வழிமூலங்கள்

திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெறும் நிதியைத்தவிர இப்பிரிவிலிருந்தும் மோட்டார்வாகன வரியாக 1.85 மில்லியன் ரூபாயும் மதுபான அனுமதிப்பத்திர மூலம் 0.4 மில்லி ரூபாவும் கடவுச்சீட்டு கட்டணமாக 0.68 மில்லியன் ரூபாவும் பரீட்சை கட்டணமாக 0.1 மில்லியன் ரூபாவும் ஏனைய வருமானங்களாக 11.1 மில்லியன் ரூபாய்களும் கிடைக்கப்பெற்றுள்ளன. 2007 ஆம் ஆண்டில் 2647 வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓய்வூதியக் கொடுப்பனவுகள்

இப்பிரதேச செயகலப்பிரிவில் தற்போது 1210 பேர் ஓய்வூதியம்பெற்று வருகின்றனர். இவர்களில் 776 பேர் குடிசார் ஓய்வூதியமும், 407 பேர் விதவைகள் அனாதைகள் ஓய்வூதியமும், 12 பேர் படையினர் ஓய்வூதியமும், 15 பேர் ஏனைய ஓய்வூதியமும் பெற்றுவருகின்றனர். இவர்களில் 1972 பேர் உள்நாட்டு ஓய்வூதியத்தினையும் 138 பேர் கடல் கடந்த ஓய்வூதியத்தினையும் பெறுகின்றனர். இவர்களுக்கான ஓய்வூதியக்கொடுப்பனவு யாழ் மாவட்டத்திலுள்ள 15 வங்கிகள் மூலம் வழங்கப்படுகின்றன. 2007 ஆம் ஆண்டில் இப்பிரதேசசெயலகத்தால் 1210 ஓய்வூதியர்களுக்கு ரூபா 183, 922, 120.22 ஓய்வூதியமாக வழங்கப்பட்டுள்ளது.

## காணி நடவடிக்கைகள்

20 'அ' வின் கீழ் இதுவரை 221 நபர்களுக்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. இதில் 203 நபர்களுக்கு காணி அனுமதிப்பத்திரம் தயாரித்து வழங்கப்பட்டுள்ளது. நாகர்கோயிலிலிருந்து இடம்பெயர்ந்து கற்கோவளம், புனிதநகரில் குடியமர்த்தப்பட்டவர்களுக்கு காணிக்கச்சேரியின் மூலம் 98 நபர்களுக்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. 61 நபர்களுக்கு றன்பீம அளிப்பு தயாரித்து அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

## கலாசார நடவடிக்கைகள்

2007ஆம் ஆண்டில் 'கலாபூசண விருது' எமது பிரிவைச் சேர்ந்த 03 கலைஞர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. 2007.08.18 ஆம் திகதி பிரதேச கலாசார விழா வெகு சிறப்பாக அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலய மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ரேசிய மட்டத்திலான இலக்கியப்போட்டிகள் நடாத்தப்பட்டன. இதில் இப்பிரதேசத்திற்கு பாடல் எழுதுதல் போட்டியில் முதலிடம் கிடைத்தது. அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டியில் எமது பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இருவர் வெற்றிபெற்று பரிசில்களைப் பெற்றுள்ளனர். யாழ் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை காவிய கதாநாட்டியப் போட்டியில் வலயமட்டத்தில் முதலாம் இடத்தைப்பெற்றது.

## அபிவிருத்தித் திட்டங்கள்

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் இப்பிரிவுக்கு 2007ம் ஆண்டில் 33 செயற்திட்டங்களுக்கு ரூபா 3 670 000 ரூபா ஒதுக்கப்பட்டு வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன. வடக்கு கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தி திட்டத்தின் (Neccdep) கீழ் சுனாமியினால் பாதிக்கப்பட்ட 17 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் தலா 5 மில்லியன் ரூபா உட்கட்டுமான அபிவிருத்தி வேலைகளுக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலா 1 மில்லியன் ரூபா வாழ்வாதாரத்திட்டங்களுக்கும் என ஒதுக்கப்பட்டு வேலைகள் யாவும் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.

நெக்கோட் திட்டத்தின்கீழ் 50 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. சுனாமியால் பாதிப்படைந்த கிராமங்களில் சென்ற ஆண்டில் 15 வீடுகள் அமைக்கப்பட்டன. இவ்வாண்டிலும் 45 வீடுகள் அமைக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. கற்கோவளம், பொலிகண்டி கிழக்கு ஆகிய இடங்களில் தலா 4.3 மில்லியன் ரூபா பெறுமதியில் இரு கிராம அபிவிருத்தி செயலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2007 இல் மகிந்த சிந்தனை துரித அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் 7.4 மில்லியன் ரூபாய்களும் கமநெகும அபிவிருத்தித்திட்டத்தின்கீழ் 45 வேலைகளுக்கு ரூபா 19.4 மில்லியன் ரூபாய்களும் ஒதுக்கப்பட்டு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

நியாப் II என அழைக்கப்படும் மீள் எழுச்சித்திட்டம் இப்பிரிவில் துறையாகமூலை, சீலாப்புலம் ஆகிய இரு கிராமங்களில் இவ்வருடம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதற்கான அறிமுக நிகழ்வு 2008.03.27 அன்று இப்பிரதேச செயலகத்திலும் 2008.05.27 அன்று இரு கிராமங்களிலும் நடைபெற்றது.

## நல்லாட்சி

இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப் பின்னர் பனிப்போர் உலகை உலுக்கியது. சோவியத்யூனியன், கிழக்கு ஐரோப்பா ஆகியனவற்றின் ஆட்சி அமைப்பில் ஏற்பட்ட உடைவு உலக மயமாக்கலுக்கு வழிவகுத்தது. உலக மயமாக்கல் திறந்த சந்தைப்படுத்தல், நவீன ஊடகங்கள், நுகர்வுவாதம் முகாமைப்படுத்தல் ஆகிய இயல்புகளையும், கருவிகளையும் தன்னகத்தே கொண்டு செயற்பட்டு வருகின்றது. அதே சமயத்தில் அதன் பொருளியல் பண்புகள் பொருளாதார அபிவிருத்தி நிறைவான தொழில்வாய்ப்பு, பேண் தகுநிலைப்பாடுடைய நிதி உறுதிப்பாடு, உழைப்பாளர்களின் உண்மை ஊதிய அதிகரிப்பு ஆகியனவற்றின் இயல்புகள் படிப்படியாக குறைந்து வருவதையும் அவதானிக்கலாம்.

உலகமயமாக்கல் நலிவுற்ற அரசுகள் நல்லாட்சி / நல்லாளுகை சம்மந்தமான கருத்துக்களை உடையனவாக விளங்கவேண்டும் என வலியுறுத்துகின்றனர். அவையாவன :

- சட்ட ஆட்சி
- பொதுத்துறை முகாமைத்துவ சீர்திருத்தம்
- ஊழல் எதிர்ப்பு
- மிதமிஞ்சிய இராணுவ செலவீனங்களை குறைத்தல்
- மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி
- சனநாயக மயமாக்கல்
- மனித உரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலுவலக உத்தியோகத்தர்கள்



இருப்பவர்கள் : (இ–வ) :– சி. ஞானபாலன், பா.மேகவண்ணன், திருமதி. த. சிவஞானசுந்தரம், திருமதி. த. ஜெயராஜா (உ.தி.ப), திருமதி உ. சுபலிங்கம் (உ.பி.செ), இ. வரதீஸ்வரன் (பி.செ), கி. யோகேந்திரன் (கணக்காளர்), இ. விக்கினேஸ்வரமூர்த்தி (நி.உ), க. முருகையா (நி.உ), சீ. இராசநாயகம் (நிதி.உ)

நிற்பவர்கள் (இ–வ) :– 1வது வரிசை :– ஸ்ரீ. ஜெயசாந்தினி, த. கிருஸ்ணசாந்தி, திருமதி. தி. ஏகாந்தன், பி.சுதாகினி, சு. யோகராணி, பா. விஜயரூபி, திருமதி இ. இலங்கேஸ்வரன், க. சுபாஜினி, திருமதி இ. குகநாதன், திருமதி. க. இரவிச்சந்திரன், திருமதி சி. சிறிதரன், ச. இதயராணி, திருமதி. பு. தங்கராஜா, திருமதி. க. நடராஜன், செ. சொர்ணமலர், பா. அனிதா, திருமதி. உ. சதீஸ்வரன், திருமதி. சி. லோகநாதன், சி. உதயகுமார்,

நிற்பவர்கள் (இ – வ) :– 2வது வரிசை :– யூ. பாலசிங்கம், இ. செல்வகுமரன், த.நரேந்தன், சி. உமாசங்கர், இ. விக்னேஸ்வரன், ச. குமாரு, த. தியாகராசா, பொ. முத்துக்குமாரசாமி, தெ. முரளீதரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அலுவலர்கள்



இருப்பவர்கள் (இ - வ) :- சி. சிவபாலசிங்கம், செ. அ. ஞானச்சந்திரன், சோ. வந்தகுமார், மு. கந்தசாமி, இ. விக்னேஸ்வரமூர்த்தி, (நி.உ), இ. வரதீஸ்வரன் (பி.செ) த.த. சுந்தரபாரதி (தலைமைப்பீடம்), நா. குமரகுருநாதன், ந. சேகர், தி. சுபேந்திரராஜா, திருமதி. சா. தியாகராஜா

நிற்பவர்கள் (இ- வ) :- செ. டா. தேவகுமார், அ. உமாசங்கர், சீ. லம்போதரன், இ. யோகச்சந்திரன், த. வதனரூபன், ப. குமரேசன், சோ. கிருஸ்ணராஜா சி. இரவீந்திரன், சி. யோகநாதன், இ. இராஜேந்திரம், சி. தவனேஸ்வரன், பொ. தயாநிதி, இ. புலேந்திரன், க. யோகேந்திரநாதன், கி. பாலச்சந்திரன், வே. வன்னிமரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுர்த்தி உத்தியோகத்தர்கள்



இருப்பவர்கள் (இ - வ) :- மு. தனேஸ்வரன், வெ. ஸ்ரீதரன், சி. சிவகாந்தன், இ. அன்ரனி, கி. யோகேந்திரன் (கணக்காளர்), இ. வரதீஸ்வரன் (பி.செ), தி. யோகேந்திரன், சி. ஸ்ரீகிருஸ்ணன், சி. உதயமதி, ந. உதயகுமார், அ. குணம் பஸ்தியாம்பிள்ளை.

நிற்பவர்கள் (இ - வ) 1வது வரிசை :- சு. கந்தசாமி, ந. சவுந்தரராஜன், ம. சாந்தி, சு. சுதர்லா, வ. சுகந்தினி, தி. ஸ்ரீலெட்சுமி, கோ. நளாயினி, சி. சசிகலா, த. சுஜிதா, சி. விஜயநிர்மலா, நா. ஜெயலட்சுமி, க. பத்மினி, மு. ஜெயசுதா, சி. கோமதி, சு. பத்மராசா.

நிற்பவர்கள் (இ- வ) 2வது வரிசை :- பா. மணிக்குமார், பா. தனீஸ்குமார், பொ. ஸ்ரீஸ்கந்தராசா, க. சிவகரன், க. குகேந்திரன், தி. ரஞ்சித், த. ரவிக்குமார், பொ. தர்மராசா, ச. கெங்காதரன், தெ. சசீந்திரன், ந. கணநாதன்.

# சமுர்த்தி உத்தியோகத்தர்கள்



(இ - வ) :- ஆ. கஜேந்திரன், ந. சுமேதா, சி. கௌரி, சு. உதயநிலா, த. கோணேஸ்வரி, கு. பாலசெல்வதி, வி. செல்வராணி, பி. ஞானேஸ்வரி, கு. சாரதா, த. சகுந்தலா, சி. தயாமதி, தோ. அமலயூலியற், மு. நளினி, செ. கனகரத்தினம், அ. வதனராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிக்கள, அலுவலக உத்தியோகத்தர்கள்



இருப்பவர்கள் (இ - வ) :- சி. வனஜா, திரும்தி. சி. முரளிதாஸ், திருமதி. சி. செல்வகுமார், திருமதி. ஜா. மோகனராஜ், இ. வரதீஸ்வரன் (பி.செ), எ. தர்சினி, ந. ஆனந்தி, சி. கல்யாணி, செ. சர்மிளா, வி. கலைவாணி.

நிற்பவர்கள் (இ - வ) :- சு. மஞ்சுளா, வே. கோபிராஜ், மு. சதீஸ்குமார், தே. ஜெரோம் குணராஜ், அ.ஜோ. இன்பராஜ் கி. கவிதரன், தி. விமலன், அ.மை. ராஜகுமார், மா. கனகராஜா, வே. தர்மபாலன், சி. விவேகானந்தன், மு. காண்டீபன், சி. கலைச்செல்வன், மு. திருநிறைச்செல்வி, ஞா. தயாளினி.

# வெளிக்கள உத்தியோகத்தர்கள்



இருப்பவர்கள் (இ - வ) :- கி. உதயமூர்த்தி, பி. செல்வநாயகம், செ. சுரேந்திரா, அ. வசந்தன், க. இராஜேந்திரா, இ. வரதீஸ்வரன் (பி.செ), திருமதி. சு. விஜயரத்தினம், நா. யோகேஸ்வரி, திருமதி. ஜெ. சந்திரமோகன், ப. கௌரி, திருமதி. க. கருணாகரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமி வீடமைப்புத் திட்ட அலுவலர்கள்



இருப்பவர்கள் (இ - வ) :- தே. ஜெரோம் குணராஜ், க. வித்தியா, இ. வரதீஸ்வரன் (பி. செ) சி. வனஜா, இ. மெய்யழகன்.
நிற்பவர்கள் :- (இ- வ) :- ம. பிரசாந், சி. விவேகானந்தன், வி. உமாசங்கர், கே. காந்தரூபன்.

# பிரதேச செயலக துடுப்பாட்ட அணி




இருப்பவர்கள் (இ - வ) :- வே. ஶ்ரீதரன், தே. ஜெரோம் குணராஜ், இ. வரதீஸ்வரன் (பி.செ), சீ. இராசநாயகம், மு. தனேஸ்வரன்.
நிற்பவர்கள் (இ - வ) :- மு. காண்டீபன், சி. விவேகானந்தன், கி. கவிதரன். த. நரேந்தன், தி. ரஞ்சித், பா. மேகவண்ணன், சி. சிவகாந்தன், ந. உதயகுமார், த. ரவிக்குமார், தெ. சசீந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி வடக்கு பிரதேச செயலக வரலாற்றுப் பின்னணிகள்

**இ. விக்கினேஸ்வரமூர்த்தி**
நிர்வாக அலுவலர்.
பிரதேச செயலகம்,
வடமராட்சி வடக்கு,
பருத்தித்துறை.

## 1.0. பிரதேச நிர்வாகமும் அதன் பின்னணியும்

இலங்கையில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சியின்போது "திசாவு" "திசாவணி" என்ற பெயர்களில் இடம்பெற்ற பிரதேச நிர்வாகம் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் அவை மாகாண நிர்வாகமாக மாற்றமடைந்தன. 1833 இல் இலங்கை வடக்கு, மேற்கு, கிழக்கு, தெற்கு, மத்தி என்ற அடிப்படையில் 05 மாகாணங்களாக பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வந்தது. 1845 இல் வடமேல் மாகாணமும் 1866இல் ஊவா மாகாணமும் 1873 இல் வடமத்திய மாகாணமும் 1889 இல் சப்பிரகமுவ மாகாணமும் நிறுவப்பட்டன. அரசாங்க அதிபர்களே அம் மாகாணங்களிற்கு பொறுப்பானவர்களாக இருந்தனர். 1931 ஆம் ஆண்டு டொனமூர் ஆணைக்குழுவின் விதப்புரையின் படி 09 மாகாணங்களிலும் 19 மாவட்டங்கள் நிறுவப்பட்டன. 1955 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அரச நிர்வாக மாற்றங்களின்படி அரசாங்க அதிபர் ஒவ்வொருவரது அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசமானது மாவட்டம் என வரையறுக்கப்பட்டது. மேலும் அத்தகைய மாவட்டங்களின் எண்ணிக்கை 20 ஆக வரையறுக்கப்பட்டது. 1959 இல் மொனராகலை மாவட்டமும் 1961 இல் அம்பாறை மாவட்டமும் 1978 இல் கம்பகா, முல்லைத்தீவு மாவட்டங்களும் 1984 இல் கிளிநொச்சி மாவட்டமும் புதிய மாவட்டங்களாக உருவாக்கப்பட்டன. அதனால் மாவட்டங்களின் எண்ணிக்கை 25 ஆக அதிகரித்தது. பிரதேச செயலாளர் பிரிவும், கிராம சேவையாளர் பிரிவும் ஒரு மாவட்டத்தின் நிர்வாகம் சார்ந்த உப பிரிவுகளாகும். ஒரு மாவட்டத்திற்கு பொறுப்பான அதிகாரி மாவட்ட செயலாளர் எனவும் பிரதேச செயலாளர் பிரிவிற்கு பொறுப்பான அதிகாரி பிரதேச செயலாளர் எனவும் அழைக்கப்பட்டனர்.

## 2.0. பிரதேச செயலகத்தின் உருவாக்கம்

நிர்வாகத்தை மக்கள் பால் கொண்டு செல்லல் (Taking the administration to the people) என்ற புதிய நிர்வாக சிந்தனையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவையே பிரதேச செயலகங்கள் ஆகும். 1992 இல் உருவாக்கப்பட்ட 58ம் இலக்க சட்டத்தின் பிரகாரம் மாவட்ட அரசாங்க அதிபர்களினால் கவனிக்கப்பட்டு வந்த பல கடமைப் பொறுப்புகள் பிரதேச செயலாளர்களிற்கு கையளிக்கப்பட்டன. நாடளாவிய ரீதியில் 01.03.1993 முதல் பிரதேச செயலகங்கள் இயங்க ஆரம்பித்த போதும் யாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டத்தில் இதன் செயற்பாடுகள் காலம் தாழ்த்தியே ஆரம்பிக்கப்பட்டன. அந்த வகையில் வடமராட்சி வடக்கு செயலகமும் 01.06.1996 முதல் பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்பட்டது. பிரதேச செயலகங்கள் அண்மைக் காலமாக அரசாங்கத்தின் பிரதான நிர்வாக மையமாக மாற்றமடைந்து வருவதுடன் மக்களிற்கான தேவைகளை கிராம மட்டத்திலேயே நிறைவு செய்யும் செயலகமாக உருவாகி வருகின்றன.

## 3.0. அமைவிடமும் குடிப்பரம்பலும்

யாழ்ப்பாணத்திலிருந்து வடகிழக்கு புறமாக 34 km தொலைவில் அமைந்துள்ள வடமராட்சி வடக்கு பிரதேசம் 116 கிராமங்களை கொண்ட 35 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய 50.2 சதுர கிலோமீற்றர் பரப்பளவை கொண்ட ஒரு பிரதேசம் ஆகும். இதன் வடக்கு எல்லையாக பாக்கு நீரிணை கடலும் கிழக்கு எல்லையாக வங்காள விரிகுடா கடலும் இதன் தெற்கு எல்லையாக வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க பிரிவு மற்றும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுகளும் மேற்கு எல்லையாக வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச செயலாளர் பிரிவும் அமைந்துள்ளன. தற்போது இச் செயலக பிரிவில் 14606 குடும்பங்களை சேர்ந்த 47687 மக்கள் வசித்து வருகின்றனர். இவர்களுள் 4076 குடும்பங்களை சேர்ந்த 14222 பேர்கள் இடம்பெயர்ந்தவர்களாவார். மேலும் இச் செயலக பிரிவில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய இரண்டு நகர சபைகளும் பருத்தித்துறை பிரதேச சபையுமாக மூன்று உள்ளூராட்சி மன்றங்களும் இயங்கி வருகின்றன.

## 4.0. செயலகத்தின் ஆரம்ப கால வரலாறு

ஐரோப்பியர்களாகிய போர்த்துக்கேயர், டச்சுக்காரர்களின் காலனித்துவ கொள்கைகளிற்கு ஏற்ப 1630 - 1796 வரை அவர்களாலே பழைய நிர்வாக முறைகளே பின்பற்றப்பட்டன. வடமராட்சி என்ற பிரிவும் அக்காலங்களிலேயே பேணப்பட்டு வந்தது. ஆனால் நாகர் கோவிலிற்கு அப்பாலுள்ள பிரதேசம் தென்மராட்சியுடன் இணைக்கப்பட்டிருந்தது. மணியகாரர், உடையார், விதானை ஆகியோரால் இவை பரிபாலிக்கப்பட்டன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் இத்தகைய நிர்வாக கட்டமைப்பே பேணப்பட்டு வந்தது. 1930 களில் கரவெட்டியை சேர்ந்த திரு. சின்னத்தம்பி என்பவரும் 1940களில் ஆத்தியடியை சேர்ந்த திரு. நாகப்பர் வேலுப்பிள்ளை என்பவரும் மணியகாரர்களாக இருந்துள்ளனர். இவர்கள் மிகவும் செல்வாக்குள்ள செல்வந்த குடும்பங்களிலிருந்தே தெரிவு செய்யப்பட்டதுடன் தமது அலுவலகங்களை தமது வீடுகளிலேயே நடாத்தியும் வந்துள்ளனர். 1947ல் மணியகாரன் முறை ஒழிக்கப்பட்டு பிரிவு இறைவரி உத்தியோகத்தர் அல்லது காரியாதிகாரி முறை (D.R.O) அறிமுகப்படுத்தப்பட்டது. வடமராட்சி பிரிவின் 1வது காரியாதிகாரியாக திரு.S.பெருமையினார் அவர்களும் அவரை தொடர்ந்து திரு. வேதாரணியசேயோன், திரு.S. சிதம்பரப்பிள்ளை, திரு. பூரணலிங்கம், திரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஸ்வநாதன், திரு.ஜே. டி. ஆனோல்ட், திரு.சு.ஜெயகாந்தன், போன்றோர் இறைவரி உத்தியோகத்தர்களாக கடமையாற்றியுள்ளனர்.

## 5.0. வடமராட்சி வடக்கு, கிழக்கு காரியாதிகாரி பிரிவு உருவாக்கம்

வடமராட்சி பிரதேசம் பரந்த நிலப்பரப்பையும், அதிக சனத்தொகையையும் கொண்டிருந்த காரணத்தால் பருத்தித்துறை மற்றும் உடுப்பிட்டி தேர்தல் தொகுதிகளை அடிப்படையாக கொண்டு 1960 களில் வடமராட்சி வடக்கு கிழக்கு, வடமராட்சி தெற்கு மேற்கு என இரண்டு காரியாதிகாரி பிரிவுகள் உருவாக்கப்பட்டன. வடமராட்சி வடக்கு கிழக்கு காரியாதிகாரி பிரிவு தொண்டைமானாறு தொடக்கம் தற்போதய வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சுண்டிக்குளம் வரையிலான ஒரு நீண்ட கரையோர பிரதேசத்தை கொண்ட 19 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியதாக நிர்வகிக்கப்பட்டு வந்தது 1969 இல் காரியாதிகாரி முறை ஒழிக்கப்பட்டு உதவி அரசாங்க அதிபர் முறை கொண்டு வரப்பட்டது. வடமராட்சி வடக்கு - கிழக்கு உதவி அரசாங்க அதிபர்களாக திரு.மு.தம்பிமுத்து, திரு.சி. க. மார்கண்டு, திரு.வை.வேலும்மயிலும் போன்றோர் கடமையாற்றியுள்ளனர். திரு. வை. வேலும்மயிலும் அவர்கள் உதவி அரசாங்க அதிபராக கிட்டத்தட்ட பன்னிரண்டு வருடங்களிற்கு மேலாக கடமையாற்றி இருந்ததுடன் இவர் ஒரு நடமாடும் செயலகமாக பணியாற்றியமை ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## 6.0. வடமராட்சி வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு உருவாக்கம்

வடமராட்சி வடக்கு கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஒரு நீண்ட கரையோர பிரதேசத்தினை கொண்டிருந்தபடியால் 1989 இல் வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு என இரண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாக பிரிக்கப்பட்டது. வடமராட்சி வடக்கு உதவி அரசாங்க அதிபர்களாக திரு.மு.தம்பிப்பிள்ளை, திரு.S.ஸ்ரீநிவாசன், திரு. S. முருகேசம்பிள்ளை போன்றோர் கடமையாற்றியுள்ளனர். திரு. முருகேசம்பிள்ளை அவர்கள் ஓய்வு பெற்ற பின்பு செயலக காணிக் கொள்வனவு குழுவின் தலைவராக செயற்பட்டு செயலக காணிக் கொள்வனவிற்கு அரும்பணி ஆற்றியமை ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## 7.0. மாகாணசபையும் பிரதேச நிர்வாகமும்

1987ம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் யாப்பின் 13ம் திருத்த சட்டத்தின் பிரகாரம் மாகாணசபைச்சட்டத்தின் கீழ் வடக்கு - கிழக்கு மாகாணசபை உருவாக்கப்பட்டதுடன் 1991இல் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் கடமையாற்றிய அலுவலர்கள் மாகாணசபைக்கு உள்வாங்கப்பட்டதுடன் மாகாணசபையின் குறித்து ஒதுக்கப்பட்ட கடமைகளை கவனிப்பதற்காக உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க அதிபர்கள் உதவி மாவட்ட ஆணையர்களாகவும் மாவட்ட அரசாங்க அதிபர்கள் மாவட்ட ஆணையாளர்களாகவும் இக்காலப் பகுதிகளில் செயற்பட்டனர்.

## 8.0. பிரதேச செயலகத்தின் உருவாக்கம்

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம் 01.06.1996 முதல் பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்பட்டது. இதன் முதலாவது பிரதேச செயலாளராக திரு. ஆ. சிவசுவாமி அவர்கள் கடமையாற்றி இருந்தார். இவர் இச் செயலக பிரிவில் 1994 இலிருந்து ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக கடமையாற்றியதுடன் தற்போது யாழ் மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபராகவும் கடமையாற்றி வருகின்றார். இவருடைய காலப்பகுதியிலேயே புதிய கட்டடத்திற்கான காணிக்கொள்வனவும் அடிக்கல் நாட்டு வைபவமும் இடம்பெற்றது. திரு.ஆ. சிவசுவாமி அவர்களை தொடர்ந்து திரு. S. வசந்தகுமார் அவர்களும் அவரை தொடர்ந்து 25.05.2005 முதல் திரு.இ. வரதீஸ்வரன் அவர்களும் பிரதேச செயலாளராக கடமையாற்றி வருகின்றார். இவருடைய காலப்பகுதியிலேயே புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிரதேச செயலகம் திறக்கப்படுகின்றமை ஒரு சிறப்பம்சமாகும்.

## 9.0. கடந்த கால அலுவலக செயற்பாடுகள்

இச் செயலகம் காரியாதிகாரி அலுவலகமாக இருந்த காலப் பகுதியிலிருந்தே தனியார் கட்டங்களிலேயே இயங்கி வருகின்றது. 1950 களிலிருந்து பின்வரும் இடங்களில் உள்ள தனியார் கட்டடங்களில் இச் செயலகம் இயங்கியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1950 | - | பருத்தித்துறை கடற்கரை வீதி |
| 1960 | - | 1ம் கட்டைச் சந்தியிலுள்ள தனியார் கட்டடம் |
| 1965 | - | மருதடி - தற்போதைய முருகானந்தன் மருந்தக கட்டடம் |
| 1976 | - | பருத்தித்துறை சிவன் கோயிலிற்கு அருகிலுள்ள தனியார் கட்டடம் (தற்போதைய சாயி மந்திரி) |
| 1987 | - | புலோலி கமநல சேவை நிலையம் |
| 1991 | - | மீண்டும் பழைய இடம் (தற்போதைய சாயி மந்திரி) |
| 1998 | - | பருத்தித்துறை இ. போ. ச முன்பாக உள்ள தனியார் கட்டடம் |
| 2007 | - | ஜனவரியிலிருந்து வட இந்து மகளிர் கல்லூரிக்கு அருகாமையிலுள்ள தனியார் கட்டத்திற்கு பிரதான அலுவலகம் மாற்றப்பட கிளை அலுவலகம் ஒன்று (கணக்குக்கிளை உட்பட வேறு சில கிளைகளும் வெளிக்கள உத்தியோகத்தர்களம் அடங்கலாக) தொடர்ந்தும் இ.போ.ச. முன்பாக உள்ள இக் கட்டத்திலேயே இயங்கிவருகின்றது |

பிரதேச செயலகத்திற்கென தனியான கட்டட வசதியின்மை ஆரோக்கியமான நிர்வாக செயற்பாட்டிற்கு ஒரு தடையாகவே காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10.0. உதவி அரசாங்க அதிபர் அலுவலக கடமைகளும் ஆளணி விபரமும்

இச் செயலகம் உதவி அரசாங்க அதிபர் பணிமனையாக செயற்பட்ட காலத்தில் உதவி அரசாங்க அதிபர், ஆளணி உதவியாளர் மற்றும் ஏழு எழுது வினைஞர்களுடன் ஒரு சிற்றூழியரும் இருபது கிராம அலுவலர்களும் கடமையாற்றி வந்தனர். அப்போதைய செயலகத்தின் பிரதான தொழிற்பாடாக குடியிருப்பாளர் அட்டவணை பராமரித்தல், கூப்பன் முத்திரை விநியோகம், தேர்தல் இடாப்புக்கள் தயாரித்தல், தேர்தல்களை நடாத்த ஒத்தாசை வழங்கல் போன்றன பிரதான கடமைகளாக இருந்தன.

## 10.1. பிரதேச செயலக கடமை பொறுப்புகளும் ஆளணி விபரமும்

இச் செயலகம் பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்பட்டதும் அதிகாரங்கள் கையளிக்கப்பட்டு அதன் கடமைப் பொறுப்புகளும் செயற்பாடுகளும் அதிகரித்து காணப்படுகின்றன. இதன் பிரதான கடமைப் பொறுப்புகள் பின்வருமாறு அமைகிறது.

1) பிரதேச அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகள்
2) இடம்பெயர்ந்த குடும்பங்களின் நிவாரண விநியோகம், நலன்புரி செயற்பாடுகள் மற்றும் மீள் குடியேற்றம் தொடர்பான கடமைகள்.
3) சமூக சேவைகள் திணைக்களம் சார்ந்த சகல கடமைகளும் (சமூக பாதுகாப்பு ஓய்வூதிய திட்டம் அடங்கலாக)
4) தேசிய அடையாள அட்டை விநியோக செயற்பாடுகள்.
5) கடவுச் சீட்டு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளலும் அவற்றை உரிய திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தலும்
6) அரச காணிகள் தொடர்பான கடமைகள்
7) ஓய்வூதிய கொடுப்பனவு தொடர்பான செயற்பாடுகள்
8) வாகன வரி அனுமதிப்பத்திரம் வழங்கல் மற்றும் மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஏனைய கடமைகள்.
9) சுனாமி / போர் அழிவு வீடுகளின் புனர்நிர்மாணம்
10) அரச சார்பற்ற நிறுவன வேலைத்திட்டங்களை ஒருங்கிணைத்தலும் மேற்பார்வை செய்தலும்.
11) சமுர்த்தி நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் அதன் சகல செயற்பாடுகளையும் ஒருங்கிணைத்தலும் கண்காணித்தலும்.

மேலும் பிரதேச செயலகம் நிரந்தர கட்டட தொகுதியில் செயற்பட தொடங்கியதும் பதிவாளர் திணைக்கள கடமைகளும் பொறுப்பேற்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரதேச செயலக அலுவலர் குழாம்**

1) பிரதேச செயலாளர்
2) உதவி பிரதேச செயலாளர்
3) உதவித் திட்டமிடல் பணிப்பாளர்
4) உதவி பிரதேச செயலாளர் (நிதி)
5) நிர்வாக அலுவலர்கள் - 02 (ஒருவர் வடக்கு மாகாண சபைக்கு விடுவிக்கப்பட உள்ளார்)
6) கிராம அலுவலர் (அதி சிறப்பு) - 01
7) முகாமைத்துவ உதவியாளர்கள் - 28
8) அபிவிருத்தி இணைப்பாளர் - 02 (இதில் ஒருவர் நெக்ரெப் திட்ட கடமைகளிற்காக விடுவிக்கப்பட்டுள்ளார்)
9) நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் - 15
10) அபிவிருத்தி உதவியாளர்கள் - 08
11) ஏனைய திணைக்கள அலுவலர்கள் - 04 (பட்டதாரி நியமனங்கள்)
12) வெளிக்கள அலுவலர்கள் - 06
13) கிராம அலுவலர்கள் - 24 (11 பிரிவுகள் வெற்றிடம்)
14) தையல் போதன ஆசிரியை - 01
15) நெசவு போதன ஆசிரியயை - 01
16) சாரதிகள் - 02
17) சிற்றூழியர்கள் - 06
18) சுனாமி செயற்திட்ட அலுவலர்கள் - 13
19) சமுர்த்தி முகாமையாளர்கள் - 06
20) சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள்

தலைமைச் செயலக் - 03

| | | |
|---|---|---|
| வலயம் - 01 | சமுர்த்தி வங்கி, வல்வெட்டித்துறை | - 05 |
| | வெளிக்கள அலுவலர்கள் | - 17 |
| வலயம் - 02 | சமுத்தி வங்கி, பருத்தித்துறை | - 06 |
| | வெளிக்கள அலுவலர்கள் | - 17 |

மகாசங்கம் - 03

## வடமராட்சி வடக்கு பிரதேச செயலக நிரந்தர கட்டடம் வரலாற்றுச் செயல்முறை பதிவுகளும் நிகழ்வுகளும்

### 1.0. காணிக் கொள்வனவு குழுவும் காணி கொள்வனவும்

பிரதேச் செயலகத்துக்கான கட்டடம் அமைப்பதற்கு அதற்கான காணி இல்லாமை ஒரு பெரும் குறையாக காணப்பட்டது. காணியை கொள்வனவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தவற்கான குழு ஒன்றினை அமைக்கும் பொருட்டு அப்போதைய பிரதேச செயலாளராக கடமையாற்றிய திரு. ஆ. சிவசுவாமி அவர்களின் தலைமையில் நலன் விரும்பிகளுடனான 1வது கலந்துரையாடல் 30.01.2001 இல் இடம்பெற்ற. இக் குழுவின் தலைவராக இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். முருகேசம்பிள்ளை அவர்கள் தலைமையிலான காணிக்கொள்வனவு குழு ஒன்று உருவாக்கப்பட்டது. இக் குழுவில் செயலாளராக இளைப்பாறிய பருத்தித்துறை நகரசபை செயலாளர் திரு.ந. சோமசுந்தரம் அவர்களும் பொருளாளராக எமது செயலகத்தை சேர்ந்த திரு.க. முருகையா அவர்களும் செயலாற்றினர். தொண்டைமனாறு, வல்வெட்டித்துறை மக்களின் போக்குவரத்து பிரச்சனைகளை கருத்திற் கொண்டு அவர்களிற்கு வசதியான இடத்தில் கட்டடம் அமையக்கூடியதான காணியை கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டது. நிதி சேகரிப்பிற்கு அனைவரினதும் பூரண ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றது. புலோலி மத்தி கிராம அலுவலர் பிரிவில் இ.போ.சபைக்கு வடக்கு புறமாக அமைந்திருந்த 13 பரப்பு விஸ்தீரணமுள்ள காணியை குறைந்த விலையில் (12 இலட்சம் ரூபா) கொள்வனவு செய்வதற்கு அப்பிரிவு கிராம அலுவலராக கடமையாற்றிய அமரர் திரு. க. சண்முகநாதன் அவர்கள் ஆற்றிய பணிகள் என்றென்றும் நினைவு கூறப்பட வேண்டிய ஒன்றாகும். மேலும் இக் காணியை எமக்கு வழங்கி உதவிய அதன் தத்துவ உரிமைக்காரர் திருமதி. லோ. குமாரசுவாமி அவர்களுக்கும் எவ்வித கொடுப்பனவும் இன்றி உறுதியினை எழுதுவதற்கு உதவிய பிரசித்த நொத்தாரிசு திருமதி. வி. உருத்திரேஸ்வரன் அவர்களிற்கும் இச் சந்தர்ப்பத்தில் எமது செயலகத்தின் சார்பில் பாராட்டுதல்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் ரூபா 17 இலட்சத்தற்கு மேற்பட்ட நிதியினை சேகரிக்க உதவிய கிராம அலுவலர்கள் மற்றும் ஏனையோரும் நன்றியுடன் நினைவுகூறப்படுகின்றனர்.

## 2.0. பிரதேச செயலகத்திற்கான காணி கையளிப்பு வைபவம்

செயலகக் கட்டடம் அமைப்பதன் பொருட்டு பொதுமக்களின் அன்பளிப்பு மூலம் கொள்வனவு செய்யப்பட்ட காணியை வைபவ ரீதியாக கையளிக்கும் நிகழ்வு 18.07.2001 இல் இடம்பெற்றது. பொதுமக்கள் சார்பில் ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபரும் காணிக்கொள்வனவு குழு தலைவருமான திரு.சி.முருகேசம்பிள்ளை அவர்களினால் காணி உறுதி கையளிக்கப்பட்டது. இதனை அப்போதைய அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான திரு. க. சண்முகநாதன் அவர்கள் கையேற்றார். பிரதேச செயலாளர் திரு. ஆ. சிவசுவாமி அவர்கள் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஆசியுரையினை சுவாமி. சித்ரூபானந்தா அவர்களும் வண. பிதா. இருதயதாஸ் அடிகளார் அவர்களும் நிகழ்த்தினர்.

## 3.0. செயலக கட்டடத்திற்கான அத்திவாரமிடல்

புதிய பிரதேச செயலகத்திற்கான அடிக்கல் நாட்டு விழா 19.03.2004 இல் இடம்பெற்றது. பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பாட்டில் இராமகிருஷ்ண மிஷன் இலங்கை கிளையின் தலைவர் சுவாமிஜி ஆத்மகானந்தர் மகராஜி அவர்களும், அருட்தந்தை சோபன் ரூபஸ் அடிகளார், பிரதேச செயலாளர், செயலக அலுவலர்கள் மற்றும் காணிக் கொள்வனவு உறுப்பினர்கள் ஆகியோரால் அடிக்கல் நாட்டு நிகழ்வு இடம்பெற்றது.

## 4.0. நிதி ஒதுக்கீடும் கட்டட நிர்மாணமும்

செயலகத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா கட்டடத்திற்கான எவ்வித நிதி எற்பாடுகளும் இல்லாத சந்தர்ப்பத்திலேயே மேற்கொள்ளப்பட்டது. அப்போதைய அரசாங்க அதிபராக இருந்த திரு. செ. பத்மநாதன் அவர்கள் இக் கட்டட நிர்மாணத்தின் பொருட்டு ஆரம்ப கட்டமாக 2004 இல் ரூபா 50 இலட்சத்தை விடுவித்தமைக்கு அமைவாக நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. காலத்திற்கு காலம் கிடைக்கப்பெற்ற நிதி ஏற்பாடுகளை கொண்டு கிட்டத்தட்ட 300 இலட்சம் ரூபா செலவில் என்று புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதனை கூடிய விரைவில் செய்து முடிக்க வேண்டுமென்று அயராது பாடுபட்ட தற்போதைய அரசாங்க அதிபர் திரு. க. கணேஷ், மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஆ. சிவசுவாமி, பிரதேச செயலாளர் திரு. இ. வரதீஸ்வரன், கட்டட ஒப்பந்தக்காரர், கட்டட திணைக்கள அலுவலர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்களாவார். மேலும் இக் கட்டடம் அமைந்துள்ள காணியின் வடக்கு பக்க சுற்று மதில் அமைத்தல், அரைநிரந்த கட்டம் ஒன்றை கட்டியமை மற்றும் கிணறு புனரமைப்பு போன்ற அபிவிருத்தி வேலைகள் காணிக் கொள்வனவு குழுவினால் மேற்கொள்ளப்பட்டமை ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## 5.0. திறப்பு விழாவை முன்னிட்டு இடம்பெற்ற சமய நிகழ்வுகள்

புதிய கட்டட திறப்பு விழாவிற்கு முன்னதாக இடம்பெற வேண்டிய சமய நிகழ்வு ஒன்று 11.02.2008 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது. புலோலி பசுபதீஸ்வரர் ஆலயத்தில் இடம்பெற்ற சமய வழிபாட்டை தொடர்ந்து புதிய கட்டடத்தில் பால் காய்ச்சும் வைபவம் இடம்பெற்றது. இதற்கு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. கணேஷ் அவர்கள் பிரதம அதிதியாக வருகை தந்திருந்தார். மேலும் மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர், அவர் தம் பாரியார், காணிக் கொள்வனவு உறுப்பினர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் போன்றோர் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். காணிக்கொள்வனவு குழு உறுப்பினரான திரு. நடராஜா அவர்கள் இச் சமய நிகழ்வின் பொருட்டு தன்னாலான அனைத்து உதவிகளையும் வழங்கியிருந்தார்.

கட்டட திறப்புவிழா காணும் இன்றைய நன் நாளில் இதற்காக உழைத்த அனைவரையும் நன்றியுடன் நினைவு கூருவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


காணிக்கையளிப்பு
வைபவத்தின்போது





அடிக்கல் நாட்டும்
வைபவத்தின்போது

சமயக் கிரியை
நிகழ்வின்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் கடமையாற்றிய பணியாளர்கள், காரியாதிகாரிகள், உதவி அரசாங்க அதிபர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் பற்றிய விபரங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு. சின்னத்தம்பி | மணியகாரர் | 1930 |
| 2) | திரு. நா. வேலுப்பிள்ளை | மணியகாரர் | 1940 |
| 3) | திரு. எஸ். பெருமையினார் | காரியாதிகாரி | 1947 |
| 4) | திரு. வேதாரணிசேயோன் | காரியாதிகாரி | 1948 |
| 5) | திரு. சிதம்பரப்பிள்ளை | காரியாதிகாரி | 1951 |
| 6) | திரு. எஸ். பூரணலிங்கம் | காரியாதிகாரி | 1955 |
| 7) | திரு.ஜெ.டி. ஆனோல்ட் | காரியாதிகாரி | 1960 |
| 8) | திரு. சி. விசுவநாதன் | காரியாதிகாரி | 1965 |
| 9) | திரு. ஜெயகாந்தன் | காரியாதிகாரி | 1967 |
| 10) | திரு. மு. தம்பிமுத்து | காரியாதிகாரி/உதவி அரசாங்க அதிபர் | 1969 |
| 11) | திரு. சி. க. மார்க்கண்டு | உதவி அரசாங்க அதிபர் | 1976 |
| 12) | திரு. வை. வேலும்மயிலும் | உதவி அரசாங்க அதிபர் | 01.03.1978-01.09.1990 |
| 13) | திரு. மு. தம்பிப்பிள்ளை | உதவி அரசாங்க அதிபர் | 1990 / 1991 |
| 14) | திரு. செ. ஸ்ரீநிவாசன் | உதவி அரசாங்க அதிபர் | 01.04.1991-14.06.1992 |
| 15) | திரு. எஸ். முருகேசம்பிள்ளை | உதவி அரசாங்க அதிபர் | 15.06.1992 |
| 16) | திரு. ஆ. சிவசுவாமி | பிரதேச செயலாளர் | 1994 - 2004 |
| 17) | திரு. எஸ். வசந்தகுமார் | உதவி பிரதேச செயலாளர் / பிரதேச செயலாளர் | 01.12.2003 - 31.01.2006 |
| 18) | திரு. இ. வரதீஸ்வரன் | பிரதேச செயலாளர் | 25.05.2005 முதல் இன்றுவரை |
| 19) | திருமதி. உஷா சுபலிங்கம் | உதவி பிரதேச செயலாளர் | 17.05.2006 முதல் இன்றுவரை |

## பருத்தித்துறை பிரதேச செயலக காணிக் கொள்வனவுக்கு நிதியுதவி செய்தோர் விபரம்

| | | விபரம் | கொடுப்பனவு செய்த தொகை |
|---|---|---|---|
| 1 | | ஒ.எம்.எ நடராசா | 10000.00 |
| 2 | ஜே/383 | தொண்டமானாறு தெற்கு | 42125.00 |
| 3 | ஜே/384 | தொண்டமானாறு வடக்கு | 22550.00 |
| 4 | ஜே/385 | கெருடாவில் தெற்கு | 40800.00 |
| 5 | ஜே/386 | கெருடாவில் வடக்கு | 3650.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 6 | ஜே/387 | கெருடாவில் கிழக்கு | 24050.00 |
| 7 | ஜே/388 | வல்வெட்டித்துறை வடமேற்கு | 34030.00 |
| 8 | ஜே/389 | வல்வெட்டித்துறை வடமத்தி | 30800.00 |
| 9 | ஜே/390 | வல்வெட்டித்துறை வடகிழக்கு | 33050.00 |
| 10 | ஜே/391 | வல்வெட்டித்துறை தெற்மேற்கு | 37000.00 |
| 11 | ஜே/392 | வல்வெட்டித்துறை தென்கிழக்கு | 50800.00 |
| 12 | ஜே/393 | பொலிகண்டி மேற்கு | 31150.00 |
| 13 | ஜே/394 | பொலிகண்டி கிழக்கு | 38450.00 |
| 14 | ஜே/395 | பொலிகண்டி தெற்கு | 15950.00 |
| 15 | ஜே/396 | அல்வாய் மேற்கு | 28650.00 |
| 16 | ஜே/397 | அல்வாய் வடமேற்கு | 32450.00 |
| 17 | ஜே/398 | அல்வாய் வடமத்தி | 30450.00 |
| 18 | ஜே/399 | வியாபாரிமூலை | 44190.00 |
| 19 | ஜே/400 | அல்வாய் வடக்கு | 30000.00 |
| 20 | ஜே/401 | பருத்தித்துறை | 284394.00 |
| 21 | ஜே/402 | பருத்தித்துறை தெற்கு | 50500.00 |
| 22 | ஜே/403 | பருத்தித்துறை கிழக்கு | 136200.00 |
| 23 | ஜே/404 | தும்பளை | 77500.00 |
| 24 | ஜே/405 | தும்பளை கிழக்கு | 23500.00 |
| 25 | ஜே/406 | கற்கோவளம் | 48250.00 |
| 26 | ஜே/407 | புலோலி வடக்கு | 153000.00 |
| 27 | ஜே/408 | புலோலி வடகிழக்கு | 34150.00 |
| 28 | ஜே/409 | புலோலி மத்தி | 45750.00 |
| 29 | ஜே/410 | புலோலி மேற்கு | 50200.00 |
| 30 | ஜே/411 | புலோலி தென்மேற்கு | 39550.00 |
| 31 | ஜே/412 | புலோலி வடமேற்கு | 28250.00 |
| 32 | ஜே/413 | புலோலி கிழக்கு | 9800.00 |
| 33 | ஜே/414 | புலோலி தெற்கு | -------- |
| 34 | ஜே/415 | மந்திகை | 21000.00 |
| 35 | ஜே/416 | வல்லிபுரம் | 5000.00 |
| 36. | ஜே/417 | துன்னாலை வடக்கு | 42500.00 |
| 37 | | பிரதேச செயலக அலுவலர்கள் | 33906.50 |
| | | சமுர்த்தி அலுவலர்கள் | 44192.00 |
| | | பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கம் | 5000.00 |
| | | புலோலி ப.நோ.கூ. சங்கம் | 5000.00 |
| | | பனை தென்னை வள அ.கூ.சங்கம் | 2000.00 |
| | | வங்கிவட்டி | 21439.90 |
| | | | 1741227.40 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறை காணிக்கொள்வனவு குழுவினால் மேற்கொள்ளப்பட்ட செலவு விபரம்

| | விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | காணிக் கொள்வனவு | 1200000.00 |
| 2 | காணி அளவை மதிப்பீடு | 2000.00 |
| 3 | காணிக் கொள்வனவு உறுதி முத்திரை | 47000.00 |
| 4. | காணிக் கொள்வனவு உறுதி கையளிப்பு செலவு | 14297.00 |
| 5. | காணிக் கொள்வனவு நிதி சேகரிப்புக்கான பற்றுச்சீட்டு புத்தகம் அச்சிட்ட செலவு | 4875.50 |
| 6. | புத்தகம் தயாரித்தல் | 1560.00 |
| 7 | காணிக் கொள்வனவுக்குரிய விளம்பரப் பலகை | 2155.00 |
| 8 | கிணறு புனரமைப்பு | 61150.00 |
| 9 | வடக்கு பக்கச் சுற்றுமதில் | 122695.00 |
| 10 | மகாநாட்டு மண்டபம் | 150390.50 |
| 11 | முன்பக்க வேலியமைத்தல் | 15200.00 |
| 12 | நானாவித செலவு | 716.50 |
| 13 | இரும்புக் கதவு | 4400.00 |
| 14 | காணிக் கொள்வனவுக்கு நிதியுதவியளித்தோர் செலவு விபரபுத்தக செலவு | 12199.00 |
| | மொத்த செலவு | 1638638.50 |
| | வங்கிமீதி (கையிருப்பு) | 102588.90 |
| | | 1741227.40 |

இக்காணியின் உறுதியை சட்டத்தரணியாகிய திருமதி. உ. விஜயராணி அவர்கள் இலவசமாக எழுதித்தந்து தமது பங்களிப்பையும் மக்களோடு மக்களாகச் சேர்ந்து செய்துள்ளார்.

**பருத்தித்துறை பிரதேச செயலக காணிக் கொள்வனவுக் குழு**

1) தலைவர் : திரு. எஸ். முருகேசம்பிள்ளை
2) செயலாளர் : திரு. ந. சோமசுந்தரம்
3) பொருளாளர் : திரு. க. முருகையா

சரி பார்த்தவர் : திரு. ஏ. எம். இராஜகுமார்
அபிவிருத்தி இணைப்பாளர்,
பிரதேச செயலகம்,
பருத்தித்துறை.

**"சிறு துளி பெரு வெள்ளம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலகத்தின் செயற்பாடுகள்

**திருமதி. உஷா சுபலிங்கம்**
உதவிப் பிரதேச செயலர்,
பிரதேச செயலகம்,
பருத்தித்துறை.

**அறிமுகம் :**

பிரதேச செயலகமானது 1992ம் ஆண்டின் 58ம் இலக்க (Transfer of powers) சட்டத்தின் பிரகாரம் நிர்வாகத்தை மக்கள் இடத்திற்கு எடுத்துச் செல்வதற்காகவும், பிரதேச மட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளில் மக்கள் பங்களிப்பை பலப்படுத்துவதற்காகவும், அதிகார பரவலாக்கல் மூலம் தாபிக்கப்பட்ட அமைப்பாகும். பிரதேச மட்டத்தில் மக்கள் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக மாவட்டச் செயலகத்திலிருந்தும், மாகாண சபையிலிருந்தும் பல வகையான அதிகாரங்கள் பிரதேச செயலகங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது. இதிலிருந்து பார்க்கும்போது பிரதேச செயலகமானது ஒரு மைய அதிகார கட்டமைப்பாக விளங்குகின்றது. மத்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்குவதுடன், வேறு அமைச்சுகளின் சேவைகளும் பிரதேச செயலகத்தினுடாக மக்களுக்கு வழங்கப்படுகின்றது. உதாரணமாக உதவி திட்டமிடல் பணிப்பாளர், கலாசார உத்தியோகத்தர், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், விளையாட்டு உத்தியோகத்தர், சமூகசேவை உத்தியோகத்தர், கைத்தொழில் போதனாசிரியர் போன்றோரைக் குறிப்பிடலாம். பிரதேச செயலகத்தின் தூரநோக்கு இலக்கு, என்பன வருமாறு.

**தூரநோக்கு (vision) :**

2010ம் ஆண்டளவில் புதிய தொழில்நுட்பங்களுடன் இணைந்த வினைத்திறனும், பயனுறுதியும் கொண்ட பொதுச்சேவை.

**இலக்கு (Mission):**

மக்களின் அபிலாசைகட்கும், அடையாளம் காணப்பட்ட தேசிய முன்னுரிமைகட்கும், ஏற்றதான வினைத்திறனும், பயனுறுதியும் கொண்ட பொதுச்சேவையும் உறுதியான நிர்வாக நடைமுறையும், பிரதேச கிராமிய மட்டங்களில் உத்தரவாதப்படுத்தல்.

வேகமாக மாறுகின்ற இன்றைய உலகில் மக்கள் தங்கள் தேவைகளை தங்கள் பிரதேசத்திற்குள்ளேயே நிறைவேற்றும் வகையில் பரந்த நிர்வாகக் கட்டமைப்பைக் கொண்ட அமைப்பாக பிரதேச செயலகம் காணப்படுகின்றது. பொது மக்கள் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைகளை இலகுவில் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் செயலக ஊழியர்கள் பல கிளைகளாக செயற்படுகின்றனர். இவ்வகையில் பிரதேச செயலகத்தில் காணப்படும் கிளைகளாவன.

01. தாபனக் கிளை
02. புனர்வாழ்வுக் கிளை
03. திட்டமிடல் கிளை
04. நிதிக் கிளை
05. சமுர்த்தி கிளை
06. சமூகசேவை கிளை
07. காணிக் கிளை
08. தொழிற்துறை கிளை
09. பதிவாளர் கிளை
10. வெளிக்கள உத்தியோகத்தர்.
(விளையாட்டு, கலாசாரம், கிராம அபிவிருத்தி,சிறுவர் விவகாரம்)

மேற்கூறப்பட்ட கிளைகளின் செயற்பாட்டை நோக்குவதன் ஊடாக செயலகத்தின் செயற்பாட்டை நாம் விளங்கிக்கொள்ளலாம்.

**தாபனக் கிளை :**

01. கடவுச்சீட்டுக்களிற்கான விண்ணப்பங்களை பொதுமக்களிடமிருந்து பொறுப்பேற்று நேரடியாக குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல்.

02. பொதுமக்களிற்கு தேவையானபோது வதிவிடச் சான்றிதழ்களை வழங்குதல்.

03. தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பத்தினை கிராம சேவை உத்தியோகத்தரிடமிருந்து பொறுப்பேற்று மாவட்டச் செயலகம் ஊடாக ஆட்பதிவுத் திணைக்களகத்திற்கு அனுப்பிவைத்தல்.

04. பொது மக்களிற்கு தேவையானபோது 'பெறுமதி பற்றிய சான்றுரை' வழங்கல்.

05. நபர் ஒருவர் காணமற்போய் 01 வருடம் கழிந்த நிலையில் அதற்கான நடவடிக்கையினை எடுத்து அந் நபரிற்கான இறப்புச் சான்றிதழை பெற்றுக்கொடுத்தல்.

06. விதவைகள் அனாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவினை பெற்றுக்கொண்டிருந்த நபர் ஒருவர் இறந்தால், அவரின் பிள்ளைகளில் எவராவது ஒருவர் வலது குறைந்தவராக இருந்தால் அந்நபரிற்கு அக் கொடுப்பனவினை தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குவதற்கான விசாரணையினை நடாத்தி அதற்கான அறிக்கையினை சிபார்சுசெய்து ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல்.

07. ஓய்வூதியம் பெற்றுக்கொண்டிருந்த ஒருவர் இறந்தால் அந் நபரிற்கான பின்னுரித்தாளர் பற்றிய அறிக்கையினை பெற்று ஓய்வூதியம் வழங்கிய அலுவலகத்திற்கு வழங்கல்.

08. வங்கிக்கணக்கினைப் பேணி வரும் ஒருவர் இறந்தால் அந் நபரிற்கான பின்னுரித்தாளர் பற்றிய விபரத்தினை பெற்று வங்கிக்கு வழங்குதல்.

09. ஜனாதிபதி நிதியத்திற்கு மருத்துவ உதவி கோரி விண்ணப்பிக்கும் ஒருவர் தொடர்பான குடும்ப நிலைமைபற்றிய அறிக்கையினைப் பெற்று ஜனாதிபதி நிதியத்திற்கு சிபார்சுடன் அனுப்பிவைத்தல்.

10. திருமணமாகாதோருக்கான சான்றிதழ் வழங்குதல்.

11. பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவிப்பணக் கொடுப்பனவு (Bursary), மகாபொல விண்ணப்பங்கள் சிபார்சு செய்து அனுப்புதல்

12. தற்காலிக அடையாள அட்டை வழங்குதல்.

## புனர்வாழ்வுக் கிளை :

1. இடம்பெயர்ந்த மக்களுக்கான உலருணவு நிவாரணம் வழங்குதலும், அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து சுயதொழில் உதவி, உணவல்லாத நிவாரணப் பொருட்களைப் பெற்றுக்கொடுத்தலும்.

2. நலன்புரி நிலையங்களை மேற்பார்வை செய்து, அங்குள்ள மக்களது தேவைகளை நிறைவு செய்ய நடவடிக்கைஎடுத்தல்.

3. இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுப்பதுடன், புனர்வாழ்வு புனர்நிர்மாண கொடுப்பனவுகள் வழங்குதல். தற்போது 25000 ரூபா புனர்வாழ்வுக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. இது வழங்கப்பட்டு 6 மாதங்களின்பின் உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்படும்.

4. குடும்பப் பதிவு அட்டை வழங்குதல், புதிய பெயர்களை சேர்த்தல், பெயர் நீக்கம் செய்தல், பதிவு மாற்றம் செய்தல்.

5. நலிவுற்ற மக்கள், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்தல்.

## திட்டமிடல் கிளை :

திட்டமிடல் கிளை பிரதேச செயலக அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து ஒழுங்கமைக்கும் செயல்ப்பாட்டில் முக்கியமானது. இதற்காக பிரதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலகத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பின்வரும் வழிகளில் நிதி கிடைக்கிறது.

- மூலதன நன்கொடை நிதி.
- விரிவாக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம் மூலம் பாராளமன்ற உறுப்பினர்களால் ஒதுக்கீடு செய்யப்படும் நிதி.
- மாகாண சபையிலிருந்து உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் நிதி.
- அரச சார்பற்ற நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் நிதி.

**திட்டமிடல் கிளையின் செயற்பாடுகள் வருமாறு :**

- பிரதேச செயலக எல்லைப்பரப்பில் உள்ள சகல இடங்களின் புள்ளிவிபரங்கள் திரட்டுதல். உதாரணமாக சனத்தொகை புள்ளிவிபரம், நிரந்தரங்கள், அரைநிரந்தரங்கள், வீதிகள், விவசாயம், கைத்தொளில் மற்றும் பல இப்புள்ளிவிபரங்களை கொண்டு புள்ளி விபரக் கையேட்டை தயாரித்தல்.
- தரவுகளை செயற்பாட்டு அறையில் (Operational room) காட்சிப்படுத்தல்.
- தேவையான திட்ட முன் மொழிவுகளை தயாரித்தல்.
- பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்ட வேலைத்திட்டங்களை நிறைவேற்றுதல். 2007 இல் உள்ள எமது செயலகத்தில் 3.6 Mn பெறுமதியான வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டது.
- நிரல் அமைச்சுக்களினூடாக பெறப்படும் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் திட்டங்களை ஒருங்கிணைத்து நிறைவேற்றுதல். சென்ற வருடம் கமநெகும அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், துரித அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றின் வேலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவ்வாண்டும் கமநெகும அபிவிருத்தித் திட்டத்தின் வேலைகள் நடைபெறுகின்றது.
- கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டம் (NECCDEP), NECORD, NEHRP, மீள் எழுச்சித்திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் அனுமதிக்கப்பட்ட வேலைத்திட்டங்களை மேற்பார்வை செய்து நிறைவேற்றுதல்.
- சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களை ஒருங்கிணைந்து நிறைவேற்றுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம், பிரதேச சபைக் குழுக்கூட்டம், வீடமைப்புக் கூட்டம், திட்ட முன்னேற்றக் கூட்டங்களை ஒழுங்கமைத்து நடாத்துதல். கூட்டக்குறிப்பை தயாரித்து கூட்டத்தில் ஆராயப்பட்ட தீர்மானம் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுத்தல்.

**நிதிக் கிளை :**

நிதிக்கிளை கணக்காளரின் பொறுப்பின் கீழ் இயங்கிவருகின்றது. நிதி நடவடிக்கைகள் பொது திறைசேரியின் நிதிப்பிரமாணங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்படுகின்றது. மத்திய அரசாங்க விடயங்களுக்கு தனியான வங்கிக் கணக்கு, கணக்குப்பதிவுகளும், மாகாண அரசின் பிரதேச செயலக நடவடிக்கைகளுக்கு தனியான கணக்குப் பதிவுகளும் பேணப்படுகின்றது. தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சியுடன் சேர்ந்தியங்கும் வகையில் எமது செயலகத்தில் பெரும்பகுதி கணனிமயப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக மாதாந்த, வருடாந்த அறிக்கைகள் தயாரிப்பதற்கு ஏற்ற வகையில் கணனி முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட கணக்கீட்டு முறைமையும் (CIGAS), அரச அலுவலர்களின் சம்பளம் மற்றும் முற்பணக்கணக்கு நடவடிக்கைகளுக்காக கணனியில் தயாரிக்கப்பட்ட சம்பள முறைமையும் (Pay roll System) , ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவை மேற்கொள்வதற்காக 'ஓய்வூதிய நிகழ்ச்சித் திட்டமும்' (Pension Programme) மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. பின்வரும் செயற்பாடுகள் கணக்குக் கிளையினரால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

➢ ஓய்வூதியம், ஓய்வூதிய நிலுவைகள் பெற்றுக் கொடுத்தல்.

➢ ஓய்வூதியர்களுக்கு திரட்டிய பணிக்கொடையினை பெற்றுக் கொடுத்தல்.

➢ வேறு பிரிவுகளுக்கு செல்லும் ஓய்வூதியர்களின் ஓய்வூதியங்களை குறித்த பிரிவிற்கு மாற்றம் செய்தல்.

➢ ஓய்வூதிய அடையாள அட்டைகளை வழங்குதல்.

➢ மோட்டார் வாகன வரி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.

➢ மோட்டார் வாகனங்கள் உடமை மாற்றத்திற்கான படிவங்களை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துக்கு அனுப்புதல்.

➢ மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் வழங்கப்படும் தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரங்களின் கால எல்லையை நீடித்தல்.

➢ பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட மோட்டார் வாகனங்களின் விபரங்களையும், வாகன உரிமையாளர்கள், அனுமதிப்பத்திரங்கள், வரி போன்ற விபரங்களையும் கணனி மயப்படுத்தல்.

➢ களஞ்சிய பொருட்களை பேணுதல், வழங்குதல், திருத்துதல், அகற்றுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வியாபார நிறுவனங்களின் பதிவுகளை மேற்கொள்ளுதல்.
- அரசாங்க பரீட்சைகளுக்கு செலுத்தப்படும் கட்டணங்களை பெற்று அவர்களுக்கு பற்றுச்சீட்டினை வழங்குதல்.

**சமுர்த்திக் கிளை :**

"வறியோர் குறைந்த சுபீட்சமிகு இலங்கை" எனும் தூர நோக்கை அடைவதற்காக இலங்கையில் 1995 இல் இருந்து சமுர்த்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது மூன்று அணுகு முறைகளை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் குறைந்த வருமானம் பெறுவோரை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் செயற்பட்டு வருகிறது. அவை வருமாறு.

1. உட்கட்டமைப்பு வசதியும் சமூக வலுவூட்டலும்.
2. நலனுதவித் திட்டங்கள்.
3. வங்கி நிதி நடவடிக்கை செயற்பாடுகள்.

சமுர்த்தி மகாசங்கம் எமது பிரதேச செயலகத்தையும், மருதங்கேணி அரசாங்க அதிபர் பணிமனையையும் உள்ளடக்கியதாக, சமுர்த்தி வங்கி நடவடிக்கைகளுக்கு பொறுப்பாகவும் வங்கி நிதியை முதலீடு செய்யும் அமைப்பாகவும் காணப்படுகிறது. அத்துடன் சமூக வலுவூட்டல், சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது. பிரதேச செயலக சமுர்த்தி கிளையின் கீழ் மேற்கொள்ளப்படும் ஏனைய பணிகள் வருமாறு.

- கிராம எழுச்சி வாழ்வாதார அபிவிருத்தி திட்டத்தை செயல்ப்படுத்துதல். இதன் கீழ் சமுர்த்தி அமைப்புக்கள் ஊடாக சுகாதாரத்தை மேம்படுத்துதல், குடிநீர்க் கிணறு அமைத்தல், மலசல கூடம் அமைத்தல், வேலைத்திட்டம், விவசாயம், கைத்தொழில் மேம்பாட்டுத்திட்டம், வீடமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டம், மனிதவள அபிவிருத்தித்திட்டம், ஆகிய பல் வேறு திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படும்.

- சமுர்த்தி நிவாரண நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தகுதியானவர்களுக்கு வறுமை நிவாரணம் வழங்குதலும், சமூக பாதுகாப்பு அங்கத்துவம் பெறத் தகுதியானவர்களுக்கு பிறப்பு, திருமணம், மரணம், சிகிச்சை போன்ற வற்றுக்கு நிதியுதவி பெற்றுக்கொடுத்தல்.

- பாலூட்டும் தாய்மாருக்கான (1 வயதிற்குட்பட்ட குழந்தைகள்) விசேட போஷாக்கு முத்திரை வழங்குதல்.

- மண்ணெண்ணெய் முத்திரை வழங்குதல். சமுர்த்தி வறுமை நிவாரணம் பெறும் குடும்பங்களில் மின்சார வசதி அற்ற குடும்பங்களுக்கு 100/= பெறுமதியான முத்திரை வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சமுர்த்தி வங்கிகள் ஊடாக சேமிப்புப் பழக்கத்தை ஊக்கப்படுத்துவதுடன், சுயதொழில் கடன் வழங்கல், மீள அறவீடு செய்தல்.
- சிப்தொற புலமைப் பரிசில் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல். சமுர்த்தி முத்திரை பெறும் பயனாளிகளின் பிள்ளைகளில் க.பொ.த (சா.த) பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்கள் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டு மாதம் 500/= கொடுப்பனவு வழங்கப்படுகிறது.
- திரிய பியச வீட்டுத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- மிகவும் வறுமையான வீடற்ற சமுர்த்தி பயனாளிகளுக்கு 50,000/= கொடுப்பனவு வீடமைப்புக்காக வழங்கப்படுகிறது.
- சமுர்த்தி கொடி வாரம் (புகைத்தல் எதிர்ப்புதினம்) போன்ற நிகழ்ச்சிகளினூடாக மக்களின் பங்களிப்பைப் பெற்று சமூர்த்தி சமூக பாதுகாப்பு நிதியத்தினூடாக நலிவுற்ற, பாதிப்படைந்தோருக்கான உதவி வழங்குதல்.
- திருவுளச்சீட்டின் மூலமாக சமுர்த்தி பயனாளிகளுக்கு வீடமைக்கும் திட்டம் நடைமுறைப்படுத்துதல். சமுர்த்தி அதிகார சபை இத்திட்டத்தை நடைமுறை ப்படுத்துகிறது. வருடத்தில் இரு தடவை குலுக்கல் மேற்கொள்ளப்பட்டு தெரிவு செய்யப்படும் பயனாளிகளுக்கு 150,000/= கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

**சமூக சேவைக் கிளை**

சமூகசேவைக் கிளை சமூகசேவை உத்தியோகத்தரின் கண்காணிப்பில் இயங்குகின்றது. இங்கு மாகாண சபை சமூகசேவைத் திணைக்களகத்தினால் நடைமுறைப்படுத்தும் வேலைத் திட்டங்கள், சமூக நலத்துறை அமைச்சின் திட்டங்கள், அனர்த்த நிவாரண மீள் குடியேற்ற வேலைத்திட்டங்கள் ஆகியன சமூக சேவைக்கிளையினால் நிறைவேற்றப்படுகின்றன. அவ்வாறு நிறைவேற்றப்படும் பணிகள் வருமாறு:

01. பொதுசன மாதாந்த உதவிப்பணம் வழங்குதல்.
02. புற்றுநோய், தொழுநோய், காசநோய், தலசீமியா போன்றவற்றினால் பாதிப்புற்ற வறியவர்களுக்கு உதவிப்பணம் வழங்குதல்.
03. சுயதொழில் ஆரம்பிப்பதற்கு விரிவுபடுத்துக்கான உதவி
04. பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெற்றுக்கொள்வதற்கு தகுதி உடையவர்களுக்கு சமூகசேவைத் திணைக்களகத்தினால் ரூபா 15000 வழங்கப்படுகின்றது. சமூகசேவை சமூக நலத்துறை அமைச்சின் கீழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள், விசேட தேவைக்குரியவர்கள், முதியவர்களுக்கு சுயதொழில் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

05. முதியோர் அடையாள அட்டை, விசேட தேவைக்குரியவர்களுக்கான அடையாள அட்டை பெற்றுக்கொடுத்தல்.

06. விசேட தேவைக்குரியவர்கள் உள்ள குடும்பங்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவு வழங்குதல்.

07. விசேட தேவைக்குரியவர்களுக்கு வீடமைப்பு உதவி பெற்றுக் கொடுத்தல்.

08. வலிந்துதவு சமூகசேவை அமைப்புக்களை பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்.

09. முதியோர் சங்கங்கள் அமைத்தலும், பதிவு செய்தலும்.

10. ஆதரவற்ற முதியோர்களை அரச முதியோர் இல்லத்தில் அனுமதிப்பதற்கு சிபார்சு செய்தல்.

11. இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் கீழ் ஓய்வுதியத் திட்டத்தில் இணைப்பதற்கு உதவுதல்.

12. தற்செயல் நிவாரணக் கொடுப்பனவு பெற்றுக் கொடுத்தல்.
மாகாண சபையில் சமூக நலத்துறை திணைக்களகத்தால் இயற்கை அனர்த்தால் சிறியளவு சொத்துக்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்கள் தமது வீடுகளை புனர்நிர்மானம் செய்வதற்கும், இயற்கையினாலும் காட்டு யானை போன்ற விலங்குகளினாலும் பயிர் அழிவுகளை எதிர்கொண்டவர்களுக்கு அவர்கள் தமது நட்டத்தினை ஈடு செய்வதற்காக இக்கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

தேசிய அனர்த்த நிவாரண நிலையத்தால் வெள்ளப்பெருக்கு, வரட்சி, புயல், மண்சரிவு போன்றவற்றால் ஏற்படும் அழிவுகளுக்கு (சமைத்த உணவு 3 நாட்களுக்கு), உலர் உணவு நிவாரணம், பயிர் அழிவு நட்டஈடு வைத்திய உதவி ஆகியன வழங்கப்படுகினறன. இவ்வாறான அழிவு ஏற்படும் போது உடனடியாக கிராம உத்தியோகத்தர் ஊடாக பிரதேச செயலாளருக்கு அழிவு விபரம் அறிவிக்கப்பட வேண்டும்.

## காணிக் கிளை:

அரச காணிகளைப் பாதுகாப்பதும், தேவையேற்படின் பகிர்ந்தளித்தலும், பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகளை அபிவிருத்திசெய்தலும், அத்துடன் பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகளுக்கு உரிமையளித்தல் சம்பந்தமான நிர்வாக வேலைகள் மேற்கொள்ளலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணிப் பகுதியின் முக்கிய கடமைகளாகும். இதன்படி பின்வரும் வேலைகள் இங்கு நிறைவேற்றப்படுகின்றன.

01. அரச காணிகளைப் பாதுகாத்தல் :- கிராம அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கல். அரசகாணி அடாத்தாக கைக் கொள்ளாமல் தடுத்தல், காணிச் சட்டத்தை மீறியவர்கள் 07 ம் இலக்க 1979 ம் ஆண்டு சட்டப்பிரகாரம் அரசகாணியை அரசுடமையாக்கல். அரசகாணியிலுள்ள வளங்களை அபகரிக்காமல் தடுத்தல். (மண்,கல்,மரம்,விறகு)

02. அரச காணிகளைப் பகிர்ந்தளித்தல் :- தேவைக்கேற்றவாறு அரசகாணிகளை காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் காணிக்கச்சேரி மூலமோ அல்லது '20அ' அனுமதியின் கீழோ காணிகளை பகிர்ந்தளித்தல். மேலும் அரசகாணிச் சட்டத்தின் கீழ் குத்தகை, பராதீனம், கையளித்தல் மூலமாக காணிகளை வழங்குதல்.

03. அரச காணிகளை அபிவிருத்தி செய்தல் :- இங்கு குடியிருப்பு காணிகள் மட்டுமே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. அவற்றுக்கு எல்லைகள் பெற்றுக் கொடுக்க ஆவன செய்தல்.

04. அரச காணி நிர்வாகம்:- காணி உரிமைகள் சம்பந்தமான உரிமை மாற்றம், தத்துவம் வழங்குதல், பின் உரிமை பதிதல், உபபிரிவுகளாகப் பிரித்து உரிமையளித்தல். தொலைந்த ஆவணங்கள் பெற்றுக் கொடுத்தல். வங்கிகளுக்கு காணி அடமானம் வைப்பதற்கான அனுமதிக் கடிதம் வழங்குதல்.

05. காணி சுவீகரிப்பு :- அரச தேவைக்கென அரசகாணிகள் இல்லாத சந்தர்ப்பத்தில் காணி சுவீகரிப்பதன் மூலம் காணி பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தல்.

06. அனுமதி வழங்குதல் :- மரம் தறிப்பதற்கு அனுமதி வழங்குதல். மரம், தளபாடம், விலங்கு கொண்டு செலவதற்கான வழி அனுமதி வழங்குதல். களவாக மரம் தறித்தல், சட்ட விரோதமாக மணல், கல் எடுப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. தனியார் பிணக்குகள் :- தனியார் காணி, கோவிற்காணி, நம்பிக்கைப் பொறுப்பாதனங்கள் சம்பந்தமான காணிகளில் பிரதேச செயலாளர் கிராம அலுவலருடன் இணக்கப்பாடு மேற்கொள்வதற்கு உதவுதல். இவற்றுடன் காணிப் பயன்பாட்டுக் கூட்டம் என்பவற்றைக் கூட்டி காணி வேலைகள் திறம்பட முன்னெடுக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

## தொழிற்துறைக் கிளை :

தொழிற்பயிற்சி ஊடாக வாழ்வாதாரத்தை விருத்திசெய்யும் வகையில் பல செயற்பாடுகள் தொழில்த்துறைக் கிளையினரால் ஆற்றப்பட்டுவருகின்றன. மாகாண சபையின் கீழ் தொழிற்துறை திணைக்கள நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களும், முகாமைத்துவ உதவியாளரும் இப்பிரிவில் கடமையாற்றுகின்றனர். தொழிற்துறைக்கிளையால் ஆற்றப்படும் கடமைகள் வருமாறு:

1. **சிறுகைத்தொழில்ப் பயிற்சிகளை வழங்குதல்**: எமது பிரதேச செயலகபிரிவின்கீழ் துன்னாலை வடக்கு கிராம அலுவலர் பிரிவில் நிரந்தரமாக 'நெசவு நிலையம்' ஒன்று இயங்கிவருகின்றது. மேலும் தொழில்த் துறைத் திணைக்களத்தால் மின்னிணைப்பு, படகின் வெளியிணைப்பு இயந்திரம் திருத்துதல், தையல்ப் பயிற்சி போன்ற பயிற்சிநெறிகள் நடாத்தப்பட்டுவருகின்றது.

2. நியூ கிளியஸ் குழு (7 பேர் கொண்ட சிறு கைத்தொழிலாளர் குழு) உருவாக்குதல். தொழில் முயற்சிகளுக்கான வியாபார ஆலோசனைகள் வழங்குதல்.

3. நியூ கிளியர்ஸ் குழு அங்கத்தவர்களின் பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுத்தல்.

4. அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு கைத்தொழிற் பயிற்சிகளை வழங்குதலும், தொழில் வழிகாட்டல் மேற்கொள்ளலும்.

## பதிவாளர் கிளை :

எமது செயலகத்தின் பதிவாளர் கிளையின் செயற்பாடுகள் பருத்தித்துறைக் காணிப் பதிவகத்தினாலேயே தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. செயலகத்தில் இடப்பற்றாக்குறை காரணமாக, செயலகத்திற்கு அருகாமையில் இயங்கிவரும் காணிப்பதிவகத்தால் பதிவாளர் கிளைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது செயலகத்தின் புதிய கட்டிடத்தில் பதிவாளர் கிளைச் செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. பதிவாளர் கிளைச் செயற்பாடுகள் வருமாறு:

1. திருமணப்பதிவுச் சான்றிதழ்கள் வழங்குதல்.

2. பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்குதல்.

3. காலம்கடந்த பிறப்பு, இறப்பு பதிவுகளின்பொருட்டு உரிய விசாரணை நடாத்தி, அத்தாட்சிப் பத்திரம் வழங்குதல்.

4. பிறப்பு, இறப்பு, அத்தாட்சிப் பத்திரங்களின் மொழிபெயர்ப்புப் பிரதிகளை வழங்குதல்.

5. நடமாடும் சேவைகள் மேற்கொள்வதன்மூலம் , கிராமமட்ட பொது அமைப்புக்களிடம் அறிக்கைகளைப் பெறுவதனூடாகவும் உரிய அத்தாட்சிப் பத்திரங்களை வழங்குதல்.

## விதாதா தொழில்நுட்ப வள நிலையம் :

விதாதா வள நிலையம் பிரதேச செயலாளரின் பொறுப்பில், கீழ்வரும் ஆளணியினரைக்கொண்டு தொழிற்படும்.

1. விஞ்ஞான தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர். (நிலைய செயற்பாட்டுக்கு பொறுப்பாளர்)
2. கணனி இயக்குனர்.
3. அலுவலக உதவியாளர்.
4. அலுவலக பாதுகாப்பு உத்தியோகத்தர்.
5. வெளிக்கள இணைப்பாளர்.
6. எழுதுவினைஞர்.

## விஞ்ஞான தொழில் நுட்பவியல் உத்தியோகத்தரின் பணிகள் :

- ❖ பிரதேச மட்டங்களில் கிடைக்கக்கூடிய பௌதீக , மனித வளங்களை இனங்கண்டு, பொருத்தமான தொழில்நுட்பப் பரிமாற்றத்தினூடாக அவற்றை மேம்படுத்தல்மூலம் வேலைவாய்ப்பையும், உரிய பயிற்சிகளையும் வழங்குதல்.

- ❖ சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்கான தொழில்நுட்பங்களை பெற்றுக்கொடுப்பது மற்றும் அவசியமான கடன் உதவிகளை பெற்றுக்கொடுப்பதற்கு அரச, தனியார் வங்கிகளுக்கு சிபார்சு செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பிரதேசத்திலுள்ள பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்டவர்களுக்கும், வேலைதேடுவோருக்கும் தொழில்ப் பயிற்சிகளை வழங்குதல் போன்றவைகளாகும்.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவிற்குள் பொலிகண்டியில் அமைந்துள்ள பலநோக்கு மண்டபத்தில் விதாதா வள நிலையத்தை ஆரம்பிப்பதற்கான முதற்கட்ட வேலையாக 'விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சினால்' நிதி ஒதுக்கப்பட்டது. இதன்படி 2007 ம் ஆண்டு - ரூபா 272 000 கட்டடத் திருத்த வேலைகளுக்கும், 2008 ம் ஆண்டு - ரூபா 694 000 காரியாலய தளபாடக் கொள்வனவுக்குமென வழங்கப்பட்டுள்ளது. பொலிகண்டியில் எமது பிரதேச செயலகத்துக்கான 'விதாதா வள நிலையம்' விரைவில் திறந்துவைக்கப்படவுள்ளது.

## செயலகத்தின் ஏனைய பணிகள்

மேற்கூறப்பட்ட விடயங்களுக்கு மேலதிகமாக கிராம அபிவிருத்தி, கலாச்சார விடயங்கள், விளையாட்டுத்துறை, சிறுவர் உரிமை மேம்பாடு, மனிதவள அபிவிருத்தி தொடர்பில் ஆற்றப்படும் சேவைகள் வருமாறு:

1. கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றை அங்குரார்ப்பணம் செய்தலும், பதிவு செய்தலும், மேற்பார்வை செய்தலும்.

2. மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக, உயர் கல்வியைத் தொடரமுடியாத வறிய குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்கு தையல், மனையியல், அழகியற் கலை போன்ற பயிற்சிகளை நடாத்தி சான்றிதழ் வழங்குதல். தற்போது J/417 கிராம அலுவலர் பிரிவிலுள்ள பொது நோக்கு மண்டபத்தில் மேற்படி பயிற்சி நெறி நடாத்தப்பட்டு வருகின்றது.

3. பிரதேச கலாசார விழா நடாத்துதல், பிரதேச மட்டத்தில் கலை இலக்கிய போட்டிகளை நடாத்துதல்.

4. அறநெறிப் பாடசாலைகளை பதிவு செய்தல், ஆலயங்களைப் பதிவுசெய்தலும் ஆலயங்களை மேற்பார்வை செய்தலும். ஆலய புனரமைப்புக்கு நிதியுதவி பெற்றுக் கொடுத்தல்.

5. விளையாட்டு கழகங்களை பதிவு செய்தலும், மேற்பார்வை செய்தலும், அவற்றின் தேவைகளை நிறைவு செய்தலும்.

6. பிரதேச மட்ட விளையாட்டு விழா நடாத்துதல்.

7. பாதுகாப்பற்ற சூழலில் வசிக்கும் சிறுவர்களுக்கான சிறுவர் இல்ல அனுமதியும், மீளிணைப்பு நடவடிக்கையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. நன்னடத்தை திணைக்களத்தினால் வழங்கப்படும் இரட்டைப் பிள்ளைகள் கொடுப்பனவு, பொருத்தமான நபர் கொடுப்பனவு (தாய் தந்தை இருவரையும் இழந்தோருக்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு) முதலிய கொடுப்பனவகளை பெற்றுக் கொடுத்தல்.

9. சிறுவர் துஸ்பிரயோகங்கள் தொடர்பான சட்ட நடவடிக்கைகள் எடுத்தலும், தொடர் கண்காணிப்பும்.

10. அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக நலிவுற்ற குடும்பங்களைச் சார்ந்த சிறுவர்களுக்கு உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

11. சிறுவர்கள், பெற்றோருக்கான விழிப்புணர்வு கூட்டங்கள் நடாத்துதல்.

12. முன்பள்ளிகள், கல்வி, சுகாதாரம், உளசமூக செயற்பாடு ஆகியன தொடர்பான மாதாந்த ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் நடாத்துதல்.

13. ஒக்ரோபர் 1 ஆம் திகதி 'அனைத்துலக சிறுவர் தின விழா' கொண்டாடுதல்.

## விரிமணல் வெளி

வடமராட்சியின் கிழக்குக் கரையோரமாக உள்ள மணல்வெளி இயற்கை ரீதியான பாதுகாப்பினை வழங்குவதுடன் வளமாகவும் கணிக்கப்படுகிறது. இன்று கட்டட உருவாக்கத்துக்கு இம்மணலின் போதாமை அல்லது மணலைப் பெற்றுக்கொள்ளும் முறைமையில் பல கரைச்சல்கள் இருப்பதை எல்லோரும் அறிவர்.

ஆனால் கட்டட உருவாக்கத்திற்கு மாத்திரம் பயன்படும் இம்மணலை கண்ணாடி உற்பத்தி செய்வதற்கும் பயன்படுத்தலாம் என்ற விஞ்ஞான ரீதியான ஒரு முன்மொழிவு ஏற்கனவே உள்ளது. அந்த முன்மொழிவினை நடைமுறைப்படுத்துவதற்கு எமது அரசியல் பொருளாதாரப் பின்னணி உகந்ததாக இல்லை என்ற ஆழமான கவலையொன்றும் பொருளியல் ஆய்வாளர்களிடையே உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக சேவைப் பிரிவின் கீழ் பிரதேச செயலகங்களினால் ஆற்றப்படும் சமூகசேவை உதவிகள்

**செல்லத்தம்பி சுரேந்திரா**
சமூகசேவைகள் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்,
வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம்,
பருத்தித்துறை.

சமூக சேவைகள் நலத்துறைத் திணைக்களத்தின் இலக்கு யாதெனில் சமுதாயத்தில் பலவீனமான நிலையில் காணப்படும் ஆட்களான வறியோர், முதியோர் மாற்று ஆற்றலுடையவர்கள், நோயாளர்கள். கணவனையிழந்த பெண்கள், கணவனை பிரிந்து வாழும் பெண்கள், கணவனால் குணமாக்க முடியாத நோயினால் பாதிக்கப் பட்டிருத்தல், 16 வயதிற்குக்குறைந்த பெற்றோரை இழந்த பிள்ளைகள், உளநோயால் பாதிப்புற்றோர் அவர்களது முழுமையான பங்களிப்பை சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு பெற்றுக் கொடுத்தலாகும். சமூக சேவைகள் நலத்துறைப் பிரிவினரால் நடைமுறைப் படுத்தப்பட்டு பிரதேச செயலகங்களினூடாகப் பல சமூகசேவை உதவிகள் ஆற்றப்பட்டு வருகின்றன. இந்தவகையில் சமூகசேவைகள் நலத்துறைத் திணைக்களத்தின் கீழ் பிரதேச செயலகங்கள் ஊடாக ஆற்றப்படும் சமூகசேவை உதவிகளாவன

## 1) பொதுசன மாதாந்த உதவிப்பணம் வழங்குதல்

பொதுசன மாதாந்த உதவிப் பணத்தைப் பெறுவதற்கு பிற வருமான மூலகங்கள் இல்லாத நோயாளிகள், விதவைப் பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற முதியவர்கள், ஆதரவற்ற 16 வயதிற்குக் குறைந்த பிள்ளைகள் தகுதியுடையோர் ஆவார். தகுதியானவர்கள் கிராம அலுவலர் ஊடாகத் தமது கோரிக்கையை முன்வைத்து விண்ணப்பப் படிவத்தினைப் பூரணப்படுத்தி அங்கத்தவரின் எண்ணிக்கைக்கேற்ப ரூபா 100.00 முதல் ரூபா 300.00 வரை வழங்கப்படுகின்றது. இந்தவகையில் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தினால் 2488 பயனாளிகள் உதவிப்பணத்தைப் பெறுகின்றார்கள்.

## 2. நோயாளர் உதவிக் கொடுப்பனவுகள் வழங்குதல்

நோயாளிகளுக்கான கொடுப்பனவானது புற்றுநோய், தொழுநோய், காசநோய், தலசீமியா போன்றவற்றினால் பாதிப்புற்ற வறியவர்களுக்கு வழங்கப்படுகின்றது. இக்கொடுப்பனவானது நோயாளியின் நிலைக்கும், குடும்ப அங்கத்தவரின் எண்ணிக்கைக்கும் அமைவாக ரூபா 250.00 முதல் ரூபா 500.00 வரை வழங்கப்பட்டு வருகின்றது இந்தவகையில் எமது பிரதேசசெயலகத்தினால் புற்றுநோய் - 45 பயனாளிகளுக்கும், தொழுநோய் - 02 பயனாளிகளுக்கும், காசநோய் - 04 பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. சுயதொழில் திட்டங்கள் ஆரம்பிப்பதற்கு உதவி வழங்குதல்

பொது சன மாதாந்த உதவிப்பணம் பெறுவோர், விசேட தேவைக்குரியோர் ஆனால் ஏதேனும் சுயதொழில் செய்வதற்கு உடல், உள வலிமையுள்ள நபர்கள் புனர்வாழ்வு உதவிபெறுவதற்கு தகமையுடையவர்கள். சமூகசேவைத் திணைக்களத்தினால் சுயதொழில் கொடுப்பனவாக ரூபா 15000.00 தவணைமுறையில் வழங்கப்படும். சுயதொழில் உதவி வழங்கப்பட்ட ஆறுமாதத்தின் பின் உதவிப்பணம் நிறுத்தப்படும்.

### 4. மாற்று ஆற்றல் உள்ளோருக்கான உபகரணங்கள் வழங்குதல்

மாற்று ஆற்றலுடையோருக்கான உபகரணங்கள் மருத்துவச் சான்றிதழ், கிராம சேவகரிடம் உறுதிப்படுத்திய கோரிக்கைக் கடிதம் ஆகியவற்றைச் சமர்ப்பித்து பின்வரும் உபகரணங்களிற்கு விண்ணப்பிக்க முடியும். முச்சக்கர வண்டி, சக்கர நாற்காலி, செயற்கை உறுப்பு, மூக்குக் கண்ணாடி, காதுகேட்கும் கருவி, ஊன்றுகோல், வெள்ளைப்பிரம்பு ஆகிய உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. இந்தவகையில் எமது பிரதேச செயலகத்தினால் 2008ம் ஆண்டு முச்சக்கரவண்டி - 04 பயனாளிகளுக்கும், ஊன்றுகோல் - 01 பயனாளிக்கும் வழங்கப்பட்டது.

### 5. தற்செயல் நிவாரணக் கொடுப்பனவு வழங்குதல்

இயற்கை அனர்த்தம், எதிர்பாராத தீவிபத்து போன்றவற்றால் வீடு சேதமடையும்போது சேதத்தின் மதிப்பீட்டிற்கமைய உச்சத்தொகையாக ரூபா 20,000.00 வழங்கப்படுகின்றது. மேலும் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட வறுமைக்கோட்டிற்குட்பட்ட குடும்பத்திற்கு வைத்திய சிகிச்சைக்கு ரூபா 10000.00மும், போதிய வருமானம் இல்லாத குடும்பத்திற்கேற்படும் மரணச்சடங்குச் செலவிற்காக ரூபா 15000.00 வும் வழங்கப்படுகின்றன.

### 6. முதியோர் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுத்தல்

பொதுவாகச் சாதாரண வழக்கில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களையே முதியவர்கள் என அழைக்கும் நடைமுறை இருக்கின்றது. முதியோர் அடையாள அட்டைமூலம் மருத்துவ உதவிகள், பேருந்துகள், அலுவலக வேலைகள், வங்கிகள், கூட்டுறவுக் கடைகள் என்பனவற்றில் முதன்மை நிலையினைப் பெற்றுக் கொடுக்கலாம். இந்தவகையில் எமது பிரதேச செயலகத்தினால் இதுவரை 111 மூத்த பிரசைகளிற்கான அடையாள அட்டைகள் வழங்கப்பட்டது.

### 7. மூத்த பிரசைகளிற்கான சங்கங்கள், மூத்த பிரசைகளிற்கான பகல் பராமரிப்பு நிலையங்களை அமைத்தல்.

மூத்த பிரசைகள் பகல் பராமரிப்பு நிலையத்தில் தங்கியுள்ள மூத்த பிரசைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதம் ரூபா 100.00 வீதமும் இல்லங்களில் தங்கியுள்ள மூத்த பிரசைகள், மாற்று ஆற்றலுள்ளோர்களிற்கு மாதம் ரூபா 500.00 வீதமும் வழங்கப்படுகின்றது.

**8. ஆதரவற்ற மூத்த பிரசைகளை அரச முதியோர் இல்லத்தில் அனுமதித்து பராமரித்தல்**

இந்தவகையில் 2007ம் ஆண்டு எமது பிரதேச செயலகத்தினால் கைதடி முதியோர் இல்லத்திற்கு மூத்த பிரசைகள் 03 பேர் அனுமதிக்கப்பட்டார்கள்.

**9. மாற்று ஆற்றல் உள்ளோருக்கான விசேட தொழிற்பயிற்சிகள், விசேட கல்வி அலகில் இணைக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுதல்.**

**10. வலிந்துதவு சமூக சேவை அமைப்புக்களை பதிவு செய்தலும் அவற்றினை மேற்பார்வை செய்தலும்**

**11. சமுதாய மட்டத்தினாலான புனர்வாழ்வுத் திட்டம் ஊடாக மாற்று ஆற்றல் உள்ளவர்களை குடும்பச் சூழலில் பராமரிக்கும் வாய்ப்பை வழங்குதல்.**

**12. முதியோர் தினம், மாற்று ஆற்றலுள்ளோர் தின நிகழ்வுகளை நடாத்தி முதியோர்களையும், மாற்று ஆற்றலுள்ளவர்களையும் கௌரவித்தல்.**

மேலும் சமூகசேவைகள் நலத்துறை அமைச்சின் கீழும் பிரதேச செயலகங்கள் ஊடாக பல சமூக சேவை உதவிகள் ஆற்றப்பட்டு வருகின்றன. இந்தவகையில் ஆற்றப்படும் சமூக சேவைகள் உதவிகளாவன :-

## 1. சுயதொழில் ஓய்வூதியம் வழங்குதல்

சமூக பாதுகாப்புச் சபை மூலம் சுயதொழில்களில் ஈடுபடும் 18 வயதிற்கும் 59 வயதிற்கும் இடையிலான ஒருவர் இத்திட்டத்தில் பணத்தைச் செலுத்தி சேர்வதன் மூலம் ஓய்வூதியம், சமூக பாதுகாப்பு நன்கொடைகள், மரணப் பணிக்கொடை ஆகிய நன்மைகளை பெறலாம். இந்தவகையில் எமது பிரதேச செயலகம் யாழ்மாவட்டத்தில் **2007ஆம் ஆண்டு மிகக் கூடுதலான பயனாளிகளை ஓய்வூதியத்திட்டத்தில் சேர்த்து முதலாம் இடத்தையும், ஜனாதிபதி விருதையும் பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.**

## ௨. மாற்று ஆற்றல் நபர்களைக் கொண்ட வறிய குடும்பங்களிற்கு மாதாந்தக் கொடுப்பனவு வழங்கல்

இந்தவகையில் எமது பிரதேச செயலகத்தில் மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் மாற்று ஆற்றல் நபர்களைக் கொண்ட 07 வறிய குடும்பங்களிற்கு மாதாந்தக் கொடுப்பனவாக ரூபா 3000.00 வழங்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. மாற்று ஆற்றல் உடையவர்களுக்கான அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுத்தல்.

முற்றிலும் காதுகேளாத, வாய்பேசாத, ஒருவர் மருத்துவ அத்தாட்சிப்பத்திரம், முத்திரையளவு புகைப்படம், உரிய படிவம் ஆகியவற்றைச் சமர்ப்பித்து விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து கொழும்பிலுள்ள அங்கவீனமுற்றோருக்கான தேசிய செயலகத்திற்கு அனுப்பிப் பெற்றுக்கொடுக்கப்படும்.

## 4. ஊனமுற்றோருக்கான வீடமைப்புத் திட்டத்தைப் பெற்றுக் கொடுத்தல்.

சொந்தக் காணி உள்ள ஊனமுற்ற ஒருவர் ரூபா 100,000.00 நன்கொடையாக ஊனமுற்றோருக்கான தேசிய செயலகத்திடமிருந்து பெறமுடியும்.

## 5. அனர்த்த நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்குதல்.

அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் கீழ் வீட்டழிவு, பயிரழிவுக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

## 6. முதியோர் சுயதொழில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குதல்

60 வயதிற்கும் 65 வயதிற்கும் இடைப்பட்ட முதியோர் அங்கத்தவர்களிற்கான சுயதொழில் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ரூபா 5,000.00 வயது வந்தவர்களிற்கான தேசிய செயலகத்தினால் வழங்கப்படுகின்றது. இந்த வகையில் 2008ம் ஆண்டு 5 முதியோர்களுக்கு 5000.00 ரூபா வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 7. சுயதொழில் கொடுப்பனவு வழங்குதல்

சமூக சேவைகள் நலத்துறை அமைச்சின் கீழ் விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், விசேட தேவைக்குரியவர்கள், முதியோர்களுக்கு ரூபா 10,000.00 வழங்கப்படுகின்றது. இந்த வகையில் எமது பிரதேச செயலகத்திற்குட்பட்ட 2007ம் ஆண்டு 40வயதுக்குட்பட்ட விதவைப் பெண்கள் 127 பயனாளிகளுக்கும், 40 வயதுக்கு மேற்பட்ட விதவைப் பெண்கள் 35 பயனாளிகளுக்கும், விசேட தேவைக்குரியவர்கள் 50 பயனாளிகளுக்கும், முதியோர்கள் 10 பயனாளிகளுக்கும் 10,000/= ரூபா வீதம் வழங்கப்பட்டது.

எனவே சமூக சேவைகள் நலத்துறைத் திணைக்களத்தின் நோக்கம் சமுதாயத்திலுள்ள வசதிகுறைந்த முதியோர், விதவைகள், குழந்தைகள், விசேட தேவைக்குரியவர்கள், கொடிய நோயாளிகள், மற்றும் வருமானம் குறைந்த மக்கள் ஆகியோரது துன்பங்களையும், துயர்களையும் களைந்து ஓரளவிற்கேனும் அடிப்படை வாழ்வாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தலாகும். இதனால் சமூகசேவை உத்தியோகத்தர்கள், சமூக சேவை நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் ஆகியோர்களின் மூலம் வினைத்திறன் மிக்க நிகழ்வுகளை முன்னெடுத்து சமூக நலன்புரிசேவைகள் மக்களுக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசார நிகழ்வு – 2005



கலாசார நிகழ்வு – 2007




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச விளையாட்டு விழா – 2008



பிரதேச விளையாட்டு விழா – 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்தின விழா நிகழ்வு






"கற்பின் கனல்" நாட்டிய நாடகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப்பேரவையின் வளர்ச்சிப் பாதையில்....

**திருமதி. சு. விஜயரத்தினம்**
கலாசார அலுவலர்,
பிரதேச செயலகம், வடமராட்சி வடக்கு,
பருத்தித்துறை.

> "மனிதனின் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம் பண்பு, சட்டம், வழக்கம் முதலிவைதாம் பண்பாடாக மலர்கிறது" என்பார் - டெய்லர்
>
> பண்பாட்டினை வாழ்க்கை முறையாக எண்ணினால் மனிதனின் பல சடங்குகள் இதன்கண் அடங்கிவிடுகின்றன.

## அறிமுகம் :-

மக்கள் வாழ்க்கையில் ஆற்றல்மிக்க சாதனங்களாக சமயமும் அதனோடிணைந்த கலைகளும் விளங்குகின்றன. ஓர் இனத்தின் பொக்கிஷம் கலைகளே. கலை, கலாசாரம், பாரம்பரியம் போன்றவை பற்றிய பரந்த அறிவினை விருத்தி செய்யவும் அவற்றினைப் பேணிப்பாதுகாப்பதற்கும் மக்கள் மத்தியில் உணர்வையும் ஊக்கத்தையும் ஏற்படுத்தவும் கடந்த காலங்களில் பல ஆக்கபூர்வமான முயற்சிகளில் கலை மன்றங்கள், ஆலயங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். 1960 ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலங்களிலேயே எமது பிரதேசத்தில் கலைமன்றங்கள் இயங்கத் தொடங்கியமைக்குச் சான்றாக சமகாலத்தில் 1962 இல் மாதனை கலாமன்றம், மாதனை தமிழிசைச்சங்கம், புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்றம் போன்றவை தோற்றம் பெற்றமை சான்றாக அமைகின்றது.

பிரதேசரீதியில் பிரதேச கலாமன்றங்கள் வெண்மணற்பரப்பில் இரவு நிகழ்வுகளாக காரியாதிகாரி அலுவலமாக இருந்த காலங்களிலும் வடமராட்சி வடக்கு கிழக்கு பிரதேசங்கள் இணைந்து ஒரே உதவி அரசாங்க அதிபர் பிரிவாக இருந்த காலங்களில் மணங்காடு போன்ற பகுதிகளில் வெகுவிமர்சையாக பெருவிழாக்கள் நடைபெற்றதாக மூத்த அலுவலர்கள் சிலர் குறிப்பிடுகின்றனர். இதனைவிட பொலீஸ் திணைக்களத்தினால் புதுவருட கலைநிகழ்வுகள், விளையாட்டுக்கள் மக்களை மகிழ்விக்குமுகமாக நடாத்தப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. 1997 இல் வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் பிரதேச செயலகங்களுக்கு கலாசார உத்தியோகத்தர்கள் நியமனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டமையும் அமைச்சினால் பிரதேசரீதியில் கலாசாரசபை அமைக்கப்பட வேண்டும் என்ற பணிப்பும் எமது பிரிவில் பிரதேச கலாசாரப் பேரவையின் உருவாக்கத்திற்கு வித்திட்டன. இந்தவகையில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப்பேரவை அமைக்கப்பட்டது. பேரவையின் செயற்பாடு, வளர்ச்சிபற்றி நடாத்தப்பட்ட நிகழ்வுகள் சான்றாக அமையும்.

வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவை 18.08.1999 இல் ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் இன்றுவரை நடைபெற்ற நிகழ்வுகள் :-

**"புத்தாயிரமாண்டு கலை நிகழ்வுகள்" - 2000**

இடம் :- யா/ வடஇந்து மகளிர்கல்லூரி, பருத்தித்துறை.
காலம் :- 2000.02.26
முதன்மை விருந்தினர் :- பண்டிதர். க. சச்சிதானந்தன்
(ஓய்வுபெற்ற ஆசிரியகலாசாலை விரிவுரையாளர்)

**கலை நிகழ்வுகள் :-**

- இசை அரங்கு :- சங்கீத கலாவித்தகர் சரஸ்வதி கோபாலசாமி (புலோலிகிழக்கு ஞானசம்பந்தர் கலை மன்ற இசை ஆலோசகர்)
- நாட்டிய அரங்கு :- செல்வி தர்மினி பாலச்சந்திரன் (நடன ஆசிரியர் இன்பமலர் பரமலிங்கம் அவர்களின் மாணவி)
- இன்னிசை அரங்கு :- மாதனையூர் மூத்தகலைஞர் ச. இராசதுரை அவர்கள்
- நாடக அரங்கு :-
  1) இசை நாடக நவரச கலைமணி க. ப. பரராசசிங்கம் குழுவினர் 'சத்தியவான் சாவித்திரி' இசை நாடகம் (1 மணி)
  2) வடமராட்சி உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம் சார்பில் திருமதி. உஷாதேவி செல்வச்சோதி குழுவினரின் 'ஸ்ரீவன்னி' (இசை நாடகம்) (1 மணி)
  3) பருத்தித்துறை முன்பள்ளி ஆசிரியர் சங்கம் வழங்கிய 'சிதறிய சிலம்பு' இலக்கிய நாடகம் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன.

**பிரதேச சாஹித்திய விழா - 2000**

இடம் :- யா/ வடஇந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை,
காலம் :- 2000.10.22
பிரதமவிருந்தினர் :- திரு. செல்லையா மெற்றாஸ் மெயில் அவர்கள்
(பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழக செயலாளர்)

**காலை நிகழ்வுகள் :-**

- நாட்டார் பாடல்கள் :- திரு.ந. சிவசுப்பிரமணியம் (மாதனை அண்ணாவியார்) (15 நிமிடம்)
- கரக நடனம் :- திரு.ந. சிவசுப்பிரமணியம் குழுவினர் (10 நிமிடம்)
- தனிநடிப்பு :- அண்ணாவியார் பா. வேதநாயகம் (தும்பளை தெற்கு) (20 நிமிடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ தெண்டா பயிற்சி :- திரு. ஆ. செல்வவிநாயகம் ஒழுங்கமைப்பில் 'தெண்டா பயிற்சி' (15 நிமிடம்)

❖ நாடக அரங்கு :- 1) கற்கோவளம் அண்ணாவியார் வே. நந்தகோபாலன் குழுவினரின் "காந்தவராஜன்" சிந்துநடைக்கூத்து (1மணி)

2) நாடகச்சக்கரவர்த்தி க. ப. பரராசசிங்கம் சிவஸ்ரீ. செ. த. கண்ணதாசக்குருக்கள் இணைந்து வழங்கிய "மயானகாண்டம்"

**மாலை நிகழ்வுகள் :-**

**பிரதேச சாஹித்தியவிழா பரிசளிப்பும்**

**கலைஞர், இலக்கிய கர்த்தாக்களைக் கௌரவித்தல் - 2000**

இடம் :- யா / வட இந்து மகளிர் கல்லூரி

காலம் :- 2000.10.22

**பிரதம விருந்தினர்கள்**

பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம்

(முதுநிலை பேராசிரியர் விலங்கியற்றுறை யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)

பேராசிரியர் க. சின்னத்தம்பி

(தலைவர், கல்வியியற்றுறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)

கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை

திரு. வி. பி. சிவநாதன்

(தலைவர், பொருளியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

1) கலைஞர், இலக்கிய கர்த்தாக்களில் முப்பத்துமூன்று (33) பேர் பிரதம விருந்தினர்களால் கௌரவிக்கப்பட்டனர்.

**கௌரவிக்கப்பட்ட கலைஞர், இலக்கிய கர்த்தாக்கள் :-**

| | | | |
|---|---|---|---|
| 1) | இலக்கியத்துறை (புராணபடனம்) | க. சுப்பிரமணியம் | புற்றளை, புலோலி. |
| 2) | இலக்கியத்துறை (புராணபடனம்) | வை. ஆறுமுகம் | துன்னாலை வடக்கு, கரவெட்டி. |
| 3) | இசைத்துறை | இசைமணி க. துரைராசா | மாதனை, பருத்தித்துறை. |
| 4) | இசைத்துறை | திரு. சி. துரைராசா | கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு. |
| 5) | இசைத்துறை | இசைமணி க. துரைராசா | மாதனை, பருத்தித்துறை. |
| 6) | இசைத்துறை | திரு. வ. முத்தையா | புலோலிவடகிழக்கு, புலோலி. |
| 7) | இசைத்துறை | திரு. தா. சோமசுந்தரம் | தும்பளை பருத்தித்துறை |
| 8) | இசைத்துறை | திரு. மு. சாம்பசிவம் | மாதனை, பருத்தித்துறை |
| 9) | நாடகத்துறை | திரு. ச. இராசதுரை | மாதனை பருத்தித்துறை |
| 10) | நாடகத்துறை | திரு. மு. த. சிவசுப்பிரமணியம் | மாதனை பருத்தித்துறை |
| 11) | நாடகத்துறை | திரு. வே. நடராசா | புலோலிதென்மேற்கு, புலோலி. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 12) நாடகத்துறை | திரு. வே. பாலசண்முகம் | அல்வாய்வடக்கு அல்வாய் |
| 13) நாடகத்துறை | திரு. வே. க. பாலசிங்கம் | பொலிகண்டி, வல்வெட்டித்துறை. |
| 14) நாடகத்துறை | திரு. பா. வேதநாயகம் | தும்பளைதெற்கு, பருத்தித்துறை. |
| 15) நாடகத்துறை | திரு.க ப. பரராசிங்கம் | புலோலிதெற்கு, புலோலி. |
| 16) நாடகத்துறை | திரு. இரா. பஞ்சலிங்கம் | பூதராஜர் ஒழுங்கை, பருத்தித்துறை. |
| 17) நாடகத்துறை | சிவஸ்ரீ. செ. த. கண்ணதாசக்குருக்கள் | புலோலி தெற்கு, புலோலி. |
| 18) நாடகத்துறை | திரு. கா. அமரசிங்கம் | புலோலி வடக்கு, பருத்தித்துறை. |
| 19) நாடகத்துறை | திரு. கி. சிவக்கொழுந்து | புலோலி வடகிழக்கு, புலோலி. |
| 20) நாடகத்துறை | திரு. வெ. முத்துச்சாமி | வல்வெட்டித்துறை தென்கிழக்கு, வல்வெட்டித்துறை. |
| 21) நாடகத்துறை | திரு. இ. ஆழ்வாப்பிள்ளை | கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு. |
| 22) பாரம்பரியகலைகள் | திரு. மு. தணிகாசம் | கற்கோவளம், பருத்தித்துறை. |
| 23) சிற்பத்துறை | திரு. வீ. முருகேசு | புற்றளை, புலோலி. |
| 24) சிற்பத்துறை | திரு. கோ. வேலுப்பிள்ளை | புலோலிமேற்கு, பருத்தித்துறை. |
| 25) ஓவியத்துறை | திரு. வை. சிவசுப்பிரமணியம் | பிரதானவீதி, பருத்தித்துறை |
| 27) ஓவியத்துறை | திரு. மு. தர்மலிங்கம் | பொலிகண்டி, வல்வெட்டித்துறை |
| 28) இலக்கியம்(சிறுகதை) | திரு. க. தம்பையா | புற்றளை, புலோலி |
| 29) இலக்கியம்(சிறுகதை) | திரு. செ. கந்தசாமி | தும்பளை, பருத்தித்துறை. |
| 30) இலக்கியம்(கவிதை) | திரு. கிறகேரி இராயப்பு திருத்துவராசா | அல்வாய் வடமேற்கு, அல்வாய். |
| 31) ஒப்பனை | திரு. இ. இராஜகோபால் | மாதனை, பருத்தித்துறை. |
| 32) பாரம்பரிய விளையாட்டு | திரு. ஆ. செல்வவிநாயகம் | வியாபாரிமூலை, பருத்தித்துறை. |
| 33) உடற் பயிற்சிக்கலை | திரு.பொ. மகாதேவா | பருத்தித்துறை. |

**2) கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு**

**3) கலாபூஷணம் வே.க. பாலசிங்கம் குழுவினரின் 'பூதத்தம்பி'**
(இசைநாடகம் நிறைவாக நடைபெற்றது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு கலாசாரப்பேரவைகள் இணைந்து வழங்கும் புத்தாண்டு நாடக அரங்க நிகழ்வுகள் - 2001**

இடம் :- யா / வடஇந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை.
காலம் :- 2001.05.26
**நிகழ்வுகள் :-**

- ❖ வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவையின் கலாபூஷணம் வே.க. பாலசிங்கம் அரியாலை நாடக கலாமணி வி. செல்வரத்தினம் இணைந்து நடித்த **"பூதத்தம்பி"** - (யாழ்ப்பாண வரலாற்று இசை நாடகம்) (2மணி)
- ❖ வடமராட்சி கிழக்கு பிரதேச கலாசாரப் பேரவையின் மணற்காடு அண்ணாவியார் சூசைப்பிள்ளை றோக் குழுவினரின் **"பரிசாய் வந்த சிரசு"** (2மணி) (தென்மோடி நாட்டுக்கூத்து)

**அரும்பொருட்கள் கண்காட்சி - 2002**

இடம் :- யா / வல்வை சிவகுரு வித்தியாலயம், வல்வெட்டித்துறை.
காலம் :- 19.04.2002
பிரதம விருந்தினர் : (1) வரலாற்றுத்துறை பேராசிரியர் க. சிற்றம்பலம்
சிறப்பு விருந்தினர் : (1) வரலாற்றுத்துறை பேராசிரியர் செ. கிருஸ்ணராசா
(2) வைத்திய கலாநிதி. க. மயிலேறும் பெருமாள்
(3) வல்வெட்டித்துறைத் நகராட்சிமன்றத்தலைவர்
நிகழ்வுகள் : அரும்பொருட்கள் காட்சிக்காக வைக்கப்பட்டது
எம். கே. சிவாஜிலிங்கம். (மு.ப. 9 மணி - பி.ப. 5.00 மணிவரை)

**பிரதேச சாஹித்திய விழா - 2002**

இடம் :- யா/ வல்வை சிவகுரு வித்தியாலயம்
காலம் :- 20.04.2008
பிரதமவிருந்தினர் :- பேராசிரியர் அ. சண்முகதாஸ்
சிறப்பு விருந்தினர்கள் (1) கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
(2) கலாநிதி எஸ். சிவலிங்கராசா.
மாலை நிகழ்வுகள்

1) இசைக்கச்சேரி : சங்கீதபூஷணம் செ. யோகாம்பிகை - செல்லையாபிள்ளை (30நி)
2) நடன நிகழ்வு :- வல்வெட்டித்துறை இ. மதியழகன் குழுவினர் (15 நிமி)
3) நாடக மேடைப்பாடல்கள் :- பொ. வல்லிபுரம் பொலிகண்டிமேற்கு (15 நிமி)
4) சிந்துநடைக்கூத்து : "காத்தவராயன்" அண்ணாவியார் இ. இராஜேந்திரம் குழுவினர். வல்வெட்டித்துறை (1மணி 15நிமி)
5) கவியரங்கு :- "வாழ்வுக்கு வழியேது வையகத்தில்"
தலைவர் திரு. ஆர். அகிலன்
(உதவிவிரிவுரையாளர், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.) (2 மணி)
6) சமூகநாடக "காதலுக்கு ஜாதியில்லை"
(பொலிகண்டி அம்பிகை நாடகமன்றம்) (1 மணி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) இசைநாடகம் :- "மயானகாண்டம்" (1.30மணி)

நாடகச்சக்கரவர்த்தி க.ப. பரராசசிங்கம், க. அனந்தராஜன் ஏ.வி. வேலாயுதம் ஆகிய முன்னணிக் கலைஞர்கள் இணைந்து வழங்கிய நாடகம்.

9.09.2003, 10.09.2003 ஆகிய இருநாட்கள் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இரவு நிகழ்வுகளாக கீழ்க் குறிப்பிடப்படும் நிகழ்வுகள் நடைபெற்றன.

**வீரசாகச நிகழ்வுகள் :-**

1) சிலம்பம், தீப்பந்த விளையாட்டுக்கள்.
2) வீரதீர விளையாட்டுக்கள்
   அ) மார்பின்மேல் வாகனமேற்றல் (பொலிகண்டி சாண்டோ செல்வராசா நெறிப்படுத்தலில்)
   ஆ) மல்யுத்த நிகழ்வுகள் (ஆசிரியர் ஆ. செல்வவிநாயகம் அவர்களின் ஒழுங்கமைப்பில்)
   இ) சிலம்பம் : சிலம்படி, தீப்பந்த விளையாட்டுக்கள் (பொலிகண்டி தில்லை சிவலிங்கத்தின் மாணவர்கள்)

மக்கள் வியப்பில் ஆழ்த்தி, மயிர்க்கூச்செறியும் நிகழ்வுகளாக அமைந்தன.

**பிரதேச சாஹித்திய விழா - 2003**

இடம் : யா / வட இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை.
காலம் :- 2003.12.14
பிரதம விருந்தினர் :- கலாநிதி அ. சோமசுந்தரம்பிள்ளை B.A., F.C. A
பட்டய கணக்காளர்.

**நிகழ்வுகள் :-**

1) திரு. க. அருளானந்தனின் "அரங்க ஆற்றுகைகளும் ஆய்வு வழிகாட்டிகளும்" நூல்வெளியிடு.
2) கலைஞர்கள், இலக்கியகர்த்தாக்கள், மாகாணமட்டத்தில் பரிசுபெற்ற கலைஞர்கள் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு

**கௌரவிக்கப்பட்டவர்கள் விபரம் :-**

1) கலாபூஷணம் சரஸ்வதி கோபாலசாமி
2) கலாபூஷணம் ச. இராசதுரை
3) நூலாசிரியர்கள் பண்டிதர் க. சச்சிதானந்தன் - 'மஞ்சுகாசினியம்'
4) நூலாசிரியர்கள் திரு. மா. நடராசசுந்தரம் - 'சர்வதேச நாணயமுகாமைத்துவம்' (பீடாதிபதி முகாமைத்துவ வணிகபீடம் யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)
5) நூலாசிரியர்கள் திரு. வை. சுந்தரேசன் சீனத்துக்கவிதைகள்' மொழிபெயர்ப்பு நூல் (ஆங்கில விரிவுரையாளர், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)
6) சிலப்பம் : திரு. தி .தவராசா
7) சாண்டோ : திரு. ச. செல்வராசா
8) தெண்டா :- மல்யுத்தம் திரு. ஆ. செல்வவிநாயகம்.
9) சங்கீதவித்துவான் - இசைமணி அமரர் க. துரைராசா
10) சங்கீத வித்துவான் - சங்கீத ஆசிரியர் : அமரர் மு. சாம்பசிவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவிப்பு உரை :-

1) இசைஞானகேசரி சங்கீத பூஷணம் சறோஜா தம்பு
2) திரு. பா. இரகுவரன் நாடக ஆசிரியர் யா/ ஹாட்லிக்கல்லூரி.
3) கலாநிதி. எஸ் சிவலிங்கராசா (தலைவர், தமிழ்த்துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)
4) திரு. ச. சத்தியசீலன் ஆங்கில ஆசிரியர் யா/ ஹாட்லிக்கல்லூரி.
5) திரு. பொ. மகாதேவா (பல்துறை ஆசான் இளமையின் இரகசியம் நூலாசிரியர்)
6) திரு. வி. சேதுநாயகம் (ஓய்வுபெற்ற சிராமஅலுவலர், பிரதேச கலாசாரப்பேரவை உபதலைவர்)

நவீன நாடகம் : "நல்லதோர் வீணை செய்து" (1மணி)
(யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மாணவர்கள்)

மாலை நிகழ்வுகள் :-

பிரதம விருந்தினர் :- திரு. க. கனகரத்தினம்
(வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச செயலாளர்)

1) கருத்துரை : "இந்துப்பண்பாட்டு மரபில் வடமராட்சிப் பிரதேசம்"
முதுநிலை விரிவுரையாளர் திருமதி. நாச்சியார் செல்வநாயகம்.
(இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்)
2) உடுக்கடிகதைகூறல் :- நாட்டார்இசை சிந்துடைக்கூத்து மூத்தகலைஞர் திரு. மு. தணிகாசலம் வழங்கிய "கண்ணகியாள் காதை"
3) தென்மோடி நாட்டுக்கூத்து : அண்ணாவியார் பா. வேதநாயகம் அவர்களின் "யாருக்கு மணிமுடி?

## பிரதேச கலை இலக்கியப் பெருவிழா - 2005

இடம் : திக்கம் கலாசார மண்டபம்
காலம் : 2005.06.05
பிரதம விருந்தினர் : வைத்தியகலாநிதி சி. கதிரவேற்பிள்ளை
(மாவட்ட வைத்தியஅதிகாரி, ஆதாரவைத்தியசாலை, மந்திகை)
சிறப்பு விருந்தினர்கள் : 1) திரு. ஆ. சிவசுவாமி
(மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்)
2) கலாநிதி ச. த. கலாமணி
(சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வியியற்றுறை, யாழ் பல்கலைக்கழகம்)
3) திரு. ந. இன்பன் வடமராட்சிப் பிரிவு

**நிகழ்வுகள் :-**

1) நாட்டியாஞ்சலி :- நாட்டியக்கலைமணி பு. கமலகாலாவின் மாணவிகள் (15 நிமி)
2) கரலாக்கட்டை உடற்பயிற்சிக்கலை : இளமையின் இரகசியம் பொ. மகாதேவாவின் மாணவர்கள் (45 நிமி)
3) பட்டிமன்றம் - "பெண்களின் வாழ்வு பெரிதும் மலர்ச்சியடைவது புகுந்த இடத்திலா? பிறந்த இடத்திலா? (1மணி)

தலைவர் : திரு.வ. வசந்தகுமார் - பிரதேசசெயலகம், பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) நடனம் : திரு.க. பாஸ்கரன் குழுவினர்
5) இசைநாடகம் : நாடகச் சக்கரவர்த்தி க. ப. பரராசசிங்கம்,
கற்கோவளம் அண்ணாவியார் வே. நந்தகோபாலன் குழுவினர்
இணைந்து வழங்கிய "சத்தியவான் சாவித்திரி" (1மணி30 நிமிடம்)
6) கலைஞர் கௌரவிப்பு : கௌரவிப்பு உரையை திரு. வே. நந்தகுமார்
மேற்கொண்டார் ஆறுகலைஞர்கள்.
பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்

**கௌரவிக்கப்பட்ட கலைஞர்கள் :**

| | |
|---|---|
| 1) திரு. இ. குலசேகரம் | மாதனை, பருத்தித்துறை |
| 2) திரு. இ. பாலசுப்பிரமணியம் | மாதனை, பருத்தித்துறை |
| 3) திரு. வை. சச்சிதானந்தன் | தும்பளை கிழக்கு, பருத்தித்துறை. |
| 4) திரு. எம். கே. முருகானந்தன் | வியாபாரிமூலை, பருத்தித்துறை. |
| 5) திரு. மா. அருட்செல்வம் | புலோலி வடமேற்கு, புலோலி. |
| 6) திரு. வே. நந்தகோபாலன் | கற்கோவலளம், பருத்தித்துறை. |

**பிரதேச கலாசார விழா - 2007**

இடம் : அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மண்டபம்.
காலம் : 2007. 08. 16
பிரதமவிருந்தினர் : கலாநிதி த. கலாமணி EdD (Australia)
சிரேஷ்ட விரிவுரையாளர் கல்வியற்றுறை யாழ்ப்பண பல்கலைக்கழகம்
சிறப்பு விருந்தினர்: திரு. இரா. பஞ்சலிங்கம் B.A
பிரபல நாடக கலைஞர்.

கலாபூஷணம் வே.க. பாலசிங்கம் அரங்கு.

**நிகழ்ச்சி நிரல்**

(1) மங்கள இசை - பருத்தித்துறை சி.விஜயகுமார், சி. சதீஸ்குமார் குழுவினர்
(30 நிமி)

(2) அரங்கு பற்றிய உரை - திரு. பொ. மகாதேவா
(பிர. கலா. பேரவை உப செயலாளர்) (10நிமி)

(3) கலைஞர் கௌரவிப்பு உரை :- திரு.கே. ஆர் திருத்துவராசா
(நிர்வாக உறுப்பினர் பிர. கலா. பேரவை)

**கௌரவிக்கப்பட்ட கலைஞர்கள்**

❖ திரு. தங்கராசா தங்கரத்தினராசா (நாடகத்துறை) - மாதனை, பருத்தித்துறை
❖ திரு. சின்னத்தம்பி மாணிக்கம் (இசைத்துறை) - ஒடக்கரை, பருத்தித்துறை
❖ திரு. வைரவன் இராசையா (நாடகத்துறை) - புலோலிவடகிழக்கு, புலோலி.
❖ செல்வி. யோகாம்பிகை
திக்கம் செல்லையாபிள்ளை (இசைத்துறை) - திக்கம், பொலிகண்டி, பருத்தித்துறை.
❖ திரு. நல்லான் தேவராசா (நடனத்துறை) - அல்வாய் வடக்கு, அல்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) 2006, 2007இல் கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான சான்றிதழ் வழங்கல்.

5) கிராமியநடனம் - கற்கோவளம் மூத்தகலைஞர் மு. தணிகாசலம் குழுவினர் (15 நிமி)

6) சித்திரரூபன் தென்மோடி நாட்டுக்கூத்தில் 'இராசா கொலுஆட்டம்"
ஆடல் : திரு. வ. இராசையா, தாளம் - திரு. இ. சச்சிதானந்தம்

7) கிராமியப்பாடல் : கற்கோவளம் வ. கிருஸ்ணவேல் குழுவினர் (15 நிமிடம்)

8) இசை நாடகம் : "சீதா கல்யாணம்" கற்கோவளம் (1மணி 30 நிமிடம்)
வேணுகானசபா நாடகமன்ற அண்ணாவியார்
வே. நந்தகோபாலன் குழுவினர்.

மேற்குறிப்பிட்ட விழாக்கள் சிறப்பாக நடைபெற்றுள்ளதுடன் விருதுபெற்ற கலைஞர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வுகள் ஆடம்பரமற்றவகையில் நடைபெற்றுள்ளன. விழாக்களை சிறப்புற நடாத்துவதற்கு அரச நிறுவனங்களிடமிருந்து மிகக்குறைந்தளவு நிதி கிடைக்கப்பெற்றபோதும் வர்த்தக நிறுவனங்கள், பொது அமைப்புக்கள் அலுவலக உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றின் பெரும்பங்களிப்பினால் விழாக்கள் மிகவும் சிறப்புற நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. எதிர்காலத்தில் கலை கலாசார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு அரச நிறுவனங்களின் நிதிரீதியான பங்களிப்பு அதிகரிப்பின் கலை கலாசாரத்தை ஓரளவுக்கேனும் கட்டியெழுப்பலாம்.

## இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் "கலாபூஷண விருது" வழங்கிக் கௌரவிக்கப்பட்ட எமது கலைஞர்கள் :



அமரர். வே. க. பாலசிங்கம் (2000)



திரு. ச. இராசதுரை (2002)



திருமதி சரஸ்வதி கோபாலசாமி (2002)



திரு. இ. இராஜகோபால் (2007)



திரு. மு. தணிகாசலம் (2007)



திரு. இ. குலசேகரம் (2007)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி வடக்கு பிரதேசமட்ட சிறுவர் செயற்பாடுகள்

**செல்வி. யோகேஸ்வரி நாகராஜா**
உதவி சிறுவர் உரிமை மேம்பாட்டு
உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
பருத்தித்துறை.

**அறிமுகம் :-**

எதிர்கால உலகம் இன்றைய சிறுவர்களில் தங்கியுள்ளதால், இன்று ஒவ்வொருவருமே சிறுவர்களின் நலனில் அக்கறை கொண்டிருப்பது தெளிவாகின்றது. சிறுவர்கள் யாவரும் தனிநபர்கள் என்ற ரீதியில் அவர்களுக்கு உரித்தான உரிமைகளே "சிறுவர் உரிமைகள்" எனப்படும். பிள்ளைகளை மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும், பாதுகாப்பாகவும் வைத்திருப்பதற்காக பெரியவர்களால் செய்யப்படவேண்டியவற்றை இந்த உரிமைகள் உள்ளடக்கப்படுகின்றன.

**சிறுவர் உரிமைகள் சமவாயம் :-**

சிறுவர் உரிமைகளை வரையறுக்கின்ற " ஐ.நா சிறுவர் உரிமைகள் சமவாயம்" ஓர் சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஆவணமாக 1990 செப்ரெம்பர் 2ம் திகதி நடைமுறைக்கு வந்தது. சிறுவர் உரிமைகள் சமவாயத்திலே குறிப்பிடப்பட்டுள்ள சிறுவர் உரிமைகளை உயிர்வாழ்தல், மேம்பாடடைதல், பங்குகொள்ளல், பாதுகாப்பு எனும் 4 பெரும் பிரிவுகளில் உள்ளடக்கலாம். 18 வயதிற்குட்பட்ட "சிறுவர்கள்" யாவரும் எவ்விதப் பாரபட்சமுமின்றி விசேட பராமரிப்பு, கல்வி, சுகாதாரம், சட்ட பாதுகாப்பு, போன்ற சேவைகளைப் பெறுவதுடன், அவர்களது ஆளுமை, திறன், ஆற்றல்களை சிறந்த முறையில் விருத்தியடையச் செய்து அவர்களை முழுமனிதனாக்குவது பற்றி "சிறுவர் உரிமைகள் சமவாயம்" குறிப்பிடுகின்றது. பிள்ளைகளிடையே பாகுபாடு காட்டாமை, பிள்ளைகளின் சிறந்த நலன், பாதுகாப்பான உயிர்வாழ்க்கையும் உய்வும் மேம்பாடும், சிறுவர் சேம நலன் தொடர்பான விடயங்களில் பிள்ளைகளின் கருத்துக்களுக்கு இடமளித்தல் (பங்குபற்றுதல்), போன்ற பல அடிப்படை அம்சங்களை அது உள்ளடக்கின்றது.

சிறுவர்களிடையே வயது, பால், இனம், நிறம், சாதி, மொழி, மதம், அரசியல், சமூகத்தோற்றுவாய், ஆதனம், இயலாமை, பிறப்பு, குடும்ப அந்தஸ்து, செய்பாடுகள், வெளியிடப்பட்ட கருத்துக்கள் அல்லது நம்பிக்கைகள் என்பவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டாமல் ஒவ்வொரு பிள்ளையின் உரிமைகளும் மதிக்கப்படவேண்டும். பெற்றோர் விவாகரத்துக்கோருகின்ற சந்தர்ப்பத்திலே பிள்ளையை யாரிடம் கொடுப்பது என தீர்மானமெடுக்கின்றபோது, வழக்கு நடவடிக்கைகளில், அல்லது பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற சகல திட்டங்களிலும் செயற்பாடுகளிலும், தீர்மானங்களிலும், "பிள்ளையின் சிறந்த நலன்" என்பது அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றன.

பிள்ளையின் ஒவ்வொரு வளர்ச்சிக்கால் கட்டங்களுக்கும் ஏற்ப ஒழுக்க நெறிமுறைகள், பண்பாடு, பழக்கவழக்கங்கள், கலாசார விழுமியங்கள் முதலியவற்றை பெற்றோரும், குடும்பத்தினரும் சொல்லிக்கொடுக்கவேண்டியது அவர்களின் கடமையும், பொறுப்புமாகும். மேற்படி விழுமியங்கள் தொடர்பாக பெற்றோருக்கே போதிய அறிவு இல்லாத சந்தர்ப்பங்களில், பிள்ளைகளும் நெறிதவறிவிடுகின்ற தன்மையை சில கிராமப்புறங்களில் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அப்பகுதிகளில் பெற்றோர், பிள்ளைகளுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும். தொடர் ஆலோசனை, கண்காணிப்பு நடவடிக்கைகளும் எமது பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப் பட்டுவருகின்றன. ஒவ்வொரு பிள்ளையும் பாதுகாப்பான முறையில் உயிர்வாழ்வதற்கும், சீரான முறையில் வளர்ச்சியடைவதற்குமான புறச்சூழல்கள் உருவாக்கப்படவேண்டிய தேவை இன்று எம்முன் உள்ளது எனலாம்.

**பிறப்பைப் பதிவுசெய்தல் :**

ஒரு பிள்ளை பிறந்து 42 நாட்களுக்குள் அதன் பிறப்பு கட்டாயமாகப் பதிவுசெய்யப்படுதல் வேண்டும். பிள்ளை தனக்கென ஒரு பெயரையும், இனத்தையும் பிரஜா உரிமையையும், பெற்றுக்கொள்ளும் உரிமை அதற்கு உண்டு, தன் பெற்றோரை அறிந்துகொள்வதற்கும், பெற்றோரின் கவனத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் அதற்கு உரிமை உண்டு. அரசாங்கம் பிள்ளையின் தனித்துவ அடையாளங்களான பெயர், இனம், குடும்ப விபரம் போற்றவற்றைப் பாதுகாக்கும்பொருட்டு, அதனைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. கடந்த வருட இறுதியில் எமது பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட 'காலம் கடந்த / பிந்திய பிறப்பு பதிதல்' தொடர்பான நடமாடும் சேவையின்போது சுமார் 35 சிறுவர்களுக்கான 'பிறப்புச் சான்றிதழ்கள்' பெற்றுக்கொடுக்கப்பட்டன. கடந்த ஏப்ரல் மாதம் 'பொலிஸ் திணைக்களத்தினாலும் மேற்படி நடமாடும் சேவை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

**பிள்ளையின் காலம் கடந்த பிறப்பைப் பதிவதற்குத் தேவைப்படும் ஆவணங்கள் :**
பிறந்த திகதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்

1) வைத்தியசாலையில் பிறந்திருந்தால் வைத்திய அதிகாரியின் கடிதம்
2) வீட்டில் பிறந்திருந்தால் பிறந்தவுடன் எழுதிய சாதகம் / ஞானஸ்ஞானப் பத்திரம்
3) M.O.H மேலொப்பமிட்ட மருத்துவ மாதுவின் கடிதம்.
4) தடுப்பூசி போட்ட அட்டை
5) ஆண்டு 1இல் பாடசாலையில் சேர்ந்த அனுமதி ஏட்டின் பிரதி / பாடசாலை விடுகைப் பத்திரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரின் விபரங்களை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்

1) பெற்றோரின் விவாகச் சான்றிதழ், அல்லது குருவின் கடிதம்
2) பிள்ளைகள் பட்டியல்.
3) பெற்றோருக்குப் பிறந்த ஏனைய பிள்ளைகளின் பிறப்புப்பத்திரங்கள்
4) தந்தை, தாயின் பிறப்புப் பத்திரங்கள். (இருந்தால் சமர்ப்பிக்கவும்)

பெற்றோர் இப்பகுதியில் வசிப்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்

1) பெற்றோரின் அடையாள அட்டைப் பிரதி.
2) குடும்ப அட்டைப் பிரதி.
3) கிராம சேவையாளரின் அறிக்கை.
4) இந்தப் பிறப்பானது முன்னர் பதியப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் - பதிவுப் புத்தக தேடுதல் விளைவு (NR) (இதனை மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெறவேண்டும்)

இந்திய அகதி முகாம்களில் பிறந்த பிள்ளையாயின் பின்வரும் ஆவணங்கள் வேண்டும்

1) " B - 6 படிவத்தின் மீதான பிரதிக்கினை
2) இந்திய அகதிமுகாமில் பிறந்ததை உறுதிப்படுத்தும் பிறப்புச் சான்றிதழ்.
3) பெற்றோரின் விவாகச் சான்றிதழ்
4) பெற்றோரின் பிறப்புச் சான்றிதழ்கள்.
5) பெற்றோர் இந்தியாவில் இருந்ததை உறுதிப்படுத்தும் முகாம் அட்டை.
6) பெற்றோர் இலங்கை வந்ததை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்.

(பாஸ்போட் அல்லது UNHCR வழங்கிய பிரயாண அனுமதி அல்லது கடலால் வந்தவுடன் கிராம சேவையாளரிடம் முறையிட்ட முறையீட்டுப் பிரதி அல்லது கடலால் வந்ததை உறுதிப்படுத்தும் பிரதேச செயலரால் மேலொப்பமிடப்பட்ட கிராம சேவையாளரின் அறிக்கை)

**பிள்ளையும் குடும்பச் சூழலும் :-**

பெற்றோரால் ஒரு பிள்ளை 'புறக்கணிக்கப்படக்கூடிய' சூழ்நிலையிலோ அல்லது 'துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படக்கூடிய' பாதுகாப்பற்ற சந்தர்ப்பங்களிலோ அல்லாமல், பெற்றோரிடமிருந்து பிள்ளையை பிரித்துவைக்க முடியாது. பெற்றோர் தனித்தனியாக பிரிந்து வாழ முடிவுசெய்யும் பட்சத்தில்கூட பிள்ளை இருபெற்றோருடனும் தொடர்பு வைத்திருக்கும் உரிமை அதற்கு உண்டு. ஆயினும் இன்று பல பெற்றோர் தமது நலனைக் கருத்திற்கொண்டு பிள்ளைகளை "சிறுவர் இல்லங்களில்" சேர்ப்பதற்கு ஆர்வம்காட்டுகின்றனர். ஆயினும் குடும்பச் சூழலில் வளர்தலே பிள்ளையின் உடல், உள ஆரோக்கியத்திற்கு உகந்தது எனும் அடிப்படையில், "நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைத் திணைக்களத்தின்" பணிப்பின்பேரில், தகுந்த காரணமில்லாத சிறுவர் இல்ல அனுமதிக்கான விண்ணப்பங்கள் எம்மால் சிபார்சு செய்யப்படுவதில்லை. மேலும் 'சிறுவர் இல்லங்களிலுள்ள பிள்ளைகளை குடும்பங்களுடன் 'மீளிணைப்புச்' செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்திட்டங்கள் பெற்றோருக்கான சுயதொழில் உதவி வழங்கலுடன் தற்போது எம்மால் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இதற்கான அனுசரணையை 'சிறுவர் பாதுகாப்பு நிதியம் வழங்கி வருகிறது. சிறுவர் இல்லங்கள் கூட எமது மாதாந்த தொடர் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**பிள்ளையின் கருத்துச் சுதந்திரம் :**

பிள்ளை தன்னைப் 'பாதிக்கக்கூடிய ஒரு விடயம்' தொடர்பாக தன் கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் தெரிவிக்கும் உரிமையுடையது. அது பெற்றோரால் கவனத்திற்கொள்ளப்படவும் வேண்டும். பிள்ளையின் வயதுக்கும், அறிவு முதிர்ச்சிக்கும் ஏற்ப அதன் கருத்துக்களுக்கு உரிய மதிப்பும், முக்கியத்துவமும் வழங்கப்படல்வேண்டும். மேலும், பிறரின் உரிமைகளை மீறாத வகையில் தகவல்களைப் பெறவும், தன் கருத்தை வெளியிடவும், தகவல்ப் பரிமாற்றம் செய்யவும் சந்தர்ப்பங்கள் வழங்கப்படவேண்டும்.

**சிந்தனை, மனச்சாட்சி, மதவழிபாட்டுச் சுதந்திரமும், கூடும் சுதந்திரமும் :**

பிள்ளைகள் தம் பெற்றோரின் வழிநடாத்தலுக்கும், நாட்டின் சட்ட திட்டங்களுக்கும் ஏற்ப சிந்திப்பதற்கும் மனச்சாட்சியை வகுத்துக்கொள்வதற்கும், தான் விரும்பிய மதத்தைப் பின்பற்றுவதற்கு உரிமையுடையது. மேலும், பிள்ளைகள் மற்றவர்களின் சுதந்திரத்தைப் பாதிக்காத வகையில் தாம் கூடிக் கலந்துரையாடவும், கழகங்களை அமைக்கவும் உரிமை உள்ளது. இந்த அடிப்படையில், "சிறுவர் கழகங்களினூடாக" பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை வருங்காலங்களில் முன்னெடுக்கும் நோக்கில், 'நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைத் திணைக்களத்தின்" பணிப்புரைக்கமைய தற்போது கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் "சிறுவர் கழகங்கள்" அமைக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**பிள்ளை தன் அந்தரங்கத்தைப் பேணலும், பொருத்தமான தகவல்களைப் பெறுதலும்:**

எந்தப் பிள்ளையும் சுயகௌரவத்துடனும், நன்மதிப்புடனும், தன் குடும்ப அந்தரங்கத்தைப் பேணவோ, கடிதத் தொடர்பு வைத்திருக்கவோ உரிமையுடடையது. சமூக, ஆன்மீக ஒழுக்க நலன்களுக்கமைவாகவும், உடல் உள சுகாதார நலன்களுக்கமைவாகவும் தகவல்களையும், தகவற் சாதனங்களையும் பெறும் உரிமையும் அவர்களுக்கு உண்டு. ஆயினும், தொலைக்காட்சி போன்ற சில ஊடகங்கள் சில சந்தர்ப்பங்களில் தவறாகப் பயன்படுத்தப்படுகின்ற காரணத்தினால் அங்கு பிள்ளைகளிடையே சினிமாக் கலாசாரம் வேருன்றி, பல சமூகச் சீர்கேடுகளுக்கும் வித்திட்டுவிடுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும், பிள்ளைகளுக்கு நாட்டுப்பற்றை ஊட்டி வளர்ப்பதுடன், பிள்ளையின் பராமரிப்பு, பாதுகாப்பு, கட்டுக்கோப்பு போன்றவற்றை இரு பெற்றோருமே கூட்டாகப் பொறுப்பேற்கவேண்டும். எமது சமுதாயங்களில் இப்பொறுப்பு அனேகமாக தாயிடமே சுமத்தப்பட்டுவிடுகின்றமை கண்கூடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆதரவற்ற பிள்ளைகளும், துஸ்பிரயோகங்களிலிருந்து பாதுகாப்பும் :**

பெற்றோரோ, பராமரிப்பாளர்களோ பிள்ளையை துன்புறுத்தவோ, இம்சைப்படுத்தவோ, புறக்கணிக்கவோ உரிமையற்றவர்கள், (ஏனெனில் பிள்ளைகள் அரசின் சொத்தாகும்.) அவற்றிலிருந்து அரசு பிள்ளைக்கு பாதுகாப்பளிக்கவேண்டும், பிரதேச செயலகங்கள்தோறும் நியமிக்கப்பட்டுள்ள 'நன்னடத்தை திணைக்கள' உத்தியோகத்தர்களூடாக 'சிறுவர் துஸ்பிரயோகங்கள்' தொடர்பான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. கடந்த வருடம் சுமார் 40 சம்பவங்கள் தொடர்பான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. ஒரு பிள்ளை தன் குடும்பத்துடன் தற்காலிகமாகவோ (துஸ்பிரயோகத்திற்குள்ளாக்கப்படல்), நிரந்தரமாகவோ (அநாதைப் பிள்ளை) வாழமுடியாத சந்தர்ப்பத்தில், அல்லது குடும்பச் சூழல் பிள்ளைக்கு பாதிப்பேற்படுத்தக்கூடிய நிலையிலிருப்பின் அப்பிள்ளை அரசின் விசேட பாதுகாப்புக்கும், பராமரிப்புக்கும், உதவிக்கும் உரித்துடையதாகும். அப்பிள்ளைக்கு அதன் பண்பாடு, கலாசாரம், இனம். மதம் மொழிப் பின்னணிக்கேற்ற "மாற்றுக்குடும்ப சூழலில் வசிக்க" ஏற்பாடு செய்யப்படுகின்றது. இதன்பொருட்டு "வளர்ப்புப் பெற்றோர் திட்டம்" அரசினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மேலும், 'அநாதைப் பிள்ளைகளுக்கான மாதாந்த உதவித் திட்டம்' நீதிமன்ற கட்டளையின் பிரகாரம், பிரதேச செயலகத்தினூடாக வழங்கப்பட்டுவருகின்றது. 'துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படல்" போன்ற விசேட சந்தர்ப்பங்களில் "தாபரிப்பு வழங்கும் ஒரு சிறுவர் இல்லத்தில்" அப்பிள்ளையைத் தங்கவைப்பதற்கும், தொடர்ந்து கண்காணிக்கவும் நீதிமன்றத்தினூடாகவும், பிரதேச செயலகத்தினூடாகவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

**தத்தெடுத்தல் :**

ஒரு பிள்ளையை "தத்தெடுப்பதானால் / மகவேற்புச் செய்வதானால்" சட்ட முறைப்படி நீதிமன்றத்தினூடாகவும், பிள்ளையின் சிறந்த நலனுக்கு அமைவாகவும் மேற்கொள்ளப்படவேண்டும். 13 வயதிற்குட்பட்ட சிறுவரையே இவ்வாறு தத்தாக வழங்கமுடிவதுடன், தத்தெடுப்பவருக்கும் பிள்ளைக்குமிடையே 25 வயது இடைவெளி இருக்கவேுண்டும். இதன்போது பிள்ளையின் பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் சம்மதம் பெறப்படவேண்டுமென்பதுடன், அப்பிள்ளை தத்தெடுப்பவரினுடைய சகல உரிமைகளுக்கும் உரித்துடையதும் ஆகும். வெளிநாட்டவர் எம்நாட்டுப் பிள்ளையை தத்தெடுக்க விரும்பின், அதற்கென வகுக்கப்பட்டுள்ள விசேட ஏற்பாடுகளின்படி மகவேற்புச் செய்யமுடியும்.

**அகதிப் பிள்ளைகளும் மாற்றுவலுவுள்ள பிள்ளைகளும் :**

ஒரு பிள்ளை தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ பாதுகாப்பின்மை காரணமாக வீட்டைவிட்டோ, அல்லது நாட்டைவிட்டோ "அகதியானால்" அப்பிள்ளைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதாபிமான உதவியும், விசேட பாதுகாப்பும் அரசினால் வழங்கப்பட வேண்டுமென்பதுடன், அப்பிள்ளையின் குடும்ப உறுப்பினர்களைத் தேடிக்கண்டுபிடிக்கும் முயற்சியையும் அரசு மேற்கொள்ளவேண்டும். 2004 ம் ஆண்டு எமது பகுதிகளில் இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தின்போது இவ்வாறான பல்வேறுபட்ட உதவிகளை பல அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் முன்னின்று செய்தமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும், உள்ளத்தாலோ உடலாலோ மாற்றுவலுவுள்ள பிள்ளைகளுக்கு" (விசேட தேவைக்குரிய பிள்ளைகள்) தன்னம்பிக்கை, கௌரவத்துடன் தன் சொந்தக் காலில் நின்று சமுதாயத்தில் முழுமையான, செயலூக்கமுள்ள, கண்ணியமான பூரணவாழ்வை அனுபவிப்பதற்கான விசேட கவனத்தையும், உதவியையும், சுகாதார விசேட பராமரிப்பு, கல்வி, பயிற்சி, சமூக ஒழுங்கிணைப்பு, தனிப்பட்ட முன்னேற்ற உதவி, வேலைவாய்ப்பு, பொழுதுபோக்கு ஆகியன வழங்குவதை அரசு உறுதி செய்யவேண்டும். எமது பிரதேசசெயலக சமூகசேவைக் கிளைக்கூடாக இவ்வாறான பிள்ளைகளுக்கான மூக்குக் கண்ணாடிகள். செவிப்புலன் கருவிகள், முச்சக்கர நாற்காலிகள், பொதுசன மாதாந்த உதவிப்பணம் என்பன வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த வருடம் இவ்வாறான பிள்ளைகளுக்கு உதவும்பொருட்டு கொழும்பு 'நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைத் திணைக்களத்தினால்" "தேசிய சிறுவர் அபிவிருத்தி நிதியம்" ஆரம்பிக்கப்பட்டு, தற்போது உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த வருடம் இறுதியில் இவ்வாறான சிறுவர்களுக்கான வைத்திய சேவையை வழங்கும்பொருட்டு, யாழ். போதனா வைத்தியசாலையின் 'தொழில்வழி சிகிச்சைப் பிரிவினர்' எமது பிரதேசத்தில் ஒரு நடமாடும் சேவையினை மேற்கொண்டிருந்தனர். 45 பிள்ளைகள் அதில் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

**சுகாதார நலன் பேணல் :**

பிள்ளைகள் ''உயரிய சுகாதார வசதிகளை' அனுபவிக்கும் உரித்துடையவர்கள். அத்துடன் ஆரம்ப மற்றும் தடுப்பு ரீதியான சுகாதாரப் பராமதிப்பு, தகுந்த வைத்திய சேவை ஆகியவற்றைப் பெறும் உரிமையடையவர்கள். கற்பிணித்தாய்மாருக்கான சுகாதாரக் கவனிப்பு, சிறுபிள்ளைகளுக்கான போசாக்கு, சுகாதாரம் முதலியவற்றை அரசு உறுதிசெய்யவேண்டும். பாதுகாப்பு, பராமரிப்பு, சிகிச்சை முதலிய பல்வேறு காரணங்களின்பொருட்டு அரசினால் வீட்டுக்கு வெளியே (சிறுவர் இல்லம், வைத்தியசாலை) தங்கவிடப்பட்டுள்ள பிள்ளைகள் காலத்துக்குக் காலம் பரிசீலிக்கப்பட்டு கிரமமாக ஆராயப்படுவதை அரசு உறுதிப்படுத்தவேண்டும். மந்திகை 'சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை' யினூடாக கடந்தவருடம் எமது பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 31 பாடசாலைகளிலுமுள்ள தரம் 1 வகுப்பு மாணவர்களுக்கு தடுப்பு மருந்தேற்றப்பட்டது. தரம் 1, 4, 7, 10 வகுப்பு மாணவர்களுக்கு முழுமையான மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. 5 வயதிற்குட்பட்ட சராசரியாக 1500 குழந்தைகளுக்கு மாதாந்தம் சத்துணவு (திரிபோசா, கோன்சோயா) வழங்கப்பட்டுவருகின்றது. விசேட போசாக்குத் திட்டத்தின்கீழ் தரம் 7, 10 வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்கள் சகலருக்கும் பூச்சி மருந்து, இரும்புச்சத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிகைகள் வழங்கப்படுகின்றன. 5 வயதிற்கு உட்பட்ட போசாக்குக் குறைவான சராசரி 350 பிள்ளைகளுக்கு மாதாந்தம் உயர் புரத பிஸகற் வழங்கப்படுகின்றது. மாதாந்தம் சராசரி 370 கற்பிணித் தாய்மாருக்கு மாதாந்த ஆலோசனை வழிகாட்டல்கள் இடம்பெற்றுவருகின்றது. வட. இந்து மகளிர் கல்லூரியில் "பற்சிசிக்சை நிலையம்' ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**பிள்ளைகளுக்கான சமூக பாதுகாப்பும், வாழ்க்கைத் தரமும் :**

பிள்ளைகள் தம் நாட்டில் கிடைக்கக்கூடிய "சமூக பாதுகாப்பின்" அனுகூலங்களைப் பெறும் உரிமையடையவர்கள். (இரட்சைப் பிள்ளைகள் கொடுப்பனவு, அநாதைப் பிள்ளைகளுக்கான கொடுப்பனவு, சமுர்த்தி சமூக பாதுகாப்புச் சபைக் கொடுப்பனவு போன்ற பல்வேறு உதவித்திட்டங்கள் பிரதேச செயலகத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பிடத்தக்கதாகும்) மேலும், ஒவ்வொரு பிள்ளையும் தகுந்த, 'தரம் வாய்ந்த வாழ்க்கை' அனுபவிக்கும் உரிமையுடையதாகும். பிள்ளையின் உடல், உள, ஆன்மீக, ஒழுக்கவிய, சமூக விருத்திக்கேற்றபடி அது வாழும் உரிமையை அரசு அங்கீகரிப்பதுடன், பெற்றோர் தம் தகுதி, வசதிகளுக்காற்ப பிள்ளைக்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் அவர்களின் கடமையாகும்.

**கல்விச் சேவை :**

எல்லாப் பிள்ளைகளுக்கும் "கல்விகற்கும் உரிமை" உண்டு. எமது பிரதேச செயலர்பிரிவில் 70 முன்பள்ளிகளில் சராசரியாக 1500 மாணவர்கள்வரையில் ஆரம்பக் கல்விபெற்றுவருகின்றனர். 'போரூட்' நிறுவனத்தினரால் முன்பள்ளிகளுக்கான சத்துணவு வழங்கல்த் திட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. இங்கு 136 முன்பள்ளி ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். நிரந்தர சம்பளமின்மை இவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினையாகும். அரசு அடிப்டை ஆரம்பக்கல்வியையேனும் இலவசமாகவும், கட்டாயமாகவும் வழங்கவேண்டும் எனும் அடிப்படையில், இலங்கையில் 14 வயதுவரை கட்டாயக் கல்விக்காலமாக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளுக்கான இலவச சத்துணவுத் திட்டத்திறகு 'யுனிசெவ்', உலக தரிசனம்' ஆகிய நிறுவனங்கள் அனுசரணை வழங்கிவருகின்றன. அரசாங்கமானது எழுத்தறிவின்மையை ஒழித்து. சமத்துவமான கல்வியை வழங்குவதுடன், கல்விக்கூடாக மத கலாச்சார விழுமியங்களையும் பேணி, தொழில்க்கல்வி, உயர் கல்வி வாய்ப்புகள் போன்றவற்றை வளம்படுத்தி, சமாதானத்தை வளர்கின்ற, விஞ்ஞான தொழில்நுட்ப அறிவு விருத்திக்கான கல்வி வாய்ப்புகளை உறுதிப்படுத்தவேண்டும். மேலும், ஒரு பிள்ளையின் ஆளுமை, திறன், உடல் உள ஆற்றல்களை முற்றுமுழுதாக விருததியடையச் செய்தலே 'கல்வியின் நோக்கம்' என வலியுறுத்தப்படுகின்றது. மேலும், சுதந்திர சமுதாயத்திலே, அடிப்படை மனித உரிமைகளை மதித்து, பொறுப்புடனும், சமாதானமாகவும் வாழ வழிசமைப்பதே கல்வியின் நோக்கமென கூறப்படுகிறது. வடமராடசி கல்வி வலய 'முறைசாராக் கல்விப் பிரிவினரால்' கடந்த வருடம் எமது பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட 'இடைவிலகிய மாணவர் செயல்த்திட்டத்தில்' சுமார் 50 மாணவர்கள் பயன்பெற்றுள்ளதுடன், யா / வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றுவரும் 'வருமானம் தரும் தொழிற்பயிற்சித் திட்டத்தின் கீழ் 75 மாணவர்களும், 6 பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட 'தொழில்த்திறன் விருத்தித் திட்டத்தின்' கீழ் 198 மாணவர்களும் தொழிற்பயிற்சி பெற்றுள்ளனர்.

மேலும், சிறுபான்மைச் சமூகங்கள், ஆதிவாசிகளின் பிள்ளைகள் தம் சொந்த பண்பாடு, மதம், மொழி முதலியவற்றைப் பின்பற்ற உரிமையுடையவர்கள். பிள்ளைகள் ஓய்வாக இருக்கவும், தம் வயதிற்கேற்ற விளையாட்டுக்கள், கலை கலாசார நிகழ்வுகளில் ஈடுபடவும் வாய்ப்பளிக்கப்படவேண்டும்.

**ஓய்வு, பொழுதுபோக்கு, கலாசார நடவடிக்கைகளும், சிறுவர் தொழிலாளர் பிரச்சினைகளும் :**

சிறுவர்களின் உடல், உள ஆரோக்கியம், கல்வி, ஒழுக்கம், வளர்ச்சி, சமூக முன்னேற்றம் ஆகியவற்றுக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடிய பொருளாதார சுரண்டலான "சிறுவரைத் தொழிலுக்கமர்த்தல்" என்பதிலிருந்து பாதுகாப்புப்பெறும் உரிமை சிறுவர்களுக்கு உண்டு. சிறுவர் ஊழியத்துக்கான ஆகக் குறைந்த வயதை நிர்ணயிப்பதும், தொழில் நிபந்தனைகள், தொழில் நேரங்களை கண்காணிப்பதும், இதனை வலுவாக்கும்பொருட்டான தண்டனைகளை விதிப்பதும் அரசின் கடப்பாடாகும். இலங்கையில் 14 வயதிற்குட்பட்டவர்கள் எந்தத்தொழிலிலும் ஈடுபடமுடியாது. (கட்டாயக்கல்விக் காலம்) ஆயினும் அப்பிள்ளையை பாடசாலை ஆரம்பிக்கமுன்னரோ, பாடசாலை விட்ட பின்னரோ மெதுவான வேலையில் அமர்த்தலாம். அத்துடன் 'பகிரங்க அதிகார சபையால்' மேற்பார்வை செய்யப்படும் ஏதேனுமொரு நிறுவனத்தில் 'பயிற்சி அல்லது தொழிற் கல்வியில்' அமர்த்த முடியும். 15 வயதிற்கு மேற்பட்டவர் மீனவத் தொழிலும், 18 வயதிற்கு மேற்பட்டவர்களே வாழ்க்கைக்கு ஆபத்தான தொழில்களிலும், இரவு நேரத்தொழிலிலும் ஈடுபடலாம். கடந்த வருடம்ட 16 சிறுவர் தொழிலாளர்கள் தொடர்பாக பிரதேச செயலகத்தால் சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**சட்டவிரோத செயல்களிலிருந்து பாதுகாப்பு :**

சிறுவர்கள் சட்ட விரோத மருந்துகள், போதைப்பொருட்பளைப் பாவிப்பதிலிருந்தும், அவற்றின் உற்பத்தி, விநியோக நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதிலிருந்தும் பாதுகாப்புப் பெறும் உரிமையுடையவர்கள். இவற்றிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கான சட்டவாக்க, நிர்வாக, சமூக, கல்விசார் நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது அரசின் கடப்பாடாகும். மேலும், பிள்ளைகள் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுதல், ஆபாசக் காட்சிகளைக் காணச் செய்தல் போன்ற 'மிக்க இழிவான செயல்களான' பாலியல் சுரண்டல்கள், இம்சைகளிலிருந்து பாதுகாப்புப்பெறும் உரித்துடையவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிள்ளைகளை விற்பனைசெய்தலும், கடத்தலும் :**

பிள்ளைகள் ஏதேனுமொரு நோக்கத்திற்காக விற்பனை செய்யப்படுவதிலிருந்தும், கடத்தப்படுவதிலிருந்தும் பாதுகாக்கப்படவேண்டியவர்கள். இதனைத் தடுக்க அரசு சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும். மேலும் சிறுவரை வீதியில் பிச்சையெடுக்க விடுதல், போதைப் பொருட்களை கடத்துவதற்கு சிறுவரைப் பயன்படுத்துதல், சிறுவருக்கு எழுத்துமூலமான கட்டளை எதுவுமின்றி போதைப்பொருட்களை அல்லது மதுபானம் விற்றல், வன்முறை பயங்கரத் தன்மையுடைய படங்கள், உடமைகளை வைத்திருக்ககொடுத்தல் முதலிய ஆபத்துமிக்க செயற்பாடுகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறும் உரிமையுடையவர்கள்.

**சிறுவர்களுக்கான தண்டனைகளிலிருந்து பாதுகாப்பு :**

எந்தப் பிள்ளையுமே சித்திரவதைபோன்ற குரூர தண்டனை வழங்கப்படல், ஆயுட்சிறைத் தண்டனை, மரண தண்டனை, சட்டவிரோத கைது. ஆகியவற்றுக்கு உள்ளாக்கப்படலாகாது. பிள்ளை மனிதாபிமானத்துடனும், சுயகௌரவத்துடனும் நடத்தப்படவேண்டும். தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும்போதுகூட, தகுந்த சிகிச்சை வழங்கப்பட்டும், வளர்ந்தோர் பகுதியிலிருந்து விலக்கி வைக்கப்பட்டும், கடிதத் தொடர்புகள் மூலமும், பெற்றோர் சென்று பார்க்கவிடப்படுவதன் மூலமும் குடும்பத்தினருடன் தொடர்பு கொள்ள வசதிகள் வழங்கப்பட்டும், சட்ட உதவிகளைப் பெறுவதற்கும் அவர்கள் உரிமையுடையவர்கள்.

போர்க்காலத்தின்போது தகுந்த பாதுகாப்புப்பெறும் உரிமை சிறுவர்களுக்கு உண்டு. 18 வயதிற்கு உட்பட்ட எந்தப் பிள்ளையும் ஆயுதப் பிணக்குகளில் நேரடியாக ஈடுபடவோ, ஆயுதப் பிணக்குகளில் சேர்க்கப்படவோ கூடாது. ஆயுதப் பிணக்கினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு அரசாங்கத்தினால் பாதுகாப்பும், பராமரிப்பும் வழங்கப்படவேண்டும். ஆயுதப் பிணக்குகளில் சித்திரவதை, புறக்கணிப்பு துர்நடத்தை அல்லது சுரண்டலுக்குள்ளான பிள்ளைகளுக்கு புனர்வாழ்வளித்து, குணமாக்கப்பட்டு, சமூக நீரோட்டத்தில் மீண்டும் இணைக்கப் படுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் உறுதிசெய்யவேண்டும்.

ஒரு பிள்ளை குற்றம் புரிந்ததாகப் பழி சுமத்தப்பட்டால், சட்டரீதியாகவும், வேறு வழிகளிலும் உதவிகளைப் பெற அவர்களுக்கு உரிமையுண்டு. ஒரு குற்றம் புரிந்த பிள்ளை 8 வயதிற்கு உட்பட்டதாயிருப்பின், அதற்கு குற்றம் புரியும் மனப்பாங்கு இருந்திருக்காது என்ற நோக்கில் மன்னித்து விடப்படும். 8 - 12 வயதிற்கிடைப்பட்ட பிள்ளை குற்றம் புரிந்திருப்பின் சந்தர்ப்ப சூழ்நிலைகளின் அடிப்படையில் பிள்ளை குற்றம் புரிந்துள்ளதா என நீதிமன்றம் தீர்மானிக்கும். 12 - 16 வயதிற்கிடைப்பட்ட பிள்ளைகளுக்கு சிறைத்தண்டனை தீர்ப்பு வழங்கமுடியாது. 16 -18 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைக்கு மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்படமுடியாது. பிள்ளைகளின் குற்ற செயல் தொடர்பான விடயங்களில், சட்டநடவடிக்கைக்கு உட்படுத்துதலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது "சிறுவர் நன்னடத்தைப் பள்ளியில் / சான்றுபெற்று பாடசாலையில்" சேர்க்கமுனைவதோ இயலுமானவரை தவிர்க்கப்படவேண்டும். தற்போது கோண்டாவில் பகுதியில் நன்னடத்தைப் பள்ளி இயங்கிவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

'சிறுவர் உரிமைகள் சமவாயத்தில்'' குறிப்பிடப்பட்டுள்ள சட்டத் தராதரங்களுடன் ஒப்பிடுகையில், அந்தந்த 'நாடுகளின் தேசிய சட்டத் தராதரங்கள்' உயர்ந்ததாகக் காணப்பட்டால், அதுவே நடைமுறைக்குப் பொருந்துவதாகும்.

"சிறுவர் உரிமைகள்" என்று பார்க்கின்றபோது, கடந்த 10 வருட காலப் பகுதிக்குள்ளாகவே இவ்வாறான கருத்தியல்கள் எம்மத்தியில் அதிகம் பேசப்பட்டும், செயலுருப்பெற்றும் வருகின்றமையை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. மேற்கூறிய வகையில் "சிறுவர்களுக்கான உரிமைகள்" ஐ. நா. சமவாயத்தினாலும், 'நாட்டின் தேசிய சட்ட தராதரங்கிளனாலும்' வரையறுக்கப்பட்டிருப்பினும், ஒவ்வொரு பிள்ளைகளுமே உரிமைகளை எதிர்பார்க்கும் அதே நேரம் எமது தேசத்தின், பண்பாடு, பாரம்பரியங்கள், கலாச்சாரங்களுக்கேற்ப தத்தம் கடமைகளையும் சரிவரச் செய்வதைப் பிரதானமாகக் கைக்கொள்ளல்வேண்டும்.

## பனம் பாத்திப் படையல்

பனம்பாத்தியில் கிழங்குப் பருவத்திற்கு வந்ததும் சோறு, கறி சமைத்து பாத்தியின்மீது வைத்துப்படைப்பர். பின்னர் கிழங்கு கிண்டியவர் கிழங்கு கிண்டுவதற்கு உபயோகித்த உபகரணங்களையும், கிழங்குகளையும் கொண்டு வீட்டுக்குள் வரும்போது வாசலில் குத்துவிளக்கு / மாடவிளக்கு ஏற்றி வரவேற்பர் பின்னர் கிழங்கை அவித்து / சுட்டு, துவையல் செய்து பூரானுடன் ஊமலை வெட்டிவைத்து வீட்டிற்குள் வசதியான இடத்தில் வைத்து படையல் செய்வர். அதன்பின்னர் வசதியான ஓர் நாளில் மாமிசம் உண்பவர்கள் சோறு, மாமிசம் என்பவற்றையும் பலவகையான மூலைப்பிட்டுக்களையும் படைப்பர், மாமிசம் சாப்பிடாதவர்கள் பொங்கல், மோதகம் படைப்பர். இப்படையல்களை சிலர் பனை மரத்தின் அடியில் படைப்பதும் உண்டு. இது பொலிகண்டிப் பகுதியில் காணப்பட்ட பனம்பாத்திப் படையலாகும்.

**தகவல் : சி. உதயமதி**
*சமுர்த்தி முகாமையாளர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமி அபிவிருத்தித் திட்டங்களும் சமூக, பொருளாதார மாற்றங்களும்

**- வடமராட்சி வடக்கு பிரதேசம் தொடர்பான ஓர் ஆய்வு -**

**திரு. இ. வரதீஸ்வரன்**
SLAS - 1, B.B.A (Hons), M.A

இலங்கையில் பெரும் அனர்த்தங்களைப் புரிந்த 2004ஆம் ஆண்டின் சுனாமி மனித நேயத்திற்கும் புரிந்துணர்விற்கும் அபிவிருத்திக்கும் ஒரு வித்தாக அமைந்துள்ளது எனலாம். இலங்கையில் அழிவடைந்த சொத்துக்களை மீளப்புனரமைப்பதற்கும் மக்களுடைய வாழ்வாதாரத் திட்டங்களை மேம்படுத்துவதற்கும் பல நூறு மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கைக்கு வெளிநாட்டு அரசாங்கங்கள், நிறுவனங்கள் மூலம் கிடைத்துள்ளதை மீள்நிர்மாண அபிவிருத்தி முகவராண்மை (RADA) 2006ஆம் ஆண்டு மார்ச் மாதம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (RADA, 2006:1).

இவ் அறிக்கையில் யாழ்ப்பாண மாவட்டத்திற்கும் சுனாமி தொடர்பான 118 திட்டங்களுக்கு 71,660,934 அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டிருந்தமை தெரிகிறது. இத்தொகையில் வீடமைப்பு வசதிகளை வழங்குவதற்காக மட்டும் 15,807,096 அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனுடன் இணைந்து வாழ்வாதாரத் திட்டங்களை முன்னெடுப்பதற்காக வழங்கப்பட்டுள்ள தொகை 16,050,033 அமெரிக்க டொலர்களாகும். வீடுகளுக்கான நீர்வழங்கல் மலசலகூடங்களுக்காக ஒதுக்கப்பட்டது 4,255,197 அமெரிக்க டொலர்களாகும். எனவே மொத்த ஒதுக்கீட்டில் 50%மானவை வீடமைப்பு திட்டங்களுக்காகவும் அதனுடன் இணைந்த திட்டங்களுக்காகவும் இருக்கின்றன.

வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டங்களை கிராமங்களில் மேற்கொள்கின்ற போது அக்கிராமங்களுக்கு தேவையான உட்கட்டுமான வசதிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கையாக இருந்தது. அந்த வகையில் எதுவித வசதிகளும் இருந்திராத சிறிய குக்கிராமங்கள் கூட இன்று பல உட்கட்டுமான வசதிகளைக் கொண்டு அபிவிருத்தி பெற்ற கிராமங்களாக மாறியுள்ளன.

சமூகத்திலும் தொழில்வாய்ப்புக்களிலும் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சுயதொழில் உதவிகளினாலும் வாழ்வாதாரத் திட்டங்களினாலும் கட்டுமானப் பணிகளினாலும் கிராம மக்களுடைய வருமானம் அதிகரித்து பொருளாதார ரீதியிலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. வாழ்விடங்களின்றி ஓலைக் குடிசைகளிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதி முகாம்களிலும் வாழ்ந்த மக்களில் பெரும்பாலானோர் இன்று வசதிகளுடன் கூடிய நிரந்தர வீடுகளில் வாழ்கின்றனர்.

## 1.1 கிராமங்களில் ஏற்படுத்தப்பட்ட உட்கட்டுமான வசதிகள்

### (அ) பொதுநோக்கு மண்டபங்கள்

சுனாமியால் பாதிக்கப்பட்ட சகல கிராமங்களிலும் பொதுநோக்கு மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் சுனாமிக்கு முன்னர் இத்தகைய வசதிகளுடன் கூடிய பொதுநோக்கு மண்டபங்கள் இருக்கவில்லை. தற்போது அமைக்கப்பட்ட, அமைக்கப்பட்டு வரும் பொதுநோக்கு மண்டபங்கள் யாவும் வீடமைப்புத் திட்டங்களுடன் மக்களுக்கு பல்வகையிலும் உதவக்கூடிய நிலையில் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய பொதுநோக்கு மண்டபங்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமும் வடக்கு கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தி திட்டத்தின் (NECCDEP) மூலமும் நிறுவப்பட்டவையாகும். இதில் அரச சார்பற்ற நிறுவனங்கள் பொதுமக்களின் பெயரிலான பங்களிப்புக்கள் இன்றி தாங்களாகவே நேரடியாக இம் மண்டபங்களைக் கட்டியுள்ளனர். ஆயினும் வடக்கு கிழக்கு சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உள்ளூரில் இயங்கும் பொதுமக்கள் அமைப்புக்களே இம்மண்டபங்களை பொதுமக்களின் குறிப்பிட்டளவான பங்களிப்புடன் அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுனாமிக்குப் பின்னரான அபிவிருத்தித் திட்டங்களில் பொதுநோக்கு மண்டபங்கள் குறிப்பிடத் தக்கவையாகும். அட்டவணை 1.1.1 மூலம் 25 பொது நோக்கு மண்டபங்கள் ரூபா 59.5 மில்லியன் செலவில் அமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இதில் குறிப்பிடத்தக்க விடயம் யாதெனில் குறித்த கிராமங்களில் இத்தகைய மண்டபங்கள் முன்னர் இருந்திருக்கவில்லை என்பதும் சில கிராமங்களில் முன்னர் பொது மண்டபங்கள் இருந்திருப்பினும் இத்தகைய வசதிகளை கொண்டிருக்கவில்லை என்பதாகும்.

உதாரணமாக பொலிகண்டி கிழக்கில் அமைக்கப்பட்டுள்ள பொதுநோக்கு மண்டபம் வெளிப்புறமாக 4 அறைகளைக் கொண்டதாகவும் மண்டபத்தின் மத்தியில் கூட்டங்கள் நடாத்தக்கூடிய அமைப்பிலும் அமைந்துள்ளதைக் குறிப்பிடலாம். இம் மண்டபத்தில் கூட்டங்கள் நடைபெறுவதுடன் ஒவ்வொரு அறைகளிலும் திணைக்கள உப அலகுகள் இயங்கி வருகின்றன. கிராம அலுவலர் அலுவலகம், விவசாய அமைப்பின் அலுவலகம், கால்நடை போதனாசிரியர் அலுவலகம், மருத்துவ மாது அலுவலகம் ஆகியன இங்கு இயங்குகின்றன.

பொதுநோக்க மண்டபங்களின் விபரங்களை கிராம அலுவலர் ரீதியாக அட்டவணை 1.1.1இல் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 1.1.1. : பொதுநோக்கு மண்டபங்கள் விபரம்

| கிராம அலுவலர் பிரிவு | எண்ணிக்கை | மொத்தப் பெறுமதி(மில்.ரூபா) |
|---|---|---|
| தொண்டமானாறு தெற்கு | 1 | 2.5 |
| தொண்டமானாறு வடக்கு | 1 | 2.5 |
| கெருடாவில் தெற்கு | 1 | 2.2 |
| கெருடாவில் வடக்கு | 1 | 2.8 |
| வல்வெட்டித்துறை வடமேற்கு | 1 | 2.5 |
| வல்வெட்டித்துறை வடமத்தி | 1 | 2.5 |
| வல்வெட்டித்துறை வடகிழக்கு | 1 | 2.5 |
| பொலிகண்டி மேற்கு | 2 | 4.8 |
| பொலிகண்டி கிழக்கு | 2 | 4.4 |
| அல்வாய் மேற்கு | 2 | 5.1 |
| அல்வாய் வடமேற்கு | 1 | 2.5 |
| அல்வாய் வடமத்தி | 2 | 6.0 |
| வியாபாரிமூலை | 1 | 2.8 |
| பருத்தித்துறை | 1 | 1.5 |
| பருத்தித்துறை கிழக்கு | 1 | 2.2 |
| தும்பளை கிழக்கு | 2 | 5.2 |
| கற்கோவளம் | 4 | 7.5 |
| **மொத்தம்** | **25** | **59.5** |

ஆதாரம் : பிரதேச செயலகம், பருத்தித்துறை – திட்டமிடல் பிரிவு அறிக்கை 2007

### (ஆ) உற்பத்தி நிலையங்கள்

பொதுநோக்கு மண்டபங்களில் சுயதொழில் வாய்ப்புக்களுக்கான பல கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள், செய்முறை வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் பெண்கள் மிக ஆர்வத்துடன் பங்குபற்றி வருகின்றனர். இவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் தமது உற்பத்திகளை மேற்கொள்வதற்கென உற்பத்தி நிலையங்கள் 4 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மொத்தப் பெறுமதி 6.5 மில்லியன் ரூபாய்களாகும். இவ் உற்பத்தி நிலையங்கள் அப்பகுதி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினராலேயே அமைக்கப்பட்டுத் தற்போது சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. இவற்றின் விபரங்களை அட்டவணை 1.1.2 இல் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 1.1.2. : உற்பத்தி நிலையங்கள்

| கிராம அலுவலர் பிரிவு | பெறுமதி (மி.ரூபா) |
|---|---|
| வல்வெட்டித்துறை வடகிழக்கு | 2.0 |
| பொலிகண்டி கிழக்கு | 1.5 |
| அல்வாய் வடமத்தி | 1.5 |
| வியாபாரிமூலை | 1.5 |
| | **6.5** |

ஆதாரம் : பிரதேச செயலகம், பருத்தித்துறை - திட்டமிடல் பிரிவு அறிக்கை 2007

### (இ) சனசமூக நிலையங்கள்

சுனாமிப் பிரதேசங்களில் மனிதனுடைய அறிவுத்திறன் விருத்திக்கான செயற்பாடுகளில் சனசமூக நிலையங்கள் அமைக்கப்பட்டமை முக்கியமானதாகும். இப்பிரதேசத்தில் 4 சனசமூக நிலையங்கள் 5.7 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு தளபாட உபகரணங்களும் புத்தகங்களும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் சில அரசசார்பற்ற நிறுவனங்களின் நிதி உதவியுடன் (போரூட், ஜெசாக்) புத்தகங்களும் தளபாடங்களும் வழங்கப்பட்டதால் தனியாருக்குச் சொந்தமான வீடுகள் நூலகங்களாக மாற்றப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

அட்டவணை 1.1.3 இல் புதிதாக அமைக்கப்பட்ட சனசமூக நிலையங்களின் விபரங்களைக் காணலாம்.

அட்டவணை 1.1.3 : சனசமூக நிலையங்கள்

| கிராம அலுவலர் பிரிவு | எண்ணிக்கை | பெறுமதி(மில்.ரூபா) |
|---|---|---|
| அல்வாய் வடமத்தி | 1 | 1.5 |
| பருத்தித்துறை | 1 | 1.5 |
| கற்கோவளம் | 2 | 2.7 |
| **மொத்தம்** | 4 | **5.7** |

ஆதாரம் : பிரதேச செயலகம், பருத்தித்துறை - திட்டமிடல் பிரிவு அறிக்கை 2007

### (ஈ) ஆரம்ப சுகாதார நிலையங்கள்

வைத்திய வசதிகள் குறைந்த மக்கள் செறிந்துவாழும் முக்கிய 3 இடங்களில் வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் உதவியுடன் சகல வசதிகளுடனும் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றும் தலா 6.5 மில்லியன் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.1.4. : ஆரம்ப சுகாதார நிலையங்கள்**

| கிராம அலுவலர் பிரிவு | பெறுமதி(மில்.ரூபா) |
|---|---|
| அல்வாய் வடமேற்கு | 6.5 |
| தும்பளை கிழக்கு | 7.5 |
| கற்கோவளம் | 7.5 |
| **மொத்தம்** | **21.5** |

ஆதாரம் : பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகம், யாழ்ப்பாணம்.

அல்வாய் வடமேற்கில் போரூட் நிறுவனத்தினுடைய உதவியுடனும் தும்பளை கிழக்கு, கற்கோவளம் ஆகிய கிராமங்களில் உலக தரிசன நிறுவனத்தின் நிதி உதவியுடனும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

இவ் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ தாதி தங்கியிருந்து மருத்துவ வசதிகளை வழங்கக்கூடிய விடுதியும் இணைந்து காணப்படுவது சிறப்பம்சமாகும்.

### (உ) முன்பள்ளிகளும் சிறுவர் பூங்காக்களும்

சுனாமியின் பின்னரான அபிவிருத்தித் திட்டங்களில் முன்பள்ளிகள் அமைக்கப்படுவதும் அதனுடன் இணைந்த சிறுவர் பூங்காக்களும் அமைக்கப்படுவதும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். முன்னர் ஒருபோதும் இருந்திராத அமைப்பிலும் வசதிகளுடனும் இவை அமைக்கப்பட்டுள்ளன.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட இடங்களில் இதுவரை 12 முன்பள்ளிகளும் அதனுடன் இணைந்த 10 சிறுவர் பூங்காக்களும் இதுவரை அமைக்கப்பட்டுள்ளன. இதன் பெறுமதி 19.8 மில்லியன் ரூபாய்களாகும். இதைவிட சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் சுனாமியினால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு அருகில் உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் 5 முன்பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் 1.5 மில்லியன் ரூபாய் பெறுமதியானவையாகும்.

இதுவரை அமைக்கப்பட்டுள்ள முன்பள்ளிகளினதும் சிறுவர் பூங்காக்களினும் விபரங்களை அட்டவணை 1.1.5 மூலம் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 1.1.5. : முன்பள்ளிகளும் சிறுவர் பூங்காக்களும்

| கிராம அலுவலர் பிரிவு | எண்ணிக்கை | பெறுமதி(மில்.ரூபா) |
|---|---|---|
| தொண்டமனாறு தெற்கு | 1 | 2.3 |
| கெருடாவில் தெற்கு | 1 | 1.6 |
| வல்வெட்டித்துறை வடமத்தி | 1 | 2.0 |
| பொலிகண்டி மேற்கு | 1 | 2.0 |
| அல்வாய் மேற்கு | 2 | 3.1 |
| அல்வாய் வடமேற்கு | 2 | 3.0 |
| பருத்தித்துறை | 1 | 1.2 |
| தும்பளை கிழக்கு | 1 | 1.6 |
| கற்கோவளம் | 2 | 3.0 |
| **மொத்தம்** | **12** | **19.8** |

ஆதாரம் :- பிரதேச செயலகம், பருத்தித்துறை - திட்டமிடல் பிரிவு அறிக்கை 2007

**(ஊ) மீனவருக்கான திட்டங்கள்**

மீனவருக்கான உட்கட்டுமான வசதிகள் என்பதில் இதுவரை 08 மீனவருக்கான இளைப்பாறும் மண்டபங்களும் 05 மீன் ஏலவிற்பனை நிலையங்களுமாக மொத்தம் 13 கட்டடங்கள் 13.6 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் விபரங்களை அட்டவணை 1.1.6 மூலம் காணலாம்.

அட்டவணை 1.1.6 : மீனவருக்கான இளைப்பாறு மண்டபங்களும் மீன்ஏல விற்பனை நிலையங்களும்

| கிராம அலுவலர் பிரிவு | எண்ணிக்கை | பெறுமதி(மில்.ரூபா) |
|---|---|---|
| தொண்டமனாறு வடக்கு | 01 | 1.0 |
| வல்வெட்டித்துறை வடமேற்கு | 02 | 2.2 |
| பொலிகண்டி மேற்கு | 01 | 1.0 |
| பொலிகண்டிகிழக்கு | 01 | 0.8 |
| அல்வாய் வடமத்தி | 01 | 1.0 |
| வியாபாரிமூலை | 01 | 1.2 |
| பருத்தித்துறை | 02 | 2.2 |
| பருத்தித்துறை கிழக்கு | 01 | 0.8 |
| தும்பளை கிழக்கு | 01 | 1.2 |
| கற்கோவளம் | 02 | 2.2 |
| **மொத்தம்** | **13** | **13.6** |

ஆதாரம் : பிரதேச செயலகம், பருத்தித்துறை - திட்டமிடல் பிரிவு அறிக்கை 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### (எ) விவசாயிகளுக்கான திட்டங்கள்

சுனாமியால் பாதிக்கப்பட்ட இரு இடங்களில் 1.1 மில்லியன் ரூபா பெறுமதியான களஞ்சிய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள விபரத்தினை அட்டவணை 1.1.7 இல் காணலாம். இதனைவிட சேவாலங்கா, Action Faim, I.O.M. ஆகிய நிறுவனங்கள் அல்வாய் மேற்கு, அல்வாய் வடமேற்கு ஆகிய பிரிவுகளில் விவசாயிகளுக்கான உள்ளீடுகள், கடன் வசதிகள், நீர் இறைக்கும் பம்பிகள், இருசக்கர உழவு இயந்திரம் ஆகியனவற்றையும் வழங்கியுள்ளன.

**அட்டவணை 1.1.7. : விவசாயிகளுக்கான களஞ்சிய அறை அமைத்தல்**

| கிராம அலுவலர் பிரிவு | பெறுமதி(மில்.ரூபா) |
|---|---|
| கெருடாவில் தெற்கு | 0.6 |
| வியாபாரிமூலை | 0.5 |
| **மொத்தம்** | 1.1 |

ஆதாரம் : பிரதேச செயலகம், பருத்தித்துறை - திட்டமிடல் பிரிவு அறிக்கை 2007

### (ஏ) குடிநீர்த்திட்டங்கள்

கிணறுகள் திருத்தம், புதிய திறந்த கிணறுகள் அமைத்தல், குழாய்க்கிணறு அமைத்தல், நீர்த்தாங்கி அமைத்தல், குழாய்நீர் வசதிகள் செய்தல் போன்ற குடிநீர்த்திட்டங்கள் 10 கிராம அலுவலர் பிரிவுகளில் 3.83 மில்லியன் ரூபா செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

முடிவாக சுனாமி வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டங்களின் பயனாக கிராமங்களில் ஏற்படுத்தப்பட்ட உட்கட்டுமான வசதிகள் அக்கிராமங்களில் ஏற்கனவே இருந்த வசதிகளை விட மிக அதிகமானவை என ஆதாரங்களுடன் மெய்ப்பிக்க முடிகிறது. இதுவரை மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் பெறுமதி 130 மில்லியன் ரூபாய்களுக்கு மேற்பட்டவை என்பதை காண முடிந்தது. மேலும் பல மில்லியன் ரூபாய்கள் பெறுமதியான உட்கட்டுமான வேலைகள் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. எனவே மொத்தமாக நோக்குகின்ற போது சுனாமி என்ற பேரனர்த்தம் ஒன்று ஏற்பட்டிருக்காதுவிடில் இத்தகைய உதவிகள் எதுவும் இக்கிராமங்களுக்குக் கிடைத்திருக்க மாட்டாது என்றே கூறலாம்.

## 1.2 தொழில் வாய்ப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள்

சுனாமியின் தாக்கத்திற்குப் பின்னர் வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் தொழில் நிலைகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சுனாமிக்கு முன்னர் பிரதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலக திட்டமிடல் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின்படி 70%மானோர் கடற்றொழிலும் அது சார்ந்த ஏனைய தொழில்களிலும் ஈடுபட்டிருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது. மேலும் விவசாயத்தில் ஈடுபடுவோர் 10%மானோராகவும் 7%மானோர் அரச தொழில்களில் ஈடுபடுவோராகவும் இருந்துள்ளனர். எனவே மிகுதி 13%மானோர் கூலித் தொழில் உட்பட ஏனைய சுயதொழில்களில் ஈடுபடுவோராக இருந்துள்ளனர்.

2006ம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து அரசசார்பற்ற நிறுவனங்களினால் கடற்றொழில் செய்பவர்கள் இழந்த படகுகள், இயந்திரங்கள், வலை உபகரணங்கள் என்பவற்றிற்குப் பதிலாக புதியவை வழங்கப்பட்டன. இவ்வாறான உதவிகள் வழங்கிய நிறுவனங்களில் கியூமெடிக்கா நிறுவனம் குறிப்பிடத்தக்கது. இந்நிறுவனம் வடமராட்சி வடக்குப் பிரிவில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட 750 கடற்றொழில் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் தலா ஒரு பிளாஸ்ரிக் படகு, வெளியிணைப்பு இயந்திரம், ரூபா 40,000/= பெறுமதியான வலைகள், துவிச்சக்கரவண்டி என்பனவற்றை வழங்கியிருந்ததாக யாழ் மாவட்ட செயலக சுனாமிப்பிரிவுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ் உதவியினால் ஒவ்வொரு குடும்பங்களும் தலா ரூபா 475,000/= பெறுமதியான கடற்றொழில் உதவியினைப் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும். இவ் உதவிகளினால் கடற்றொழில் 2006ம் ஆண்டின் ஆரம்பத்தில் மீண்டும் களைகட்டத் தொடங்கியது.

எனினும் எதிர்பாராதவிதமாக 2006ம் ஆண்டு ஆவணி மாதம் 11ம் திகதி மீளவும் தொடங்கிய ஈழப் போரினால் மாதக்கணக்கில் கடற்றொழிலாளர்கள் கடலுக்கே செல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு உட்பட்டனர். கடற்கரைகளில் வைக்கப்பட்டிருந்த படகுகள் கூட அங்கிருந்து தூரத்திற்கு அகற்றிவிடும்படி பாதுகாப்புத் தரப்பினரால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. இதனால் கடற்றொழில் செய்து வந்த குடும்பங்கள் தொழில், வருமானம் எதுவுமின்றி அரசினால் வழங்கப்பட்டு வரும் நிவாரணத்தையே நம்பி சீவிக்க வேண்டியவர்களாக இருந்தனர். இருந்தும் அரசாங்க அதிபரது முயற்சியினாலும் கடற்றொழில் சங்கங்களது அயராத போராட்டங்களினாலும் 2007ம் ஆண்டிலிருந்து மட்டுப்படுத்தப்பட்ட அளவில், மட்டுப்படுத்தப்பட்ட நேரங்களுக்கு, மட்டுப்படுத்தப்பட்ட தூரங்களுக்கு கடற்றொழிலாளர்கள் கட்டுமரத்தில் மட்டும் சென்று மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டனர். ஒரு வாரத்திற்கு சராசரியாக 4 நாட்களுக்கே தொழில்வசதி கிடைப்பதாக வெளிக்கள ஆய்வின் மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

இத்தகைய நிலைமைகளினால் கடற்றொழிலில் ஈடுபடுவோர் தொகையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதைப் புள்ளி விபரங்களினூடாக அவதானிக்க முடிகிறது. குறிப்பாக கடற்றொழிலில் ஈடுபட்டவர்கள் தமது தொழிலை குறிப்பிடத்தக்க அளவுக்கு மாற்றிக் கொள்ளவில்லை. கடற்றொழில் செய்த பெரும்பாலானோர் தற்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையின்றியே உள்ளனர். 10% இற்குக் குறைந்த தொகையினரையே தமது தொழிலை மாற்றியுள்ளனர்.

மேலும் விவசாயம், அரச தொழில் என்பவற்றில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படவில்லை. ஆனால் கூலித் தொழிலில் ஈடுபடுவோர் தற்போது அதிகரித்துள்ளனர் என்பதை ஆய்வினூடாக அறிய முடிகிறது. முன்னர் செய்து வந்த தொழில் தற்போதைய சூழ்நிலை காரணமாகத் தொடர முடியாத சந்தர்ப்பத்தில் அவர்கள் கூலியாகத் தமது தொழிலை மாற்றிவிடுகின்றனர். இப்பிரதேசத்தில் அதிகளவில் கட்டுமான வேலைகள் நடைபெறுவதால் கூலியாட்களுக்கு அதிக கேள்வி இருப்பதுடன் கூலியாளுக்கு நாளொன்றுக்கு ரூபா 500/= - 550/= வரை சம்பளம் கிடைப்பதுடன் இத்துறையில் ஈடுபடுவோர் தொகையும் முன்னரைவிட அதிகரித்துள்ளது.

## 1.3 பொருளாதார ரீதியாக ஏற்பட்ட மாற்றங்கள்

வடமராட்சி வடக்கு பிரதேசத்தில் சுனாமியினால் அழிவடைந்த பிரதேசங்களில் பொருளாதாரங்கள் மீளவும் கட்டியெழுப்பப்பட்டு வருகின்றன. மீன்பிடித் துறையில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளால் அத்துறை பாதிக்கப்பட்டாலும் குறைந்த வருமானம் பெற்றோரது தற்போதைய வருமானம் சுனாமிக்கு முன்னர் இருந்ததைவிட அதிகரித்துள்ளதை வெளிக்கள ஆய்வு சுட்டிக் காட்டுகிறது.
விவசாயம், கூலித்தொழில், திறமைசார் தொழில்களில் ஈடுபடுவோர் அதிகரித்துள்ளனர். அரச துறையினரது சம்பளங்களும் 2006ஆம் 2007ஆம் ஆண்டுகளில் 40% வரை உயர்ந்துள்ளது. இதனால் பொதுவான நோக்கில் சுனாமிக்கு முன்னர் இப்பிரதேச மக்கள் குறைந்த வருமானத்தைப் பெற்று வந்ததையும் தற்போது அவர்களுடைய வருமானம் அதிகரித்துள்ளதையும் அவதானிக்கலாம்.

இன்றைய கால வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் சாதாரண ஒரு குடும்பம் மாதமொன்றுக்கு ரூபா 6000 வருமானமாகப் பெற்றாலும் கூட வாழ்க்கைச் செலவினைச் சமாளிக்க முடியாமலேயே கஷ்டங்களுக்கு உள்ளாகின்றனர். எனவே இத்தகைய குடும்பங்களுக்கு அவர்கள் பெறும் வருமானம் நிரந்தரமில்லாதவை எனக் கருதி நிவாரண உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றமை ஆறுதலளிக்கின்ற விடயமாகும். இருந்தும் மக்களை நிவாரணங்களில் மட்டும் தங்கியிருக்கச் செய்யாது அவர்கள் வருமானம் பெறக்கூடிய தொழில் வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அரசினதும் அரசசார்பற்ற நிறுவனங்களினதும் பாரிய பொறுப்பாகும்.

## 1.4 வீட்டு வசதிகளில் ஏற்பட்ட மாற்றங்கள்

சுனாமியின் பின்னரான மீள்கட்டுமான நடவடிக்கைகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதே மிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமானதொன்றாகக் கொள்ளப்படுகின்றது. சுனாமிக்கு முன்னர் அதாவது 2004ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பிரதேச செயலகத்தின் புள்ளி விபரங்களின்படி சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் 4743 நிரந்தர வீடுகள் இருந்திருக்கின்றன. மேலும் 1073 அரை நிரந்தர வீடுகளும் 1759 ஓலைக்குடிசை வீடுகளும் இருந்துள்ளன. இதிலிருந்து வடமராட்சி வடக்கில் சுனாமிப் பிரதேசத்தில் வசித்த 8437 குடும்பங்களுக்கு 7575 வீடுகள் இருந்திருக்கின்றன. எனவே 862 குடும்பங்கள் வீடற்றவர்களாக இருந்திருக்கின்றனர் என்பது இப்புள்ளி விபரங்களிலிருந்து தெரிய வருகிறது.

வடமராட்சி வடக்கு பிரதேசத்தில் சுனாமிப் பிரதேசத்தில் இருந்த 7575 வீடுகளில் 5535 வீடுகள் சுனாமியால் பாதிக்கப்பட்டவை என்பது பிரதேச செயலக, மாவட்டச் செயலக புள்ளிவிபரங்களிலிருந்து ஏற்கனவே அறியப்பட்டவையாகும். இவ்வாறு பாதிக்கப்பட்ட வீடுகளில் 3508 வீடுகள் முற்றாக அழிந்தும் 2027 வீடுகள் பகுதியளவில் அழிந்தும் காணப்பட்டன. முற்றாக அழிந்த வீடுகளில் அரைநிரந்தர வீடுகளும் ஓலைக்குடிசை வீடுகளுமே அதிகமானவையாகும். சுனாமி மீள் நிர்மாணத்திட்டத்தின் பயனாக இவ்வீடுகள் இன்று நிரந்தர வீடுகளாக காட்சியளிக்கின்றன.

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மொத்தம் 5535 வீடுகளில் தற்போது 5392 வீடுகள் ஏதோ ஒரு வகையில் புதிதாக அமைக்கப்பட்டோ அல்லது திருத்தப்பட்டோ அல்லது வேலைகள் ஆரம்பிக்கப்பட்டோ உள்ளதை அறியக் கூடியதாக இருக்கின்றது. இதிலிருந்து 143 வீடுகளே இன்னமும் வேலைகள் தொடங்கப்படாமல் உள்ளன என்பதையும் அறிய முடிகிறது. எனவே சுனாமியால் பாதிக்கப்பட்டோரில் 97%மானோர் வீடமைப்புக்கான உதவியினைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க அம்சம் எனலாம்.

சுனாமி வீடுகள் அமைக்கப்படுகின்ற போது அதனுடன் இணைந்த அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்ற அரசாங்கத்தினுடைய கொள்கைக்கு அமைய (மீள்நிர்மாண அபிவிருத்தி முகவராண்மை (RADA), 2005) ஒவ்வொரு வீடுகளுக்கும் மலசலகூட வசதி, குடிநீர் வசதி, மின்சார வசதி என்பதையும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறான நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெருமளவுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தியிருப்பதனால் மக்களுடைய வாழ்க்கைத் தரமும் அதிகரித்துள்ளது என்ற முடிவுக்கு வருவதற்கு ஏதுவாகிறது. அதாவது சுனாமிக்கு முன்னர் மலசலகூட வசதிகளைப் பெற்றிருக்காத ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் சுனாமி வீடமைப்புத் திட்டத்தின் பயனாக ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு மலசலகூட வசதி கிடைத்தமை குறிப்பிடத்தக்கதாக இருக்கின்றது.

மின்சார வசதிகளைப் பொறுத்தவரை நிறுவனங்கள் பொறுப்பேற்று கட்டி முடித்த வீடுகளுக்கு வீட்டு உள் மின் இணைப்பு வேலைகள் ஏறக்குறைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்த்தியடைந்துள்ளன. வீட்டு சொந்தக்காரர் மூலம் உலக வங்கித் திட்டத்தில் கட்டப்படும் வீடுகளுக்கான வீட்டு உள் மின் இணைப்பு வேலைகள் 50% மான வீடுகள் வரை முடிந்துள்ளதாக பிரதேச செயலக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. கூட்டு நிதியிடல் மூலம் பொறுப்பேற்ற சர்வதேச லயன்ஸ் கழகம், யுஎன்ஹபிரெற் என்பவையும் 300க்கும் மேற்பட்ட வீடுகளை மின் இணைப்பு வேலைகளைச் செய்து முடித்துள்ளன. சுனாமித் திட்டத்தின் மூலம் 31.03.2008 வரை பூர்த்தி செய்யப்பட்டுள்ள வீடுகளுக்கு மின்சார இணைப்பு சேவைக்கட்டணமின்றி இலங்கை மின்சார சபையால் வழங்கப்பட்டு வருகின்றன.

சுனாமிக்கு முன்னர் இருந்த மலசலகூட வசதிகளும், மின்சார வசதிகளும் சுனாமிக்குப் பின்னர் கணிசமான அளவு அதிகரித்திருப்பதைக் காண முடிகிறது. மலசலகூடம் அமைக்கும் பணிகளும் மின்சார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பணிகளும் இன்னும் முற்றாக முடிவடையாத நிலையும் காணப்படுகின்றது. இவை யாவும் வீடுகள் பூரணப்படுத்தப்படுகின்ற போது முடிக்கப்பட வேண்டும் என குறிப்பிட்ட போதும் மூலப் பொருட்கள் பிரச்சினைகள் காரணமாக இவ்வேலைகள் சற்று தாமதமடைந்துள்ளமை தெரிகிறது. எனவே மலசலகூட வசதிகளும் மின்சார வசதிகளும் ஒவ்வொரு வீடுகளுக்கும் பூரணமாக இவ்வருடத்தினுள் செய்து கொடுக்க முடியும் என தொடர்புடைய நிறுவனங்கள் கூறி வருகின்றன. இவை கூறியது போல நிறைவேற்றப்படும் எனில் மக்களுடைய வாழ்வும் மேலும் முன்னேற்றமடையும் என்பதில் ஐயமில்லை.

முன்னர் வீட்டுவசதிகளை நிரந்தரமாகப் பெற்றிருக்காத குடும்பங்களும் தற்போது சுனாமித் திட்டங்களினால் வீடுகளையும் அடிப்படை வசதிகளையும் பெற்றிருப்பதனால் அவர்களுக்கு ஏற்பட்ட மேலும் சில பயன்களை பின்வருமாறு குறிப்பிடலாம்.

(அ) சிதறி வாழ்ந்த குடும்ப அங்கத்தவர்கள் இன்று ஒரே வீட்டில் சகல அடிப்படை வசதிகளுடனும் வாழ்ந்து வருதல்.

(ஆ) அகதி முகாம்களிலும் பொது இடங்களிலும் சேர்ந்து வாழ்ந்த குடும்பங்கள் தற்போது தனித்தனியாக இவ் இடங்களில் சுய கௌரவத்துடன் வாழ முடிகின்றமை.

(இ) தமக்கு நிரந்தர வீடு இல்லை என்ற மனக்கவலை நீங்கி மனச் சந்தோசத்துடனும் நிம்மதியாகவும் வாழ்ந்து வருதல்.

(ஈ) ஏழை – பணக்காரன், அகதி - இடம்பெயர்ந்தவர் என்ற பாகுபாடு இன்றி அனைவருக்கும் ஏறக்குறைய ஒரே தரமான வீடு கிடைத்தமை சிலருடைய தாழ்வு மனப்பான்மையிலிருந்து விடுபடக் கூடியதாக இருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ) நிரந்தர கூரையும், சீமெந்திலான தரையும், மின்சார வசதிகளும், தனி அறை வசதிகளும் கல்வி கற்பதற்கான சூழலை உருவாக்கியுள்ளமை.

எனவே சுனாமி வீடமைப்புத் திட்டம் மக்களிடையே மிகுந்த வாழ்க்கைத்தர மாற்றங்களையும் உயர்ச்சிகளையும் நம்பிக்கைகளையும் ஏற்படுத்தியுள்ளது என்றால் அது மிகையல்ல.

## 1.5 ஏனைய மாற்றங்கள்

(அ) சுனாமியின் பின்னர் இப்பிரதேசத்தில் பாடசாலைகளின் வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. சுனாமியினால் முழுமையாகப் பாதிக்கப்பட்ட யா/வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயம், யா/வல்வை றோ.க.த.க.பாடசாலை என்பன மீளப்புனரமைக்கப்பட்டு 80%மான வேலைகள் முடிவடைந்து பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றின் கட்டுமான வேலைகள் முற்றாக முடிவடைந்தால் முன்னரைவிட வசதியான கட்டடங்களையும் பௌதீக வளங்களையும் உடைய பாடசாலைகளாக இருக்கும். பகுதியளவில் பாதிக்கப்பட்ட ஏனைய பாடசாலைகளும் திருத்தியமைக்கப்பட்டதுடன் பௌதீக வளங்களும் அவற்றிற்குக் கிடைத்தன.

மேலும் அரசசார்பற்ற நிறுவனங்களும் சுனாமி மீள் நிர்மாணத் திட்டத்திற்காக பெற்ற நிதிகளையும் கல்வி அபிவிருத்திக்காக பெருமளவில் செலவிட்டுள்ளன. இது பாடசாலைகளின் பௌதீக வளங்களின் அபிவிருத்தியை மட்டுமன்றி மாணவர்களது கல்விச் செயற்பாடுகளையும் அதிகரித்துள்ளது எனலாம்.

சுனாமிக்கு முன்னரான காலங்களில் பாடசாலைக்குச் செல்வதில் அதிக அக்கறை காட்டியிராத மாணவர்கள் சுனாமிக்குப் பின்னர் பாடசாலைக்குச் செல்வதில் அதிக அக்கறை காட்டியிருந்தனர். வசதிகளற்ற வீடுகளில் இருந்தவர்களுக்கு வசதியான வீடுகள் கிடைத்தமை, பாடாசாலை கற்றல் உபகரணங்கள், பாடசாலை செயற்பாட்டிற்கான உதவிகள் கிடைக்கப் பெற்றமை, போசாக்குணவு பாடசாலைகளில் வழங்கப்பட்டமை என்பவை காரணமாக மாணவர்களுடைய வரவு அதிகரித்தது. அண்மிய கால 5ம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை, உயர்தர வகுப்பு பரீட்சை என்பவற்றில் வடமராட்சி மாணவர்கள் அதி சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(ஆ) சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் முன்பள்ளிகள் புதிதாக நிர்மாணம் செய்யப்பட்டு சிறப்பாக இயங்கி வருகின்றன. ஆரம்பத்தில் முன்பள்ளிகள் கிராமத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் கூட இருக்கவில்லை. இதனால் சிறுவயதுடைய (3 – 5) பிள்ளைகள் தமது ஆரம்பக் கல்வியை பயில்வதற்கு அயற்கிராமங்களுக்கு செல்ல வேண்டியிருந்தனர். இது பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும் அதிக கஷ்டங்களைக் கொடுத்தது. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது பெற்றோர் தமது பிள்ளைகளை நடந்து சென்று கூட்டிவரக்கூடிய தூரத்தில் முன்பள்ளிகள் அமைந்திருப்பது பெரும் வரப்பிரசாதம் என்று கூறலாம்.

(இ) சுனாமியினால் உளத்தாக்கம் அடைந்த பிள்ளைகளுக்காக சேவாலங்கா மன்றம், ஜெசாக், சாந்தியம், அஞ்சலியகம், சுனேரா நிறுவனம், சர்வோதயம் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் பல சிறுவர் கழகங்களையும் அமைப்புக்களையும் இப்பிரதேசத்தில் நிறுவி வருகின்றனர். இதன் மூலம் சிறுவருடைய உளத்தாக்கம் குறைந்து அறிவும் ஆற்றல்களும் அதிகரித்து வருவதனை நேரடியாக அவதானிக்க முடிகிறது. ஆண்டுதோறும் ஒவ்வொரு சிறுவர் கழகங்களும் தமது செயற்பாடுகளை மேடையேற்றி பெரும் விழாவாகக் கொண்டாடி வருகின்றனர்.

(ஈ) விளையாட்டுச் செயற்பாடுகளைப் பொறுத்தவரையிலும் பல முன்னேற்றங்கள் காணப்படுகின்றன. அரசாங்கத்தினாலும் அரச சார்பற்ற நிறுவனங்களாலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களில் விளையாட்டுச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்குப் பலவிதமான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல், பயிற்சிகளை வழங்குதல், போட்டிகளை நடாத்துதல், போட்டிகளில் பங்குபற்றுவதற்காகத் தென்பகுதிகளுக்கும் அழைத்துச் செல்லுதல் போன்ற செயற்பாடுகள் காணப்படுகின்றன. அண்மையில் ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டம் (UNDP) நிறுவனம் சேவாலங்கா மன்றத்தினூடாக சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராமங்களிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகளைத் தெரிவு செய்து விளையாட்டு உபகரணங்களை வழங்கி விளையாட்டுப் பயிற்சி அளித்தது மட்டுமன்றி அவர்களுக்கு சுயதொழில் விருத்திக்காக பல்வேறு செயற்திட்டங்களையும் வகுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(உ) அரசாங்கமும் அரசசார்பற்ற நிறுவனங்களும் சுனாமியால் பாதிக்கப்பட்ட பெண்களுக்காக பல்வேறு வகையான செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன. நெக்டெப் திட்டத்தின் கீழ் பெண்களின் வாழ்வாதாரத் திட்டங்களுக்காக 17 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு 12 மில்லியன் ரூபா பகிர்ந்தளிக்கப்பட்டு அவை சுழற்சி முறைக் கடனாக வழங்கப்பட்டு வருகின்றன. சேவாலங்கா மன்றம், ஜெசாக், சாந்தியம், மெதடிஸ்த திருச்சபை, போரூட் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களும் பெண்களுக்கான சுயதொழில், உளவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதால் பெண்களை தலைமைத்துவமான குடும்பங்களின் வாழ்வு நிலையில் முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

(ஊ) சுனாமி மீள் கட்டுமான நடவடிக்கைகளுக்காக கிராம மட்ட நிறுவனங்கள் புனரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க சிறப்பான அம்சமாகும். ஆரம்ப காலங்களில் ஏனோ தானோ என இயங்கி வந்த நிறுவனங்களும் செயற்பாடுகள் எதுவுமின்றி நீண்ட காலம் கைவிடப்பட்டிருந்த சங்கங்களும் இன்று சுனாமி மீள் நிர்மாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டங்களின் அவசியத்திற்காக புனரமைக்கப்பட்டுள்ளன. மேலும் கிராமத்தில் இல்லாதிருந்த சங்கங்கள் சிலவும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் அரச சார்பற்ற நிறுவனங்கள் வீடமைத்தபோது ஒப்பந்தகாரர் மூலம் அவ்வேலை நிறைவேற்றப்பட்டது. இந்நடவடிக்கையில் பல தாமதங்கள் இருந்ததால் தற்சமயம் வீடமைப்புத் திட்டத்தில் ஈடபடும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்படி சமூக மட்ட நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து மக்களின் கணிசமான பங்களிப்புடன் வீடமைப்புத் திட்டங்களை மிக விரைவாக நிறைவேற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தற்போது நெக்டெப் திட்டத்தினூடாக மேற்கொள்ளப்படுகின்ற உட்கட்டுமான வேலைகள் அனைத்தும் கிராம மட்ட பொது நிறுவனங்களாலேயே நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதில் குறிப்பாக மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரின் திறமை மிக்க செயற்பாடுகளினால் தொண்டைமானாறு, கெருடாவில், வல்வெட்டித்துறை, அல்வாய் வடமத்தி, வியாபாரிமூலை, தும்பளை ஆகிய இடங்களில் உட்கட்டுமான வேலைகள் துரிதமாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

(எ) கிராம மட்ட நிறுவனங்கள் புனரமைக்கப்படுகின்ற போது வங்கிப்பழக்கமும் அதிகரித்துள்ளது எனலாம். அரசாங்கமும் அரசாங்க சார்பற்ற நிறுவனங்களும் நிறுவனங்களுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களை காசோலைகளினூடாகவே மேற்கொள்கின்றன. இதனால் நிறுவனங்கள் யாவும் தமது பெயர்களில் வங்கிக் கணக்குகளை ஏற்படுத்தி காசோலை நடவடிக்கைகள், சேமிப்பு, கடன் வழங்கல் போன்றனவற்றையும் மேற்கொண்டு வருகின்றன.

(ஏ) சுனாமியின் பின்னரான மீள் நிர்மாணப் பணிகளில் நிலையானதும் குறிப்பிடத்தக்க அளவிலானதுமான ஓர் நேர்த்தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக மனித வள ஆற்றல் விருத்தி மற்றும் பங்குபற்றல் செயன்முறைகள் என்பவற்றிற்கான பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்படி பயிற்சி நெறிகள் வடமாகாண தொழிற்துறைத் திணைக்களம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், சர்வோதயம், அறவழிப் போராட்டக்குழு, ஊற்று நிறுவனம் என்பனவற்றால் இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டன. இவற்றிற்கான அனுசரணையை இலங்கை அரசாங்கமும் கனேடிய உலக பல்கலைக் கழக சேவை (WUSC) நிறுவனமும் மேற்கொண்டுள்ளன. இவற்றிற்கு மேலதிகமாக NECCDEP, NEIAP, NECORD, NEHRP, NEERP திட்டங்களின் ஊடாகவும் சேவாலங்கா மன்றம், IOM, Care, Caritas போன்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாகவும் மனிதவள ஆற்றல் விருத்திக்கான பயிற்சித் திட்டங்கள் இடம்பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஐ) சுனாமி மீள் நிர்மாணச் செயல்திட்டங்களில் மக்கள் பங்களிப்பு மிக முக்கியமானதாக இருந்தது. வீடுகள் அமைக்கப்படுகின்ற போதிலும் பொதுக் கட்டடங்கள், சந்தைகள், சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகள், மலசலகூடங்கள் என்பன அமைக்கப்படுகின்ற போதிலும் குறைந்தது 5%த்திலிருந்து ஆகக் கூடியது 20% வரை மக்கள் தங்கள் பங்களிப்பாக மனித உழைப்பினை வழங்கியிருக்கின்றனர். இவ்வாறான உழைப்புக்கள் பங்களிப்பாக வழங்கப்பட்டமை இதுதான் முதல்முறையாக இல்லாவிட்டாலும் மக்கள் அனைவருக்கும் விழிப்புணர்வையும் சமூகப் பற்றையும் ஏற்படுத்திய நிகழ்வுகள் சுனாமியின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மீள்கட்டுமான நடவடிக்கைகளிலேயே ஏற்பட்டுள்ளது எனலாம்.

**முடிவுரை :-**

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் சுனாமியின் தாக்கத்திற்கு உட்பட்ட பின்னர் இலங்கை மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்கள், உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் அதன் பொருளாதாரமும் மக்களின் ஜீவனோபாயங்களும் மீளக் கட்டியெழுப்பப்பட்டு வருகின்றன. இதுவரை இந்நோக்கங்களுக்காக செலவிடப்பட்ட தொகை ஆகக் குறைந்தது 3106.5 மில்லியன் ரூபாய்கள் ஆகும். இவைகளைக் கவனிக்கும் போது சுனாமியானது அழிவுகளையும் அவலங்களையும் தந்திருந்தாலும் இப்பிரதேசத்தின் வரலாற்றில் என்றும் கண்டிருக்காத பெருந் தொகையான நிதியினை வாரி வழங்கி இத்திட்டத்தின் பயனாளிகளிடையே குறிப்படக் கூடியளவு சமூக பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தி ஒட்டு மொத்தமாக சுனாமியினாலும் யுத்தத்தினாலும் பாதிப்படைந்த மக்களிடையே எதிர்காலம் பற்றிய நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளதாகக் கொள்ளலாம்.

**உசாத்துணை நூல்கள் :-**


1. சுனாமிக்குப் பின்னர் இலங்கையில் ஜீவனோபாயங்கள் : "இன்னும் சிறப்பாகக் கட்டியெழுப்புதல்". சர்வதேச தொழிலாளர்கள் அமைப்பு, கொழும்பு, 2006.
2. Jaffna / Kilinochchi Districts Divisional Livelihood Developments Plans, RADA Livelihood Unit, Colombo, 2006.
3. RADA, Tsunami – related projects, Jaffna District report, Colombo, 2006.
4. Welcome to Jaffna, "Tsunami Tidal Wave", Disaster in Jaffna District on 26.12.2004, District Secretariat, Jaffna, 2005.
5. "Tsunami Tidal Wave" – Point Pedro Division, Situation Report 2005 – 2007, Divisional Secretariat, Point Pedro.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் அகில இலங்கை ரீதியாக அரசாங்க ஊழியர்களுக்கு இடையே 2007 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டியில் 2ம் இடம் பெற்ற கவிதை



**திரு. கி. கவிதரன்,**
நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்,
வடமராட்சி வடக்கு
பிரதேச செயலகம், பருத்தித்துறை.

# அரச சேவையில் காலத்தின் தேவை...

அரசியலும் அரசாங்கமும் மக்களுக்காகவேயன்றி
மண்ணும் மக்களும் ஆட்சிக்கல்ல
கட்சி மாறிக் கதிரை மாறினாலும்
நாட்டு மக்கள் தேவை நிறைவேற வேண்டும்!

அடுத்தவனைக் குறை கூறி
ஆட்சியைத் தக்க வைக்க வேண்டாம்
நிர்வாகம் என்பது நினைத்தவன் நினைத்தபடி செய்வதற்கல்ல
பொது மக்களின் தேவை பங்களிப்பு வேண்டும்!

பொருளாதார சமூக மேம்பாடு முதற்கண் தேவை
இந்தத் தேவையில் இனப்பாகுபாடு எதுவும் வேண்டாம்
நாடு சமூகம் என்பது ஏழை பணக்காரர் கலந்த இடமே
கிராமத்து ஏழைக்கும் நகரத்துப் பணக்காரனுக்கும்
அரசின் கொள்கையில் அபிவிருத்தியில் பாகுபாடு வேண்டாம்
மேலிடத்து ஆணையில் செயல்படும் கீழ்மட்டத்தோன்
பொதுமக்களின் நெருங்கிய தொடர்புடன் செயற்பட்டால்
எந்த திட்டமும் வெற்றியளிப்பது நிச்சயமே.

பொதுமக்களுடன் நெருங்கிய தொடர்பில்
கிராம சேவகருக்கே முதல் இடம் உண்டு
கிராமத்தின் கண்கள் கிராம சேவகர்களே!!
இவர்கள் அரசின் பிரதிநிதியானாலும்
தமது பிரிவில் உள்ள மக்களின்
தேவை நிறைவேற்றும் தொண்டனாக மாற வேண்டும்!

அபிவிருத்தியானது கல்வியில், உணவுத்திட்டத்தில், வாழ்விட வசதியில்,
சுகாதாரத்தில், அடிப்படைவசதி அனைத்திலும் வேண்டும்!
அடிப்படை வசதிகள் அற்று வாழும் கிராம மக்களை
தெரிவு செய்யும் முறையில் குளறுபடிகள் வேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழை, விதவை, இயலாதோருக்கு
ஏற்ற இடம் கொடுக்க வேண்டும்!
அயல்நாட்டு உதவியில் கிடைக்கும் பணத்தை
அபிவிருத்திப்பணிக்கே அர்ப்பணிக்க வேண்டும்!

புதிதாக வந்த புதிய அரசு
புதுமை செய்ய புறப்பட்ட போது
புதிய மாற்றமாம் நேர மாற்றம்
நேரத்தில் மாற்றம் வேண்டாம்
மக்கள் வாழ்வில் வேண்டும் மாற்றம்

பதற்ற வாழ்வு மாற வேண்டும்
பசி பட்டினி ஒழிய வேண்டும்
நாட்டு நிலைமையை கண்ணுற்று
அயல்நாடுகள் செய்த உதவியில்
பொதுக்கட்டமைப்பின் புனர்நிர்மாணத்தால்
குடிசையில் வாழ்ந்த ஏழையின்
கற்பனை வீடு நிஜவீடானது
மலசலகூட வசதி மக்களை
மனம் குளிர வைத்தது.

இடிந்த கோவிலும் தூர்ந்த குளமும்
புனர்த்தாரணம் செய்து
பொலிவுற்று ஏற்றம் பெறுகிறது
கோயிலும் குளமும் புனர்த்தாரணம் செய்தாலும்
முக்கிய தேவையாம் விவசாயம் கல்வியிலும் கவனம் வேண்டும்.

நாட்டின் முதுகெலும்பு விவசாயமே
முதுகெலும்பு அற்றால் முற்றுமே ஊனம்
நிறைவாழ்வு வாழ நிர்வாக நீதியே எமக்கு வழி காட்டும்
கல்விச் சேவையில் கருத்து வேறுபாடு வேண்டாம்.

கல்விச் செல்வமே மேலான செல்வம் என்று
சொல்லித்தான் தெரிய வேண்டும் என்றில்லை
அபிவிருத்திப் பணியில் இதற்கே முதல் இடம் வேண்டும்
நிறைவாழ்வு வாழ நிர்வாக நீதியே எமக்கு வழி காட்டும்
காலத்தின் தேவையை கருத்தில் கொண்டு
அரசும் நிர்வாகமும் சேவையாற்ற வேண்டும்!
சிந்திப்போம் செயற்படுவோம்
வெற்றி நமதே!!!!....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் அகில இலங்கை ரீதியாக அரச அலுவலர்களுக்கு இடையே 2007ல் நடாத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டியில் 3ம் இடம் பெற்ற சிறுகதை**



**திரு. சி. உதயகுமார்**
முகாமைத்துவ உதவியாளர்,
வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம்,
பருத்தித்துறை.

# முன்மாதிரியாய்.....

"கந்தையா வாத்தியார் செத்துப் போனாராம்.... புளியடி வீட்டில் ஒரே சனம்...." என்று மூச்சிரைக்க சொல்லிக் கொண்டு ஓடிவருகிறான் ஒரு சிறுவன்.

இந்தச் செய்தி கேட்டதும் "இடி விழுந்த பனை மாதிரி" உடனேயே முகம் கருகிப் போனார் அந்த வீட்டு எஜமானர். அவர் தான் அந்தச் சிறுவனின் தந்தை கந்தையா ஒரு வாத்தியார் என்பது மட்டும்தான் அந்தச் சிறுவனுக்குத் தெரியும்.

அவர் எப்படிப்பட்டவர், எப்படி உள்ளம் படைத்தவர் எல்லாமே தெரிந்த சமூகத்தில் தான் சிறுவனின் அப்பாவும் வளர்ந்து வந்தவர்.

தான் ஒரு பிரதேச செயலராக வருவதற்கு காரணமாக இருந்தவர் கந்தையா வாத்தியார்தான் என்று, அடிக்கடி தனக்குள்ளேயே நினைத்துக் கொள்ளுவார். அதுமட்டுமல்லாமல் நேரம் கிடைக்கும் போதெல்லாம் வாத்தியாரின் வீடு சென்று அவரின் சுகநலம் விசாரிப்பதோடு, அவருடன் சேர்ந்து கூடமாட உதவிகளும் செய்து கொடுப்பார்.

"உள்ளத்தில் நல்ல உள்ளம் கந்தையா வாத்தியார் என்றால்...."
"நன்றிமறப்பது நன்றன்று..."
என்பதற் கிணங்க கனகேந்திரன் டி.எஸ். ம் வாழ்ந்து வந்தார்.

கந்தையா வாத்தியார் ஊரறிந்த தமிழாசிரியர். இலக்கணம், இலக்கியம் இவையிரண்டையும் கற்பிக்கும் விதமே ஒரு தனிதான்.

"தமிழ் படித்தால் உவரிட்டதான் படிக்க வேணும். வேறொருத்தரும் தேவையில்லை'' என்றுதான் அவரிட்ட படிக்கிற பிள்ளைகள் கதைத்துக் கொள்ளுவினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடா வருடம் ஊர்க் கோவிலில் நடைபெறும் இரவு நேர நிகழ்ச்சிகளில் "கம்பராமாயணம்", "மகாபாரதம்", "மாதவி மாண்பு" போன்ற தலைப்புகளில் தொடர் சொற் பொழிவுகள் வழங்கி அவ்வூர் மக்களால் நன்மதிப்புக்குள்ளானவர்.

"மேடையிலே வாய்ச் சொல் வீரராகவும், வாழ்க்கையின் நடையிலே தாழ்வான போக்கர்கள்" எனவும் வாழ்வோர் மத்தியில், தன் வாய்ச்சொல் பேச்சின்படியே தன் பின்வரும் சந்ததியினருக்கு ஒரு வழிகாட்டியாக வாழ்ந்து வந்தவர்.

இத்தனை பெரும் குணம் படைத்த உத்தம சீலரிடம் தாம் கல்விகற்றது ஒரு வரப்பிரசாதமென அவரிடம் கல்விகற்ற அனைவருமே நினைத்துக் கொள்ளுவினம்.

கனகேந்திரன் டி.எஸ் ஒரு சில கணத்திற்குள், வாத்தியாரின் எண்ண நினைவுகளை நினைத்துப்பார்த்து சுய நினைவிற்கு வந்தவர் ஓடோடிச் செல்கிறார். வாத்தியாரின் வீடு அண்மித்ததும் விம்மல் போட்டு அழத் தொடங்கினார். அவரின் சாவு அந்த ஊரிற்கே ஒரு பேரிழப்பாய் இருந்தது. அதனால் தான் அவரின் சாவு அறிந்த மறு கணமே அந்த ஊரே புளியடி வீட்டுக்கு வந்து விட்டது. சின்னஞ் சிறுசுகள் முதல் பெரியர்வர் வரை அனைவருமே அழுது புலம்பியபடி இருக்க சோகமயமானது அந்த ஊர்.

கனகேந்திரன், கந்தையா வாத்தியாரிடம் படித்த காலத்தில் மிகவும் ஏழ்மையான நிலையிலேயே படித்தவர். கறுப்பு நிற காற்சட்டையும், வெள்ளைநிறச் சேட்டும் கனகேந்திரனின் நியமமான அடையாளக்குறிகளாக எப்போதும் இருக்கும்.

பள்ளிக்கூடம் போய் வந்ததும் காற்சட்டையை நீரிலே அலம்பி, அது உலரும் வரை காத்திருந்து, உலர்ந்தும் உலராததுமாக இருக்க அதை உடுத்துக் கொண்டு வாத்தியார் வீட்டுக்கு ஓடிவிடுவான்.

கனகேந்திரனின் கெட்டித்தனமும், அமைதியான சுபாவமும், அவனின் அடக்கமும், இவையெல்லாம் வாத்தியாருக்கு மட்டுமல்ல, வாத்தியாரின் மனைவி, பிள்ளைகளுக்கும் பிடித்திருந்தது.

வகுப்பு முடிந்ததும் வீட்டின் பின் வளவில் நிற்கும் புளியமரத்திலேறி புளியம்பழம் பிடுங்கும் மாணவர் ஒருபுறம் இருக்க, கனகேந்திரனோ வாத்தியாரிடம் கீழ்ப்படிந்து மேலதிக சந்தேகங்களை கேட்டு தெளிந்து கொண்டு இருப்பான்.

கனகேந்திரனின் அப்பா தோட்டம் கொத்துதல், எருதுகொண்டு வயலினை உழுதல் போன்ற கடினமான கூலி வேலைகள் செய்து குடும்பத்தைக் காப்பாற்றிவந்தார். அவரின் கடினமான உழைப்பு சாப்பாட்டிற்கே அரைகுறையாகத்தான் போதுமானதாக இருக்கும். இதனால் கனகேந்திரனும் இடையிடையே தன் தகப்பனுடன் கூலி வேலைக்கு போய் வருவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகேந்திரன் பத்தாம் வகுப்பு படிக்கும் போது அவனின் தகப்பன் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் படுத்து இறந்து போனார். இனி தன்னால் கல்வியைத் தொடர முடியாது என்ற நிலையில் தகப்பன் செய்து வந்த அதே கூலி வேலைகளை கனகேந்திரன் செய்து வந்தான். இதனால் தன்னையும், தன் தாய், தன் மூன்று சகோதரிமார், மற்றும் தன் கடைசித் தம்பியையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பான நிலைக்குத் தள்ளப்பட்டான்.

"கடின உழைப்பிற்கு நிகர் எதுவுமில்லை" என்பது போல கனகேந்திரன் சுறு சுறுப்பாக உழைத்து வந்தான். இப்போதெல்லாம் கனகேந்திரன் வழமைக்குமாறாக அதிகாலை ஆறுமணிக்கே வேலைக்குப் புறப்பட்டு விடுவான். அந்தப்பொழுதில் அவனின் தாயாரினால் வழங்கப்படும் பழங் கஞ்சியும், ஒன்றிரண்டு பனாட்டுத் துண்டுகளுமே காலை பத்துமணி நேரம் வரை அவனின் உடலினை இயக்கிக் கொண்டிருக்கப் போதுமானதாக இருக்கும். இந்தச் சின்ன வயதில் எத்தனை துன்பங்கள், எத்தனை பொறுமைகள், எத்தனை பொறுப்புக்கள் இவை எல்லாவற்றையும் அவனால் எப்படித்தான் சமாளிக்க முடிந்தது. கந்தையா வாத்தியார் வாழ்ந்த ஊர் என்பதால், என்னவோ ஊரவரும் அவன் மேல் இரக்கப்பட்டு சில பல உதவிகளையும் செய்து வந்தனர்.

ஒரு நாள் கந்தையா வாத்தியார் பள்ளிக்கூடம் விட்டு தன் வீடு போய்க்கொண்டிருக்கையில், **"தோளில் மண் வெட்டியும், உடம்பை, மறைக்க கிழிந்த சேட்டும், அரையில் கட்டப்பட்ட அழுக்கேறிய வேட்டியுமாக.... வியர்வைத் துளிகளால் நனைந்து போய்"** கனகேந்திரன் வந்து கொண்டிருப்பதை வாத்தியார் கண்டு விட்டார்.

வாத்தியார் கண்டு கொண்டதை பார்த்துவிட்ட கனகேந்திரனும் உடனேயே மண்வெட்டியை தோளில் இருந்து இறக்கி, சண்டிக் கட்டு கட்டிய வேட்டித் துண்டை அவிழ்த்து, குனிந்து வேட்டித் தலைப்பால் தன் முகத்தைத் துடைத்துக் கொண்டு பக்குவமாய் ஒரு ஓரம் நின்று விட்டான்.

வாத்தியார் கனகேந்திரன் அருகில் சென்று "கனகேந்தி உன்ர வீட்டை நான் வர நினைச்சன்...." என்று கதையைத் தொடங்கினார்.

"இல்லை சேர்..... நீங்கள் சொல்லிவிட்டிருந்தால் நானே வந்திருப்பன்...." என்று வாத்தியார் மீது அவன் வைத்திருந்த மரியாதைப்பக்குவத்துடன் பதில் சொன்னான் கனகேந்திரன்.

"நீ படிக்க வேணும் என்றுதான் நானும், என் மனைவி பிள்ளைகளும் நினைக்கிறம். உது விசயமாக என் மகன் என்னோடு அடிக்கடி கதைக்கிறவன்...." என்று வாத்தியார் கூறி முடிக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஓம் சேர் நான் படிக்க வேணும் என்றுதான் என் அம்மாவும் அடிக்கடி சொல்லுவா.... ஆனால்..... ஆனால் சேர்......” என இழுத்தான் கனகேந்திரன்.

“உன் நிலமை எனக்கு நன்கு விளங்குது முதலில் நீ படி. வேண்டிய உதவி எல்லாம் நான் செய்யிறன். நேரம் கிடைக்கும் போதெல்லாம் நீ வேலைக்குப் போ....”என்று தன் விருப்ப எண்ணங்களை மன வஞ்சகம் எதுவுமின்றி சொல்லி விட்டார் வாத்தியார்.

வேறெந்தப் பேச்சுமின்றி ஆமெனத் தலையசைத்து, வாத்தியாரை வணங்கி விட்டு தன் வீடு போய் விட்டான் கனகேந்திரன்.

வாத்தியாரின் நல் அரவணைப்புக் கிடைக்கவே கனகேந்திரனும் படிக்கத் தொடங்கினான். நேரம் கிடைக்கும் போதெல்லாம் இடையிடையே வேலைக்கும் போய் வந்தான்.

ஆண்டுகள் பல உருண்டோடின....

வாத்தியாரின் நல் விருப்பம் போல, அவரின் நல் எண்ணங்கள் போல கனகேந்திரனும் பல்கலைக்கழகம் சென்று முகாமைத்துவப் பிரிவிலே சிறந்த பட்டதாரி மாணவனாக வெளியேறினான். படிப்பு முடிந்து வெளியேறிய கையோடு எஸ். எல். ஏ. எஸ் பரீட்சை எடுத்து அதிலும் சிறந்த பெறுபேறு பெற்று சிறு வயதிலேயே அந்த ஊருக்குச் சொந்தமான பிரதேச செயலகத்திற்கு பிரதேச செயலராக நியமனம் பெற்று வந்தார். அதுமட்டுமலலாமல் தன் மூன்று தங்கைமாருக்கும் நல்ல நல்ல இடங்களில் திருமணம் செய்து வைத்து, தானும் ஒரு பெண்ணினைக் கரம்பிடித்து சிறப்புடனேயே வாழ்ந்து வந்தார். இவ்வேளையில்தான் கனகேந்திரனின் கடைசித் தம்பியும் கணித பிரிவில் பாஸாகி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கணனிப் பொறியியல்ப் பிரிவிலே படித்து வந்தான்.

இத்தனை நிகழ்வுகளையும் ஒரு கனவு போல் அல்லாமல் நனவாக நடந்து முடிந்ததை நினைத்து ஏங்கித் தவிப்பார். வாத்தியாரை நினைந்து ஆனந்தக் கண்ணீர வடிப்பதுமுண்டு.

வாத்தியாரின் புகழுடல் அந்த ஊரின் மத்தியிலுள்ள வாசிகசாலையின் முகப்பிலே மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இருந்தது. அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பாடசாலை வாரியாக நிறைந்த இரங்கலுரைகள் வாத்தியாருக்காக வாசிக்கப்பட்டன. உரை நிகழ்த்துவோரில் சிலர் வார்த்தைகளைச் சொல்ல முற்படும்போதே கண்ணீருருகி அழுதுவிடுகின்றனர்.

உரை நிகழ்த்துவோரின் உரை கேட்டு கூட்டத்திலுள்ளோரும் ஓ.... என அழுதுவிடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா வாத்தியாரின் மரணச் சடங்கில் வாசிக்கப்படும் ஒவ்வொரு உரையும், அவரின் உண்மை நிலையினையும், பெருமையினையுமே சுட்டி நின்றன.

இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய கனகேந்திரன் டி.எஸ் உரை நிகழ்த்தும் போது தான் நடந்து வந்த பாதையினை அடிக்கடி நினைவு கூர்ந்து அழுகையோடு உரைநிகழ்த்திக்கொண்டிருந்தார்.

"நான் பயணம் செய்த வாழ்க்கையெனும்பாதையிலே முட்களும், கூரிய கற்களுமே நிறைந்துகாணப்பட்டன. அந்தப் பாதையை செப்பனிட்டு நல்ல நிலையிலே திட்டமிட்டு வழிவகுத்தவர் எங்கள் கந்தையா வாத்தியார்தான். அப்படியொரு ஜீவன் இருந்திருக்கா விட்டால் எங்களூர் பல கல்விமான்களை இழந்திருக்கும். இவர் எங்களூருக்குக் கிடைத்த மாபெரும் புதையல். இப் புதையலை இந்த ஊரவரெவரும் மறந்து விட முடியாது...." என்று பேசி முடித்ததும் அந்த ஊரே பெரியதொரு சோகமாய்ச் சோர்ந்திருக்க வாத்தியாரின் பூதவுடல் ஊர்வலமாய் எடுத்துச் செல்லப்படுகின்றது.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

கனகேந்திரன் டீ.எஸ் இன் வருகையால் அந்த அலுவலக உத்தியோகத்தர்களும், ஊழியர்களும், எந்தவித மன சஞ்சலமுமின்றி தங்கள் தங்கள் வேலைகளை ஒழுங்கான முறையிலே செய்தும், பொதுமக்களின் அவசர வேவைகளை நிவர்த்தி செய்தும் வந்தனர்.

கனகேந்திரன் டீ.எஸ் எவ்வளவு தங்கமானவர். மக்களோடு அன்பாக கதைத்து பழகக்கூடியவர். என்று அந்தப் பிரதேச மக்கள் அனைவருமே கதைத்துக் கொள்கின்றனர். வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு நல்ல முடிவுகாண நாம் நல்ல பல சிந்தனைகளை வளர்த்துக் கொள்வது அவசியம் என்பார்கள். அதுபோல கனகேந்திரன் டீ.எஸ் ன் மனபாவமும் நன்கு வளர்ந்திருந்தது. அதன் உச்ச பயனாக அலுவலக உத்தியோகத்தவர்களின் கடமை, கண்ணியம், கட்டுப்பாடான செயற்பாடுகள் சுட்டி நின்றன.

அறிவில் தெளிவு, உயர்ந்த புத்தி, சீரிய சிந்தனை புதிய கருத்தைக் கேட்கும் பரந்த மனப்பாங்கு, நினைவாற்றல் இவையாவும் கந்தையா வாத்தயாரிடமிருந்து கனகேந்திரன் டீ.எஸ்க்கும் இயல்பாகவே தொற்றி இருந்தன.

கனகேந்திரன் டீ.எஸ் வாழும் அந்த ஊரில் பட்டதாரியான உத்தியோகத்தர்கள் நிறையப் பேர் உருவானார்கள். மருத்துவ பிரிவு, பொறியியல்ப் பிரிவு போன்ற துறைகளிலே தெரிவாகி அந்த ஊரின் பெருமையை பறைசாற்றிக் கொண்டு இருந்தனர்.

கந்தையா வாத்தியார் வாழ்ந்த காலத்தில் இரகசியமாக, கௌரவமான முறையில் குடித்தவர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் இன்று அந்த ஊரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிப்பவர்களாரும் இருக்கவில்லை. அந்த ஊரில் ஒரு நன்மை தீமை என்றால் படித்தவர்கள் முதல்' பாமரர் வரை அனைவரும் ஒன்று சேர்ந்து அத்தனை உதவிகளையும் செய்து முடிப்பர்.

இந்தமாதிரியான வாழ்க்கை முறை அயலூரவர்க்கும், அதையடுத்துள்ள ஊரவர்க்கும் ஒரு ஆச்சரியத்தையும், வித்தியாசமான போக்கையும் உண்டு பண்ணின. அவ்வூர் மக்கள் போலவே தாமும் பழகிக் கொள்ள வேண்டும் என்றும் நினைத்துக் கொண்டனர்.

"ஊர் நமக்கு என்ன செய்தது என்று கேள்வி கேட்காமல், ஊருக்காக உழைப்பவர்களே உயர்ந்தவர்களாவர்" என்று கந்தையா வாத்தியார் வாழ்ந்த முறையும் வழிகாட்டிய விதமுமே அந்த ஊர் மக்களை இப்படி வாழ வைத்தது. இனி கனகேந்திரன் டீ.எஸ் சினால் வழிநடத்தப்படும் அப்பிரதேசமே மற்றைய பிரதேசங்களுக் கெல்லாம் ஒரு முன்மாதிரியாய்......

## அடுப்புநாச்சி வழிபாடு

யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு வீட்டிலும் அடுப்புநாச்சி என்னும் தெய்வத்தை வணங்குவர். இவ்வழிபாடு போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலத்தில் தொடங்கியது. ''நல்ல நாள் பெருநாள்'' வந்தால் வீட்டிலே தேடும் பலகாரத்தில் முதற் பலகாரம் ஒவ்வொன்றையும் அடுப்பு நாச்சிக்கென நேர்ந்து அடுப்புக்குட் போடுவர். அதன் பின்னரே ஏனைய பலகாரங்களைத் தமது தேவைக்கெடுப்பர். கலியாண வீடு முதலிய கொண்டாட்டங்களுக்கும் பணியாரங்கள் தேடும் பொழுதும் அவ்வாறே செய்வர். வீட்டிலுள்ள சிறுகுழந்தைகளுக்கு வாயவிச்சல் போன்ற வருத்தங்கள் வந்தாலும், கஞ்சி வடிக்கும் பொழுது அது உடம்பில் ''ஊற்றுப்பட்டாலும் அடுப்பு நாச்சிக்கு, சமைக்கும் பொருட்கள் யாவற்றையும் அடுப்பிற்கு முன்னே வெற்றிலை பாக்குடன் வைத்துப் படைப்பர். படையல் மாற்றும் பொழுது படைத்த பொருட்கள் ஒவ்வொன்றிலும் சிறிது கிள்ளிக் கிள்ளி அவ்வடுப்பிற்குட் போடுவர். அதன் பின்னர் அங்கு செம்பில் வைக்கப்பட்டிருக்கும் தண்ணீரை படையற் பொருட்களின் மேலே தெளித்துப் படையல் மாற்றுவர். வருத்தம் வந்து மாறிய ஒருவருக்குப் பத்தியம் வைக்கும்பொழுது அடுப்பு நாச்சிக்கு நேர்ந்து நுணாவி அப்பத்தியச் சோறு கறியில் ஒரு சிறிது கிள்ளி அடுப்பிற்குட் போடுபவர்.

***அமரர். பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்துபோகும் தெருமூடி மடங்களும், யாழ்ப்பாணத்தமிழரது பண்பாட்டு விரிசலும்

**பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா,**
வரலாறு - தொல்லியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

யாழ்ப்பாணத்துத்தமிழரின் தனித்துவமான பண்பாட்டுக்குறிகாட்டிகள் பலவாகும். அவற்றுள் தெருமூடிமடங்களும் ஒருவகையினதாகும். எம் மூதாதையரது மிகநீண்ட கால்நடைப்பயணங்களின்போதும், வண்டிப்பாரங்களின் இராப்பயணங்களின்போதும் இத்தெருமூடிமடங்கள் இளைப்பாறும் மையங்களாகவும், பசிநீக்கும் இராச்சிற்றுண்டி விடுதிகாளகவும், திருடர் தொல்லையிலிருந்து பயணிகளைக்காக்கும் காவலரண்களாகவும் தொழிற்பட்டிருந்தமையினைக் காண்கின்றோம். கடல் முகப்புத்தளங்களை மிகவும் நெருக்கமாகக் கொண்டிருந்த யாழ்ப்பாணத்தீபகற்பத்தில் இத்தெருமூடிமடங்கள் அமைக்கப்பட்டதற்கான காரண - காரிய அடிப்படைகள் பல எம்மூதாதையரினால் வகுக்கப்பட்டிருந்தன. பாய்மரம் செலுத்தி திரைகடலோடி, பொருட்களை ஈட்டி வந்த திராவிடப்பெருங்குடி மக்களுக்கு கடல்முகப்புத்தளங்களில் அமைக்கப்பட்டிருந்த பெருமடங்களே (கிட்டங்கிகளே) முதற்தங்குமடங்களாக விளங்கின. இக்கடல்வழித் தங்குமடங்களிலிருந்து வாணிபப்பொருட்களை ஏற்றிச்செல்வதற்காக வருகைதரும் வண்டில் கூட்டங்கள் இளைப்பாறிச் சற்று பசிதணித்து, திருடர்களிடமிருந்து வணிகப்பொருட்களைக் காப்பாற்றி, உள்நாட்டுச்சந்தைகளுக்கும், அல்லங்காடி, மாலைச்சந்தை, வாரச்சந்தை, இரவிக்கைச்சந்தை, சத்திரச்சந்தை, சாண்டார்சந்தை போன்றவற்றிற்கும் கொண்டு சென்று விற்றுப்பொருளீட்டும் வாழ்க்கைமுறைக்கு இட்டுச்சென்ற வகையில் எம்மவருக்கு இத்தெருமூடிமடங்களே உயிரோட்டமான வழ்வாதாரங்களாகச் சேவையாற்றியிருக்கின்றன. அந்தவகையில் கிட்டங்கிகளும், தெருமூடிமடங்களும் யாழ்ப்பாணத்தின் வாணிபப்பண்பாட்டின் ஒரே தொழிற்பாட்டிற்குரிய இருவேறு வடிவங்களாக எமது மரபில் அமைந்திருந்தனவென்றால் அக்கூற்று தவறானதாக அமையாது. இச்சிறு ஆய்வுக்குறிப்புரையின்கண் யாழ்ப்பாணத்திலுள்ள தெருமூடிமடங்களைப்பற்றிய சிறுகுறிப்புக்களை எதிர்கால ஆய்வின்பொருட்டு ஓர் அறிமுகவுரையாகக் கொடுப்பதே நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

## தெருமூடி மடங்களின் தோற்றப்பின்னணி :-

அம்பலம் எனக்குறிக்கப்படுகின்ற வீதியோரத்தங்குமடங்களும் ஆவுரஞ்சிக்கற்களும் கூபங்களும் (கிணறுகளும்) யாழ்ப்பாணத்தில் எக்காலகட்டத்தில் இருந்து இணைவு பெற்ற ஒரே நிறுவனமாகத் தோற்றம் பெற்றிருந்தன என்ற கேள்விக்கு விடையிறுப்பது கடினமான ஒன்றல்ல. யாழ்ப்பாணத்திற்குரிய ஓரங்குல இடவிளக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படமொன்றைப் பார்க்குமொருவர் அம்பலம் எனக்குறிக்கப்பட்ட தங்குமடங்கள் டச்சுறோட்டுடன் இணைந்த பிரதான வீதிகளின் முக்கிய தரிப்புமையங்களில் இருந்தமைக்கான குறியீடுகளைக் காணமுடியும். பண்டாரமடம், பண்டத்தரிப்பு, பண்ணாகம், முத்தட்டுமடம், மருதனார் மடம், ஆறுகால் மடம், சங்கத்தானை, பனைமுனை (Light House Rd) நெல்லியடி, சாரையடி, சுப்பர் மடம், ஓட்டுமடம், மடத்துவாசல், தில்லையம்பலம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் இத்தகைய தங்குமடங்கள் காணப்பட்டிருந்தன. ஆனால் தெருவை மூடிய மடங்களாகக் காணப்பட்டவை மிகக்குறைவாகவே இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## குடாநாட்டின் சந்தை முறை :-

பண்டகசாலைகளும் பண்டார மாளிகைகளும் நிறைந்திருந்த சோழர்கால ஆட்சிப்புலத்தில் பெருந்தெருக்கள் அமைக்கப்பட்டு, நீண்ட, நெடுந்தூரப்போக்குவரத்தினை நலச்சேவை மன்றங்களினூடாக ஆற்றுப்படுத்தியிருந்தனர். புரவி வீரர்களின் கடுகிய வேகத்திற்கு ஏற்ற நீண்ட பெருந்தெருக்கள் சோழப்பேரரசெங்கும் உருவாக்கி, பராமரிக்கப்பட்டு வந்திருந்தமையைப்போன்றே, இலங்கையிலும் அவர்களால் பெருவீதிகள் உருவாக்கப்பட்டிருந்தன. மன்னாரிலுள்ள மாதோட்டத்திலிருந்து ராசராசப்பெருந்தெரு என்றொரு பெருவீதி அனுராதபுரம் நோக்கிச்சென்றமையை மாதோட்டத்திலுள்ள தாழிக்குமரன் கல்வெட்டு பதிவு செய்து வைத்துள்ளது. வடமராட்சியில் வதிரியிலுள்ள கோட்டைத்தெரு (கோட்டைப்பெருந்தெரு / கோட்டுப்பெருந்தெரு) பாணன் தறையூடாக நேர்கோட்டில் தெற்கே நோக்கிச் சென்று, சோழங்கனைச் சென்றடைவதனைக்காணலாம். மானாண்டிச்சந்தையுடன் சோழங்கனை (கரணவாய்) ஒரு நேர்பாதையில் இணைத்து வைத்த ஒரு பெருந்தெருவாகவே கோட்டைப்பெருந்தெரு அமைந்திருக்கவேண்டும். கரணவாயிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட உப்பு மானாண்டிச் சந்தைக்கு கடுகிய வேகத்தில் எடுத்துச்செல்லப்பட்டு, மீன்மால் - கூடைகளுக்கு, விற்பனை மையங்களுக்கு, மீன்பறிகளுக்கு இடப்பட்ட ஒரு வகையை அறிகின்றோம். மாலைச்சந்தை முறையில் அமைந்த இந்த மானாண்டிச்சந்தை (மீன் நோண்டிச்சந்தை) நித்தமும் மாலை ஐந்து மணிக்குப் பின்னரே கூடுவது வழமையாகும். ஒரு சந்தை முறையின் தோற்றத்தினை குடாநாட்டிலே மானாண்டிச்சந்தையுடன் இன்றும் தொடர்புபடுத்திப் பார்க்கக் கூடியதாகவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் மானாண்டிச்சந்தை ஒரு வரலாற்றுக்காலச் சந்தை என்பதனை அதன் சூழலில் பெற்றுக்கொள்ளப்பட்ட சங்ககாலத்திற்குரிய சுடுமண் போழைகள் (காவிரிப்பள்ளத்தாக்கிலுள்ள திருக்காம்புலியூரில் நடத்தப்பட்ட அகழ்வாய்வில் கிடைத்ததைப்போன்றவை) எமக்குக்கிடைத்ததிலிருந்து உறுதிப்படுத்திக்கொள்ள முடிகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாரத்தில் குறிப்பிட்ட தினங்களில், குறிப்பிட்ட நேரங்களில் இயங்கும் சந்தைகள் காணப்பட்டிருந்தன. வாரத்தில் பல்வேறு நாட்களில், சூரியோதயத்தின் போதும், சூரிய அஸ்தமனத்தின்போதும், உச்சிப்போதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தைகள் கூடிக்கலைந்தன. அல்லங்காடிகள் என்றும் மாலைச்சந்தை, வாராந்தச்சந்தை, நித்திய சந்தை, கோயிற்சந்தை என அவை பாகுபடுத்தப்பட்டிருந்தன. வாரத்தில் ஒரு நாள் மட்டும் கூடிக்கலைகின்ற பெருஞ்சந்தைகள் இரண்டு காணப்பட்டன. அவையாவன: (1) சுன்னாகம், (2) சங்கானை, இதனைவிட வெள்ளிக்கிழமைச்சந்தை முறை தென்மராட்சியிலுள்ள கொடிகாமத்தில் காணப்பட்டது. இந்த மூன்று சந்தைகளும் யாழ்ப்பாணக்குடாநாட்டின் பொருளாதாரத்தில் மிகமுக்கிய பங்கெடுத்திருந்தமையைக் காண்கின்றோம். மாட்டுவண்டி நிரைகள் இந்த மூன்று சந்தைகளுக்கும் இராப்பயணங்களை மேற்கொண்டு வாணிபப்பொருட்களை கொள்வனவு செய்து, யாழ்ப்பாண ஆயன் பட்டினத்திற்கு கொண்டு சென்று விற்பனை செய்ததன் பின்னர் கரையோரத் துறைமுகங்களில் உள்ள கிட்டங்களிலிருந்து நெல்மூடைகளை தம்வாழ்விடம் நோக்கி ஏற்றிச்செல்வதனை அவை தமது ஜீவாதாரத்தொழில் முயற்சியாகக் கொண்டிருந்தன. இப்பின்னணியிலேயே தெருமூடிமடங்கள் புத்துயிர்ப்பும், இயக்கமும் பெற்று, போத்துக்கீசர் காலத்திற்கும் முன்னருள்ள காலப்பகுதியில் சமூகத்திற்குப் பெருஞ்சேவையை ஆற்றியிருந்தன.

கிராமச்சந்தை, கறிச்சந்தை (மீன்சந்தை), கோவிற்சந்தை என்ற சொற்பிரயோகங்கள் யாழ்ப்பாணத் தமிழ்ப்பண்பாட்டில் பரந்து, விரிந்திருந்த வாணிப மையங்களின் தன்மையை எடுத்து விளக்குவனவாக உள்ளன. இவ்வாறு உள்நாட்டுச்சந்தைகளுக்கும், பின்னர் அங்கிருந்து பட்டணச்சந்தைகளுக்கும் இடையே வாணிப நடவடிக்கைகள் பெருகியிருந்த அக்காலகட்டத்தில் இத்தெருமூடிமடங்கள் மக்களுக்கும், வணிகருக்கும் பலத்தினையும் பாதுகாப்பினையும் நன்கு வழங்கியிருந்தன. கிராமங்களிலிருந்து பட்டணம் நோக்கிப்புறப்படும் பெண்கள், முதியவர்கள், நோயாளிகள் அக்காலத்தில் கூடார வண்டில் அமைப்புடைய ஒற்றைத்திருக்கல், இரட்டைத்திருக்கல், கைத்திருக்கல் வண்டிகளையே போக்குவரத்திற்குரிய ஊடகமாகப் பெருமளவிற்குப் பயன்படுத்தியிருந்தனர். அவ்வாறான நிலையில் தெருமூடிமடங்கள் ஒரு சிறந்த ஆறுதல் தரும் அமைப்பாக... நிறுவனமாகத் தொழிற்பட்டிருந்தமையைக் காணமுடிகின்றது. பொதுவாகக் குறிப்பிடுவதானால் பட்டணத்தை நோக்கிப்புறப்படும் அனைவருக்கும் உரிய ஒரு கலங்கரை விளக்கமாக இத்தெருமூடிமடங்கள் பணியாற்றியிருந்தன என்றால் அக்கூற்று மிகப்பொருத்தமானதாகும்.

பேய் - பிசாசு பற்றிய மூடக்கொள்கைகள் மக்கள் மத்தியில் மலிந்திருந்த அக்காலத்தில், குறித்த நேர - காலப்பிரயாண நடவடிக்கைகளின்போது தடங்கல்கள் ஏற்பட்ட நிலையில் இத்தெருமூடிமடங்களே மக்களது பயத்தினையும் சோர்வையும் நீக்கி, ஆதரவளித்ததோடு, திருடர்களிடமிருந்து அவர்களது பொருட்களை அபகரிக்கும் நிலையை தவிர்த்து விட்டிருந்தது. இப்பங்களிப்புக்களுக்கு அப்பால் எம்முன்னோரது திருத்தல யாத்திரைகளின்போது அடியார்கள் தங்கி, இளைப்பாறிச்செல்லும் யாத்திரைத் தங்குமடங்களாக இத்தெருமூடிமடங்கள் சேவையாற்றி வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலிகாமப்பரப்பில் இரு முக்கியமான தெருவீதி மடங்கள் மக்களது பெருளாதாரப்பண்பாட்டு அபிவிருத்தி நடவடிக்கைகளில் பெரும்பங்கு கொண்டிருந்தன. இன்று அவை மறைந்துபோய்விட்டமையைக் காண்கின்றோம். அவற்றில் ஒன்று உப்பு மடமாகும். மற்றையது பூதர் மடமாகும். கோண்டாவிலில் காணப்பட்ட உப்பு மடம் ஒல்லாந்தர் காலத்தில் அல்லது அதற்கும் முற்பட்ட நிலையில் கோயிலாகவும் தேவை ஏற்படும்போது உப்புப் பரப்பப்பட்ட வாணிப மடமாகவும் மாறிமாறி தொழிற்பட்டிருந்து வந்தமையைக் காண்கின்றோம். போத்துக்கேயர் காலத்தில் உப்பு வாணிபம் நன்கு மேலோங்கியிருந்த முறையை கோண்டாவில் உப்புமடம் பற்றிய கதைமரபு எமக்கெடுத்துக்காட்டுகின்றது. இம்மடமானது பிள்ளையார் வழிபாட்டுக்குரிய மடாலயமாகவும், போத்துக்கேய அதிகாரிகளின் பிரசன்னம் ஏற்படும் சமயத்தில் பிள்ளையாரது திருச்சொரூபம்மறைக்கப்பட்ட நிலையில் உப்பு மூடைகள் பரப்பப்பட்டும், அதனை உலரவைக்கின்ற செயற்பாடுகள் போன்ற வாணிப நிகழ்வுகளும் அம்மடத்தில் இடம் பெற்றிருந்தன. பூதர்மடம் இன்று முழுவதுமாக அழிந்து விட்டது. இது கோப்பாய்க்கண்மையில் கிறிஸ்தவதேவாலயத்திற்கு அணித்தாக பருத்தித்துறை பிரதான வீதியில் அமைந்திருந்தது. போக்குவரத்துத்தொடர்பான அல்லது பிரயாண வரி சேகரிக்கின்ற தொழிற்பாட்டை அல்லது யாழ்ப்பாண இராச்சியத்தின் இரண்டாவது தலைநகர் கோப்பாயில் அமைந்திருந்தமையின் பின்னணியில் பூதர்மடம் நிர்வாக முகாமைத்துவத்துடன் தொடர்புபடுத்தப்பட்ட வகையில் மக்களுக்கு சேவையாற்றியிருக்கலாம் எனக்கருதப்படுகின்றது. எவ்வாறெனினும் பூதர் மடப்பிரதேசம் இன்று தொல்லியல் அகழ்வாய்வுக்குரிய ஒரு மையமாக விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும்.

பூநாகர் மடம் என்ற புராதன மடமொன்றின் பெயர் இன்று திரிபடைந்து பூநாறி மடத்தடி என மக்களால் அழைக்கப்படுவதனைக் காண்கின்றோம். K.K.S.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதான வீதியில் பெரியபுலத்திற்கு அணித்தாக ஆனைக்கோட்டையிலிருந்து வரும் ஓர் உபவீதி சந்திக்கின்ற மையத்தில் பூநாகர் மடம் அமைந்திருந்தது. பூநகரியில் வாழ்ந்தவர்கள் பூநாகர் எனவும், குருணாகலில் வாழ்ந்தவர்கள் குறுநாகர் எனவும், வரலாற்று ஆசிரியர்களினால் விளக்கம் கொடுக்கப்படுவதனைக் காண்கின்றோம் அந்த அடிப்படையில் பூநாகர் மடமும் ஒரு தொன்மையான வரலாற்றுப்பின்னணியை கொண்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகின்றது, பூநகரியார் மடமொன்று சிதம்பரத்திலுள்ளது போன்று பூநாகரி மடமும் (ஆனைக்கோட்டையில் வாழ்ந்தவர்களும் பூநாகர் இன மக்களாவார்) ஒரு தொன்மைவாய்ந்த நிலையில் மக்கள் பணியாற்றிய சேவாநிலையமாக பங்காற்றியிருந்திருக்க வேண்டும்.

இவ்வாறான பண்பாட்டுப் பகைப்புலமுடைய தெருமூடிமடங்கள் கி.பி 16ஆம் நூற்றாண்டைத் தொடர்ந்து இலங்கைக்கு வருகை தந்த ஐரோப்பிய ஆட்சியாளர்களினால் படிப்படியாக அழித்தொழிக்கப்பட்டது. குறிப்பாக போத்துக்கீசர் இலங்கையில் கிறிஸ்தவ மதத்தினைப் பரப்புவதில் அதிதீவிரமாகச் செயற்பட்டிருந்தனர். இவர்களே கடற்கரையோர மாகாணங்களில் உள்ள தமிழ் மக்களின் பண்பாட்டுக் கருவூலங்களை முற்றாக அழித்தொழித்து, பழந்தமிழிற்கும் இந்து மதத்திற்கும் பேராபத்தினை விளைவித்திருந்தனர். தெருமூடிமடங்கள் காணப்பட்ட பிரதான வீதிகளின் மருங்கில் கிறிஸ்தவ ஆலயங்களை அமைத்து பண்பாட்டு மாற்றத்திற்கு வித்திட்டிருந்தனர். தற்போதும் ஆங்காங்கே காணப்படும் பழைய சுமைதாங்கிக்கல்லின் அருகாமையில் கிறிஸ்தவ தேவாலயம் அமைந்திருப்பது அக்கருத்தினையே உறுதிப்படுத்திநிற்கின்றது. மக்கள் கூடும் ஒன்றுகூடல் மையங்களை இலக்குவைத்து போத்துக்கேயரும் ஒல்லாந்தரும் முறையே கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து தேவாலயங்களை அமைத்திருந்தமையை யாழ்ப்பாணத்தில் இலகுவாக அடையாளம் காணமுடியும். ஒல்லாந்தர் காலத்தின் பிற்பகுதியில் வீதிகளின் புனரமைப்பின் போது சில தெருமூடி மடங்கள் மீண்டும் புனரமைப்புச் செய்யப்பட்டு மக்களது பாவனைக்காக கையளிக்கப்பட்டமையைக் காண்கின்றோம். அவற்றுள் பல காலவெள்ளததில் பொருளாதார வாழ்க்கை மாற்றத்தினூடே, பராமரிப்பாரற்ற நிலையில் அழிவடைந்துவிட, ஒரு சில தெருமூடி மடங்கள் இற்றைவரைக்கும் பாதுகாக்கப்பட்டுக்கொண்டு வரப்படுவதனைக்காண்கின்றோம். பருத்தித்துறை - தும்பளை வீதியில் காணப்படும் தெருமூடி மடம் பூரணத்துவமான தோற்றத்தில் இற்றைவரைக்கும் இப்பிரதேச மக்களால் பேணிப்பாதுகாக்கப்பட்டுக்கொண்டு வரப்படுகின்றது. இதைப்போன்றே ஆனைக்கோட்டையில் இருந்த ஆறுகால்மடமும் அண்மைக்காலம் வரைக்கும் நிலைத்திருந்தமையைக் காண்கின்றோம். இவற்றைவிட மடம் என்ற ஈற்றுப்பெயர்கொண்ட பல்வேறு இடப்பெயர்கள் இன்றும் காணப்படுகின்றன. முத்தட்டு மடம் அல்லது முத்தட்டி மடம், ஓட்டு மடம், கந்தர் மடம், மடமாவடி அல்லது முடமாவடி, மடத்துவாசல், நாவலன் மடம் (நாய் + வேலர் + மடம்) செட்டியர் மடம் (அராலி) ஆகிய இற்றைவரைக்கும் எம்முன்னோரது தெருமூடி மடங்களின் அழிந்துபோன நிலையை எமக்கு நினைவூட்டுவனவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பருத்தித்துறையிலுள்ள தெருமூடிமடமும் அதன் பிரதான இயல்புகளும் :-**



பருத்தித்துறை - தும்பளை வீதியில் சிவன் கோவிலுக்கு அணித்தாக அமைந்துள்ள இத்தெருமூடிமடமானது பல்வேறு காலகட்டங்களில் திருத்தப்பட்டும் புதுப்பிக்கப்பட்டும் வந்துள்ளமையைக்காண்கின்றோம். அதன் தொன்மையான வடிவத்தினைக் கண்டு கொள்ள முடியாமலுள்ளது. தற்போதுள்ள கல்லால் அமைக்கப்பட்ட கட்டிடத்தொகுதியானது 150 வருடகாலப் பழமை மிக்கது என்பது குறிப்பிடத்தக்கது. திராவிடக்கலைப்பாணியில் அமைந்துள்ள அதன் அடித்தளம், தூண்கள், மற்றும் சுவர்ப்பாகங்கள் கட்டிடக்கலை ரீதியாக விரிவாக ஆராயத்தக்கதாகும். வெண்வைரச் சுண்ணக்கல்லினால் உருவாக்கப்பட்ட தூண்கள், அதன் கபோதங்கள், மற்றும் தளம் ஆகியன சிறந்த கொத்து வேலைப்பாடுகளைக் கொண்டிருப்பதனைக் காண்கின்றோம். "பொழிந்த வெண்வைரக்கற்சதுரங்கள்" பிரதான வீதியின் இருமருங்கிலுமுள்ள உயர்ந்த திண்ணை போன்ற தளத்திற்கு மிகவும் செம்மையான முறையில் பாவப்பட்டு, அடுக்கி ஒழுங்கமைக்கப்பட்ட முறையைப் பார்க்கும்போது அவற்றின் சிறப்புக்கூறுகள், அதன் நீண்டகாலப்பாவனை ஆகியன வெளிப்படுகின்றன.

இருபக்க திண்ணைகளிலும் கல் பாவப்பட்ட தளத்திலிருந்து நான்கு பக்கச்சதுரப்பட்டை அமைப்புடன் ஆரம்பிக்கும் கற்றூண்கள் அவற்றின் கூரையைத்தாங்கும் பகுதியில் தூண்கபோதத்துடன் காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. இருபக்கங்களிலும் எல்லாமாக 16 தூண்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஆறு தூண்களில் தமிழ் வரிவடிவில் சாசனங்கள் பொறிக்கப்பட்டுக் காணப்படுகின்றன. 19ஆம் நூற்றாண்டுக்குரிய வரிவடிவ வளர்ச்சியை அச்சாசனங்களில் காணமுடிகின்றது. இச்சாசனங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள செய்திகளை அவற்றைப்படியெடுத்ததன் (Estampage) பின்னரே வெளிப்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்களின் அமைப்பு தனித்துவமானது. ஒற்றைக் கற்றூண்களாக காணப்படும் இவை நடுவில் எண்பக்கப்பட்டையுடனான தோற்றத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன. தூணின் கபோதம் உட்பட முழுத் தோற்றமுமே பல்லவர் கலை மரபினைத்தழுவி உருவாக்கப்பட்டுள்ள முறையைக் காண்கின்றோம். இத்தெருமூடி மடத்தினது இரு புறங்களிலும் உயர்ந்த மேடைபோல் காணப்படும் இருபக்கத்திண்ணைகளினதும் வெளிப்புறச்சுவர்கள் சுண்ணச் சாந்தினால் கட்டப்பட்டவையாக உள்ளன. இவ்விரு திண்ணைபோன்ற தளத்தின் அகல நீளமானவை தூரப்பார்வைக்கு யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு கிறிஸ்தவ தேவாலயத்தின் நடுமண்டபதிற்கு இருமருங்கிலும் காணப்படும் நடைமண்டபமாக (Lsles) தோற்றமளிப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்தெருமூடிமடத்தினது மேற்கூரையானது தூண்களின் கபோதத்திலிருந்து இருபக்கங்களிலும் சமாந்தரமாக மேலெழுப்பப்பட்டுள்ள ஓர் அரைச்சுவரின் மீது அமைக்கப்பட்ட விட்டத்துடன் கூடிய ஒரு சட்டகக்கோப்பினால் தாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இம்முறையினால் இத்தெருமூடி மடத்தூடான வாகனப் போக்குவரத்து நடைமுறைகளுக்கு அந்த உயர்ந்த கூரை எவ்விதத்திலேனும் தடையாகவோ, இடைஞ்சலாகவோ அமையாது ஒரு பொலிவான தோற்றத்தினை தூரப்பார்வைக்கு வழங்குவதனைக் காண்கின்றோம்.

இத்தெருமூடிமடத்தின் இருபக்க மண்டபங்களினதும் மேற்கூரை தட்டையானதாக (Flate) அமைக்கப்பட்டுள்ளது. நீள்சதுரக்கூரையமைப்பின் தட்டையான பரப்பினை உருவாக்குவதற்கு நீளமான வெண்வைரக் கற்பலகைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அக்கற்பலகைகளுக்குமேல் சுண்ணச்சாந்து இடப்பட்டு, நீர் கசியாதவாறு வெகுகச்சிதமாக அக்கூரையமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. உயர்ந்துள்ள பிரதான நடுக்கூரையின் இருபக்கங்களிலும் காணப்படும் இத்தட்டையான இருகூரைத்தட்டுக்களின் கூரை முகப்புக்கள் இரு முனைகளிலும் வெளியே தெரியாதவாறு பக்கவாட்டாக அவ்வவற்றின் முகப்பில் எழுப்பப்பட்ட கபோதத்தின் மீதான குறுக்கு அரைச்சுவர்களினால் மறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஒட்டுமொத்தத்தில் கட்டிடக்கலை ரீதியாக நோக்கும்போது யாழ்ப்பாணத்திற்கேயுரிய திருப்பணிக்கல் கட்டிடக்கலை மரபும் கிறிஸ்தவ கட்டிடக்கலை மரபும் ஒன்றிணைந்த வகையில் மீளுருவாக்கம் பெற்றதாகவே இத்தெருமூடி மடத்தினைக் கொள்ள வைக்கின்றது.

இன்றைய நிலையில் இத்தெருமூடி மடத்தொடு இணைந்திருந்த சுமைதாங்கிக்கல், ஆவுரஞ்சிக்கல், துலாக்கிணறு மற்றும் நீர்த்தொட்டி (கற்தொட்டி) ஆகியன முற்றாகச் செயல் இழந்த நிலையிலேயே காணப்படுவது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணக்குடாநாடு பரவலாகக் காணப்படும் சுமைதாங்கிக்கற்களும், ஆவரஞ்சிக்கற்களும் "றோட்டுக்கரைப் பிள்ளையாரைப்" போன்று "சும்மா" வீற்றிருக்கின்ற வகையைக்காண்கின்றோம். ரயர் - ரியூப் ஒட்டுகின்ற புத்திசாலிகளான சில கடைக்காரர்கள் இவ்வாறு சும்மா கிடக்கும் கற்தொட்டிகளை நகர்த்திச்சென்று தமது தொழிலகங்களில் நீர்தாங்கியாக உபயோகிப்பதனையும் காண்கின்றோம். பித்தளைக்குத்துவிளக்குகள் வெளிநாடுகளிலுள்ள எம்மவர் மத்தியில் Ash Tray



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகப்பயன்படுத்தப்படுவது போன்று யாழ்ப்பாணத்திலும் கலாச்சாரப்பிறழ்வுகள் மேலோங்கி வருகின்றன.

இன்றைய நிலையில் இத்தெருமூடி மடத்தினை இணைத்துள்ள ஒரேயொரு பயன்பாட்டு வெளிப்பாடு ஆடு மாடுகளின் மற்றும் கட்டாக்காலி நாய்களின் இராத்தங்கும் ஓர் ஆரோக்கியமான மையமாக மட்டுமே காணப்படுவதாகும். தமிழரது பண்பாட்டின் கால ஓட்டத்துடனான பண்பாட்டு விரிசல்கள் அதிகரித்துக்கொண்டு வருகின்ற இக்காலகட்டத்தில் இச்சின்னங்களை பராமரித்து கட்டிக்காத்து வைத்திருக்க வேண்டிய அடுத்த தேவை என்ன என்பது தொடர்பாக எழுப்பப்படும் கேள்விகளுக்கு எம்மால் விடையளிக்க முடியாதுள்ளது. உறவுகளிலும் ஏற்பட்ட மிகப்பாரிய விரிசல்களாலும், மற்றும் அன்னியப்பண்பாட்டுத் தாக்கங்களினாலும், பொருளாதாரத்தில் யாழ்ப்பாணத்து உற்பத்திமுறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் தாக்கங்களினால் எம்மவர் மத்தியில் ஏற்பட்ட வாழ்க்கை நிலையாமை போன்ற உளவியற் தாக்கங்கள் ஊடே உருவான மாற்றங்களினாலும் எமது பாரம்பரிய உணவுப்பழக்கவழக்கங்கள், உடையணியும் மரபுகள் மற்றும் இறப்புப் பிறப்புத் தொடர்பான வழமைகள் சடங்குகள் மரபுகள் யாவும் மெல்லமெல்ல யாழ்ப்பாணத்தை கைவிட்டு மறைந்து சென்றமையின் பின்னணியில், தெருமூடிமடங்கள் ஆற்றிய சேவை இன்று எமக்கு தேவையற்றனவாக, இன்றைய யாழ்ப்பாணத்துப் பண்பாட்டிற்கு அன்னியமானவையாக அமைந்து விட்டதைக் காண்கின்றோம். இன்ரநெட்டின் அறிமுகத்துடன் பூகோளமயமாதல் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் மேலோங்கிவிட்டது. இத்தொழிற்பாட்டின் பின்னணியில் மரபுகளும், பாரம்பரியங்களும் வலுவற்றவையாக ஓர் இனத்தின் அடையாளத்தை நிர்ணயம் செய்ய வலுவற்ற ஒரு நிலைக்குள்ளாக்கப்பட்டமையை காணலாம். யாழ்ப்பாணத்து பூகோளமயமாதலின் பின்னணியில் அதிவேகமாக வளர்ந்து வரும் நிறுவனங்களுள் ஒன்றாக நித்திய சுமங்கலிகள் சங்கம் தோற்றமளிப்பது குறிப்பிட்டக்கதாகும். சமூகத்தின் பல மட்டங்களிலும் இந்நிலை விரைவான வளர்ச்சி கண்டுவருகின்றமை யாழ்ப்பாணத்து அடையாளத்தை (Free Society) ஆக மாற்றிவிடும் விரைவான மாற்றத்தினைச் சுட்டி நிற்கின்றது எனலாம். நெருங்கிவரும் அடுத்த கட்டப் போரும் சிவந்த மண்ணாக (The land the Red Light Area) எமது பூமியை மாற்றுவதற்கு அறை கூவல் விடுவதனையும் நாம் செவிமடுக்காமலில்லை.

வடமராட்சியில் பிரதானமான இயற்கைத் தாவரமாக பனையின் பொருளாதார வளப்பயன்பாடு சரிவரப் பயன்படுத்தப்படவில்லை. பனையோடு சம்மந்தப்பட்ட உற்பத்திப் பொருட்கள் பாரிய சந்தை முறைக்கு உட்படுத்தப்படவில்லை என்ற ஆதங்கம் பொருளாதார ஆய்வாளர்களிடையே காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணாவி தம்பையா (1888 - 1923)

## கலைஞனின் வாழ்வினூடாக விலாசக்கூத்து பற்றிய ஒரு பார்வை

**திரு. பா. இரகுவரன்**
B.A (Hons)

நாடகத் தமிழை நன்கென உணர்ந்தோன்
ஆடலும் பாடலும் அமைவரும் ஆசான்
அண்ணாவிதம்பையன் அருமையாய்ப்பழக்கிய
விலாசம் பார்க்க வெற்றிலை யருந்தி
விரைந்து விரைந்து நடப்போர் குழாமும்

- பேராசிரியர் - க.கணபதிப்பிள்ளை
(காதலியாற்றுப்படை)

தம்பையா கூத்தாடுவதற்கென்றே பிறந்தபிறவி அவரின் சுபாவமே தனியானது. கூத்தின் ஆடல், பாடல் பற்றிய நுட்பமான அறிவும், இவற்றை நன்கு பயன்படுத்தி மக்களை ஈர்க்கும் ஆற்றுகைத்திறனும் கொண்டவர். இந்நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட விலாசக்கூத்து விற்பன்னன் தம்பையாவுடன் விலாசக்கூத்தும் போய் விட்டதுஎன கூறுபவர்பலர். இவரைப்போல் இன்றுவரை கூத்துக்கலைஞரை காணவில்லையென நெல்லண்டை அம்மன் கோயில் கூத்துகளைப்பார்த்தவர் கூறிக்கொள்கின்றனர்.

உடற்பயிற்சிகளின் மூலம் அழகுடல் பேணிய கறுத்த வாட்டசாட்டமான தேகக்கட்டு, வாரிமுடித்தபின் குடுமி. அழகிய பரந்த முகத்தின் நெற்றியில் நாமப்பொட்டுத் துலங்கும். காதில் வெள்ளைக் கல்லுப்பொருத்திய கடுக்கன் கழுத்தில் கறுத்த நூலில்த் தொங்கிடும் அட்சரக்கூடு பரந்த மார்பில் அசைந்தாடி நிற்கும். ஆட்டத்திறனுக்கு பரிசில்களாய் கிடைத்த மோதிரமும், கைச்சங்கிலியும் மின்னிட ஒற்றைத்திருக்கல் வண்டியில் ஒய்யாரமாய்ச் சவாரி செய்தபடி தம்பையா வீதியில் வருகையில் அவரின் கம்பீரமான அழகு அனைவரையும் மயங்க வைக்கும். மக்களிடையே ஒரு கதாநாயகனாக தம்பையா பவனிவந்தார்.

(தகவல் – பண்டிதர் க. கிருஷ்ணபிள்ளை –(85)– தும்பளை)

தம்பையாவின் தாயார் தும்பளைப் பகுதியைச் சேர்ந்தவர். தகப்பனார் பெரியதம்பி தம்பசிட்டி பண்டாரி அம்மன் கோவில்பதியைச் சேர்ந்தவர். பேரன் கதிர்காமர் இவர்கள் பரம்பரை அண்ணாவிமார். பல்லாயிரக்கணக்கான கூத்துக்கள் ஆடப்பட்ட தும்பளை, நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோயிலின் மேற்கு வீதி இவர்களின் பிரதான அரங்காக திகழ்ந்தது. இதற்கு தம்பையா அரங்கு என பெயரிட வேண்டுமென குரல்கள் ஒலிக்குமளவிற்கு தம்பையாவின் சிறப்பு இருந்தது.

(தகவல் – திருமதி. ச. இராசமம்மா – (91) தும்பளை மேற்கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பையாவின் தகப்பன் அண்ணாவி பெரியதம்பி சோடனைக்கார பெரியதம்பியென்று பரந்து பட்ட அறிமுகத்தை பெற்றிருந்தார். இந்தியாவில் இருந்து துணிமணிகளை எடுத்து கூத்துகளுக்குரிய ஆடை அணிகலன், வேசம் கட்டும் பொருட்கள் என்பவற்றைத் தயாரித்து வாடகைக்கு கொடுப்பதுவும், கூத்தாடுவதுமே இவர்களின் பரம்பரைத்தொழிலாகும். பண்டாரி அம்மன் கோயில் பகுதியினருக்கு கலைகளில் இருந்த நாட்டமும், இந்தியாவுடன் இருந்த தொடர்பும் இந்தியக் கலைஞர்களுடன் நல்ல உறவுகளை ஏற்படுத்தி கூத்துப்பிரதிகளையும், சோடனைச் சாமான்களையும் எடுத்துவர வாய்ப்பாக இருந்தது. இந்தியக் கலைஞர்களும் இவருடன் இங்குவந்து போனதாகக் கூறப்படுகிறது.

19ம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் விலாசக் கூத்துக்கள் வளர்ச்சியடைந்தபோது தம்பையாவின் தகப்பன் பெரியதம்பி அண்ணாவியும் விலாசக்கூத்தை ஆடினார். (பேரன்கதிர்காமர் ஆடிய கூத்துப்பற்றி அறிய முடியவில்லை) கிருஷ்ண விலாசமே இவரால் முதலில் ஆடப்பட்டது என கூறப்பட்டாலும் வாய்மொழித் தகவலில் முரண்பாடும் உள்ளது. வல்லிபுரக் கோயிலின் கிருஷ்ண வழிபாட்டின்தாக்கம் இந்த விலாசக் கூத்தை பெரிய தம்பி ஆடத்தூண்டியிருக்கலாம். ஆயினும் இதற்கு முன்னரே இங்கு விலாசக் கூத்துக்கள் அறிமுகமாகி இருக்க வேண்டும்.

இந்திய விலாசக் கூத்துக்கலைஞர்கள் காங்கேசன்துறையூடாக மட்டுமன்றி பருத்தித்துறை. வல்வெட்டித்துறைப் பகுதியூடாக வந்து கூத்தாடிச் சென்றிருக்கிறார்கள். இந்திய கலைஞர்கள் இலங்கையில் கூத்தாட தொடங்கியகாலத்தை ஆராய்ந்து அறிவது இலங்கையின் தமிழ்நாடக வரலாறுபற்றிய புலமை ரீதியான எழுத்தொன்றிற்கு மிக அவசியமாகும். விலாசம் என்ற பெயரில் 1859 இல் தெல்லிப்பழை வாசியான பார்குமாரகுலசிங்க முதலியாரால் பதிவிரதை விலாசம் மேடையேற்றப்பட்டதால் இதற்கு முன்பே இந்தியக் கலைஞர்கள் இலங்கைக்குவரத் தொடங்கி விட்டார் என கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளையவர்கள் குறிப்பிட்டுள்ளார். 1865ல் காங்கேசன்துறையில் தமிழ் நாட்டுக்கலைஞர்களால் நடத்தப்பட்ட தகவல் கிடைப்பினும் 1816, 1824, 1842 ஆம் ஆண்டுகளில் ஈழத்தில் வாழ்ந்த புலவர்களால் விலாசம் பாடப்பட்டிருப்பதாக கலாநிதி. சி. மௌனகுரு அவர்கள் கூறுகின்றார். இதில் மேலும் ஆய்வுகள் மேற்கொள்ள தம்பையாவின் முன்னைய பரம்பரையினர் ஆடிய விலாசங்கள், அவற்றின் காலம், இந்திய கலைஞர்கள் பருத்தித்துறையூடாக வந்து ஆடிவிட்டு போனமை பற்றியும் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

தகப்பன் பெரியதம்பியிடமிருந்து கூத்துக்கலையையும், சோடனைப் பொருள்செய்யும் கலையையும் பாரம்பரிய கொடுப்பனவாக பெற்றுக்கொண்ட தம்பையா தகப்பனாரின் கூத்துக்களில் சிறுவயதில் ஆடி பல அனுபவங்களை உள்வாங்கி அப்பனை மிஞ்சிய பிள்ளையென மிக இளம் வயதிலேயே பாராட்டுதலைப் பெற்றார். தம்பையாவின் திறமைகளால் புகழ்; அயற்கிராமங்களையும் தாண்டி தூர இடங்களுக்கும் விரிந்து பரவியது.

(தகவல் – மகள் – திருமதி. சு. தங்கம்மா – பொலிகண்டி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுக்கூத்தைவிட, விலாசக் கூத்து ஆடுவது அக்காலத்தில் நவீனமானதாகக் கருதப்பட்டது. கற்றோர் மத்தியில் கணிப்புப் பெற்ற கர்நாடாக சங்கீதமே விலாசக்கூத்தில் பிரதான இடத்தை வகித்தது. கர்நாடக சங்கீதம் உயர்குழாத்தினருக் குரிய கலையாகி, கீர்த்தனை நாடகங்கள் உருவானமை பற்றியும் பின்னர் இது நாட்டுக்கூத்து, பாஸிநாடகம், மராட்டிய நாடக முறைகளுடன் இணைந்து விலாசம் உருவாகி வளர்ந்தமை பற்றியும் கலாநிதி சி. மௌனகுரு ஆய்வில் குறிப்பிட்டுள்ளார். தம்பையா அவர்களும் விலாசக்கூத்தின் முதுகெலும்பான கர்னாடக சங்கீதத்தை தகப்பனிடமிருந்து மட்டுமன்றி பல இந்தியக்கலைஞர்களிடமிருந்தும் கற்றுக்கொண்டார். தனிப்பட்ட முறையில் கூட ஒருசில வித்துவான்கள் தும்பளைப் பகுதியில் வந்து தங்கி நின்று சங்கீத வகுப்புகளை நடத்தியிருக்கிறார்களாம்.

ஒரு முறை வல்வெட்டித்துறைப்பகுதியில் தம்பையா குழுவினருடன் போட்டியாக ஆடிய இன்னொரு குழுவுக்கு ஆதரவாக அனுமானுக்கு நடிக்க புகழ்பெற்ற இந்தியக் கலைஞர் ஒருவரை கூட்டிவந்தனர் என்றும். முதலில் ஆடிய தம்பையாவின் திறமையைக் கண்டு அந்த இந்தியக் கலைஞர் போட்டியாக நடிப்பதற்கு மறுத்துவிட்டு தம்பையாவைப் புகழ்ந்து கவிதைபாடிக் கொடுத்து விட்டுத்தான் சென்றாராம். கவிதை பலகாலம் பொலிகண்டியில் மகள் தங்கம்மாவிடம் இருந்து பின்னர் சிதைந்து விட்டது.

தம்பையாவின் விலாசக்கூத்துகள் ஆரம்பத்தில் நிலத்தில் ஆடப்பட்டன. இது மூன்று பக்கமும் பார்வையாளரைக் கொண்ட சமதரை அரங்காகும். நாட்டுக் கூத்துகளும் விலாசக்கூத்துகளும் ஒரே விதமானஅரங்கிலேயே ஆரம்பத்தில் நிகழ்த்தப்பட்டன. கிருஷ்ணவிலாசம், வீரகுமாரன், அரிச்சந்திர விலாசம் போன்றன நிலத்தில் ஆடப்பட்ட காலத்தில் புகழ் பெற்ற அடிக்கடி களரியேறும் விலாசக் கூத்துக்களாகும். இவ்வேளை விலாசக் கூத்துகள் அதன் கர்னாடக இசையாலேயே நாட்டுக்கூத்தில் இருந்து பெரிதும் வேறுபட்டது. நாட்டுக்கூத்துக்கலைஞர்களே விலாசம் ஆடியமையால் வரவுவிருத்தம் தோற்ற ஆட்டம் என்பன இடம்பெற்று நாட்டுக்கூத்தின் கட்டமைப்பு பேணப்பட்டது. அண்ணாவியாரும் களரியுள் நின்று தாளமிட்டார். அண்ணாவியார் நடிக்கும் சந்தர்ப்பத்தில் இன்னொருவர் தாளமிடுவார். ஆயினும் இந்த இயல்பு களரியில் அண்ணாவியார் நின்ற ஆட்டத்தை நெறிப்படுத்த வேண்டிய தேவையின்மையை வெளிப்படுத்தி நிற்பதை அவதானிக்கலாம். பாத்திரங்கள் கூத்துக்கதைப் பகுதியை நகர்த்த ஆடலைவிட பாடலையே பிரதான ஊடகமாகக் கொண்டன. (தகவல் – திருமதி. ச. வள்ளிப்பிள்ளை (88) – தும்பளை)

தம்பையாவின் விலாசக்கூத்துகள் அடுத்த கட்டமாக படச்சட்டமேடைக்குள் செல்ல வேண்டிய தேவை இருந்தது. இதற்கு பரந்துபட்டரீதியில் விலாசக்கூத்துகள் படச்சட்ட மேடையில் ஆடப்பட்டன என்ற காரணம் மட்டுமன்றி பருத்தித்துறைப் பகுதியில் இந்திய நாமாமோடி (இசை நாடக)க் கலைஞர்கள் படச்சட்ட மேடையில் ரிக்கற் நாடகம் நடத்தியமையால் தம்பையா தொழில் ரீதியான போட்டிக்கு முகங்கொடுக்க கவர்ச்சிகரமான மேடையை நாடவேண்டி இருந்தது. பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலைக்கொட்டகையில் ஆரம்பித்து பக்கத்தட்டி, தொங்கு திரை, முன்சீன் என்பன படிப்படியாக அறிமுகப்படுத்தப்பட்டன. நிலத்தில் ஆடிய விலாசக்கூத்து மேடைக்கு ஏறியபோது நாட்டுக்கூத்தின் கட்டமைப்பில், ஒப்பனை என்பவற்றில் இருந்து விலகி நாமாமோடி நாடகங்களின் ஒப்பனை, ஆடல் குறைந்தமை, காஸ் (Gas) வெளிச்சம், ஆர்மோனியம் பயன்பாடு பாடல்படிக்கும் முறையில் கூட நாமாமோடி நாடகத்துக்கு அண்மித்தாக சென்றமைபோன்ற பல காரணங்களால் விலாசக்கூத்து, நாமாமோடி என்பவற்றை பிரித்தறிய முடியாத நிலை சாதாரணமக்களுக்கு ஏற்பட்டிருந்தது. ஆயினும் பாடல்பாடும் முறை வசனம்பேசுதல் உட்பட அளிக்கைரீதியில் நுணுக்கமான வேறுபாடுகள் பல இருந்து வந்ததை ரசனையுள்ள ஆர்வலர்கள் பலர் அறிந்து வைத்திருந்தனர்.

(தகவல் திருமதி. மங்கையற்கரசி (88) புலோலிகிழக்கு)

தம்பையா படச்சட்டமேடையில் பல விலாசநாடகங்களை மேடையேற்றினாலும் இராமாயணத்தின் ஏழு காண்டங்களையும் ஒன்றுவிட்ட ஒரு இரவில் ஆடியமை அவரது சாதனையாக மக்கள் இன்றும் குறிப்பிடுவர். வரலாறு காணாத அளவில் நெல்லண்டை வீதியில் மக்கள் கூட்டம் நிரம்பிவழிந்தது. இறுதிக்காண்டம் முடிந்து மறுநாள் நல்ல மழைபொழிந்தது. மக்களும் கூத்தரும் மகிழ்ச்சியில் நனைந்தனர். இந்த இராமாயணம் 7 காண்டங்களும் அருணாசலக்கவிராயரின் இராம நாடக கீர்த்தனையை அடிப்படையாகக் கொண்டுதான் எழுதித் தயாரிக்கப்பட்டது என பண்டிதர். க. ஏரம்பமூர்த்தி அவர்கள் கூறுகிறார். இறுதிக் காண்டத்தை திரும்பவும் வல்லிபுரக் கோயிலில் மேடையேற்றி அந்த நாடகத் தொடரை நிறைவு செய்துவைப்பார்கள். ஏழுகாண்டங்களிலும் மொத்தமாக 42 நடிகர்கள் இரண்டு வருட கால பயிற்சி எடுத்தார்கள்.

இந்த இராமாயண நாடகத்தொடரில் தம்பையா அனுமானாக நடித்துப்புகழ் பெற்றவர். தம்பையாவின் அனைத்துத்திறன்களையும் வெளிப்படுத்த அனுமான்பாத்திரம் நல்ல வாய்ப்பாக அமைந்தது. ஆடல், பாடல் பாச்சல், குரங்காட்டம், கரணமடித்தல் எல்லாம் அனுமானுக்குள் புகுத்திவிடுகிறார். மேடையின் மேல்விதானத்தில் தொங்கும் கப்பியூடாகவரும் கயிற்றை இடுப்பில்க்கட்டியபடி பாய்ந்துவந்து மேடையில்க் குதிப்பதுவும், கடல் கடக்கையில் ஏற்றாற்போல் கயிற்றில் அந்தரத்தில் சுழன்று திரும்பி நடிக்கும்போது முழு அரங்கமும் அசைந்து நிற்கும். நின்ற நிலையில் கரணம் போட்டு எழுவதும் குரங்காட்டம் ஆடி, நடந்து, பாய்ந்து, அரங்கின் முன்கம்புகளிலேறி மேல் விதானம் வரை சென்று இறங்குவதும், மேடையில் இருந்து குதித்து இறங்கி மக்களிடையே சென்று சீதையை தேடித்திரிய பார்வையாளர் சீதை இல்லை என கூறிடுவதும் பார்வையாளரின் கூச்சல் மேலிட தம்பையா அதட்டிக்கேட்க சிலர்பயந்து ஒடுங்கிப் போய்விடுவதுமாக காட்சிகள் இடம் பெறும் தம்பையாவின் உடற் பயிற்சிக்கலைகளும் சிலம்படிவித்தை, சாண்டோ விளையாட்டுகளும் (சாண்டோதம்பையா எனவும் பெயர்) அனுமான் பாத்திரத்திற்கு நன்கு கைகொடுத்தன.

(தகவல் – பண்டிதர் க. கிருஷ்ணபிள்ளை (85) திரு.காராளசிங்கம் (93)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணதர்ப்பாரில் இராவணனுடனான அனுமானின் தர்க்கம் மிகச்சிறப்பு வாய்ந்ததும் மறக்கப்பட முடியாததுமாகும். அனுமானின் வால்போல கயிறு சுற்றிய உயரமான முக்காலியை பக்க்திலிருந்து உதவியாளர்கள் தள்ளிவிட பின்புற நிலையில் நின்றபடி நேரம் பிசகாமல் லாவகமாகத் தொங்கிப்பாய்ந்து அமருவதும் வெறும் மயிர்க் கூச்செறியும் நிகழ்வுகளாகப் போய்விடாமல் அனுமான் பாத்திரத்துடன் நன்கு பிணைக்கப்பட்டு நாடகத்திற்கு வலுவூட்டி நின்றன.

(தகவல் – திருமதி. ச. இராசம்மா (91) தும்பளை மேற்கு)

தம்பையா அனுமான் பாத்திரத்தைத் தெரிவு செய்தமைக்கு, இராவணன் பாத்திரத்தை ஏற்கும் பொலிகண்டிப் பூபாலு என்பவரின் அபாரமான நடிப்புத்திறனுக்கு நிகராக நிற்க தம்பையா ஒருவரால் தான் முடியும் என்பது பிரதான காரணமாகும். பூபாலுவின் இடியோசை போன்றகுரல் ராகஞானத்துடன் அரங்கிலிருந்து இருளைக்கிழித்தபடி சென்று ஊர்மனைகளெல்லாம் தாண்டி ஒலிக்குமாம். 10 தலைகளுடனும் 10 சோடி கைகளுமாக ஆடை அணிகளுடன் பூபாலு இராவணனாக தோன்றும் போது அரங்கமே நிரம்பிநிற்கும்.

(தகவல் – திருமதி. ச. வள்ளீப்பிள்ளை (88) தும்பளைமேற்கு)

கிருஷ்ண விலாசம் நிலத்தில் ஆடப்பட்ட போது பொலிகண்டிப் பூபாலு கம்சனாகவர தம்பையா கிருஷ்ணராக ஆடினார். யாசோதையின் இடுப்பில்க்கைவைத்து கரணமடிப்பதும் களரியில் உரலுக்குமேல் பலராமர் ஏறிக் குனிந்து நிற்க அவரின் முதுகில் தம்பையா கிருஷ்ணராக ஏறிநின்று வெண்ணெய்தின்று விட்டு அங்கிருந்து பாய்ந்து சுழன்று களரியில்க் குதிக்கும் போது பாவாடை குடைபோல பெரிதாய்விரிந்து மேலெழும்பி, குதித்தபின் முழங்கால் மடித்து இருக்க பாவாடை அவரைச் சுற்றி வட்டமாக களரியில் பரவி இருப்பது கண்கொள்ளாக்காட்சியாக இருக்கும். கம்சன் போரில் சண்டைத்தருவுக்கு தம்பையா, பூபாலுவின் ஆடல் பாடல்களை இன்றும் முதியவர்கள் சுவையாய் நினைவு கூறுவர்.

(தகவல் – திரு. காராளசிங்கம் (93) தும்பளை மேற்கு)

பூபாலுவுடனான தம்பையாவின் கலையுலகப்பிணைப்பு பின்னாளில் பூபாலு தன் தங்கை அன்னப்பிள்ளையை தம்பையாவுக்கு மணமுடித்துக் கொடுத்து மைத்துனராக்கி மேலும் வலுவாக வளர்ந்து நின்றது பூபாலு மத்தளம் வாசிப்பதிலும் வல்லவர். வடமராட்சியிலும் பிறபகுதியிலும் விலாசக்கூத்தினை பழகுவதற்கு தம்பையா அண்ணாவி செல்லும்போது மத்தளம் வாசிக்க பூபாலுவைத்தான் அழைப்பார்கள். தம்பையாவின் இறப்பிற்கு பின்னரும் பூபாலுவின் மத்தளமும் பிற்பாட்டும் பல விலாசக்கூத்துகுழுவினருக்கு உயிர்கொடுத்தது. தம்பையா அண்ணாவி புட்டளைப் பிள்ளையார் கோயிலில் தாமப்பா (தாமோதரம்பிள்ளை) குழுவினரின் விலாசத்தில் பிரதான பாகம் ஏற்று ஆடியுள்ளார். குசலவன், வீரகுமாரன், அரிச்சந்திரவிலாசம் சூரியப்பிரகாசன் சத்திரப்பிரகாசன் என்பன தம்பையாவுக்கு புகழைத்தேடித்தந்தன.

(தகவல் – திருமதி. சி. மங்கையற்கரசி (88) புலோலி கிழக்கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லண்டையில் மார்க்கண்டேய விலாசத்தில் யமனாக ஆடிய தம்பையாவின் நடிப்பு பிரபல்யமானது பேராசிரியர் அ. சண்முகதாஸ் இதுபற்றிக் கூறும்போது "மார்க்கண்டேயரில் தம்பையா ஏற்று நடிக்கும் யமன் பாத்திரத்தை தும்பளை மக்கள் என்றுமே மறக்க மாட்டார்கள் கூத்தாடுமிடத்திற்கு நேர்வடக்கே பெரிய அரசமரமொன்று முன்னர் இருந்தது இருளில் காற்றில் அரசிலைகள் சலசலக்க கருமைநிறம் பூசி நீண்ட சடையும் கையிற் சூலமும் பாசக்கயிறும் தாங்கி சிவந்த விழிகளிலே கோபக்கனல் பறக்க பொதுமக்களிடையே புகுந்து மார்க்கண்டேயரை நோக்கிவரும் யமனைக்கண்டு மெய்பதறாதவர் இல்லை. குழந்தைகள் கூச்சலிடும் யமபயம் எல்லோர் நெஞ்சிலும் உறையும். கடவுட்சிந்தனை விடிவிளக்காகத் தென்படும் அந்தக் கணத்தில் அண்ணாவி தம்பையாவை அனைவரும்மறந்து அம்மாளே எனக் குரல்தரும் ஓசை அவர்நடிப்பின் சிகரத்தைக் காட்டும்"

மார்க்கண்டேய விலாசம் 1919ல் இருந்து ஒரு ஒழுங்கான முறையில் சிவராத்திரி தினத்திற்கு வருடாவருடம் ஆடப்பட்டு வருகிறது. இன்றும் தம்பையாவின் இரத்த உறவினர்கள் மார்க்கண்டேயரை 1970களிலிருந்து நாமாமோடி நாடகமாக ஆடிவருகின்றனர். இவர்களில் இன்றும். கூத்துக் கொட்டகை, சீன் என்பவற்றை வாடகைக்குவிட்டு ஒரு நூற்றாண்டுக்கு மேலாக சோடனைக்கார பெரியதம்பியின் தொழிலை தொடர்ந்து வருகிறார்கள்.

தம்பையா நெல்லண்டை அம்மாள் கோயில், புட்டளைப்பிள்ளையார் கோயில், தம்பசிட்டி பண்டாரி அம்மன் கோயில், பொலிகண்டிக் கந்தவனம் கோயில் என்பவற்றில் அடிக்கடி விலாசம் பழக்கி ஆடுவார். இதைவிட வடமராட்சி கிழக்கில் குடத்தனை, அம்பன், நாகர்கோயில் செம்பியன்பற்று பகுதியிலும், தென்மராட்சியில் கச்சாய், கைதடியிலும், வலிகாமத்தில் மூளாயிலும் மட்டுமன்றி முல்லைத்தீவு, மட்டக்களப்பு போன்ற பகுதிகளுக்கும் சென்று விலாசம் பழக்கியுள்ளார். மட்டக்களப்பிற்கு பருத்தித்துறைத் துறைமுகத்தில் இருந்து தோணியில் சென்று வருவார்.

(தகவல் – திருமதி. ச. இராசம்மா (91) தும்பளை மேற்கு)

1923ஆம் ஆண்டு தைப்பூச தினத்தில் தம்பையா இறந்த சேதிகேட்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் அதிர்ச்சியுடன் தவித்தார்கள் இவர்போல் விலாசம் ஆட இனி யாருளர் என்று ஏங்கித்தவித்தனர். 35 வருட குறுகிய தனது வாழ்நாளில் சுடர்விளக்காய் ஒளிரவைத்த விலாசக்கூத்தின் கீற்றுகள் இன்றுவரை ஆங்காங்கு மின்னியபடி இருக்கின்றன. ஈழத்து நாடக வரலாற்றில் தம்பையாவின் நாடக வரலாறும் முக்கியத்துவமுடையதாகி அழியாதிருக்கின்றது.

> "கூத்தை மீண்டும் மக்களிடையே பரவச் செய்ய வேண்டும் என்று தற்போது பலர் முயற்சி செய்கின்றனர். அவர்கள் அண்ணாவி தம்பையாவின் அருமையை இன்றும் சரிவரக் காணாது உள்ளனர். ஆனால் நெல்லண்டை அம்மன் ஆலய வரலாற்றுடன் தம்பையாவின் புகழ் நின்று நிலைத்தது வாழும்."

- பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(இத்திமரத்தாள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சைவிட்டகலாத மறைந்த கலைஞர்கள்

## ✠ கலாபூஷணம் திரு.வே. க. பாலசிங்கம் - இசை நாடகம்



பிறந்த திகதி :- 1931.08.05
முகவரி :- "செந்தில்பதி", பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.வே.க. பாலசிங்கம் அவர்கள் பொலிகண்டி தெற்கை வசிப்பிடமாகக் கொண்டவர். இவர் பல நாடகங்களை நெறியாள்கை செய்ததுடன் நாடகங்களில் மிகச்சிறப்பாக நடித்து பல விருதுகளையும் இரசிகர்களின் பாராட்டினையும் பெற்றுள்ளார். இதனைவிட ஓவியம் வரைதல், ஆன்மீகப்பணி, சமூகப்பணி போன்றவற்றில் ஈடுபாடுள்ளவராக இருந்தார்.

நாடகத்துறையைப் பொறுத்தவரையில் சிந்துநடைக்கூத்து, இசை நாடகம் போன்றவற்றில் நடித்துள்ளார். இவரது ஏழாவது வயதில் முதன்முதலாக பபூள் வேடத்தில் நடித்தார். இதனைத் தொடர்ந்து "காத்தவராஜன்" சிந்துநடைக்கூத்தில் பாலகாத்தானாக நடித்தார். இசை நாடகங்களுள் இவருக்கு புகழீட்டித்தந்த நாடகங்களாக மயான காண்டம், ஸ்ரீவள்ளி, பூதத்தம்பி, வாலிவதை, கன்னிக்கோட்டை பதவிமோகம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதனைவிட பிரகலாதன், சங்கிலியன், சகோதரபாசம், சத்தியவான் சாவித்திரி, பாஞ்சாலிசபதம், பூதத்தம்பி, கண்ணன்தூது, ராஜாதேசிங், கோவலன் கண்ணகி, ஆரியமாலா, மதனசேனா, அசோக்குமார், அல்லி அருச்சுனா, மயான காண்டம் போன்ற பல இசை நாடகங்களிலும் பிரதான பாத்திரங்கள் ஏற்று நடித்துள்ளார்.

ஓவியத்துறையைப் பொறுத்தவரையில் தாம் வரைந்த ஸ்ரீ இராமகிருஷ்ணர், மகாத்மாகாந்தியும் நேருவும், கவிஞர் செல்லையா போன்ற அறிஞர்களின் படங்களை வரைந்து 2002 ஆம் ஆண்டு பிரதேச கலாசாரப் பேரவையால் நடாத்தப்பட்ட அரும்பொருட்கள் கண்காட்சியில் இவரது ஓவியங்களும் வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஆன்மீகப் பணியைப் பொறுத்தவரையில் ஆலயங்களில் ஊஞ்சற்பாடல், திருவெம்பாவை, தேவாரங்கள் போன்றவற்றைப்பாடி **"பண்ணிசைச் செல்வர்"** என்ற பட்டம் வழங்கிப் பாராட்டப்பட்டார்.

இவரது திறமையைப் பாராட்டி பட்டங்கள் விருதுகள் வழங்கப்பட்டமை ஓர் சான்றாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வழங்கப்பட்ட பட்டங்கள் / விருதுகள்.**

- முத்தமிழ் வித்தகர் - மணலாறு கொக்குத்தொடுவாய் முத்துமாரியம்மன் ஆலயம்.
- கலை மகிழ்நன் - அல்வாய் மனோகர கானசபா நாடகமன்றம்
- கலைவாருதி - வடமராட்சி கலாரசிகர்கள்.
- இசைநாடக மாமணி - ஸ்ரீ கலைமகள் நாடக மன்றம் அரியாலை.
- இயல் இசை நாடக செல்வர் - வதிரி அபிவிருத்தி நிறுவனம்
- கலாபூஷணம் - இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
- ஆயகலை வித்தகர் - வல்வை மக்கள்.

இவர் தனது இறுதிக்காலம் வரையும் மேற்குறிப்பிடப்பட்ட பணிகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## முனியப்பர் வழிபாடு

முனியப்பர் வழிபாடு யாழ்ப்பாணத்தில் இடத்துக்கிடம் உண்டு. யாழ்ப்பாணப் பட்டிணத்திலுள்ள கோட்டைக்கருகில் முனியப்பர் கோயிலொன்று இருக்கின்றது. இங்கு வெள்ளிக்கிழமை தோறும் மக்கள் கூட்டங்கூட்டமாக வந்து முனியப்பரை வழிபட்டுச்செல்வர். கோயிலுக்கு எதிரேயே யாழ்ப்பணத்து நீதிமன்றங்கள் உள்ளன. அம்முறை மன்றங்களில் வழக்கு தொடருவோர் வழக்கில் வெற்றி பெறுவதற்காக முனியப்பருக்கு நேர்த்திக் கடன்கள் செய்வர். ஆடு, கோழிகளும் இங்கு வெட்டப்பட்டு வந்தன. பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணஞ் செல்லும் வசுவண்டிகள் பெரும்பாலும் வல்லையிலுள்ள மருதமரத்திற்கடியில் நிறுத்தப்பட்டு, அவ்வசுவிலுள்ளார் அங்கு உறையும் வல்லை முனிக்குக் கர்ப்பூரங் கொளுத்துவர். இம் முனி புறாப்பொறுக்கியென்னும் கிராமத்திலுள்ள பேராலமரத்தை உறைவிடமாகக் கொண்டது. அவ்வாலமரம் தறிபட்டபடியால் இப்பொழுது இம்மருத மரத்தில் உறைகின்றதென்று ஊரார் நம்புவர். இப்பகுதியில் இன்றும் பல முனிகள் வசிக்கின்றன என மக்கள் எண்ணுவர். அவை உயிலங்கன்றடி முனி, திக்கத்துமுனி, சக்கோட்டை முனி, தாமரைக்குளத்து முனி, பருத்தித்துறைச் சந்தைப்புளியடி முனி என்பனவாகும். இம் முனிகளுக்கெல்லாம் தலையாயது சந்தைப்புளியடி முனி என்பர் இப்பகுதியிலுள்ளார். இம்முனிகள்யாவும் திங்களுக்கொருமுறை ஒருங்குகூடும். அந்நாளன்று உயிலங்கன்றடி முனி புறாப்பொறுக்கி ஆலடி முனியைச் சந்தித்து அதனை அழைத்துக்கொண்டு திக்கத்து முனியிடம்வரும் இம் மூன்றும் அங்கிருந்து சக்கோட்டையிலிருக்கும் முனியிடம் வரும். அதன் பின் யாவையும் பருத்தித்துறை தாமரைக் குளத்தடி மருதிலுறையும் முனியையும் அழைத்துக்கொண்டு சந்தைப்புளியடி முனியிடம் வந்தடையும். இவை யாவும் வரும் பொழுது தத்தம் பரிகலங்களுடனே வரும். அப்படி வரும்பொழுது சங்கொலி, சேமக்கல ஒலி முதலியன கேட்கும் என்பர். சங்கு எக்காளம், சீழ்க்கை ஆகியவற்றினொலி இன்றும் அந்நேரங்களிற் கேட்கும் என்பர். இம்முனிகள் வரும் வழியில் எக்கச்சக்கமாக மக்கள் எதிர்ப்பட்டால், கூடிவரும் பரிகலங்கள் அவகளை அடித்துத் துன்பஞ் செய்தலும் உண்டென்பர். இத்துன்பங்களினின்றும் நீங்குவதற்காக மக்கள் முனியப்பருக்கு நேர்த்தி செய்து இவ்விடையூறுகளினின்றும் நீங்குதவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ✠ கலைஞானி துரைச்சாமி மகாலிங்கம் - இசை நாடகம்



பிறந்த திகதி :- 1931.09.16
முகவரி :- மாதனை,
பருத்தித்துறை.

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் மாதனை எனும் கலை வளர்க்கும் கிராமத்தில் பிறந்தார். சிந்துநடைக்கூத்து, இசை நாடகங்கள் போன்றவற்றை மாதனைக் கலாமன்றத்தினருடன் ஆரம்பகாலத்திலிருந்தே இணைந்து நடித்தார். இயற்கையாகவே குரல்வளமும் நடிப்புத்திறனும் அமையப்பெற்றவர்.

இசை நாடகங்களுள் சத்தியவான் சாவித்திரி, ஸ்ரீகந்தலீலா, ஸ்ரீராமபட்டாபிஷேகம், ஸ்ரீவள்ளி, பவளக்கொடி, சம்பூரண அரிச்சந்திரா, கந்தன் கருணை போன்றவற்றில் பிரதான பாத்திரங்கள் ஏற்று நடித்து ஒரு மாபெரும் கலைஞனை அழகுபடுத்தும் கலைஞானி, கானாமிர்தன், நளினமாமலர் எனும் பட்டங்களை தனதாக்கியவர் மகாலிங்கம் என்றால் அது மிகையாகாது.

இவர் கந்தன் கருணையிலே 'ஔவையார்' வேடமேற்று நடித்ததை இவரது நினைவு வெளியீட்டில் நடிப்புத் திறனையும் தோற்றச் சிறப்பினையும் மந்திரமோ? தந்திரமோ? மாயமோ? மகாலிங்கத்தின் விந்தை நடிப்பு விசித்திரமோ? செந்தமிழர் அன்று கண்டு போற்றி அடிபணிந்த ஔவையை இன்று கண்ட காட்சி இது!! என வியந்து பாராட்சியுள்ளனர்.

இசைஞானி து. மகாலிங்கம் அவர்களுடன் இணைந்து பல இசை நாடகங்களில் நடித்த தெல்லிப்பளையைச் சேர்ந்த சிறந்த இசை நாடகக் கலைஞர் சி. செல்வராசா அவர்கள் நாரதராகவும், மகாலிங்கம் ஔவையாராகவும் நடித்தபோது ஏற்பட்ட அனுபவத்தைக் குறிப்பிடுகையில் 36 வயதுடைய இளைஞன் 80 வயது கிழவிபோல பேச்சு, சிரிப்பு, தளர்வு எல்லாமே அவரிடம் காணப்பட்டதாகவும் மகாலிங்கத்துடன் நடிக்கிறேனா அல்லது நிஜமாகவே ஔவையாருடன் நடிக்கிறேனா என்றும் மறக்க முடியாது. 'ஈழத்தில் ஒரு ஔவை கலைஞானி து. மகாலிங்கம் என்று குறிப்பிடுகின்றார்.

இசை நாடகத்துறையில் ஈழத்தில் தனக்கென தனியிடம் கொண்டவர் பாட்டிற்கும் நடிப்புக்கும் கலைஞானிக்குரிய பாணியே தனிப்பாணி. இரசிகர்களின் உள்ளங்களில் நீங்கா இடம்பிடித்து ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்தொன்பதாம் ஆண்டு இவ்வுலகைவிட்டு நீத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✠ சங்கீத பூஷணம் யோகாம்பிகை திக்கம் செல்லையாபிள்ளை

### - இசைத்துறை



பிறந்த திகதி :- 30.03.1933
முகவரி :- கந்தவனம்,
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

சிறுவயதிலிருந்தே இசை ஆர்வமும் பாடுந்திறனும் கொண்டவர். இவரது பெற்றோர் பொலிகண்டி கந்தவன ஆலயத்திற்கு தென்னிந்தியாவிலிருந்து நாதஸ்வர வித்துவான் தஞ்சாவூர் சுப்பையா அவர்கள் வந்து பொலிகண்டியில் தங்கியிருந்த காலத்தில் சங்கீதத்தை பயின்றதாகக் குறிப்பிட்டுள்ளார். இதனைவிட இராமநாதன் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் தென்னிந்தியாவைச் சேர்ந்த சுபத்திராதேவிமேனன், சரஸ்வதி மேனன் போன்ற பலரிடம் இசையைப் பயின்றுள்ளார். இசையைப் பயின்றதுடன் நாட்டிய நாடகங்களில் நடித்துத் தனது திறனை வெளிப்படுத்தியுள்ளார். 1961 இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் "சங்கீதபூஷணம்" பட்டம் பெற்றார்.

யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியில் முப்பது ஆண்டுகள் சங்கீத ஆசிரியாராகப் பணிபுரிந்தார். நாட்டிய நாடகங்களுக்குப் பாடல்கள் பாடி பல நாட்டிய நாடகங்களுக்கு அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தினைப் பெறுவதற்கு பங்காற்றி உள்ளார்.

நாட்டிய நாடகங்களுள் சூடாமணி, கீத உபதேசம், பரதன் புருஷோத்மன், திருவெம்பாவை, பீஷ்மர்சபதம், ருக்மணி கல்யாணம், கண்ணகி வழக்குரை, இராமர்பட்டாபிஷேகம், அகலிகை சாபவிமோசனம், போன்றவை அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தினைப் பெற்றமை இவருக்குப் பெரும்புகழை தந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

நவாலியூர் சோமசுந்தரப்புலவர் யோகாம்பிகை அவர்களுடைய தந்தை அமரத்துவம் அடைந்தபோது அமரகவியொன்று பாடியிருந்தார். அதில் செல்வி யோகாம்பிகையை "இங்கிதமாய் பாகார் கனிமொழியாள் பாடுங் குணமுடையாள் யோகம்பிகையென்னு முத்தமியை" என விளித்துப் பாடியுள்ளார்.

மேலும் இராமர் பட்டாபிஷேகம், ருக்மணி கல்யாணம், திருவெம்பாவை போன்ற நாட்டிய நாடகங்களை நடாத்தி அவற்றின் மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டு இராமநாதன் கல்லூரியில் 'லீலா' மண்டபத்தைக்கட்டுவித்த பெருமை இவரையே சாரும். முப்பது ஆண்டுகள் இராமநாதன் கல்லூரியில் இசை ஆசிரியராகப் பணியாற்றி தனது இறுதிக்காலம்வரை இறைபணியை மேற்கொண்டு தனது நிலத்தினை சமூகத்தின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு சமுர்த்திவங்கிச்சங்கம், பலநோக்கு மண்டபம் போன்றவற்றை அமைப்பதற்கு அன்பளிப்புச் செய்து 2008 இல் இவ்வுலகைவிட்டு நீத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ✠ மதுரைப் பண்டிதர் கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன்



பிறந்த திகதி :- 19.10.1921
முகவரி :- தும்பளை,
பருத்தித்துறை.

தமிழ்மொழிமீது அதிக பற்றுள்ளவர். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் தேர்ச்சியுடையவர். தமிழில் கவிதை, காவியம், நாவல், சிறுகதை போன்றவற்றை எழுதியுள்ளார். வானியியல் சம்பந்தமான ஆராய்ச்சிகளை மேற்கொண்டவர். தந்தையார் கணபதிப்பிள்ளை அவர்களிடம் சோதிடத்தைக் கற்றார். தநந்தயாரைப் போன்று பஞ்சாங்கத்தைக் கணிக்கக் கற்றுக்கொண்டார். வாக்கிய பஞ்சாங்கத்தை தந்தையின் காலத்திலிருந்தே கணித்து வருவதாக தும்பளையூர் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

இவர் ஆயிரத்து தொளாயிரத்து நாற்பத்தோராம் (1941) ஆண்டில் மதுரைப் பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்தார். ஓரிரு ஆண்டுகள் சுவாமி விபுலானந்தருக்கு ஆராய்ச்சி உதவியாளராகப் பணியாற்றினார். 1946 - 1965 வரை ஆசிரியராகக் கடமையாற்றினார். 1965 - 1967 வரை அரச பாடநூற்சபை நூல் எழுதுபவராகவும் 1967 - 1981 வரை பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் உளவியல் விரிவுயைாளராகவும் உதவி அதிபராகவும் பணிபுரிந்துள்ளார். இவர் எழுதிய நூல்கள் பற்றிய விபரம் மலரில் பிறிதொரு தலைப்பின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர் எழுதிய நூல்களுக்காக தேசிய, மாகாண, மாவட்ட மட்டங்களில் விருதுகள், பதக்கங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

**வடக்குக் கிழக்கு மாகாண மட்டத்தில் விருதுபெற்ற நூல்கள் :-**

| | |
|---|---|
| தமிழர் யாழியல் | - 1997 |
| யாழ்ப்பாணக் காவியம் | - 1998 |
| மஞ்சு காசினியம் | - 2001 |
| பருவப் பாலியர் படும்பாடு | - 2002 |
| மஞ்சு மலர்க்கொத்து | - 2002 |

**தேசியரீதியில் பெற்ற விருதுகள் :**

| | |
|---|---|
| சாஹித்திய ரத்னா | - 1999 |
| கலாகீர்த்தி | - 2005 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏனைய விருதுகள் :**

சம்பந்தன் விருது - 2001
வடகீழ் மாகாண ஆளுநர் விருது - 2003
தந்தை செல்வா அறக்கட்டளை விருது - 2004
கதிரவேற்பிள்ளை சனசமூகநிலைய விருது -

இவர் எழுதிய நாவல்களில் 'அன்னபூரணி' எனும் நாவல் 1942 இல் வெளிவந்தது. இதனைவிட தமிழன் (மதுரை) சக்தி, ஈழகேசரி போன்ற நாளிதழ்களில் இருபதுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் வெளிவந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் வானியல், உளவியல், தமிழ் இலக்கணம் சம்பந்தமான பல ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதியுள்ளார். தனது இறுதிமூச்சுவரை நூல்களை ஆராய்ந்து எழுதிக்கொண்டிருந்தார்.

## அணிகலன்கள் பற்றிய ஒரு பாடல்


பலவகை யொலியொடு படரும் ஓதையும்
நன்னாட் பார்த்து பொன்னை யுருக்கி
மணவினைக் கென்றே வரைந்திடு தாலியும்
அட்டியல் பதக்கம் பிலாக்கு மூக்குத்தி
பூரா னட்டியல் கீச்சுக்கல் லட்டியல்
கடுகுமணி கொலிசு கவுந்தோர் காதுப்பூ
வாளி சிமிக்கி வளையல் தோடு
பட்டணக் காப்புப் பீலிக்காப்புப்
பாதசர மொடு சங்கிலி சிலம்பு
தூங்கு கடுக்கன் நட்டுவக் காலி
அரும்பு மணிமுரு கொன்னைப்பூவும்
ஒட்டி யாண மொளிபெறு நுதலணி
அரைஞாண் கயிறோடரைமுடி சலங்கை
சித்திரவேலை செய்திடும்போது
புகழுறு கைபுனை பொற்றொழிலாளர்
பட்டடை மீது சுத்தியல் ஓங்கி
தட்டியடிக்கும் தகவுறும் ஓசையும்.

- காதலியாற்றுப்படை -
அமரர் பேராசிரியர் : க. கணபதிப்பிள்ளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✠ அண்ணாவியார் திரு. ந. சிவசுப்பிரமணியம் - இசை நாடகம்



பிறந்த திகதி :- 1939.06.25
முகவரி :- மாதனை,
பருத்தித்துறை.

வடமராட்சிப் பிரதேசத்தில் மாதனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் இசை நாடகம், சிந்துநடைக்கூத்து, பாரம்பரிய கலைகளான, கரகம், காவடி, கும்மிப் பாடல்களைப்பாடுதல், பயிற்றுவித்தல் ஆலயங்களில் பஜனை நிகழ்வுகளை நடாத்துதல், வில்லிசை ஆகியவற்றில் ஈடுபாடு உடையவர். நாடகத்துறையின் வளர்ச்சிக்காக மாதனை கலைவாணி நாடக மன்றத்தை உருவாக்கி நாடகத்துறைக்கு பெரும்பங்காற்றியுள்ளார்.

நாடகத்துறையைப் பற்றி குறிப்பிடும்போது ஆண்பாத்திரம் பெண்பாத்திரம் இரண்டிலும் சிறப்பாக நடித்து இரசிகர்களின் பாராட்டினைப் பெற்றுள்ளார். "காத்தவராஜன்" எனும் சிந்துநடைக்கூத்தினை பழக்கியும் அதில் சிவன், முத்துமாரி வேடங்களில் நடித்துள்ளார். 1975 ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்தில் திரு. அ. தாசீசியஸ் என்பவரால் நெறிப்படுத்தப்பட்ட நாடகமேடைப்பாடல் ஒலிப்பதிவின்போது திரு. எஸ். சின்னமணி, திரு. து. மகாலிங்கம் ஆகியோருடன் இணைந்து பாடல்களை பாடியுள்ளார். இப்பாடல்கள் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தினால் பல ஆண்டுகள் ஒலிபரப்பப்பட்டது.

இசை நாடகத்தினைப் பொறுத்தவரையில் நாடகங்களை நெறிப்படுத்தியும் நாடகங்களில் நடித்தும் புகழீட்டியுள்ளார். மனுநீதிகண்ட சோழன், மகிஷாமர்த்தனி, சத்தியவேள்வி, வள்ளிதிருமணம் ஆகிய இசை நாடகங்களை பாடசாலை மாணவர்களுக்கும். சிவசாயி கலாமன்ற கலைஞர்களுக்கும் பழக்கி கலைகளை வளர்ப்பதற்கு அரும்பாடுபட்டுள்ளார்.

**நடித்த நாடகங்கள் :**

| | |
|---|---|
| ஸ்ரீவள்ளி | - வேடன், குறத்தி, முருகன் |
| சத்தியவான் சாவித்திரி | - சத்தியவான் |
| நல்லதங்காள் | - நற்குலகேசரி (நல்லதங்காள்) |
| அரிச்சந்திரா | - நாரதர், சந்திரமதி |
| பட்டினத்தார் | - முன்பட்டினத்தார் |
| பாஞ்சாலிசபதம் | - பாஞ்சாலி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலம்புச்செல்வி - சேரலாதன், மாதவி
இலங்கேஸ்வரன் - இராமன்

மேலும் ஓரங்க நாடகங்களுள் சூழ்ச்சி தேரோட்டிமகள், ஏகலைவன் போன்ற நாடகங்களில் நடித்து தனது நடிப்புத்திறனை வெளிக்காட்டியுள்ளார்.

இவரது நாடகத்துறை வளர்ச்சிக்கு இவரது பெரியதந்தையார், தாய்வழி உறவினர்கள் காட்டிய ஆர்வம் காரணமாக நடிப்புலகிற்குள் பிரவேசித்தார். இவரது குருவான அண்ணாவியார் ச. செல்லத்துரை அவர்களிடம் நாடகக்கலையினைக் கற்றுள்ளார்.

மாதனை கண்ணகையம்மன் கோயில், நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் ஆலயம், தம்பசிட்டி பண்டாரியம்மன் கோயில் போன்ற பல ஆலயங்களில் இவரது நாடகங்கள் மேடையேற்றப்பட்டன.

கலைத்துறைக்கு இவர் ஆற்றிய பங்களிப்பினைப் பாராட்டி 1999ல் புலோலி சிவசாமி கலாமன்றம் "பவளவிழா" நிகழ்வினை ஒழுங்கு செய்து பொன்னாடை போர்த்தி கௌரவித்ததுடன் இவர் ஆலயங்கள் மீது இயற்றிப்பாடிய பாடல்கள் அடங்கிய சிறிய புத்தகத்தினையும் வெளியிட்டார். மேலும் 2000ஆம் ஆண்டில் வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவையினால் கலைத்துறைக்குக் இவர் ஆற்றிய பங்களிப்பிற்காக கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவர் நாடக உலகை விட்டுச் சென்றாலும் 'ஸ்ரீவள்ளியில்' இவர்பாடிய பாடல் இன்றும் நெஞ்சில் நிறைந்து நிற்கிறது.

உடுத்துறை, வெற்றிலைக்கேணி பகுதிகளின் ஊடாக பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளில் கடந்த சில நூற்றாண்டுகளாக கடல் வாணிபம் வளர்ச்சியடைந்தமையும் பலவகையான கடற்கலங்கள் பயன்படுத்தப்பட்டமையும் இக்கலங்களின் பயன்பாடே ஆகும். துறைமுகங்கள் தேசிய மயமாக்கப்பட்டமை தெருப்போக்குவரத்து விருத்தியடைந்தமை ஆகிய காரணங்களினால் வலுக்குறைந்து படிப்படியாக மறைந்துபோகும் நிலை மாறியது. இதனை மாற்றியமைத்து புதிய நிலைமைகளுக்கேற்ப கப்பற் போக்குவரத்து 'சர்வதேச கப்பற்போக்குவரத்தை' உருவாக்க முடியாது போய்விட்டிருந்த நிலமையையும் பொருளாதார ஆய்வாளர்கள் சுட்டிச் சென்றுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோருக்கும் கல்வி - என்ற இலக்கிற்கு
# ரியூசன்
# சவாலா / விடியலா.....?

**திரு. மு. சிறீபதி**
ஓய்வுபெற்ற வடமராட்சி வலய
உதவிக்கல்விப் பணிப்பாளர்.

**எமது கல்வி பற்றிய அறிமுகம் :-**

யாழ் குடாநாட்டிலே தனித்துவமாக அடையாளம் காணக்கூடிய நிலப்பரப்பே 'வடமராட்சி' என்ற பெயரால் குறிக்கப்படும் பகுதியாகும் என்பர்.

விவசாயம், மீன்பிடித்தல், மந்தை மேய்த்தல், சிறு குடிசைக் கைத்தொழில்களிலே ஈடுபடல் ஆகிய முறைகளாலே இம் மக்கள் இயற்கையோடு இணைந்து பிழைப்பு நடாத்தி வந்தனர். சமயம், சோதிடம், வைத்தியம், கலைகள் என்பனவும் அவர்களது வாழ்க்கையை வழிநடாத்தியவை எனலாம்.

காலனித்துவ ஆட்சியாளர்களின் ஆதிக்கம் சமயப்பாடசாலைகளின் உருவாக்கம் ஆகியன தாராண்மைவாத ஆங்கிலப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கு வழிவகுத்தன. உத்தியோகம், வெளிநாட்டுப் புலப்பெயர்வு ஆகியன புதிய வாழ்க்கை முறைகளாக வெளிக்கிளம்பின.

இலவசக்கல்வி, சுதந்திர இலங்கையின் உதயம், பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்டமை, சுயமொழிக் கல்வி, நவீன நலன்புரி அரசின் செயற்பாடுகள் ஆகியன பாடசாலைக் கட்டமைப்பிலே மாற்றங்களை உட்படுத்தின. இவையாவும் இலங்கைக்குப் பொதுவான இயல்புகள் வடமராட்சிக்கும் இயல்பானதே.

இன்றைய வடமராட்சிக்கல்வி பற்றிய சிந்தனையும் மேற்கூறப்பட்ட பொதுவியல்புகளுக்கு உட்பட்டதே, அதே சமயம் 'இனமோதல்' சூழ்நிலை என்பது சிறப்பு இயல்பாக நோக்கப்பட வேண்டியது. இன்று வடமராட்சியிலே 'கல்வி' பெறப்படும் முறையை நோக்கும் போது சில பண்புகளை அவதானம் செய்தல் தகும்.

**ரியூசன் ஆரம்பித்த முறை :-**

'கல்வி நிலை' என்பது படிப்புடன் நெருக்கமான தொடர்புடையது. படிப்பு என்பது 'படிதல்' ஆகிய காரணத்தின் விளைவு, படிதலுக்குப் பயிற்சி அவசியம், பயிற்சி ஒழுங்குபடுத்தப்பட்ட முறைமையின் பெறுபேறு. கல்வி பற்றிச் சிந்திப் போருக்கு இவை பற்றிய தெளிவு ஆதாரமாய் அமைதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பயிற்சியை வழங்குவதிலே பாடசாலையிலே அமைந்துள்ள 'வகுப்பறைகள்' அடிப்படை அலகுகளாக அமைகின்றன. இந்த அலகுகள் 'செம்மையாக' அமையாத முறைமையினாலே உருவானவையே 'பிறைவேட் ரியூசன்' என்ற முறையாகும்.

இலவசக்கல்வி அறிமுகமாகி மாணவர்களின் தொகை பாடசாலையிகளிலே அதிகரித்த பொழுது பாடசாலைகளிலே உள்ள வகுப்பறைகள் 'செம்மையாக' இயங்க முடியாத நிலை உருவாகியது. வகுப்பறையிலே உள்ள மாணவர்களின் 'தனியாள் வேறுபாடுகள்' வகுப்பறைக் கற்பித்தல் முறைக்கு பெரும் சவால்களாக அமைந்தன.

குழுமுறைக் கற்பித்தல், கற்பித்தல் நுட்பங்கள் ஆகியன கற்பித்தலிலே கடைப்பிடிக்கப்பட வேண்டிய அதிமுக்கிய நுட்பங்கள் என்று விதந்துரைத்தனர் கல்வியியலாளர்கள். ஆயினும் அகல்விரிவான, பாடத்திட்டங்கள் தொடர்ந்து 'வகுப்பறையின் செம்மையான தொழிற்பாட்டிற்கு' சவால்களாகவே விளங்கின. இத்தகைய சிக்கல்கள் தோன்றிய போது 'பாடசாலை முடிந்தபின் மேலதிக வகுப்புக்கள்' என்பதன் மூலம் இதற்குத் தீர்வுகாணப் பாடசாலை நிர்வாகத்தினர் முற்பட்டனர். மாணவர்களின் அக்கறையின்மை, மனச்சோர்வு, பசி, விளையாட்டின் பால் கொண்ட ஈடுபாடு ஆகியன மேலதிக வகுப்பு என்ற தந்திரம் வெற்றியளிக்கத்தடை விதித்தன.

இந்த இயல்புகளாலே 'மேலதிக வகுப்பு' என்ற தந்திரம் தோல்வியடைய கல்வியின் பால் அக்கறையுள்ள பெற்றோர்கள் இன்னொரு தந்திரத்தை - மாற்றுவழியைக் கையாளுகை செய்தனர். அது பாடசாலையிலே வகுப்பறைப் பாடங்களைக் கற்பித்தவர்களிடமும் மற்றையோரிடமும் பிள்ளைகளைப் பாடம் படிக்க வைத்தமையாகும். பிள்ளைகள் அதிகாலை வேளையில் அல்லது மாலை வேளையில் பெற்றாரால் நியமிக்கப்பட்ட/ தீர்மானிக்கப்பட்ட ஆசிரியர்களிடம் பாடம்படித்தனர். (வடமராட்சியிலே புகழ் பெற்ற பாடசாலை ஆசிரியர் அல்லாத ஆசிரியராக விளங்கியவர் 'வெற்றிவேல்'' மாஸ்டர் என்பவராவர் தொடராகப் பயிற்சிகளைச் செய்வித்தல் மனனம் பண்ணுவித்தல் ஆகியனவற்றை 'சில கைங்கரியங்களுக்கூடாகச்' செய்விக்கும் திறனுடையவராக இவர் விளங்கினார்) இப்பாடம் படித்தலுக்கு மாணவன் 'கிரயம் / சம்பளம் வழங்க வேண்டியதாக இருந்தது ஹாட்லிக் கல்லூரி போன்ற பிரபலமான பாடசாலைகளிலே கற்ற மாணவர்களும் இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல. ஏனெனில் இப்பாடசாலை தரம் நான்கிலேயே தெரிவுப் பரீட்சை மூலம்தான் மாணவர்களை அனுமதித்தது. இக்கட்டுரையாசிரியர் அறிந்தது போலவே பிரபல அதிபர் என்று கூறப்படும் அதிபர் காலத்திலேயே ஹாட்லிக் கல்லூரியிலே இது நிகழ்ந்தது. வகுப்பறைகள் அன்றும் 'செம்மையாம்' தன்மையைச் பேணவில்லை என்பதும் உண்மையே.

மேற்கூறப்பட்ட நிலைமை இருபதாம் நூற்றாண்டின் ஐந்தாம் ஆறாம் தசாப்தங்களிலே நிகழ்ந்தவை. இந்த 'ரியூசன்' முறையிலே நல்லியல்புகளும் இருந்தன, தீய இயல்புகளும் முளை விட்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல்லியல்புகள் ஆவன :-**

- மாணவரின் இயலாமைக்குரிய / கவனம் எடுக்காது விட்டிருந்த / தெளிவற்ற பாடஅலகு / பாடம் கவனத்திலே கொள்ளப்பட்டமை.
- மாணவனுக்கும் ஆசிரியனுக்கும் இடையேயுள்ள தொடர்பு பாடத்தைத் தெளிவாக்கல் / தெரியப்படுத்தலுடன் தொடர்புடையதாக இருந்தது.
- மாணவர்களின் பெற்றோர்களினாலே ஆசிரியர்கள் தீர்மானிக்கப்பட்டனர்.
- ரியூசன் ஆசிரியருக்கும் பெற்றோருக்கும் இடையே நல்ல தொடர்புகள் காணப்பட்டன.
- மிக முக்கியமானது பாடசாலையின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்காமை.

**முளைவிட்ட தீய இயல்புகள் :-**

'ரியூசன்' சென்ற மாணவர்கள் வகுப்பறையில் பிரத்தியேகமாய் / மறைமுகமாக சலுகைகளுடன் கவனிக்கப்பட்டமை. ரியூசன் சென்ற மாணவர்களுக்கு வகுப்பறையிலே நல்ல 'சபாஷ்' கிடைக்கப்பெற்றது. இதனால் மாணவர்கள் கூடுதலாக 'ஆசிரியர் வழங்கும் மேலதிக ரியூசன்' வகுப்புக்களுக்குச் செல்ல ஆர்வம் கட்டினர்.

'ரியூசன்' சென்ற மாணவர்களை இலகுவாக 'சித்தி'யடையவைப்பதற்குரிய 'வாய்பாட்டு முறைகள்; மனனம் பண்ணும் முறைகள்; மாணவர்களின் சுய கற்றலுக்கு மெல்ல மெல்ல ஊறுவிளைவிக்கத் தொடங்கின.

இலவசக் கல்வி சவாலுக்குரியதாக மாற்றமுறத் தொடங்கியது. கல்வியின் பெறுபேறுகள் மத்தியதர வகுப்புக்குரியதாகவே மாறும் இயல்புகளை தன்னகத்தே கொள்ளத் தொடங்கின.

இக்காலத்திலே தீமைகளைவிட நன்மைகளே பெருமளவிற்குணரப்பட்டன. கல்வி நிர்வாகத்திற்கு இத்தகைய 'ரியூசன்' முறைகள் வெளிப்படையான அச்சுறுத்தல்களை வழங்கவில்லை. அதனால் போலும் கல்வி நிர்வாகத்தின் கண்காணிப்பு, மேற்பார்வை ஆகினவற்றிலே உள்ள போதாமைகள் உணரப்படாது 'சமாளிக்கும்' மனப்பாங்கு கல்வி நிர்வாகத்தில் தலை காட்டத் தொடங்கியது.

**ஏழாம் தஸாப்தகால ரியூசன் :-**

இருபதாம் நூற்றாண்டின் ஏழாம் தசாப்தத்தை அடுத்து மூன்றாம் நிலைக்கல்வி பொதுக் கல்வி விருத்தியடைந்த அளவிற்கு அகல்விரிவு பெறத் தவறியது. க.பொ.த உ. தரம் கல்வித்திறமைசார் / சோதனைச் சித்திசார் போட்டியாக உருவெடுத்தது. அதனால் A/L மாணவர்கள் கூடுதலான பயிற்சி பெற வேண்டியவர்கள் என்ற கருத்து பெற்றோர் மத்தியில் நன்றாக 'உரு' வெடுக்கத் தொடங்கியது. A/L வகுப்புக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரியூசன் அவசியமாகி இன்று முன் பள்ளிக் குழந்தைகளுக்கும் தேவை எனக் கூறும் அளவிற்கு 'ஜனநாயகப்' படுத்தப்பட்டு விட்டது.

ரியூசன் இன்று பாடசாலைக் கல்வி அமைப்பினை விட 'மேலோங்கி விட்டதோ எனக் கூறும் அளவிற்கு வலுவுள்ளதாய் மாறி விட்டது. எனக் கூறும் வாதமும் உண்டு.

ரியூசன் பாடசாலை கல்வியுடன் சமாந்தரமாகச் செல்லும் பிரதான அமைப்பு / உப அமைப்பு என்று கூறும் கருத்தும் உண்டு.

ரியூசன் மயமாக உள்ள கல்வி முறையிலே சில நிறைகளும் உள. சில தீமைகளும் உள.

**நன்மைகள் :-**

❖ ரியூசனுக்கு வரும் ஆசிரியர் அன்று தாம் 'சொல்ல' வரும் விடயத்தினை நன்கு ஆயத்தமாக்கி / தனக்குத் தெரிந்ததை நல்ல 'கூறு' முறையிலே கூறுவதற்கு ஆயத்தமாகி வருகின்றனர்.

❖ ஆசிரியர் கூறும் விடயங்களை கிரகிப்பதற்கு தயாராக உள்ள 'நன்னூல் இலக்கண நூல் கூறும் தகுதியுடைய' மாணவன் உள்வாங்கிக் கொள்ள முடியும். (கோடன் மரபே கூறுங்காலை என்ற நன்நூல் சூத்திரம் கூறுவது)

❖ சோதனை சித்தியடைவதற்குரிய குறுக்குவழி உபாயங்களும் வழங்கப்படுவதால் சோதனையை ஆதாரமாகக் கொண்ட கல்வி இலக்கு ஓரளவு நிறைவு செய்யப்படுகின்றது.

**தீமைகள் :-**

❖ பெற்றார்களுக்கு நிறைவான பொருளாதாரப் 'பளு' காணப்படுகின்றது. பெற்றார்களுக்கு மேலதிகச் செலவு ஏற்படும் சந்தப்பத்திலே, பிள்ளைகளின் வீட்டுழைப்பும் இழக்கப்படுகின்றது. வீடுகளுக்கூடாக வெளிக்கிளம்பும் பிள்ளைகளின் ஆளுமைப்பண்பும் இழக்கப்படுகின்றது. அந்த வாய்ப்பு இல்லாதொழிக்கப் படுகின்றது என்றே கூறவேண்டும்.

❖ எல்லாம் 'நோட்ஸ் மயம்' என்பதால் சுய ஆளுமைக் கூறுகள் வளர விரிவடைய வாய்ப்பு இல்லாது போய்விடுகின்றது.

❖ சுய கற்றல் சந்தர்ப்பங்கள் 'திருகிக்' கொல்லப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ மாணவர்களின் பொழுதுபோக்கு இயல்பு திருடப்படுகின்றது.

❖ ஓய்வற்ற நிலை காணப்படுகின்றது.

❖ மேற்கூறப்பட்டவற்றை விட இப்புதிய 'கற்றல் ஒழுங்கு' பாடசாலைக்கலைத் திட்டத்திற்கே பெருஞ்சாவாலாக அமைகின்றது. இலவசக் கல்வித்திட்டம் தூர தூக்கி எறியப்படும் அவல நிலை தோன்றுகின்றது.

❖ பாடசாலையின் இணைப்பாடவிதான செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன பாடசாலையின் நடவடிக்கைகளே பாதிக்கப்படுகின்றன.

❖ மேற்கூறிய பொதுவான கருத்துகள் வடமராட்சிப் பிரதேச கல்வியமைப்புக்கும் பொருத்தமுடையதே.

2007 இல் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் 2007இல் 11082 மாணவர்கள் ஆரம்பம், இடைநிலை, உயர்நிலை ஆகிய பிரிவுகளிலே கல்விபயில்கின்றனர். 2007 இல் 585 ஆசிரியர்கள் கடமையாற்றினர். இஃது 1:19 என்ற ஆசிரிய மாணவ விகிதசமம் உடையது.

**கல்வி அறுவடை நிலை :-**

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராமசேவகர் பிரிவில் உள்ள 'ரியூட்டரி'களின் தொகை சமுர்த்தி உத்தியோகத்தர் மூலம் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது. அதன்படி மாணவர் 3154

ஆசிரியர் 230 விகிதாசாரம் 1:13 ஆக இருந்தது. சமுர்த்தி அலுவலர்களால் பெறப்பட்ட தரவுகள் எவ்வளவு நம்பகமானவை என்பது மேற்கொண்டு செய்யப்படும் நுண்ணாய்வு மூலமே தெளிவாகும்.

இவ்வாய்வில் இருந்து 'ரியூசனுக்குச்' செல்லாத மாணவர்கள் உளர் என்பது தெளிவு அத்தொகையும் கணிசமானதாக உள்ளது என்பதும் தெளிவு.

ரியூசன் முறை நடைமுறையிலே இருப்பதால் பாடசாலையின் கலைத் திட்டச் செயற்பாடுகள் பல இடங்களிலே 'ஏனோ தானோ' என நடாத்தப்படுவதையும் மறுப்பதற்கில்லை.

பாடசாலை அமைப்பு ரியூசன் அமைப்பு என்ற 'இரட்டை அமைப்புச் செயல்முறை சோதனைச் சித்திகளில் என்ன அடைவுகளை வழங்கியுள்ளது.

வடமராட்சி வடக்கு பிரதேசசெயலர் பிரிவிலே க.பொ. த. சா. த பரீட்சையிலே பின்வரும் ஆண்டுகளிலும் சித்தியடையாதோர் தொகை பின்வருமாறு அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | வீதம் | தொகை |
|---|---|---|
| 2004 | 49.6% | 413 |
| 2005 | 47.6% | 425 |
| 2006 | 48% | 373 |

A/L பரீட்சையில் Yes எடுத்து பல்கலைத் தகுதிபெற்ற மாணவர்களின் தொகை

| | | | |
|---|---|---|---|
| 2004 | $\frac{250}{414}$ | - | 60.3 |
| 2005 | $\frac{247}{409}$ | - | 60.3 |
| 2006 | $\frac{220}{357}$ | - | 61.6 |
| 2007 | $\frac{248}{341}$ | - | 72.7 |

மேற்கூறிய தரவுகளை நோக்கும் போது O/L பெறுபேறுகள் போதுமானதாக இல்லை என்பதும் A / L பெறுபேறுகள் திருப்திகரமானதாக உள்ளன என்றும் பொது நிலையிலே கூற இடமுண்டு.

**கல்வி அமைப்பின் சில குறைகளும் சில தீர்வுகளும் :-**

இச்சந்தர்ப்பத்திலே எமது கல்வியின் பெறுபேறுகளின் சாரம், கல்வியின் பொது இயல்புத் தன்மை ஆகியனவற்றின் அடிப்படையில் சில அவதானிப்புகள் கூறுதல் தகும்.

கல்வி சகலவகையான நிலைத்த அபிவிருத்தி, மனித உரிமை ஆகியனவற்றின் வளர்ச்சிக்கும் அடிப்படை. ஆகவே கல்வி முறைப்படி அமைதல் வேண்டும். இன்று உள்ள பிரதான பிரச்சனைகள்.

I. கல்வியில் சமவாய்ப்பு சமத்துவம் வினாவிற்குரியதாக உள்ளமை. பாடசாலை அனுமதி, கற்றல் வாய்ப்புக்கள் என்பனவற்றின் அடிப்படையில் இவை அமைகின்றன.

II. இலவசக் கல்வி சவாலுக்குரியதாக மாறியுள்ள தன்மை.

III. கற்றல் முறை மாறிவிட்ட தன்மை கல்வியியலாளர்கள் கற்றல் முறைகளின் பல்வேறு பரிமாணங்களை எடுத்து இயம்புவர். இன்று 'ரியூட்டரி' முறை கல்வி என்றால் சோதனை சித்தியடைதல் என்பதனையே கல்வி மோட்சமாக முன்வைப்பதால், 'நோட்ஸ்' பிரதானமான கற்றல் 'மூலம்' ஆகக் கருதப்படுகின்றது. ஆசிரியன் மாணவனுக்கு 'பால் போச்சியில்' விட்டு எல்லாவற்றையும் ஊட்டி விட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு நிலை பெற்றுவிட்டது. கற்பிக்கின்ற / கற்றலுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டுகின்ற ஆசிரியன் இன்று தேவையற்றவனாகிவிட்டான். 'சுய சிந்தனை' வளர்க்கப்படா விட்டால் எமது கல்வி எதனைச் சாதிக்கப் போகின்றது.

இன்று A/L இல் மூன்று `A' எடுத்த மாணவர்களுக்கு பாடசாலை தொடக்கம் ரியூட்டரி பொது அமைப்புக்கள் யாவும் பாராட்டுவிழாக்களை மிக எடுப்பாகவும் பிரமாதமாகவும் நடாத்துகின்றனர். திட்டமிடப்பட்ட செய்நேர்த்தியுடைய தகைசார் விளம்பர ஏற்பாடுகள் யாவும் 'ரியூசன்' அமைப்பிற்குரிய விளம்பர ஏற்பாடுகள் என்பதைச் சிந்தித்தல் தகும். ஏனெனில் இம்மாணவர்கள் அனேகமாக பெருந்தொகையானோர் இவ்வறுவடைக்கு 'ரியூசன்' அமைப்வே காரணம் என அறிவர். 3 A எடுக்காதவர்கள் அல்ல முக்கியம் சித்தியடையாத மாணவர்களின் 'கதி' என்ன என்பதையும் நோக்குதல் வேண்டும்.

**இதற்கு யாது செய்யலாம் :-**

'ரியூசன்' அமைப்பு பாடசாலை அமைப்புடன் முரண்படுகின்றதா அல்லது உதவி செய்கின்றதா என்பதில் வேறுபட்ட கருத்துக்கள் உள. ஆனால் மாணவர்கள் பாடசாலையில் இருக்கும் காலத்திலே அவர்கள் கற்றலுக்கு வழிகாட்டப்பட வேண்டியவர்கள். அதனால் 'ரியூசன்' அமைப்பு விட்ட குறைகளை பாடசாலை நிவர்த்தி செய்ய வேண்டியது அவசியம். 'ரியூட்டரிகளில் பாடங்கள் பெரும்பாலும் 'சொல்லப்படுகின்றன.' அதனால் பாடசாலைகளே 'கற்பித்தல்' கற்றலுக்கு துணைசெய்தல் என்ற முறைகளை 'வகுப்பறைச் சூழலிலே மேற்கொள்ள முடியும். அது சில வேளைகளிலே கற்றல் தேர்ச்சியிலே பின்னடைந்த மாணவர்களுக்கு நெருக்கமான உதவிகளை ஆற்றுதல் சாத்தியமாகலாம்.

பாடசாலையில் உள்ள ஆசிரியர்களிலே பெரும்பாலும் ஏன் எல்லோருமே ஆசிரியர்கள் தான். தகுதியான பிரிவுத்தலைவர் பாட இணைப்பாளர், உப அதிபர்கள், அதிபர்கள், சேவைகால ஆலோசகர், விசேட கல்விப்பணிப்பாளர்கள் பணிப்பாளர்கள் ஆகியோர் தகுந்த முறையிலே (பாரபட்சமற்ற) கண்காணிப்பையும் மேற்பார்வையையும் வழங்கினால் எல்லாரும் நல் சேவையாளராக மாறுவர். நிர்வாகச் சீர்கேடு, ஊழல் என்பனவே நல்ல அதிகாரிகளை அதிபர்களை வழங்காமைக்கும் பல கல்வித் துன்பங்களுக்கும் காரணங்கள் ஆகும்.

இன்னொரு அவதானமும் இங்கு முன்வைக்கப்படுதல் அவசியமானது. மாணவர்களின் கற்றல் தொழிற்பாட்டிலே பரம்பரையும் சூழலும் பெரும் தாக்கம் விளைவிப்பன என்பது அகங்கை நெல்லிக் கனியாகும். இனமோதல், இனமோதலால் மத்திய வகுப்பைச் சார்ந்தோர் புலம் பெயர்ந்த நிலை ஆகியவற்றால் ஆசிரியர்பணி அர்ப்பணிப்பையும் வேலைப்பளுவையும் பெருமளவு வேண்டி நிற்கின்றது.

ஏனெனில் இன்று கல்வி கற்கும் வகுப்பினரிலே தாழ்மத்திய தர வகுப்பினர் தொழிலாளர் விவசாயிகள் ஆகியோரின் பிள்ளைகள் முக்கியம் பெறுகின்றனர். அவர்களது பரம்பரைச் செல்வாக்குக் கற்றலுக்கு பெரும் உந்து சக்தியாக அமையாது. அதனால் அவர்களுக்குக் கூடுதலான பயிற்சிகள் வழங்கபடுவது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு ஆசிரியர் மிக உற்சாகமான பல மகிழ்ச்சிகரமான உத்திகளுடன் கற்றல்வழி காட்டல்களை அமைக்க வேண்டியது அவசியம்.

உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவு, புலப்பெயர்விலே உள்ள ஈர்ப்புவிசை, கல்வி அமைப்பில் தலையீடு செய்யும் INGO, NGO, IGO அமைப்புகளின் மூன்றாம் விசைச்செயற்பாடு ஆகியனவற்றுக்கும் இவ்விடத்திலே பதில் கூற வேண்டியதும் அவசியமே. ஆனால் அது தனித்துக் கவனிக்கப்பட வேண்டியது.

## பருத்தித்துறைத் தோசை

ஓடக்கரைத்தெருவில் கல்வீட்டுத் தெய்வானையாரின் பேர் பெற்ற தோசை தான் 'பருத்தித்துறைத் தோசை' என்று புகழ் படைத்தது. தெய்வானையாரின் மகள் 'மாணிக்காய்ச்சி' யினது தோசையின் மணமும், குணமும், மென்மையும், பெருமையும் அயல் ஊர்களிலெல்லாம் பிரசித்தமானது. ஏன் வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு வரையிலும் கூட.

மாணிக்காய்ச்சியின் உறைத்த வதக்கல் சம்பலுக்கு நிகரே கிடையாது. அதற்கு நிகர் அதுவேதான் அந்தச் சம்பலும் தோசையும் பருத்தித்துறை வட்டார மக்களின் தொண்டைக்குள் இன்றும் கூடச் சுவைத்துக்கொண்டே இருக்கிறது. அதை நினைத்து நினைத்து வாயூறிக்கொண்டேயிருக்கிறார்கள். சப்புக்கொட்டுகிறார்கள்.

இந்தச் சம்பலை நீங்களும் செய்து பார்க்கலாம். தேங்காய் எண்ணெயைக் கொதிக்க வைத்து 20 செத்தலை பொரித்தெடுக்கவும். பிறகு ஒரு சிறங்கை (50 கிராம்) உளுத்தம் பருப்பை கொதிக்கும் எண்ணெயில் போடவும் ஐந்து நிமிஷத்தால் பெரிய குறுணலாக அரிந்த 2 சிறங்கை வெங்காயத்தைப்போடவும். அது பொன்னிறமாகப் பொரிந்து கலகலவென மிதக்க 2 கருவேப்பிலையை உருவிப் போட்டபின் இறக்கி வடிப்பானில் ஊற்றவும். அக்கலவையை அம்மியில் அரைத்து, அதனுடன் ஒரு பெரிய தேய்காய் முடியின் துருவலையும் சேர்த்து அரைத்து பழப்புளியைக் கரைத்து விட்டுக்கொள்க. சம்பலில் புளி கொஞ்சம் சுண்டிக்கொண்டிருக்க வேண்டும்.

இரண்டு சுண்டு நல்ல உழுத்தம் பருப்பை ஊறப்போடுங்கள். ஒரு சிறங்கை கறுப்புப் புழுங்கல் அரிசியோடு சேர்த்து 2 சுண்டு வெள்ளை ஈர்க்குப் பச்சை அரிசியை புறம்பாக ஊற விடுக. 2 சிறங்கை வெந்தயத்தையும் ஊறப் போடுக. பிற்பகல் 3 மணிக்கு அரிசியை முதலில் இடித்து மிகச் சிறிய கண் அரிப்பாவில் இரண்டு முறை திருப்பி அரித்த மாவை குழைத்துக் கொள்க. கழுவி எடுத்த உழுந்தையும் வெந்தயத்தையும் ஆட்டுக்கல்லில் மிகப் பசுந்தாக அரைத்துக் குழைத்து அரிசி மாவோடு கலந்து கூழிலிலும் கொஞ்சம் தடிப்பாகக் கரைத்து இரவு புழிக்க வைக்கவும். காலையில் அரைத்த மிளகு, சீரகம் தூவி உப்பு நீர் விட்டுக் கலக்கி தோசை வார்த்து சீரான அளவான நெருப்பில் வேகவிட்டுப் புரட்டி எடுக்கவும்.

இதுதான் பருத்தித்துறைத் தோசையும், சம்பலும் நீங்களும் செய்து சுவைத்துப் பாருங்கள். சில நாள் பிழைக்கலாம். பலநாளில் பதம் சரி வந்துவிடும். பிடிபட்டு விடும்; இந்த நல்ல உறைப்புச் சம்பலோடு மாங்காய் வெள்ளைச்சம்பலும், குறுனல் பயிற்றங்காய் பால்க்கறியும், பிஞ்சு மிளகாய் வதக்கல்கறியும், வெங்காயக் குழம்பும், மிளகாய்ப் பொடியும், இடையிடையே மாறி மாறி வரும். இவை தோசையின் சுவையை மேலும் தூக்கி விடும். இவ்வாறான சுவை எல்லாம் இனி எங்கே கிடைக்கும் என எல்லாரும் ஏங்குகின்றார்கள்; அங்காலாய்கிறார்கள்; ஆவலாதிப்படுகிறார்கள்; தவம் இருக்கிறார்கள்.

**அமரர் பண்டிதர் க. ஏரம்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைமாற்றச் சடங்குகளுக்கிடையிலேயேயும் நிலைமாறா சமூக அமைப்புக்கள்

## - மாதனை கிராமத்து புதுமனை புகுதல் தொடர்பான ஒரு மானிடவியல் நோக்கு -

**சண்முகராஜா சிறிகாந்தன் B.A**
மானிடவியல் சிறப்பு.

சடங்குகள் மனித வாழ்வியலில் பிரிக்க முடியாத அம்சமாக தொடர்கின்றன. உலகப் பண்பாடுகளிலிருந்து எமது சமூகங்கள் வரை சமூகங்களின் செயற்பாட்டுக்கும் அச்சமூகங்களின் அங்கத்தவர்களின் இயங்கு நிலைபற்றிய புரிதலுக்கும் சடங்குகள் பற்றிய பகுப்பாய்வு துணையாகின்றது. ஒவ்வொரு சடங்கிற்கும் தனித்துவமான பண்புகளும், செயல்களும், காரணகாரியங்களும் உள்ளன. இவை பற்றிய அறிவுபூர்வமான பகுப்பாய்வின் போது குறித்த சடங்குகளுக்கும் அவற்றினை ஆற்றுகின்ற சமூகங்களுக்கும் இடையிலான உறவும் அச்சமூகம்சார்ந்த ஏனைய விடயங்களும் தெளிவாக்கப்படுகின்றன. இத்தகைய ஒரு பின்னணியிலேயே மானிடவியலில் சடங்குகள் பற்றிய ஆர்வமும் அவைசார்ந்த ஆய்வுகளும் முக்கியத்துவம் பெறுகின்றன.

சடங்குகள் அவற்றின் தன்மை ரீதியாக வகைப்படுத்தி மானிடவியல் ஆராய்கின்றது. மானிடவியலாளர்கள் சடங்குகளை சமயம் சார்ந்த சடங்குகள் என்றும் சமூகம் சார்ந்த சடங்குகள் என்றும் வகைப்படுத்தியுள்ளனர். இச்சடங்குகள் பற்றிய ஆராய்ந்த ரோனால் கிரிம்ஸ் (Ronald Grime) நிலைப்படுத்தும் சடங்குகள், நிலைமாற்றும் சடங்குகள் என்பவற்றினுள் இவற்றினை பகுத்தாய்ந்து கொள்வதன் மூலம் குறித்த சமூகத்தின் அமைப்பினையும், அதன் இயங்கியல் விசையினையும் புரிந்து கொள்ள முடியும் என்று கூறுவர். இந்த வகையிலேயே எங்கள் பண்பாட்டுப் புலங்களில் தனித்துவமாய் விளங்குகின்ற புதுமனை புகுதல் தொடர்பான சமூக நடைமுறைகளை மற்றும் சடங்குகள் பற்றிய ஒரு நுண்நிலை நோக்காக இக்கட்டுரை அமைகின்றது.

தமிழர் பண்பாட்டில் மரபார்ந்த நடைமுறைகள் இன்னும் பேணி நிற்கின்ற வடமராட்சியின் மையமாக கொள்ளப்படும் பருத்தித்துறை நகரத்திற்கு அண்மையில் உள்ள ஒரு பண்பாட்டுப் புலமாகவே மாதனை அமைகின்றது. இந்த மாதனை கிராமத்தின் சமூககட்டமைப்பு தச்சாசாரியார் எனும் சமூக வகுப்பினரைக் கொண்டதாக உள்ளது. யாழ்ப்பாணச் சமூகத்தின் குடியமைப்பானது சாதிய கட்டமைப்பின் அடிப்படையில் அமைந்த ஒன்றாக உள்ளது. சாதியக்கட்டமைப்பின் அடியாகவே பண்பாட்டியல் கூறுகள் நிலை பெற்றதும் சமூக வரலாறாக பதிவு பெறும். எனினும் கால ஓட்டத்தில் நிகழ்ந்த பல்வேறு புறக்காரணிகளின் விளைவாக சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டமைப்பிலும் பண்பாட்டிலும் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்தன. இந்த மாற்றங்கள் குறித்த சமூகப்புலத்தின் இடவமைவு, அவர்களின் மீதான புறக்காரணிகளின் செல்வாக்கு, இந்த புறக்காரணிகளை குறித்த சமூகத்தினர் எதிர்கொண்ட விதம் என்னும் பல்வேறு விடயங்களினால் நிர்ணயமானது.

ஓரே விதமான சடங்குகளும் அவை சார்ந்த செயற்பாடுகளும் பல்வேறு புலங்களில் வேறுபட்டு அமைவதற்கு சில புலங்களில் அவை தனித்துவமான கூறுகளுடன் இருப்பது மானிடவியல் ஆர்வலர்களினை ஈர்த்து நிற்பதற்கு இதுவே அடிப்படையாக அமைகின்றது. இத்தனை ஓர் ஆர்வமே மாதனைப் புலத்திற்கு இட்டுச் சென்றது.

நகரச் சூழலோடு கிராமியச்சூழலும் இணைந்த ஒரு பண்பாட்டுப் பிரதேசமாகவே மாதனை காணப்படுகின்றது. இங்கு அண்ணளவாக 250 குடும்பங்கள் வாழ்கின்றன. இவர்களில் அதிகமானவர்கள் பாரம்பரியமாக பேணிவரும் தச்சுத் தொழிலையே மேற்கொள்ளுகின்றவர்களாகவே காணப்படுகின்றார்கள். இவ் சமூகத்தினர்கள் பஞ்சகம்மாளர்களில் ஒருவராக உள்ளடக்கப்படுகின்றனர். அந்தவகையில் இவர்களின் தோற்றம் தொடர்பான ஐதிகமும் இவர்களின் வாழ்வியல் நடைமுறையில் ஒரு தனித்துவத்தினை ஏற்படுத்தியுள்ளது. அந்தவகையில் ஸ்தபதி T.P. கணேசமூர்த்தி என்பவர் தனது ஆயாதி சிற்பரகசியம் எனும் நூலில் "பஞ்ச கம்மாளர் என்பவர்கள் விஷ்கர்மாவினால் இறைபணிக்காக படைக்கப்பட்டவர்கள்" என்று குறிப்பிட்டுள்ளார். இவர்களுடைய வாழ்க்கை முறையானது ஏனைய சமூகங்களில் இருந்து வேறுபட்டதாக உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவர்களின் வாழ்வியல் நடைமுறையின் வித்தியாசத்தின் பின்னணியிலேயே இவர்களுடைய சடங்குகள் காணப்பட்டாலும் இவ் ஆய்வு குறிப்பாக புதுமனை புகுதல் சடங்கு பற்றிய ஒன்றாகவே அமைகின்றது.

எல்லாச் சமூகத்தினர்கள் மத்தியிலும் கல்வீடு என்பது வாழ்க்கையின் சமூகமாற்றமாக மட்டுமன்றி சாதனையாகவும் அமைகின்றது. அந்தவகையில் உலகப்பண்பாடுகள் அனைத்திலும் பழைய வீட்டில் இருந்து புதுவீட்டில் வாழப் போகும்போது அதனை ஒரு சடங்கின் வழியே மேற்கொள்ளுதல் ஒரு மரபாகியுள்ளது. ஏனைய சமூகங்களில் இவ் சடங்கானது சமூகம் சார்ந்த சடங்காக இருக்கின்றபோது எமது சமூகப்புலங்களில் இச் சடங்கானது சமயம் சார்ந்த சிந்தனைகளுடன் மிக இணைந்த நிலையில் நோக்கப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

வீடு கட்டுதல் என்பது ஒரு பெரிய சமூகம்சார் விடயமாக உள்ளது. இங்கு வீட்டுக்கு நிலம் எடுப்பதில் இருந்து வீட்டுக்கு குடிபுகுதல் வரையாக பல்வேறு சடங்கு நடைமுறைகள் காணப்படுகின்றன. இவ் பல்வேறுபட்ட சடங்கு முறைகளில் அதிகமானவை இவ் சமூகவகுப்பினராலேயே மேற்கொள்ளப்படுகின்றன. அந்தவகையில் புதுவீடுகட்டி அவ் வீட்டில் குடும்பத்துடன் வாழ்வதற்குரிய ஓர் ஆரம்ப நிகழ்வாகவே இவ் வீடு குடிபுகுதல் சடங்கு காணப்படுகின்றது. பின்வரும் சடங்குசார் நடைமுறைகள் இவர்கள் பண்பாட்டுத் தனித்துவத்தினை எமக்கு வெளிப்படுத்தி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புது வீடு கட்டினால் அதில் அவ் பிரதேச மக்கள் தாம் வாழ்வதற்கு முன்னர் அங்கு பசு மாட்டினை தங்க விடும் மரபினை நாம் அவதானிக்க முடிகின்றது. இந்தவகையில்த்தான் சடங்கு நிகழ்வுக்கு முன்னைய நாள் வீட்டினுள் பசு மாட்டினை வீட்டின் உரிமையாளர் கட்டி விடுதல் வேண்டும். அன்று இரவு முழுவதும் அம் மாட்டின் வசிப்பிடமாக அவ் வீடு காணப்படும். பின்னர் அதிகாலை அம் மாட்டினை சடங்கு செய்யும் ஆசாரியாருக்கு தானமாக கொடுத்தல் வேண்டும் என்பது ஒரு மரபு. இதனால் தானோ இங்குள்ள ஒவ்வொரு வீட்டிலும் பசு இருப்பதினை எமது களஅவதானத்தின் மூலம் அறியமுடிகின்றது. இச் சடங்கு செய்யும் ஆசாரியார் என்பவர் ஏனைய சமூகத்தினைப் போன்று பிராமணராக இல்லாது இவர்கள் குலமரபில் வந்த ஒருவராகவே இருக்கின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனாலும் வீட்டின் உரிமையாளர் சடங்கு செய்யும் ஆசாரியாராக இருத்தல் கூடாது என்பது இவ் மக்கள் மனங்களில் எழுதப்படாத நியமமாக உள்ளது.

சடங்கு நிகழ்வன்று நடுவீட்டில் கட்டப்பட்ட மாட்டினால் போடப்பட்ட சாணகத்தினை அகற்றி வீட்டினைக் கழுவி நிறைகும்பம் வைத்து புதுப்பானையில் பொங்கல் பொங்கி இவர்களுடைய குலதெய்வமான காளிக்கு படைப்பர். பின்னர் வீட்டுக்கருகில் உள்ள முச்சந்தியில் நீற்றுக்காய் வெட்டி கழிப்பு கழிப்பார்கள். காளிக்கு படைத்த பின்னர் வீட்டினுள் அடுப்பினை வைத்து புதுப்பானையில் பசுப்பாலினை காய்ச்சி வீட்டினுள் இருக்கும் தெய்வத்திற்குப் படைப்பார். அண்மைக்கால சமூக மாற்றங்களின் வழியே இதனை ஒரு சமூக நிகழ்வாக கொண்டாடும் மரபு வளர்ந்து வருவதினையும் அவதானிக்க முடிகின்றது. அதாவது சடங்கன்று வீட்டிற்கு வந்த விருந்தினருக்கு மதியபோசனம் மற்றும் சிற்றுண்டி, பலகாரம் வழங்கல் போன்றனவும் இடம்பெறுகின்றமையும் நோக்கத் தக்கது.

மேற்போன்ற வீடுகுடிபுகுதல் சடங்குகளுக்கு அடுத்து இடம்பெறுவது வீட்டினை உரிமையாளரிடம் கையளிக்கும் சடங்காகும். இங்கு ஆசாரியார் வீட்டின் திறப்பினை வீட்டு உரிமையாளருடைய உறவினரிடம் கொடுப்பார். இவ் உறவினர் அதிகம் இரத்த உறவினராக உரிமையாளருக்கு இருப்பார். அவரிடமிருந்தே வீட்டு உரிமையாளர் காசுகொடுத்து திறப்பினை வாங்குவார். இதனையே "வீட்டினை வித்துவாங்கல்" என்பர். வீட்டினை வித்துவாங்கல் சடங்கானது வீட்டின் உரிமையாளர் தற்பெருமை கொள்ளாதிருப்பதற்குரிய ஓர் வழியாக மேற்கொள்ளப் படுகின்றது என்பது இச் சமூகத்தினரின் எண்ணப்பாடாகும். அதிகம் இச் சடங்குகளில் பெண்களை விட ஆண்களே அதிகம் முக்கியத்துவம்பெறுகின்றனர்.

சடங்கியல் பகுப்பாய்வின் வழியே நோக்கும்போது பசுவும் அதனுடன் இணைந்த புனிதமும் ஏனைய சமூகத்தினைவிட இங்கு அதிகம் முக்கியத்துவம் பெறுகின்றது. இவ் பசு தொடர்பான சடங்கியல் நடைமுறை ஏனைய சமூகங்களில் ஆரம்ப காலத்தில் காணப்பட்ட போதும் காலவோட்டத்தில் பசுவினுடைய முக்கியத்துவம் அச் சமூகங்களில் குறியீட்டு அம்சமாக மாற்றமடைந்துள்ள போதும் இங்கு இது முழுமையாகப் பேணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஏனைய புலங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் ஆசாரியார் சமூகத்தினர் மத்தியில் கூட அயல் சமூகத்தின் இடைவினையினால் மாற்றமடைந்து சிறு குறியீடாக காணப்படுகின்றமையும் இங்கு கவனிக்கத்தக்கது.

இச் சமூகப்புலத்திலுள்ள ஆசாரியாருடனான உரையாடலின் போது அவர்கள் தங்களுடைய இந்நடைமுறை மாற்றங்களுக்கு உட்படுவதற்கு தயாராகாத தன்மையினையும் மற்றும் எதிர்காலத்தில் தங்களுடைய சமூக பண்பாட்டு அடையாளத்தினை நிலை நாட்டுவதற்குரிய மனப்பாங்கினையும் அறிய முடிகின்றது.

மானிடவியல் நோக்கில் இச் சடங்கினை நோக்கும்போது இதனை ஒரு சமூகம் சார்ந்த தகுதி மாற்றச் சடங்காக நோக்க முடியும். இங்கு தகுதி மாற்றத்தினை இரண்டு அடிப்படையில் நோக்க முடியும். அதாவது ஒன்று வாழ்வியல் மாற்றம் மற்றையது சமூக அந்தஸ்து மாற்றம். இதனை நாம் மானிடவியலாளரான ரோனால் கீரிம்ஸ் உடைய நிலைமாற்றச் சடங்கியல் சிந்தனைக்குள் வைத்து நோக்கமுடியும். பல சந்தர்ப்பங்களில் நிலைமாற்றச் சடங்கு என்பது சமூக அந்தஸ்து மாற்றத்தினைக் காட்டினாலும் யாழ்ப்பாண சமூகத்தினை பொறுத்த வரையில் சமஸ்கிருதமயமாக்கம் மேலைமயமாக்கம் மூலமாக மரபார்ந்த சமூகங்கள் நவீன சமூக அமைப்பாக மாறுவது அவதானிக்கப் பட்டுள்ள போதும் சமூக அந்தஸ்து மாற்றம் வெறுமனே சமஸ்கிருதமயமாக்கல் வழியான சடங்கு நிலை மாற்றத்துடன் மட்டும் அடையப்பெறுவதில்லை என்பது பேராசிரியர் என். சண்முகலிங்கன் அவர்களுடைய யாழ்ப்பாணத்தில் அண்ணமார் வழிபாடு எனும் ஆய்வு இந்த உண்மையை தெளிவாக வெளிப்படுத்தி இருப்பதினை இங்கு குறிப்பிடலாம்.

இவ்வாறான நியமமான அவதானங்கள் ஏனைய சமூகப்புலங்களில் செய்கின்ற போது அச்சமூக கட்டமைப்பினையும் சமூக மாற்றம் தொர்பான இயங்கியல் விசைகள் பற்றிய முழுமையான மாற்றங்களையும் அறிய முடியும். மாறிவரும் இன்றைய உலகச் சூழலில் சமூக அடையாளங்களாகக் காணப்படும் இச்சடங்குகள் பற்றிய ஆய்வு அவசியமானதே.

1 - ஆய்வுப்புலத்தில் நேர்காணல் மற்றும் அவதானம்

## உசாத்துணை நூல்கள்

1 - ஸ்தபதி T.P. கணேசமூர்த்தி - "ஆயாதி சிற்பரகசியம்" மாமல்லபுரம் தொழில்நுட்பக் கல்வி இயக்கம் சென்னை 1978

2 - பக்தவத்சல பாரதி "தமிழர் மானிடவியல்" மெய்யப்பன் தமிழாய்வகம் - 2002

அறிவுதான் வல்லமை நமது தலைவிதிக்கு நாமே எஜமான்கள்.

- பிரான்ஸிஸ் பேக்கன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியின் கலாசாரப் பாரம்பரியம்மிக்க வீட்டு முகப்புக்களும் நாற்சார் வீட்டின் அமைப்புத் தோற்றமும், பயன்பாடும்

``Vernacular buildings reflected a community of experience"
(Bernard Rodofsky, 1964)

திருமதி சிவாஜினி திலகநாதன்
B.A. (Hons), M.A.



1875 ஆம் ஆண்டுகளில் (நூற்றாண்டு காலத்திற்கு மேற்பட்ட) தும்பளை வீதியில் அமைந்துள்ள வீடு.




பொதுசன நூல
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பி

நூற்றாண்டை எட்டும் வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள வீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூற்றாண்டு காலம் பழமைவாய்ந்த சாரையடியில் அமைந்துள்ள நாற்சார் வீடு

வீடுகள் மனித வாழ்வின் ஒரு அங்கமாகும். இவை குறிப்பிட்ட சமூக பண்பாட்டு வாழ்க்கை முறைக்கமைய காலம், சூழலுக்கு ஏற்ப வடிவம் பெறுகின்றன. ஒருவரது சமூக வகுப்பு, வர்க்க நலனுடன் சுய அடையாளத்தினதும் வெளிப்பாடாக வீடுகளை நோக்கமுடிகிறது. யாழ்ப்பாண சமூகத்தில் 1800 களின் பின் மேலெழுந்த கல்வீட்டுப் பண்பாட்டில் நாற்சார் வீடுகள் முக்கிய கவனத்திற்குரியன. 16 ஆம் நூற்றாண்டின் பின் நிகழ்ந்த போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேய செல்வாக்கு, இக்காலத்தில் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்கள் புதிய பொருண்மைசார் பண்பாட்டின் அடையாளமாக இவ்வீடுகளை கட்டமைத்தன.

வேறுபட்ட பிரதேச பொருளாதார பின்னணி (தொழில்), புவியியல், காலநிலை, இடஅமைவு, சமூக அடுக்கமைவு, காலணித்துவ பிற செல்வாக்குகள், மதம், கல்வி போன்ற பண்பாட்டுக் காரணிகள் வேறுபட்ட அடிப்படைகளில் ஒரே காலப்பகுதியில் கல்வீடுகளை உருவாக்கியுள்ளது.

யாழ்ப்பாணம் வேறுபட்ட பொருளாதார பின்புலங்களை உடைய தனித்துவமான பிரதேசங்களை கொண்டுள்ளது. இதன் புவியியல் அமைப்பு கடனீரேரிகள், வெளிகள் பிரித்த வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவுப்பகுதி என பிரதேசங்களை வேறுபடுத்தி வரையறுக்கிறது. வடமராட்சி பிரதேசம் அமைவிடம் காரணமாகவும் வேறுபடுகிறது. அதிகமாக தென்னிந்திய, பர்மா, மலேசியா, சிங்கப்பூர் வர்த்தகத் தொடர்புகளை அக்காலத்தில் கொண்டிருந்துள்ளது. இதனால் கிடைத்த அதிக உயரிய வருமானமும் ஏற்கனவே சமூக மேல்நிலையில் இருந்து நில உடைமை விவசாயம், சுதேச மருத்துவம், வர்த்தகம் போன்ற பொருளாதார பின்புலம் இக்கல்வீடுகளுக்கான அடிப்படைகள் ஆகும். வேளாண்மை சமூகம், பரியாரிமார், வர்த்தகர் (செட்டிகள்), கடல் வர்த்தகர் (பாய்மரக்கப்பல் மூலமான வர்த்தகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவர்களின் தேவைக்கமைய இந்த நாற்சார் வீடுகள் 1800 களின் பின் உருவாகின. ஒருவகை புதிய பொருளாதார சமூக அந்தஸ்தின் வெளிப்பாடாகவும் பாரம்பரிய சமூக அடுக்கமைவில் மேல்நிலை அடையாளமாகவும் இவை கட்டப்பட்டுள்ளன.

பாரம் பரிய வீட்டின் ஆரம்ப படிநிலைகளாக ஓரலகு வீடு, (Single unit house), ஈரலகு வீடு (Double unit house), மூவலகு வீடு (Trible unit house) நாற்கர் வீடு (Courtyard house) என மாறியுள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன. (Gunasingam, 1986) ஆரம்பத்தில் மண், மரம், ஓலை போன்ற ஊடகங்களாவன வீடுகள் உள்ளூர் காலநிலைக்கு ஏற்ப அமைக்கப்பட்டன. காலணித்துவ வருகையின் பின்பே குறிப்பாக ஒல்லாந்தருடன் சுண்ணக்கல் அறிமுகமாகியது. 'கல் வீடு', 'கல்வீட்டுக்காரர்' போன்ற பதங்கள் அக்காலத்தில் உயர் அந்தஸ்தைக் காட்ட பயன்பட்டுள்ளன. எல்லா வகுப்பு மக்களாலும் இத்தகைய வீடுகளைக் கட்டுவதற்கான பொருளாதாரம், சமூக உயர்நிலை இருக்கவில்லை. எவ்வாறு காலனிய அதிகாரம், மேலாண்மை, நிர்வாக மதக்கட்டடங்களின் ஊடகங்களாலும், உறுதித்தன்மை (நிரந்தரம்), அமைப்பாலும் பிரதியீடு செய்யப்பட்டனவோ அவ்வாறே உறுதியான அளவில் பெருத்த மரபையும், புதுமையையும் இணைத்த மாதிரியான புதிய நாற்சார் / அதனை ஒட்டிய வீடுகள் உருவாகின.

பொதுவாக இந்த வீடுகளை நான்கு காலப்பகுதியில் நான்கு நிலைகளில் வைத்து நோக்க முடியும்.

1) ஆரம்பகால மண், மர கட்டமைப்பு அடிப்படையிலான சிறிய கல்வீடுகள் (1830, 40 களுக்கு ஏற்பட்ட காலத்தில் முதலில் கட்டப்பட்டதாக கூறப்படுகிறது.

2) அறைகள், விறாந்தை, திண்ணை என சற்று விரிந்த பரப்பைக் கொண்ட கல்வீடுகள் (1800 களின் கடைசிப்பகுதி, 1900 ஆரம்பப்பகுதிகளில்)

3) முன்முகப்புக்களையும் பெரிய விசாலித்த உட்பகுதிகள் முற்றம் கொண்ட அளவில் பெருத்த வீடுகள் (1990 இன் ஆரம்பப்பகுதியிலிருந்து 1950, 1960 வரை காணமுடிகிறது)

4) நாற்சார அல்லது மூன்றுபக்க கட்டப்பகுதியுடன் கூடிய அரச உத்தியோகத்தவர்களது புதிய உயர் மத்தியதர வர்க்கத்தினர் வீடுகள். (1959, 1980 களின் பிற்பட்டகாலப் பகுதியில் பொதுவாக காணமுடிகிறது)

மேலே குறிப்பிட்ட காலப்பகுதிகள் துல்லியமானவை அல்ல. வீடுகளின் சொந்தக்காரர்கள், வயதானவர்கள் வழியாக கிடைத்த தகவல்கள் அடிப்படையிலானவை. அன்றைய சமூகத்தின் விழாக்கள் வீடுகளை மையப்படுத்தியவை. சடங்கு சாப்பாடு (பந்தி), சோடனை, பந்தல் என பல தேவைகளுக்கும் பயன்படும் விதத்தில் வீட்டின் ஒரு முற்றம் முதல் விறாந்தைகள் வரை பயன்பட்டுள்ளன.

மனைகளின் அமைப்பில் சாஸ்திரம், சடங்கு, நம்பிக்கைகள் இன்றுவரை ஆழமாக பின்பற்றப்படுபவை. இந்த வீடுகள் நம்பிக்கை அடிப்படையில் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறியீடுகளை உள்ளடக்கியவை. மதநிலை கடந்து இனத்துவ அடையாளமாகவும் சில பொதுமைப்படுத்தப்படுகின்றன. நிறைகுடம், குத்துவிளக்கு, தாமரை, சிங்கம், அன்னம், யானை போன்றவற்றை குறிப்பிடலாம். காலணித்துவ செல்வாக்குகளுக்குட்பட்ட அடையாளங்களும் ஏனைய புறச் செல்வாக்குகளுக்குட்பட்ட அடையாளங்களையும் அன்றைய வீடுகள் இன, மத நிலைப்படுத்தி உள்வாங்கியுள்ளன. உதாரணமாக பூச்சாடி பூரணகும்பமாகவும் திராட்சை செடி அலங்காரங்களுடன் கஜலக்சுமி போன்ற இணைப்புக்களையும் கூறலாம். செழுமை, வளம், அதிஷ்டம் போன்றவற்றின் குறியீடாக இவை கொள்ளப்படுகிறது.

இந்த அடிப்படைகளுடன் தான் இக்காலப்பகுதி வீடுகளின் முன்முகப்புக்களையும் நோக்க முடிகிறது. ஏற்கனவே இருந்த தலைவாசல், சங்கடப்படலை, திண்ணை என்பனவற்றின் இருப்பாகவும் அதிகரித்த பொருண்மையின் ஆடம்பரமான, உறுதியான அடையாளமாகவும் இவை அமைகின்றன. அந்தஸ்து, அதிகாரம், மேலாண்மை, புதுமை போன்றவற்றின் குறியீடாகவும் அன்றைய தேவாலய, கோட்டை முகப்புக்களை அடியொட்டியும் இவை தோற்றம் பெற்றன.

நுழைவாயில் என்பது எல்லா வேளைகளிலும் முக்கியமானதொன்று. இவை நேரடியான வீதியில் தொடங்குவதாகவும் சில உள்ளே எழுந்து நிற்பதாகவும் உள்ளன. ஆரம்பத்தில் அதிக அலங்காரமற்றதாகவும் பிற்பட்டகாலத்தில் அலங்காரக் குறியீடுகள் நிறைந்ததாகவும் கட்டடத்திற்கு வலுசேர்க்கும் ஒரு சட்டகம் போல அமைகிறது. ஆரம்பத்தில் வட்டத்தூண்கள் அரைவட்டவளைவுடன் கூடிய வாசலை உடைய வீடுகள் பின்னர் பல்முனை வளைவுகள் (இஸ்லாமிய கட்டடக்கலையின் பயன்படுத்தப்படும்) உடைய வாயில்களை கொண்டு அமைகின்றன. ஒல்லாந்தரின் பல்லினப்பண்பு, போர்த்துக்கேய பரோக்பாணி, சிங்களவரின் உள்ளூர் அலங்காரப் பண்புகள், தென்னிந்திய, பிற தென் ஆசிய செல்வாக்குகளின் கூட்டிணைவாகவே இக்கால கட்டடங்கள் பெருமளவு காணப்படுகின்றன. இதனை இக்காலப்பகுதி வீடுகளும் காட்டுகின்றன. ஒவ்வொரு மனிதனும் தனது அடையாளப்படுத்தலில் முக்கியமான ஒன்றாக வீடுகளை பயன்படுத்தியுள்ளனர். வீட்டின் முகமாக உள்ள முகப்புக்கள், வரவேற்பறைகள் இதில் முதல் முக்கியமாகின்றன. நாற்சார வீட்டின் முன் முகப்புக்களைத் (Facades) தொடர்ந்து அமையும் விறாந்தையையும் உள்முற்றத்தையும் இணைக்கும் பகுதியாக வரவேற்பறை அமைகிறது (ஒல்லாந்த வீடுகளின் `Lobby' பகுதியை ஒத்தது) இதன் பக்கங்களில் அறைகள் அமைகின்றன. இவை அதிக வெளிச்சமற்ற பகுதிகளாக காணப்படினும் அடுத்து அமைவது அதிக ஒளிச் செறிவுடைய விறாந்தைகளும் நடுமுற்றமும் ஆகும். இங்கு விறாந்தையின் அடுத்தபகுதிகளில் சுவாமியறை, களஞ்சிய அறை, குசினி, சாப்பாட்டறை என வீட்டின் விசாலத்திற்கு ஏற்ப அறைகளின் பெருக்கம் காணப்படுகிறது. ஆரம்பத்தில் சுவாமியறைக்குரிய 'நடை' பகுதி பதிவாகவும் சுவாமியறை பதிவாகவும் பக்க விறாந்தைகள் ஆரம்ப திண்ணை அமைப்பை ஞாபகப்படுத்துவதாக அமைந்துள்ளன. பிற்பட்ட கால வீடுகளில் இவை ஒரே சமதரையாக காணப்படுகிறது. களஞ்சியஅறை, சுவாமியறை பகுதிகளின் இடையில் சில பகுதிகளில் 'கூடம்' அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகப்பை (Facade) அடுத்துள்ள விறாந்தைகள் பிற்பட்ட காலத்தில் மரத்தடுப்புக்களால் மறைக்கப்பட்ட தன்மையை அவதானிக்க முடிகிறது. குழும வாழ்விலிருந்து பிரத்தியேகமான (Personal) வாழ்க்கை முறைக்கு மாறியபோது அந்தரங்கம் முக்கியமானது. அவ்வேளைகளில் இம்மரத்தடுப்புகள் வெளியிலிருந்து உள்நோக்கிய பார்வையை வரையறைப்படுத்தின. ஆனால் சில சமூகங்களில் ஆரம்பத்தில் உள்ளேயும் வெளியேயும் அதிகரித்த பொருளாதார வளத்தை வெளிக்காட்டும் இயல்புடைய வீடுகளை காணமுடிகிறது. (Exhibit Culture)

நான்கு பக்க விறாந்தை அல்லது மூன்றுபக்க விறாந்தையுடன் அடுத்தபக்கம் மூடியதாக நடுவில் முற்றம் உடையதாக அமைவதை நாற்சாரவீடாக கூறப்படுகிறது. ஆனால் எம்மிடம் இத்தகைய வீடுகளும், அதிக எண்ணிக்கையில் மூன்றுபக்கம் விறாந்தை நடுப்பகுதி திறந்ததாக (ப) அல்லது இரண்டு பக்க விறாந்தைகளுடன் அறைகள் இணைந்ததாக (ட) மாடிகளை உடையதாக, மரத்தாலான மாடித் தளங்களைக் கொண்ட வீடுகளாக பலவகை வீடுகள் காணப்படுகின்றன.

வடமராட்சி பகுதி வீடுகளின் சமூக பின்புலத்தினை நோக்கின் யாழ்ப்பாணத்தின் ஏனைய பிரதேச நாற்சார் வீடுகளுடன் அல்லது அதையொத்த வீடுகளுடன் ஒப்பிடும்போது வெளிச்செல்வாக்கின் தன்மை (கடல் வர்த்தக தொடர்பில் ஈடுபட்ட நாடுகள் பகுதிகளின் வேறுபாடு, வர்த்தக்கத்தின் தன்மை, தொடர்புகொண்ட சமூகங்களின் வேறுபாடு) காரணமாகவும், இங்குள்ள நில அமைப்பு, பொருளாதார பின்புலம், சமூக அமைப்பு (தனிக்குடும்ப முக்கியம் / குழும அமைப்பு உறவின் நெருக்கம்) காரணமாகவும் வீடுகளின் அமைப்பில் அலங்காரப் பண்பில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

நெருக்கமாக பலவாசல்களுடன் கூடிய பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரை அண்டிய வீடுகளுக்கும் ஏனைய விசாலமான பரப்பளவில் அமையும் வீடுகளுக்கும் இடையிலான வேறுபாடு சமூக அமைப்பினாலும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிலஉடைமை விவசாய சமூகத்தின் களஞ்சியத் தேவை, ஏனைய தொழில்முறைத் தேவைகளுக்காக இந்த நாற்சார் வீடுகளின் விறாந்தைகள், முற்றம் என்பன பயன்பட்டதுபோல கரையோர பகுதியில் சில கடல்வர்த்தக தேவையில் கிட்டங்கிவீடுகள் அமைந்திருந்ததையும் தொழில்சார் வேறுபாடு வீடுகளை வடிவமைத்திருந்தமைக்கு உதாரணமாக கூறலாம்.

பொதுவாக இந்தவீடுகளின் பாணி, வடிவமைப்பை நோக்கும்போது திண்மத்தன்மை கூடிய கட்டடஅமைப்பு அளவில் பெருத்த தூண்கள் அல்லது மரத்தூண்கள், பெரிய உள்வெளி அலங்காரம் மிக்க முகப்புக்கள் (Facades) வளைவுகள் (arches) முகடுஉடைய சுவர்கள் (Gable ends) வேலைப்பாடு மிக்க செடிப்பலகை (Fanlights) கூரைவிளிம்புப் பலகை வேலைப்பாடு (Valance board)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன ஒல்லாந்த, தென்னிந்திய, புறச் செல்வாக்குகளை உள்வாங்கியவை கூரைகள் (ஒட்டு ஓடுகள், வளைவு ஓடுகள்) தரை (tiles) சுவர் கூட அலங்கார மயப்படுத்தப்பட்டுள்ளன.

இவை பாரம்பரிய சாஸ்திர மயப்பட்ட நம்பிக்கைகளுடனும் சீதோஷ்ண நிலையுடனும் ஒத்துபோனதால் 1900 - 1960, 70 கள் வரை இத்தகைய வீடுகளின் தொடர்ச்சியும் சமூக முக்கியத்துவமும் இருந்துள்ளது.

இவ்வகையில் இவை குறிப்பிட்ட கால இப்பிரதேச மக்களின் பண்பாட்டின் வெளிப்பாடாகவும் சமூகமாற்றத்தின் பிரதிபலிப்பாகவும் உள்ளன. Choosing a past helps us to construct a future என Kevinlyncy கூறுவதற்கு அமைய கடந்தகால சமூக வரலாற்றை நோக்குவதற்கு அவைபற்றிய பதிவுகள், மீள்பார்வை அவசியம் காலனியகால யாழ்ப்பாண சமூகவரலாற்றின் பகுதி பிரதேச வரலாற்றில் வாழிடங்கள் முக்கிகவனத்திற்குரியன. அவ்வகையில் இந்த நாற்சார வீடுகளும் அவற்றின் அமைப்பும் ஒரு காலகட்ட சமூக வரலாற்றின் வெளிப்பாடுகள் எனலாம்.

``Architecture reflects the sprit of their times"

**உசாத்துணை :**


1) அகிலன், பா. 1997. நாற்சார வீட்டை மையமாகக் கொண்டு யாழ்ப்பாணத் தமிழரிடையே வீட்டுக்கட்டடக்கலை (கலைமாணிப்பட்ட ஆய்வு). யாழ்பல்கலைக்கழகம், பதிப்பிக்கப்படாதது.

2) அபிராமி, சிவஞானசுந்தரம், 2001 யாழ்ப்பாணத்தில் சமூக மாற்றத்தின் வெளிப்பாடாக ஒல்லாந்தர் காலனித்துவ வீட்டுக் கட்டடங்களின் அழகியல் கலைமாணிப்பட்ட ஆய்வு, யாழ் பல்கலைக்கழகம் பதிப்பிக்கப்படாதது.

3) Kunasingam, S. 1986. A Study of Dutch influence on the Social and cultural Status of the Tamil Community, as reflected at the residential buildings in Jaffna, Royal Institute of British architects for RIBA - II Examination and the University of Moratava for M.S.C


❖ பொலிகண்டியில் கந்தவனக் கடவைக்கு அருகாமையில் குளத்தை அண்டிய பகுதிகளில் புகையிலை நாற்றுமேடைகள் போட்டு புகையிலைக் கன்றுகளை பல்வேறு இடங்களிலிருந்துவரும் மக்கள் நீண்ட காலமாக இங்கிருந்து வாங்கிச் செல்வர். இது இன்றும் நடைமுறையில் உண்டு.

**தகவல் : சி. உதயமதி**
*சமுர்த்தி முகாமையாளர்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி வடக்கில் நாட்டுக்கூத்து

அண்ணாவியார். வ. சச்சிதானந்தம்
"ஆனந்தன்"
தும்பளை கிழக்கு.

ஈழத்தில் பயில்நிலையிலுள்ள தமிழ்நாடக அரங்கியலை இரண்டு பிரிவுகளில் அடக்கிவிடலாம். அவையாவன :

1) பாரம்பரிய நாடகங்கள்
2) நவீன நாடகங்கள்

பாரம்பரிய நாடகங்கள் போர்த்துக்கீசர் இலங்கைத்தீவை ஆட்சிக்கு உட்படுத்துவதற்கு முன்பிருந்தே ஈழத்தமிழர்கள் மத்தியில் சமயம் சார்ந்த நிலையில் நிகழ்வுற்றவை. இக்கூத்துக்களில் ஆடல் பாடல் இணைந்த நடிப்பு, களரி (அரங்கம்), வேடம் கட்டல் அண்ணாவியார் வழிப்படுத்தும் ஆற்றுகை முறைமையினால் உள்ளடக்கப்பட்டிருந்தன. இன்று கூத்து நாட்டுக்கூத்து என இவை அழைக்கப்படுகிறது.

இந்தவகையில் எமக்குத் தெரிந்தளவில் வடமராட்சியில் கூத்துக் களரிகளில் 1899 களிலிருந்து விளையாடப்பட்ட கூத்துக்களாக கன்னன், சந்திரபூரணி, பப்பரவாயன், அல்லி, அனுபுத்திரன், செட்டிவர்த்தகன் முதலான தென்மோடி, வடமோடிக் கூத்துக்களையும் இக்கட்டுரை மூலம் நோக்க முயன்றுள்ளேன்.

1960 முதல் 1973 வரையுள்ள காலப்பகுதியில் புலோலி திகிரிக் கிராமத்தில் அண்ணாவியார் வைரவி அப்பா என்பவரைக் குருவாகக் கொண்டு சந்திரபூரணி, செட்டி வர்த்தகன் ஆகிய கூத்துக்களில் நானும் வேடம்கட்டி விளையாடியுள்ளேன். திகிரியில் வசித்த அண்ணாவியார் அமரர் திரு. வி. சிவக்கொழுந்து என்பவரின் உதவியுடன் 1994ல் பழக்கப்பட்ட "செட்டி வர்த்தகன்" கூத்து திகிரி கிராமத்தின் கூத்துக் களரியில் விளையாடினோம். இக்கூத்தில், தற்போது ஹாட்லிக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமைபுரியும் திரு. பா. இரகுவரன் "கட்டியக்காரன்" வேடம்கட்டி திறம்பட விளையாடியுள்ளார். இக்கூத்தைப் பார்வையிட்ட பேராசிரியர் கா. சிவத்தம்பி ஐயா

> "செட்டி வர்த்தகன் கூத்து, வடமோடிக்கு உரிய பாரம்பரிய உடை, ஒப்பனைகளுடன் தென்மோடிக்குரிய நுணுக்கமான ஆட்டங்களும், கதை அமைப்பும் கலந்த ஒரு கூத்தாக இருந்தது"

என்று கூறியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.


பருத்தித்துறைப் பகுதியில் நாட்டுக்கூத்தை "நாட்டை" என்றே குறிப்பிட்டு வந்தனர். இந்தவகையிலான கூத்துக்கள் புலோலி, கரவெட்டி, வடமராட்சி கிழக்கின் கிராமங்களிலும் விளையாடப்பட்டு வந்தன. நெல்லண்டை அம்மன் கோவில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புற்றளைப் பிள்ளையார் கோவில், அல்வாய் முத்துமாரி அம்மன் கோவில், வல்லிபுரக் கோவில், மாதனைக் காளி அம்மன் கோவில், கூழாவடி வீரபத்திரர் கோவில், திகிரி முதலி அம்மன் கோவில் போன்ற கோவில் வீதிகளில் களரி அமைத்து நாட்டுக் கூத்துக்கள் "நாட்டை" விளையாடப்பட்டுள்ளன.

## கூத்து ஆற்றுகைக்கான கூத்துக்களரி :



பத்து முழ நீளமும் அகலமும் கொண்ட சமதளத்தில் ஒன்பது முழ உயரத்தில் மேற்கூரை கொண்டதாக அமைக்கப்படும். இதன் மேற்கூரைப் பகுதியை பல நிறச் சேலைகளால் சுளகுப்பின்னல் போன்று பின்னிக் கட்டப்படும். "இதை சொக்கட்டான்" கட்டு என்றும் கூறுவார்கள். இதன் நான்கு கரைகளிலும் நிறச்சேலைகளை மடித்து "ஒயிலாப்பு" போடப்பட்டிருக்கும்.

நான்கு பக்கங்களிலும் நாட்டப்பட்ட கம்புகளுக்கு துணி சுற்றப்பட்டிருக்கும். இந்தக் கூத்துக்களரியின் மூன்று பக்கங்களும் பார்வையாளரைக் கொண்டதாக அமைந்திருக்கும். நான்காவது பக்கம் மேலும் கீழுமாக நடுவில் இடைவெளி விட்டு சேலைகளைக் கட்டி மறைக்கப்பட்டிருக்கும்.

பிற்பாட்டுக்காரர், வாத்தியக்காரர் (மத்தளம்) ஏடு பார்ப்பவர்களின் முகம் தெரிவதற்காகவே அந்த இடைவெளி விடப்பட்டிருக்கும். இந்த இடைவெளி சுமாராக இரண்டு முழம்வரை இருக்கும். இந்தக் கூத்துக் களரியை "முப்பக்க களரி" என்றே அழைக்கப்படும்.

இக்களரியின் இடதுபக்கத்தில் மூன்று முழப்பாதை விடப்பட்டிருக்கும். இதன் ஊடாகவே கூத்தர்கள் களரிக்குள்ளே கூத்து விளையாட வேடம் கட்டியபின் வந்து போவார்கள். களரியின் வலப்பக்க மூலையில் இருக்கை ஆசனம் (கதிரை) வைத்து தெய்வ வழிபாடு செய்து, வாழைக்குற்றியில் தேங்காய்ப்பாதி வைத்து தேங்காய் எண்ணெய்ப் பந்தம் ஏற்றப்பட்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்துக்களரியின் முப்பக்கங்களிலும் அமர்ந்திருக்கும் பார்வையாளரின் முன் புறங்களில் மூன்று வாழைக்குற்றித் தேங்காய்ப் பந்தங்கள் ஏற்றப்பட்டு அவற்றின் வெளிச்சத்திலேயே விடியவிடிய கூத்து விளையாடப்படுகிறது. கூத்துக்களரியில் விளையாடும் கூத்தர்களையும், பார்வையாளரையும் ஒன்றிணைக்கும் இந்தச் சமதளக் கூத்து அரங்கின் ஒளி அமைப்பு மேற்குறிப்பிட்ட வாழைக்குற்றிகளில் ஏற்றப்பட்ட தேங்காய் எண்ணெய் பந்தங்களே ஆகும்.

## ஆற்றுகை முறைமை :

கூத்துக் களரியில் கூத்தர்களுடன் கூத்தின் அண்ணாவியாரும் கூடிநின்று தாளம்போட்டும், பிற்பாட்டுப் பாடியும் கூத்தை நிகழ்த்திச் செல்வார். அண்ணாவியாரின் தாளத் தீர்மானங்களை மத்தளம் உள்வாங்கி ஒலிக்க; கூத்தர்களின் கால்கள் இந்தத் தாளத் தீர்மானங்களுக்கு அமையவே ஆடப்படுகின்றன. இந்தத் தருணங்களில் அண்ணாவியாரின் அசைவுகளும் கூத்துக்களரியில் நிகழ்வுறும் ஒருவகை ஆடல் போன்றே காணப்படும்.

கூத்தர்களுக்கு ஏடு கொடுப்பது முதல் கூத்தைப் பழகி களரியிலே விளையாடுவது வரை உள்ள காலம் கூத்துப் பழக்க காலம் என்பார்கள். இதற்குக் குறைந்தது பத்துமாத காலமாவது ஆகலாம். கூத்துக்களை கூத்துக் களரியில் ஆற்றுகை செய்வதற்கு ஒரு மாதத்துக்குமுன் "அடுக்குப் பார்க்கப்படும்" (நிரை பார்க்கப்படும்). இதில் கூத்தில் பங்குபெறும் கூத்தர்கள் எல்லோரும் ஒருங்கே கூடி கூத்தை வரிசைப்படி விளையாடிப் பார்ப்பார்கள். கூத்து களரியில் விளையாடப்படும் தினத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு "வெள்ச்சோடு" உடுப்பு அணிந்து கூத்தர்களால் கூத்து நிகழ்த்திப் பார்க்கப்படும். பெரும்பாலும் இது அண்ணாவியாரின் வீட்டு முற்றத்திலேயே நிகழ்த்திப் பார்க்கப்படும். இதன்பின்னரே கூத்துக் களரியில் ஆற்றப்படும். கூத்து ஆற்றுகை பெரும்பாலும் ஆலய வீதிகளிலேயே நிகழ்த்துவது மரபாகும்.

## ஆடல் :

கூத்துக்களரிக்குள் ஒவ்வொரு கூத்தரும் முதல்முதலாகத் தோற்றப்படும்போது அண்ணாவியார் "வரு கவி படிக்கும்வரை தோற்றப்படும் கூத்தர் முன்னால் திரை பிடிக்கப்படும். இவ்வாறு திரைக்குப் பின்னால் கூத்தர் நிற்கும் நிலையை "கொலு" எனப்படும். இதுவே ஆடலின் முதல் நிலையாகும். இந்தக் கொலுநிலை கூத்தர்கள் கட்டும் கூத்துக்களைப் (பாத்திரங்களை) பொறுத்து வேறுபட்டனவாக இருக்கும்.

ஆட்டத்தருக்களும் அவ்வாறே வித்தியாசமானதாய் இருக்கும். அண்ணாவியாரின் "வரு கவி" க்குப் பின்புதான் கூத்தரின் முன் பிடிக்கப்பட்டுள்ள திரை விலக்கப்பட்டு கூத்தர்களின் விளையாட்டு (களரி நிகழ்வு) ஆரம்பமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் காலம், இரண்டாம் காலம், மூன்றாம் காலம் என தாளம் ஏற ஏற ஆட்டமும் துரிதமடையும். கூத்தரின் ஆட்டம் பார்வையாளர் அமர்ந்திருக்கும் மூன்று பக்கங்களும் ஆடிய பின்னரே நான்காம், ஐந்தாம் காலங்கள் கூத்துக் களரியில் சுற்றி எட்டு வடிவமாகவும், வட்ட வடிவமாகவும் ஆடி அண்ணாவியாரின் தீர்மானத்துடன் தமது ஆட்டத்தை நிறைவுசெய்வார்.

ஆடல்களில் 'தித்தித்தா', 'அவனியம்', 'பக்கடவி', 'முன்னடவி', 'இறங்கல்', 'ரத்தி', ரத்திவெட்டு, நாலடி, ஓயில்நடை, தட்டிப் பாய்தல், உள்நாலு, புற நாலு, மண்டி, எட்டுப்போடல், வட்டம் போடல், கொலு என்பன போன்ற பலவகை அசைவுகள் இடம்பெறுகின்றன. இவ்வாறு பல அசைவுகள் சேர்ந்தே ஓர் ஆடல் உருவாகும்.

## பாடல் (தரு) :

பொதுவாகப் பாடல்களைத் "தரு" என்றே எமது குரு அண்ணாவியார் வைரவி அப்பா கூறுவார். கூத்துக்கள் ஆரம்பமாகும்போது படிக்கப்படுவது "காப்பு" என்றும் கூத்தின் கூத்தர்களை அறிமுகமாக்கும்போது படிக்கப்படுவது 'வரு கவி' என்றும், ஆடிய கூத்தர்கள் ஓய்வு எடுக்கும் பொருட்டு படிக்கப்படுவது 'கோவை' என்றும் கூத்தின் விருத்தாந்தத்தை விளக்கி அண்ணாவியாரால் பாடப்படுவது "சபை கவி" என்றும் கூறப்படும். இவை தவிர கொச்சகம், விருத்தம், கொச்சகத்தரு, விருத்தத்தரு, தர்க்கத் தரு, ஆயிலியத்தரு, ஆயிலிய விருத்தம், தாழிசை, அகவல், போற்றி, தேவாரம், சம்பயத்தரு, உத்தரத்தரு, பல்லவத்தரு, விளையாட்டுத்தரு, மங்களம் எனப் பலவகைத் தருக்களும் உள்ளன. ஒவ்வோர் மெட்டுக்களும் ஒவ்வோர் உணர்வுடையதாக இருக்கும்.

## கட்டு வேடங்களும், முகப்பூச்சும் :

பாரம் குறைந்த பலகையால் செய்யப்பட்டு கண்ணாடி பதிக்கப்பட்ட கிரீடம், கைப்புசம், காதணி, மார்புப் பதக்கம், குண்டலம், இடைப்பட்டி போன்றனவும் பெண்களுக்குரிய நாகசடை, சந்திரப்பிறை, சூரியப்பிறை, ஒட்டியாணம், வளையல், தலை நகை போன்ற அணிகலங்களுமே கூத்துக்களில் கூத்தர்களால் பாவிக்கப்பட்டன.

கயிற்றில் மடித்துப் போடப்பட்ட சாறிகளையே பாவாடை போல உடுத்தி மணிச்சட்டை போட்டு கழுத்திலிருந்து முழங்கால்வரை சால்வைகளை மடித்து ஏகாவடமாகப் போட்டு வேடங்களை கட்டிவிடுவார்கள்.

வாழைக்குற்றிப் பந்தத்தில் வரும் குறைவான வெளிச்சத்தில் கூத்து விளையாடப்படுவதால், கூத்தர்கள் அதீதமான (மிகையான) முகப்பூச்சுக்களில் காணப்படுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த குரல்வளமும், நல்ல உடல்வாகும் உள்ளவர்களையே அண்ணாவியார் கூத்தர்களாக தெரிவுசெய்து கூத்தைப் பழக்கி களரி ஏற்றுவிப்பார். கூத்தில் எந்தக் காலத்திலும் ஒலிவாங்கி பயன்படுத்தப்படுவதில்லை. கூத்தர்களின் குரல், கூத்து விளையாடும் களரியிலிருந்து ஒரு மைல் தூரத்துக்கும் அப்பால் வீட்டில் தங்கியிருக்கும்/ படுத்திருக்கும் முதியோர்கூட கேட்டு ரசிக்கவும், கூத்துக் களரியில் எந்தக் கூத்தர் நின்று விளையாடுகின்றார் என்பதைக் குரல் வழியாகக் கூறுமளவிற்கு கூத்தரின் குரல் (தொனி) அமைந்திருக்கும்.

## கூத்துக்களின் இன்றைய நிலை :

கூத்துக்களரியில் வெளிச்சம் ஊட்ட 1960 இன் பின்பே "பொற்றோமாக்ஸ்" ஒளியூட்டல் பயன்படுத்தப்பட்டமையும், அடுத்து அண்மைக்காலங்களிலிருந்து மின்சார ஒளியூட்டலின் பயன்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கூத்துக்களரியின் ஒளியூட்டலுக்குப் பயன்படுத்திய வாழைக்குற்றி தேங்காய் எண்ணெய் பந்தங்களுக்கு தேங்காய் எண்ணெய் விடுதல், களரியில் கூத்தர்களின் வருகையின்போது திரை பிடித்தல் ஆகிய முயற்சிகளை கூத்தர்களுக்கு சலவைத் தொழில் செய்பவர்களோ, அல்லது அந்தந்தக் கோவில் குடிமைக்காரர்களே செய்து வந்த கூத்து மரபுகள் இன்று கைவிடப்பட்டு தற்காலத்தில் கூத்தர்களின் உறவினர்களே வரவுத் திரை பிடித்து வருகின்றனர்.

ஒரு முழு இரவு இரவாக மறுநாள் விடியும்வரை முப்பக்க சமதளக் கூத்துக் களரியில் நடைபெற்ற கூத்துக்கள், இன்று ஒருபக்க பார்வையாளர் தளத்தைக் கொண்ட புதிய படச்சட்ட அரங்க அமைப்பில் (மேடைகளில்) குறைந்தது பதினைந்து நிமிடம் முதல் கூடியது ஒரு மணித்தியாலம் வரையே ஆற்றுகை செய்யப்படுகின்றன.

கூத்து அரங்கியல் பாரம்பரிய தொடர்ச்சிக்கு பருத்தித்துறை அறிவோர் ஒன்றுகூடல் அரங்கும், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அரங்கும், வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவை அரங்கும், திகிரி வளர்பிறை மன்ற அரங்கும் முறையே எமது செட்டி வர்த்தகன், சித்திரரூபன் ஆகிய கூத்துக்களுக்கு ஆற்றுகை செய்ய வாய்ப்பு அளித்துள்ளமையை நன்றியுடன் நினைவுகூர்ந்து மேலும் கூத்துப் பாரம்பரியம் பேணப்படவேண்டும் என வேண்டுகை விடுத்து இந்தக் கூத்துக்கலையை வளர்க்க என்னுடன் தோள்நிற்கும் தம்பி அப்பனுக்கும் நன்றிகூறி இக்கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.

பொலிகண்டி கிழக்கில் சின்னக்கடை என்னும் இடத்தில் மாலை நேரச்சந்தை நடைபெற்றது இச்சந்தை பின்னர் மானாண்டிச் சந்தை என இடம்மாற்றப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது.

**தகவல் - பொலிகண்டி செ. இரத்தினம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி வடக்கின் பாரம்பரிய கலைகள் சில...

## ✠ சிலம்புக்கலை (சிலம்பக்கழி)

**திரு. பா. மீனாட்சிசுந்தரம்**
(பிரதேச மலர்க்குழு உறுப்பினர்)

தற்காப்புக் கலையாக சிலம்புக்கலை குறிப்பிடப்படுகிறது. வடமராட்சிப் பகுதியில் இங்குள்ளவர்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தகத் தொடர்பு காரணமாக சிலம்புக்கலையைக் கற்றுள்ளனர் என்பதனை அறிய முடியகின்றது.

இருபதாம் நூற்றண்டின் ஆரம்ப காலப்பகுதியில் சிலம்புக்கலையில் நிபுணராகத் திகழ்ந்த பருத்தித்துறையைச் சேர்ந்த கார்த்திகேசு என்பவர் கம்படி சிலம்படி விளையாட்டுக்களை இந்தியா சென்று குரு வைத்திலிங்கச் செட்டியார் அவர்களிடம் வித்தைகளைக் கற்றார்.

கார்த்திகேசு அவர்கள் இந்தியாவிலிருந்து பயிற்சி முடித்து வடமராட்சியில் கட்டையர் சின்னத்துரை என்பவர் வாள்வித்தை, சிலம்பம் போன்ற விளையாட்டுக்களில் சாதனையாளராகத் திகழ்ந்தார். கார்த்திகேசு கட்டையர் சின்னத்துரையுடன் போட்டியிட்டு வெற்றியீட்டியதைத் தொடர்ந்து கார்த்திகேசுவின் புகழ் திக்கெங்கும் பரவத் தொடங்கியது. இதன் பின்னர் நடராசா என்பவரது மகன் சோதிசிவம் என்பவருக்கு பத்தாவது வயதிலிருந்து இக்கலையைப் பயிற்றுவித்தார் மிகக்குறுகிய காலத்தில் சோதிசிவம் சிறப்புறக் கற்று தேர்ச்சிபெற்றார். சோதி சிவத்தின் வல்வை நெடியகாட்டுப்பிள்ளையார் கோயில் வீதியில் நடைபெற்றது.

சோதிசிவம் அவர்களிடம் தனது எட்டாவது வயதில் தில்லையம்பலம் சிவலிங்கம் சிலம்பக்கலையைக் கற்று பன்னிரண்டாவது வயதில் வல்வை நெடியகாட்டுப் பிள்ளையார் ஆலயத்திலும் பின்னர் கந்தவனம் முருகன் கோயிலில் அரங்கேற்றம் நடந்தது. இக்கலையினைப் பல மாணவர்களுக்கு பயிற்றுவித்த சிவலிங்கம் அவர்களுக்கு 1974 ஆம் ஆண்டு தமிழாராய்ச்சி மாநாட்டில் சாண்டோ துரைரத்தினம் அவர்களால் “சிலம்புச் செல்வன்” எனும் பட்டம் சூட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டார். தற்போது நாட்டுச்சூழ்நிலை காரணமாக சிலம்ப விளையாட்டுக்கள் நடாத்தப்படுவது அருகிவருகிறது.

> உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்
> நிலைபெறுத்தலும், நீக்கலும், நீங்கலா
> அலகு இலா விளையாட்டு உடையார் - அவர்
> தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே.
>
> \- கம்பராமாயணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ✠ தமிழர் மரபுவழி கரலாக்கட்டை உடற்பயிற்சிக் கலை

**பொ. மகாதேவா**
இளமையின் இரகசியம் நூலாசிரியர்,
பருத்தித்துறை.

நம்மை நாம் அறிந்துகொள்வோம். நமது பாரம்பரியத்தை அறிவோம். அதன் மூலம் நம்மை வளர்ப்போம். பெருமைமிகு கலைகளில் ஒன்றான கரலாக்கட்டைப் பயிற்சிமூலம் எம் உடலுக்கு தேவையான நன்மைகளையும் உண்மைகளையும் தெரிந்துகொள்வோம். கரலாக்கட்டைப் பயிற்சி புராணகாலம் தொட்டு ஒரு பாரம்பரியத்தைக் கொண்டு விளங்குகின்றது. மகாபாரதத்தில் இடம்பெறும் வீரநாயகர்கள் தண்டாயுதத்தைக் கொண்டு போர்புரிந்திருக்கிறார்கள். வீமன், துரியோதனன் இருவரும் தண்டாயுத யுத்தம் புரிந்திருக்கிறார்கள் கீசகன், பலராமன், வீமன், துரியோதனன் ஆகியோர் தண்டாயுதப் போரில் மிகவும் பிரபல்யம் வாய்ந்தவர்கள் என சரித்திரம் சான்று பகர்கின்றது.

தண்டாயுதம் காலப்போக்கில் உருமாறி எல்லோரும் ஈடுபடவல்ல ஓர் உடற்பயிற்சிக் கலையாக அமைந்துள்ளது என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். முனிவர்கள், யோகிகள், சித்தர்கள் ஆகியோர் கரலாக்கட்டைப் பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தமை அறியக்கிடக்கின்றது. மேற்கூறியவர்கள் ஒரு நாட்டின் மன்னனைவிட, தளபதியைவிட மிகப்பலசாலிகளாக கட்டுடலோடு வாழ்ந்திருக்கிறார்கள் - என்பதனை அமரர் கல்கி கிருஸ்ணமூர்த்தி, அமரர் சாண்டில்யன், அகிலன், கோவை மணிசேகரன் போன்றோரின் வரலாற்றுப் புதினங்கள் மூலம் அறிய முடிகின்றது.

கரலாக்கட்டைப் பயிற்சி தமிழ்மக்களின் பாரம்பரியமான ஒரு மரபுவழி உடற்பயிற்சியாகும். இந்தியாவில் தமிழ் நாட்டின் பலபாகங்களிலும் இப்பயிற்சியைச் செய்கின்றார்கள். கரலாக்கட்டைப் பயிற்சி தற்காலத்தில் கேரள மாநிலத்தில் இருந்துவந்தது என அறியமுடிகிறது. சுவாமி விவேகானந்தரும் இப்பயிற்சியில் ஈடுபாடுகாட்டியுள்ளார். கரலாக்கட்டை சுழற்றும் பயிற்சியில் மக்கள் திலகம் M.G. R அவர்களும் மிகுந்த ஈடுபாடு உடையவர்.

இரும்பு சில்லுகளாலும், யந்திரங்கள் மூலமாகவும் மேல் நாட்டு முறைகளினால் ஒரு கட்டழகனை (Body Builder) உருவாக்குகிறார்கள். அப்படி எங்கள் தமிழர்களின் பாரம்பரியமான கரலாக்கட்டை பயிற்சி மூலமாகவும் ஒரு உடல் நலமுள்ள, உடல் வளமுள்ள, திடகாத்திரமான பலமுள்ள ஒரு மனிதனை உருவாக்க முடியும். உலகில் உள்ள ஒவ்வொரு இனத்திற்கும் விளையாட்டுக்கள் பற்றிய வரலாறுகள் உண்டு. கலை, கலாசாரங்கள் உண்டு. அந்த ரீதியில் எங்கள் தமிழ் இனத்திற்கும் பலதுறை சார்ந்த விளையாட்டுக்கலைகள் இருக்கின்றன. அந்த வகையில் தமிழர் பாரம்பரியமான மரபுவழி கரலாக்கட்டைப் பயிற்சியும் ஒன்றாகும். கரலாக்கட்டை என்னவென்று தெரியாதவர்கள் இன்றும் இருக்கிறார்கள். முன்பு பிரபல்யம் வாய்ந்த கரலாக்கட்டைப் பயிற்சி இன்று அருகிய நிலையில் இருக்கின்றது. இக்கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தில் இருந்து இங்கு வந்ததாக அறிய முடிகின்றது. முன்பு பலகாலமாக ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை உள்ளடக்கிய கரையோரப் பகுதியில் இருந்து தமிழக்துடன் வணிகத் தொடர்புகள் பாய்மரக் கப்பல்கள் மூலம் நடந்தன. இதனால் இங்குள்ளவர்கள் அங்குபோகவும், அங்குள்ளவர்கள் இங்கு வந்து போகவும். தங்கவும் வசதிகள் பல இருந்தன. பலகலைகளைப் பயில்வதற்கும் அக்காலம் வழி வகுத்தது. இந்த கரலாக்கட்டை பயிற்சியும் இங்கு வளர்ந்ததற்கும், குறிப்பாக வடமராட்சிப் பகுதி கரையோரங்களில் இப் பயிற்சியில் பலர் ஈடுபடுவதற்கும் பாய்மரக்கப்பல் மூலமாக வைத்திருந்த தொடர்புகளேயாகும்.

இக்கலையை நான் எனது தந்தையார் கரலாக்கட்டை ஆசான் செ. பொன்னுச்சாமி அவர்களிடம் பயின்றேன். அவர் மைத்துனர் திரு. பாலசுந்தரம் அவர்களிடம் பயின்றார். திரு. பாலசுந்தரம் அவர்கள் பல கலைகள் பயின்றவர். 1960ம் ஆண்டு சித்திரை வருடப்பிறப்பு அன்று எனக்கு இக்கலையை என் தந்தையார் கற்றுக்கொடுத்தார். அன்று ஆரம்பித்த இக்கலை இன்று புதிய மாற்றங்களுடன் வீசிக்கொண்டிருக்கிறேன்.

**இக்கலை அன்றும் இன்றும் :-**



**கரலாக்கட்டை அனுமார் வீச்சு**

தமிழர் மரபுவழிக் கரலாக்கட்டை உடற்பயிற்சிக்கலை அன்று உடம்பின் மேற்பகுதி (UPPER BODY) இற்கு மட்டும் பொருந்துவதாக மட்டும் இருந்தது. இன்று உடம்பின் மூன்றுபகுதிகளுக்கும் கரலாக்கட்டை வீச்சுக்கள் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதாவது உடம்பின் மேற்பகுதி, கீழ்ப்பகுதி, வயிற்றுப் பகுதி (UPPER BODY, LOWER BODY, ABDOMINAL) கரலாக்கட்டை விளையாட்டுக்கலையின் பயன்தரக்கூடிய சுழற்சி முறைகள் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து, அறிந்து செய்முறைகளை அனுபவத்தில் பெற்று அதன்மூலம் உடம்பின் மூன்று பகுதிகளுக்கும் தற்போது சுழற்சி முறைகளை உருவாக்கியுள்ளேன். ஒவ்வொரு சுழற்சி முறையும் எந்த, எந்த தசைநார்கட்டுக்களுக்கு உரியது என்ற விளக்கமும் கூறப்படுகின்றது. தற்போது இக்கலையில் கிட்டத்தட்ட முப்பது வீச்சுக்கள் இருக்கின்றன. அன்று கரலாக்கட்டை வீச்சு முறைகளுக்கு பெயர்கள் இருக்கவில்லை. முன்பு இருந்த வீச்சுமுறைகளுக்கும், புதிதாக இன்று வீசப்படுகின்ற வீச்சு முறைகளுக்கும் பாரதப்போரில் தண்டாயுத யுத்தத்தில் தலைசிறந்த வீரர்களின் பெயர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூட்டியுள்ளேன். இன்று வீமன்வீச்சு, துரியோதனன் வீச்சு, பலராமன் வீச்சு, கீசகன் வீச்சு, அனுமார் ஆகாய வீச்சுகள் எனச் சரித்திர வீர நாயக்கர்களின் பெயர் சூட்டப்பட்டு வீச்சுக்கள் பல வீசப்படுகின்றன.

அருகிவரும் தமிழர் மரபுவழி கரலாக்கட்டை உடற்பயிற்சி (12.04.2000) அன்று வியாழக்கிழமை தேவராஜன் இல்லத்தின் அரங்கில் (தும்பளை) யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதி மா. நடராசசுந்தரம் அவர்களால் அங்குரார்ப்பனம் செய்யப்பட்டது. வடமராட்சியின் விளையாட்டு மத்தியஸ்தர்களும், விளையாட்டுக்கழகங்கள், விளையாட்டு வீரர்கள், பொதுமக்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

இதனைத் தொடர்ந்து பல இடங்களில் கரலாக்கட்டை வீச்சுக்கள் வீசிக் காட்டப்பட்டன. பரு. வேலாயுதம் பாடசாலையிலும் மாணவர்களின் உடல் நலத்தின் கவனம் கொண்டு 09.05.2001 அன்றும் இவ்வீச்சுக்கள் வீசிக் காண்பிக்கப்பட்டது.

இந்துசமய கலாசார அமைச்சின் அனுசரணையுடன் பொங்கல் விழா 12.01.2002 இல் மங்கையர்கரசி வித்தியாலயத்தில் நடந்தது. இந்நிகழ்வில் தமிழர் மரபு வழி கரலாக்கட்டை வீச்சும் வீசிக்காண்பிக்கப்பட்டது. இந்நிகழ்வு ரூபவாஹினியில் இரு முறைகள் ஒலிபரப்பானது திக்கம் கலாசார மண்டபத்தில் வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவையினால் 2005 இல் நடாத்தப்பட்ட பிரதேச கலை இலக்கியவிழா நிகழ்விலும் இசையுடன் இந்த நிகழ்ச்சி நடாத்திக் காண்பிக்கப்பட்டது. இப்பயிற்சியை தொடர்ந்து வந்தால் உங்கள் மனோவலிமையும், உடல் வலிமையும் அதிகரிக்கும். இப்பயிற்சினால் மூட்டுக்கள் இலகுவில் வளையக்கூடிய (FLEXIBILTY) ஒரு தன்மையைப் பெறுவீர்கள் அத்துடன் இப்பயிற்சியினால் இருதயம் பலமடையும். இரத்த ஓட்டமும் நன்கு நடைபெறும். நோய் எதிர்ப்புச் சக்தியையும் பெறுவீர்கள். இன்று தமிழர் பாரம்பரியமான கரலாக்கட்டை பயிற்சி புதியமாற்றங்களுடன் பல புதிய வீச்சுக்களுடன் அறிமுகப்படுத்தி உள்ளேன். இன்று நவீன கருவிகள் மூலம் உடற்பயிற்சி சாதனங்கள் பல அறிமுகப்படுத்தப் பட்ட போதிலும் தமிழர் மரபுவழி கரலாக்கட்டை பயிற்சி மூலமாகவும் ஒருதிடகாத்திரமான மனிதனை உருவாக்க முடியும். நீங்கள் எந்த துறைசார்ந்த விளையாட்டை எடுத்துக்கொண்டாலும் முதலில் உங்கள் உடல் வலுப்பெறவேண்டும். அதிக சக்தியைப் பெறவேண்டும். அந்த நோக்கம் எய்த கரலாக்கட்டைப் பயிற்சியை நமது மூதாதையினரின் இந்த மரபுவழி கலையை நம்பிக்கையுடன் தொடருங்கள் பி.குறிப்பு தமிழர் மரபு வழி உடற்பயிற்சிக் கரலாக்கட்டைப் பயிற்சி 17.01.2003 யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் சூரிச் நிறுவனத்தின் ஆதரவில் நடந்த பொங்கல் விழாவில் மேல் நாட்டுக்கலையையும் (BUILDUNG) தமிழர் மரபு வழி கரலாக்கட்டை பயிற்சியையும் ஒப்பீடு செய்து செயல் முறையில் செய்து காட்டி விளக்கம் அளித்து நடாத்திக் காண்பிக்கப்பட்டது. இந்த கரலாக்கட்டை நிகழ்வை ஒலிப்பதிவு (V. D .O) செய்து லண்டன், சுவிஸ், ஜேர்மனி, இத்தாலி போன்ற மேலை நாடுகளில் ஒளிபரப்புச் செய்யப்பட்டது.

அழியாமல் பாதுகாப்போம் தமிழர் மரபுவழி கரலாக்கட்டைப் பயிற்சியை வளர்ப்போம் உடல் நலமுள்ள, உடல் வளமுள்ள ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்புவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேச செயலகப் பிரிவில் றோமன் கத்தோலிக்கத் திருமறை

**திரு. சீமாம்பிள்ளை அந்தோனிமுத்து**
(B.A. Hons: Dip in - Ed)
ஓய்வுபெற்ற ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்.

மனித சமுதாயப் பரிணாம வளர்ச்சிப் பாதையில் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு சிந்தனைக் கருவூலங்கள் துளிர்விட்டெழுந்து பலரையும் ஈர்ந்தெடுத்துக் கொண்ட கருத்துக் குவியல்களால் உரமிடப்பட்டு பெருவிருட்சங்களாக வளர்ந்து வேரூன்றி நிலைத்து நிற்பவைகளே சமயங்கள் எனலாம். சமயக் கோட்பாடுகளும் வழிபாட்டுமுறைகளும் சமய ஆலயங்களும் சமூக நீரோட்டத்தில் பின்னிப் பிணைந்து சமூக இசைவாக்கத்தில் முக்கிய இடத்தைப் பிடித்துவிட்டன. சமயம் என்ற சொல்லைக் குறிப்பதற்கு மதம், வேதம், மறை (திருமறை) என்ற சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இன்று எம் பிரதேசத்தில் நிலைத்து நிற்கும் சமயங்களில் றோமன் கத்தோலிக்கமும் ஒன்று. இது கிறிஸ்தவத்தில் முக்கியமான பிரிவு எனலாம் Catholic என்ற சொல்லே தமிழில் "கத்தோலிக்கம்" என்றாயிற்று "கதலிக்" என்ற கிரேக்க சொல்லின் பொருள் 'பொது' 'உலகளாவியது' என்ற விளக்கத்தை மறைந்த அருட்பணி சா.பி. கிருபானந்தன் எழுதிய திருச்சபை வரலாற்றுத்துளிகள் (2007 பதிப்பு) என்ற நூலில் கூறுகிறார். (The basic meaning of the term (Cathoilcism) is universality, comprehensiveness" - Ref. The New Dictionary of Theology (Page 161))

### வடமராட்சி வடக்குச் செயலகப் பிரிவில் றோமன் கத்தோலிக்கமும் காலப்பிரிவுகளும்

1. போர்த்துக்கேயர் காலம் (கி.பி. 1505 - 1656)
2. ஒல்லாந்தர் (டச்சுக்காரர்) காலம் (கி.பி. 1656 - 1796)
3. ஆங்கிலேயர் காலம் (கி.பி. 1796 - 1948)
4. சுதந்திர இலங்கைக் காலம் (கி.பி. 1948 - இன்று வரை)

இலங்கைக்கு கி. பி 1505 ஆண்டில் போர்த்துக்கேயர் வந்தாலும் அவருடைய ஆட்சியும், ஆதிக்கமும் படிப்படியாகவே உயர்ந்து வடமராட்சி வடக்கு உட்பட யாழ் குடாநாட்டில் 17ம் நூற்றாண்டில் முதற் காற்பகுதியிலேயே வலுவடைந்தது அவர்களுடைய ஆட்சியின் கீழ் றோமன் கத்தோலிக்கம் வடபகுதியில் பரப்பப்படுவதற்கு முக்கியமாக பிரான்சிஸ்கன் சபைக் குருக்களும், யேசுசபைக் குருக்களும் ஈடுபட்டு உழைத்தனர். அதன் விளைவாக பிரான்சிஸ்கன் சபைக் குருக்களால் 1621 க்கும் 1623 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் யாழ்க் குடாநாட்டில் பல்வேறு இடங்களில் பதினொரு கத்தோலிக்க கோவில்கள் கட்டுவிக்கப்பட்டதெனத் தெரிகிறது (ஆதாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

: Rev. Queroz ''The Temporal and Spiritual Conquest of Ceylon) இந்நூல் இலங்கையில் போர்த்துகீசர் காலவரலாற்றைக் கூறும் நூலாகும். மேலும் இத்தகவலை Paulo de Trinidade என்ற கத்தோலிக்க குரு எழுதிய 1634ம் ஆண்டுப் பட்டியலில் மேற்குறிப்பிட்ட பதினொரு கத்தோலிக்க ஆலயங்கள் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. இதன்படி பருத்தித்துறையில் கட்டப்பட்ட மாதா கோவில் (கடல்) நற்பிரயாண மாதா (Our Lady of Good Voyage) என்ற பெயருடன் அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. (இதற்கு ஆதாரம் Paulo de Trinidade என்ற குரு எழுதிய பட்டியலாகிய (1634 பக்கம் 240)

**ஒல்லாந்தர் காலத்தில் (1658 - 1796) வடமராட்சி வடக்கில் றோமன் கத்தோலிக்கம்.**

போர்த்துக்கேயர் காலத்தில் பரப்பப்பட்ட றோமன் கத்தோலிக்க மறைக்கு ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தில் (1658 - 1796) கடும் சவால்களும் எதிர்ப்புக்களும் ஏற்பட்டன. போர்த்துக்கேயரின் சமயமாகிய றோமன் கத்தோலிக்கத்துக்கும் ஒல்லாந்தரின் சமயமாகிய டச்சுச்சீர்திருத்தச் சபையின் (Dutch Refonmed Church) கிறிஸ்தவத்துக்கும் கோட்பாடுகளின் வேறுபாடுகள் காரணமாக ஐரோப்பாவில் மதச் சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. அதனால் இவ்விரு நாட்டாருக்கும் இடையே அரசியல், பொருளாதாரப் பகைமையோடு சமயரீதியாகவும் பகைமை ஏற்பட்டது. எனவே போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே குடியேற்ற நாடுகளில் ஒன்றாகிய இலங்கைத் தீவிலும் இப்பகைமை காணப்பட்டது.

இச்சூழ்நிலையில் ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒல்லாந்தர் அரசு கத்தோலிக்க மதத்திற்கு ஏதிராக கடும் தடைச் சட்டங்களை விதித்தது. எனவே வடமராட்சி வடக்கிலும் இந்நிலை ஏற்பட்டது. ஒல்லாந்தர் தம் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் றோமன் கத்தோலிக்க கோவில்களை இயங்கவிடவில்லை. அவர்கள் அக்கோவில்கள் இருந்த இடங்களில் தமது கிறிஸ்தவ வழிபாடுகளையும் நடத்த அனுமதிக்கவில்லை. இந்நிலை பருத்தித்துறைப் பகுதியிலும் எற்பட்டது. இதைப்பற்றி 1658ஆம் ஆண்டு தொடக்கம் 1665 ஆம் ஆண்டு வரை இலங்கையின் வடபகுதியில் டச்சுச் சீர்திருத்தத் திருச்சபையின் பணியாளராகப் பணிபுரிந்த பிலிப்புஸ் பல்தேயுஸ் (Rev. Phillipus Baldeus) தனது ''A True and exact description of the great Island of Ceylon'' என்ற நூலில் பின்வரும் விபரங்களைத் தருகிறார். (பக்கம் 332, 334)


''The Church paretiture is the largest and most stately in all wademarache. The place is called by the portugesche'' punta das pedras'' or ``Steenhoek'' (Rocky Point) paretiture means in the Malabaarsche language ``Catoenshaven'' (Cotton harbour) because of the large amount of cotton produced there on small trees. Not long since whilst we were at warwith Engelandt, a small defence was raised here skirting the sea. During our war with Portugual the Hollanders. carried off from here one of their priests and plundered Mannar at the same time......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Church was for some time in a decayed state, but had been repaired in my time. In front of the Church there stands a large tamarind tree and it was often that I taught under its shade so as to avoid the heat and consequent weariness of the people. Now and then there is an attandance of 3000 listenrs and the school children are 1000 strong.

மேற்தரப்பட்ட பகுதியிலிருந்து வணக்கத்துக்குரிய பிலிப்புஸ் பல்தேயுஸ் என்ற டச்சுத் திருச்சபைக் குரு பருத்தித்துறையில் துறைமுகத்துக்கு அண்மையில் ஒரு பெரிய புளியமரம் கோவிலுக்கு முன்பாக நின்றதென்றும் தான் அம்மரத்தின் நிழலில் போதித்தது என்றும், அப்போதனையைக் கேட்க 3000 (பெரியவர்கள்) பேரும், 1000 பிள்ளைகளும் கூடுவர் என்றும் தெரியக் கிடக்கிறது. **பிலிப்புஸ் பல்தேயுஸ்** குறிப்பிட்ட புளிய மரம் பிற்காலத்தில் "பல்தேயுஸட் மரம்" **(Baldaus Tree)** என அழைக்கப்பட்டதன் காரணத்தினால் அப்பெயர் பொறிக்கப்பட்ட பெரிய தனிக்கல் ஒன்று 1956ஆம் ஆண்டுவரை அப்புளிய மரத்தின் கீழ் நாட்டப்பட்டிருந்தது அக்கல்லின் புகைப்படம் கீழே தரப்படுகிறது.




இதுபற்றிய அடிக்குறிப்பு பல்தேயுஸ் எழுதிய நூலின் பக்கம் 334 இல் பின்வருமாறு கூறுகிறது. ``The tamarind tree which was popularly known as ``**Baldaus Tree"** survived till 1956 when it was blown down in a gale"

அக்கல்லில் பொறிக்கப்பட்ட தகவல்கள் அடிப்படையில் இரு விடயங்கள் தெளிவாகின்றன.

1) பல்தேயுஸ் பணியாற்றத் தொடங்கிய ஆண்டு (1658) என்பதும்.
2) SCHIVARA என்ற பெயருடைய ஒருவர் இக்கல் நாட்டப்பட்ட இடத்தைத் 05.09.1760 இல் தரிசித்ததாகவும் தெரிகிறது.

இக்கல்லின் புகைப்படம் 1999 ஆம் ஆண்டில் உள்ளூர் ஆட்சி வாரத்தை நினைவு கூரும் முகமாக வெளியிடப்பட்ட பருத்தித்துறை பிரதேச மலர் என்ற சஞ்சிகையில் பொருளடக்கம் என்ற பக்கத்தின் பின்புறத்திலும், இக்கல் பற்றிய குறிப்பு ஒன்று அம்மலரின் 207 ஆம் பக்கத்திலும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்குறிப்பு பின்வருமாறு

"கிறிஸ்தவ பாதிரிமார் எமது பிரதேசத்தில் வந்து மதபோதனை செய்தமையை இக்கல் வெளிப்படுத்துகின்றது. இக்கல்லைக் கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக பருத்தித்துறை மக்கள் போற்றிப் பாதுகாத்து வந்தமை சமய சமரச உணர்வைப் புலப்படுத்துகின்றது.

இன்று இக்கல் பருத்தித்துறைப் பகுதியிலிருந்து குடத்தனைப்பகுதிக்கு நகர்த்தப்பட்டதாக அறியக்கிடைக்கின்றது"

பருத்தித்துறை துறைமுகத்தை அண்டிய பகுதிகளில் ஒல்லாந்தரின் ஆதிக்கமும் செல்வாக்கும் வலுவடைய, அங்கு அமைக்கப்பட்டிருந்த கத்தோலிக்க கோவிலில் நடைபெற்று வந்த வழிபாடுகள் தொடர்ந்து இடம்பெற முடியாத நிலை தோன்றியிருக்கும் என கருத இடமுண்டு. எனவே கத்தோலிக்க சமயத்தைச் சார்ந்தோர் படிப்படியாக பருத்தித்துறைக்குக் கிழக்கே ஒதுக்குப்புறமாக உள்ள பகுதிகளில் ஒல்லாந்தரின் ஆட்சியாளரின் கண்ணுக்கு அகப்படாத முறையில் அம் வழிபாடுகளை மறைவாக நடத்த வசதியாக அமைந்திருந்ததினாற் போலும் தும்பளைக் கிராமத்தின் நடுப்பகுதியில் உள்ள ஒரு வளவைத் தெரிந்தெடுத்திருப்பர். இத்தகைய பின்னணியிலேயே தும்பளையில் 'மாவச்சை' என்ற பெயர் கொண்ட வளவில் தற்பொழுதுள்ள லூர்து மாதா ஆலயம் கட்டப்படமுன் அவ் வளவில் கொட்டிலாக மாதா கோவில் ஒன்ற கட்டப்பட்டிருந்தது. இதனை ஓர் துண்டுப்பிரசுரத்தில் லூர்து கெபி கட்டப்பட முன் அவ்வளவில் மாதா சுரூபம் ஒல்லாந்தர் காலத்தில் வைத்து வணங்கப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது. அவ்வாறு எழுதப்பட்ட வாசகப் பகுதி பின்வருமாறு.

*"அருஞ் செயல்களால் விளங்கி வரும் தேவமாதாவின் சுரூபம் ஒன்று இத்திருத்தலத்தில் உலாந்தார்க்காரர் இலங்கையில் அரசாண்ட பூர்வ காலந்தொட்டு மகா பூச்சியமாய் அமலோற்பவ நாமத்தால் வணங்கப்பட்டு வருகின்றது'*..... இக் கூற்றில் வரும் திருத்தலம் என்பது தும்பளை மாவைச்சை வளவைக் குறிக்கிறது உலாந்தாக்காரர் என்பது ஒல்லாந்தரைக் குறிக்கிறது. எனவே லூர்து கெபி கட்டப்பட முன் அங்கு 'மாதா' கோவில் ஒல்லாந்தரின் காலத்தில் (1658 - 1796) இருந்திருக்கிறது. இம் 'மாதா' கோவிலையே சுவாமி ஞானப்பிரகாசர் தான் எழுதிய ``XXV years Catholic Progress" என்ற நூலில் ``Thumpalai St. Mary The Oldest Church in Point Pedro" (P.211) என்று குறிப்பிடுகிறார். அதாவது பருத்தித்துறையில் உள்ள கோவில்களுக்குள்ளே 'மாதா' கோவில் மிகப்பழையது என்பதாகும்.

பருத்தித்துறை 3ம் குறுக்குத் தெருவை பிறப்பிடமாகக் கொண்ட மறைந்த பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை (இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனை) அவர்கள் எழுதிய ***ஈழத்து வாழ்வும் வளமும்*** என்ற நூலில் (பதிப்பு 1962) ***ஈழத்து தமிழர்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***கிராமிய தெய்வ வழிபாடு*** என்ற கட்டுரையில் (பக். 47)..... "போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் தங்கள் ஆட்சிக் காலத்து மக்களை மதம் மாற்றம் செய்து ஆங்காங்கு கிறிஸ்தவ ஆலயங்கள் கட்டினர். அவற்றில் ஒன்று மாதா கோவில்.... ஆங்காங்கு மாதா கோவில்கள் எனப்படும், சிறு கொட்டில்களை நாம் இன்றும் காணலாம்." இக்கூற்றும் மாதா கோவில் கொட்டிலாக இப்பகுதியில் இருந்திருக்கின்றது. என்பதை ஊர்ஜிதம் செய்கின்றது.

ஒல்லாந்தர் காலத்தில் பருத்தித்துறைக்குக் கிழக்கேயுள்ள ஊர்களான தும்பளை, முனை, கலட்டி ஆகிய இடங்களில் மட்டுமல்ல கற்கோவளம், அல்வாய் (சக்கோட்டை), வல்வெட்டித்துறை, புலோலி ஆகிய பகுதிகளிலும் கத்தோலிக்கர் வாழ்ந்து வந்தனர் என்பதை நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் எழுதிய "XXV years Catholic Progress" என்ற நூலில் அறியக்கிடக்கின்றது. 1800 ஆம் ஆண்டுக்கு முன்னர் அல்வாயில் ஒரு கத்தோலிக்க கோவில் இருந்தது என்றும் (பக்கம் 207) 1780 ஆண்டளவில் வல்வெட்டித்துறையில் கொட்டிலாக ஒரு கோவில் கட்டப்பட்டிருந்ததென்றும் (பக்கம் 208), புலோலியின் உள்ள கத்தோலிக்கர் 1700 ஆம் ஆண்டளவில் அளவெட்டிப் பகுதியிலிருந்து வந்து குடியேறினர் என்றும் மேற்படி நூலில் குறிப்புக்கள் காணப்படுகின்றன. இவ்வாறு ஒல்லாந்தர் காலத்திலேயே வடமராட்சி வடக்கில் தொட்டம் தொட்டமாக இந்துக்களினதும் டச்சுச்சீர்திருத்தத் திருச்சபைக் கிறிஸ்தவர்கினதும் மத்தியில் கத்தோலிக்கர் தம் சமயத்தைக் கைவிடாது கடைப்பிடித்து வந்தமை அவர்களின் சமயப்பற்றுறுதியைக் காட்டுகின்றது.

சுவாமி J.E. ஜெயசீலன் எழுதிய '**யாழ்ப்பாண திருச்சபை வரலாறு**' (1997) என்ற நூலில் "..... பருத்தித்துறையில் இரு ஆண்கள் 'தாம் கத்தோலிக்கர்' எனப் பகிரங்கமாக அறிக்கையிட்டனர். இதனால் இவர்கள் இருவரும் அரசால் (ஒல்லாந்த அரசு) பிடித்துச் செல்லப்பட்டனர். இருவரும் பின் வீடு திரும்பவில்லை" என்று கூறப்பட்டமை இதற்குச் சான்றாக அமைகிறது.

**ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் சுதந்திர இலங்கை காலத்திலும் (1796ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை) வடமராட்சி வடக்கில் றோமன் கத்தோலிக்கம்.**

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஏறத்தாழ முதல் ஐம்பது ஆண்டு காலத்தில் (1796 - 1847) சில சவால்களை கத்தோலிக்க மறை இப்பகுதியில் சந்தித்தது முதலாவது ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தொடக்கத்தில் கத்தோலிக்கம் அல்லாத வெஸ்லியன் மிஷன், பப்ரிஸ்ற் மிஷன், அமெரிக்கன் மிஷன் பிரசாரங்களுக்காக இங்கு வந்தனர் இதனால் கத்தோலிக்கத்துக்குச் சாதகமற்ற நிலை ஏற்பட்டது. எனினும் இலங்கைக்கு கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த புதிய மிஷனரிகளாக "அமல மரித்தியாகிகள்" (Oblates of Mary Immaculate) பணியாற்ற 1847ம் ஆண்டில் வந்ததினால் இந்நிலைமைகள் மாறத்தொடங்கின. இச்சபையைச் சேர்ந்த குருக்கள் (வெள்ளைக்காரச் சுவாமிமார்) மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1850ம் ஆண்டிற்குப் பின் கத்தோலிக்க வளர்ச்சி புதிய உத்வேகம் பெற்றதெனலாம் இப்பகுதியில் கொட்டிலாக இருந்த பல கத்தோலிக்க ஆலயங்கள் நிரந்தரமாக சுண்ணக்கற்களாலும், சுண்ணச் சாந்தாலும் கட்டப்பட்டன. அவைபற்றிய குறிப்புக்கள் பின்வருமாறு.

### 1) தும்பளை புனித மரியன்னை ஆலயம்

இவ்வாலயம் பருத்தித்துறைப் பகுதியில் மிகப் பழமையானது என நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் எழுதிய ``XXV years Catholic Progress" (1893 - 1918) என்ற நூலில் (பக்.208) குறிப்பிடுகிறார். இவ்வாலயம் ஒல்லாந்தர் காலத்தில் கொட்டிலாக கட்டப்பட்டிருந்தமை பற்றி ஏற்கனவே இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இக்கோவில் பற்றி நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் மேலும் குறிப்பிடுவதாவது "பழைய கோவில் மிகவும் பள்ளமான காணியிலேயே கட்டப்பட்டிருந்தது" (The old Church was on a verylow ground - p.212) இக்கோவில் இருந்த காணியின் பெயர் "மாவச்சை" என்பதாகும். இக்காணிமிகவும் பள்ளமாக இருந்தமையினால் இங்குள்ள 'மாதா'வை பள்ளத்து மாதா என அழைத்து வந்தனர் என தும்பளையைப் பிறப்பிடமகக் கொண்ட மறைந்த முன்னாள் அதிபர் திரு. தொம்மையப்பிள்ளை செபமாலை (1930 - 2007) இக்கட்டுரையாளரிடம் தெரிவித்தார். பழைய கோவில் கட்டப்பட்டிருந்த காணியில் மாரி காலத்தில் வெள்ளம் தேங்கி நிற்பது வழக்கம். எனவே இக்கொட்டில் கோவிலைப்புதிதாக கற்களாலும், சாந்தாலும் கட்டும் தேவை ஏற்பட்டபோது, அதனை உயர்ந்த மேட்டு நிலத்திலேயே கட்ட வேண்டிய நிலை எற்பட்டது இதனாலே புதிய மரியன்னை ஆலயம் கட்டுவதற்கு பழைய கோவில் இருந்த இடத்திலிருந்து தெற்கே சற்று மேடாக அமைந்த காணியில் கட்டத் தீர்மானிக்கப்பட்டது எனலாம் இக்கோவிலுக்கான மூலைக்கல் 1880ம் ஆண்டில் மறைந்த அருட்பணி சார்ள்ஸ் ஹெக்ரர் மௌறோயிற் (அ.ம.தி) (late Rev. Fr. Charles Hcctor Mauroit OMI) அடிகளாரால் இடப்பட்டு படிப்படியாக ஆலயம் கட்டப்பட்டு 1900ம் ஆண்டளவில் பூர்த்தியாகியது. 2005ம் ஆண்டில் இவ்வாலயத்தின் 125ம் ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டது. இவ்வாலயத்தின் வருடாந்த திருவிழா நவம்பர் மாதம் 29ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி டிசம்பர் மாதம் 8ம் திகதி முடிவடைகின்றது.

### 2) வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் ஆலயம்.

தற்போதுள்ள புனித செபஸ்தியார் ஆலயம் கட்டப்படமுன் கொட்டிலாக இருந்த கோவிலை 1780ம் ஆண்டளவில் சிறிதாக கற்களால் கட்டியதென அறியக்கிடைக்கின்றது. தற்போதுள்ள சுண்ணக்கற்களாலும், சாந்தினாலும் அழகானகோவில் 1890ம் ஆண்டிற்குப் பின்னர் கட்டப்பட்டதெனக் கூறப்படுகின்றது. இவ்வாலயத்தின் திருவிழா ஜனவரி மாதம் 20ம் திகதி நடைபெறுவது வழக்கம்.

### 3) அல்வாய் (சக்கோட்டை) புனித சவேரியார் ஆலயம்

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தின் இறுதிக் காலப்பகுதியில் அல்வாய் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தில் கடற்கரையிலிருந்து சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் தெற்கே கத்தோலிக்கக் கோவில் கட்டப்பட்டிருந்தது எனத் தெரிகிறது. இன்றும் இப்பழைய கோவில் அழிந்து போனநிலையில் உண்டு. இது 1860ம் ஆண்டளவிலேயே கட்டப்பட்டிருக்கலாம் என்றும் 1903ம் ஆண்டளவில் கைவிடப்பட்டதென்றும் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் கூறுகிறார். (பக்கம் XXV years Catholic Progress - P 207) இதன் பின் சக்கோட்டை கடற்கரையில் புதிய ஆலயம் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாலயம் 2004ம் ஆண்டு வரை வழிபாட்டுக்கு உரியதாக அமைந்தது. இவ்வாலயமும் புனரமைக்கப்பட ஆரம்பிக்கப்பட்டு தற்போது (2008ம் ஆண்டில்) புதிய திருப்பலிப் பீடமும் அதற்குரிய அரைக்கோள வடிவமான கூரையும் (Dome) கட்டப்பட்டு ஓரளவில் முடிவுற்றுவருகிறது. புனரமைப்புக் கட்டுமானப் பணிகளை துரிதமாக தற்போதுள்ள பங்குத்தந்தை அருட்பணி M. பத்திநாதர் அடிகளார் முன்னின்று செயலாற்றுகின்றார். (வருடாந்த உற்சவம் மார்ச் மாதம் 04 திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மார்ச் மாதம் 13ம் திகதி திருவிழா முடிவடையும்.

### 4) பருத்தித்துறை (முனை) புனித தோமையார் ஆலயம்.

தற்போதுள்ள புனித தோமையார் ஆலயம் கட்டப்படுவதற்கு முன் பழைய பிரமாண்டமான ஆலயம் ஒன்று 1860ம் ஆண்டில் கட்ட அத்திவாரம் மறைந்த அருட்பணி லெயோ பெலிஸ்ஸியர் (அ.ம.தி) அடிகளாரால் இடப்பட்டது. அக்கோவில் மறைந்த அருட்பணி றவுஸ் மயன்கோத் (அ.ம.தி) காலத்தில் கட்டிமுடிக்கபபட்டது (1898). இப்பழைய கோவிலை புதிதாகக் கட்டுவதற்கு 1982 ஆம் ஆண்டில் பங்குத்தங்தையாகப் பணிபுரிந்த அருட்பணி M. றெஜி இராஜேஸ்வரன் அத்திவாரம் இட்டார். குருசுக்கோயிலுடன் திருப்பலிப் பீடமும் கொண்ட புதிய ஆலய வேலைகள் முடிவுற்றதனால் 1998இல் வழிபாட்டிற்குத் திறந்து வைக்கப்பட்டது. (மறைந்த அருட்பணி.P.M. இம்மானுவேல் காலம்) புதிய ஆலயத்தின் புனரமைப்பு வேலைகள் முற்றுப்பெற வேலைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. (இப்புதிய ஆலயம் யாழ் மறைமாவட்ட பேராலயமாகிய கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தின் வடிவை ஒத்ததாக இருக்கின்றது) இவ்வாலயத்தில் வருடாந்த உற்சவம் யூன் மாதம் 24ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி யூலை 03 ஆம் திகதி திருவிழா நடைபெறுவது வழக்கம்.

### 5) கலட்டி (பருத்தித்துறை) புனித அந்தோனியார் ஆலயம்.

கலட்டி புனித அந்தோனியார் ஆலயம் இன்று சகல மக்களுக்கும் அருள்பாலித்து வருகிறது. ஏழு தலைமுறைகளுக்கு முன் இப்பகுதியில் 4ம் குறுக்குத் தெரிவிலிருந்து மேற்கே செல்லும் "மில்" எதிர் ஒழுங்கை ஓரமாக இன்றும் பலாமரம் ஒன்று உள்ள காணியில் குடிசையில் அந்தோனியார் சுருபம் ஒன்று அந்தோனி அவர்களால் பராமரிக்கப்பட்டு அவர்களது உறவினர்களுடன் வழிபடப்பட்டுவந்தது என அறியக்கிடக்கின்றது. இக்காணிக்கு அண்மையில் கோவில் கிணறு என்று இன்று வரை அழைக்கப்பட்டுவரும் கிணறு உண்டு. ஒல்லாந்தரின் ஆட்சியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுறுத்தல் காலத்தில் (1656 - 1796) இப்பகுதிக்கு வியாபாரிபோல் வந்த கத்தோலிக்க விசுவாசி ஒருவரால் கொண்டுவரப்பட்ட (சுரூபம் அடங்கிய) பொதியைப் பயத்தினால் மேலே குறிப்பிட்ட கிணற்றுள் போட நீர் பொங்கி எழுந்தது என்றும் பின் அதனை எடுத்து வழிபாட்டுக்கு வைத்தது என்றும் பரம்பரைக் கதை உண்டு.

இக்கோவிலை பராமரித்து வந்த கோவில் வளவார் கட்டடசிற்பக்கலையில் சிறந்து விளங்கியதால் தங்களுக்கென ஓர் ஆலயத்தை சுண்ணாம்புக் கற்கள் கொண்டு 4ம் குறுக்குத் தெருவில் தற்போது ஆலயம் அமைந்த இடத்தில் கட்டினர். இது 1898 ஆம் ஆண்டளவில் கட்டிமுடிக்கப்பட்டது எனத்தெரிகிறது. எனினும் இவ்வாலயச் சுண்ணாம்புக் கட்டடமாகையால் நீண்டகாலம் நிலைத்து நிற்காது கொலுவிழந்து போனது. அதனாலே 1938ஆம் ஆண்டளவில் கட்டடக் கலைஞர் மறைந்த திரு.வ. சந்தியாப்பிள்ளையின் தலைமையில் சீமெந்தினால் இப்புதுக்கோவில் கட்டப்படத் தொடங்கி 1960 ஆம் ஆண்டளவில் ஒரு பகுதி கட்டப்பட்டபின் 1976ம் ஆண்டில் கோவில் முகப்பு வேலையுடன் முழுமையாக கட்டிமுடிக்கப்பட்டது.

மறைந்த அருட்பணி B.F. பொனிபஸ் பங்குத் தந்தையாக இருந்த போது 1985ல் சிறிய குரு மனையும் 2000 ஆம் ஆண்டில் மறைந்த அருட்பணி P.M. இம்மானுவேல் பங்குத் தந்தையாக பணியாற்றியபோது 'அற்புதர் அரங்கும்' கட்டப்பட்டது. (இவ்வாலயத்தின் வருடாந்த திருவிழா யூன் மாதம் 04ம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி யூன் மாதம் 13ம் திகதி திருவிழா நிறைவு பெறும்)

### 6) புலோலி புனித சூசையப்பர் ஆலயம்

இவ்வாலயத்தைச் சேர்ந்த கத்தோலிக்கர் ஒல்லாந்தர் காலத்தில் இங்கு வந்ததாகத் தெரிகின்றது. இங்கு பழைய ஆலயம் ஒன்று இருந்தது என்றும், அவ்வாலயம் மறைந்த அருட்பணி றவுல் மயின்கோத் (அ. ம. தி) (Late Rev. Fr. Raoul Maingot OMI) பங்குத்தந்தையாக பணியாற்றிய 1891 - 1898 காலப்பகுதியில் புனரமைக்கப்பட்டதாக நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் கூறியிருக்கிறார். (வருடாந்த உற்சவம் மார்ச் 10ம் திகதி ஆரம்பமாகி மார்ச் மாதம் 19ம் திகதி திருவிழா கொண்டாடப்படும்)

### 7) கற்கோவளம் புனித செபஸ்தியார் ஆலயம்

இதுவும் ஒருபழைய கோவில். 1901 ஆம் ஆண்டளவில் கட்டப்பட்டதென அறியக்கிடைக்கிறது. இவ்விடத்தில் வாழ்ந்த பழைய கத்தோலிக்கர்கள் பலர் இடம் பெயர்ந்துள்ளனர் எனினும் தற்போது அவ்வாலயத்தைச் சுற்றியுள்ள கத்தோலிக்கர் ஒன்றுபட்டு இவ்வாலயத்தின் திருவிழாவை கொண்டாடி வருகின்றனர். ஆண்டு தோறும் இவ்வாலய உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருநாள் திருவிழா ஜனவரி மாதம் 20ம் திகதி நடைபெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8) தும்பளை புனித லூர்து கெபி (லூர்து அன்னை திருத்தலம்)

இத்திருத்தலம் யாழ் குடாநாட்டிலேயே ஓர் பிரபல்யமான யாத்திரை தலமாக விளங்குகின்றது. தும்பளை லூர்து கெபி கட்டப்பட்ட 'மாவச்சை' வளவில் ஒல்லாந்தர் காலத்தில் 'மாதா' சுரூபம் ஒன்று கொட்டிலில் வைத்து அவ்வூர்க் கத்தோலிக்க மக்களினால் மகா பூச்சியத்துடன் வணங்கப்பட்டு வந்துள்ளது. இக்கொட்டில் கோவில் கட்டடமாகக் கட்டும் தேவை 19ம் நூற்றண்டின் நடுப்பகுதியில் ஏற்பட்டது. இவ்வளவு பள்ளமான காணியாகையால் உயரமான மேட்டு நிலத்தில் சற்றுத் தெற்கே உள்ள வளவில் அக்கோவில் கட்டுவதற்கு 1880 ஆம் ஆண்டில் மூலைக்கல் நாட்டப்பட்டது. இக்கோவிலே தற்போது லூர்து கெபிக்குத் தெற்கே கட்டப்பட்டுள்ள புனித மரியன்னை ஆலயம் ஆகும்.

பழைய கொட்டில் கோவில் கட்டப்பட்டிருந்த இடத்திலேயே லூர்து கெபி (லூர்து அன்னை திருத்தலம்) 1918ம் ஆண்டளவில் கட்ட ஆரம்பிக்கப்பட்டு 1926ம் ஆண்டில் குகையும் (கெபி) அதனோடு இணைந்த பெரிய லூர்து மாதா சுரூபம் வைக்கப்பட்டுள்ள வளைவும் கட்டிமுடிக்கப்பட்டது. அவ்வாண்டு தொடக்கமாக இத்திருத்தில் பெப்ரவரி மாதம் 02 திகதி நவநாள் ஆரம்பமாகி பெப்ரவரி மாதம் 11ம் திகதி திருவிழா கொண்டாட்டம் நடைபெறலாயிற்று. 1933ம் ஆண்டில் தற்போது காணப்படுகின்ற மலைச் சிகரங்கள் அடங்கிய தோற்றத்துடன் கெபி கட்டி முடிக்கப்பட்டது.

இத்திருத்தலத்தின் வருடாந்த திருவிழாவில் யாழ் மறை மாவட்ட ஆயர் சமூகம் தந்து சிறப்பிப்பது ஒரு முக்கிய அம்சமாகும்.

இத்திருத்தல திருவிழாவிற்கு யாழ் குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் யாத்திரிகர்கள் வருவது வழக்கம் இத்திருதலத்தில் நவநாட்களில் வடமராட்சியிலுள்ள ஆலயங்களும் பங்குகளும் சிறப்பாக பங்கெடுப்பது ஒரு முக்கிய அம்சம். திருவிழா (பெப். 11) அன்று இரவு கத்தோலிக்க நாடகங்கள் மேடையேற்றப்படுவது வழக்கம். எனினும் தற்போது இது அருகிவிட்டது

திருவிழா நாள் மாலை அன்னதானம் வழங்கப்படுவதுண்டு.

தற்போது இத்திருத்தலத்தில் சனிக்கிழமைகளில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் விசேடமான குணமாக்கல் வழிபாடுகளும் தியானங்களும், ஒன்றுகூடல்களும் இங்கு நடைபெற்றுவருகின்றன. இத்திருத்தலத்திற்கு திருவிழாக்காலங்களிலும் ஏனைய நாட்களிலும் இந்துக்களும் வந்து வழிபடுவர்.

## 9) துன்னாலை வடக்கு சதாசகாய மாத ஆலயம்

துன்னாலையில் இக்கத்தோலிக்க ஆலயம் கட்டப்படமுன் அங்கு வாழ்ந்த கத்தோலிக்கர் வதிரி புனித அந்தோனியார் ஆலயத்துடன் இணைந்தே தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயக்கடமைகளை நிறைவேற்றினர். காலப்போக்கில் தனியான ஓர் ஆலயம் கட்டும் தேவை ஏற்பட்டது. எனவே முன்னாள் பங்குத்தந்தை அருட் திரு. பெ. அல்பிறட் சுவாமியாரின் முயற்சியினால் இவ்வாலயம் கட்டுவதற்கு 1956 ஆம் ஆண்டில் ஒழுங்குகள் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வாலயத்தை ஆரம்பத்தில் அமைக்க சின்னப்பொடியன் ஞானம் என்பவர் உதவியதாகத்தெரிகிறது. இவ்வாலயத்திற்கு மத வேறுபாடுகளின்றி அநேக பக்தர்கள் வந்து வழிபடுவதுண்டு. இவ்வாலயத்தில் திருவிழா செப்டம்பர் மாதம் 1ம் ஞாயிறு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாட்கள் நடைபெற்று இரண்டாம் ஞாயிறு திருநாள் கொண்டாடப்படுகின்றது.

இவ்வாலயத்தில் ஒவ்வொரு ஞாயிறும், புதனும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாலயம் கட்டப்பட்டதன் 50 வது ஆண்டு (பொன் விழா) நிறைவு பெற்றது குறிப்பிடத்தக்கது.

### 10) சாரையடி புனித ஆரோக்கிய மாதா ஆலயம்

இவ்வாலயம் முதலில் கொட்டிலாக 1992 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு வழிபாட்டுக்கு உரியதாக அமைந்திருந்தது. தற்போது அது புனரமைக்கப்பட்டு கட்டிடக் கோவிலாக 1999ம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது.

### 11) மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை குழந்தையேசு ஆலயம்

நெடுங்காலமாக அரசினர் ஆதார வைத்தியசாலை வளவில் கத்தோலிக்க வழிபாட்டு தலம் ஒன்று இருந்து வந்தது அதை புனரமைத்து 2006ம் ஆண்டில் புதிதான சிற்றாலயம் ஒன்று வழிபாட்டிற்காக கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. தற்போது அங்கு திருப்பலி மாதத்தின் முதற் சனிக்கிழமைகளில் நடைபெறுகின்றது.

### 12) மாதனை (ஊரியவத்தை) கிறிஸ்து அரசர் ஆலயம்

மாதனை ஊரியவத்தையில் வாழும் றோமன் கத்தோலிக்கருக்காக ஒரு ஆலயம் தேவைப்பட்டதை முன்நாள் பங்குத்தந்தை அருட்பணி பயஸ் இருதயதாஸ் அடிகளார் விளங்கிக் கொண்டார். அதற்கு ஏற்ப அங்கு ஓர் ஆலயம் தற்காலிகமாகுதல் அமைக்கப்பட வேண்டும் என்றதை உணர்ந்து 2007 ஆம் ஆண்டில் அப்பகுதி கத்தோலிக்கரின் பரோபகாரமாக வழங்கப்பட்ட காணியில் ஓர் ஆலயத்தை நிறுவ ஒழுங்கு செய்தார். அவ்வாலயம் 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ம் திகதி வழிபாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டு அன்று அருட்பணி பயஸ் இருதயதாஸ் அடிகளாரினால் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. அவ்வலயத்தில் பருத்தித்துறை பங்குத்தந்தையின் ஒழுங்குக்கேற்ப திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படும்.

### 13) பொலிகண்டி குழந்தை இயேசு ஆலயம்

முன்னாள் பங்குத்தந்தை அருட்பணி R.M.G. நேசநாயகம் அடிகளாரால் 1990ஆம் ஆண்டில்ஸ்தாபிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**14) வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகப் பிரிவில் ஆங்காங்கே செபக்கூடங்கள் உள்ளன.**

அவற்றள் பருத்தித்துறை 3ம் குறுக்குத் தெருவில் குழந்தையேசு செபக்கூடத்தை 2007 ஆம் ஆண்டில் அப்போதிருந்த பங்குத்தந்தை அருட்பணி பயஸ் இருதயதாஸ் அடிகளார் அங்கீகரித்து வழிபாட்டுக்குத் திறந்து வைத்தார்.

## கத்தோலிக்க ஆலயங்களில் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோர் தஞ்சமடைதல்

1987 ஆம் ஆண்டில் போர் அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து சில மாதங்களாக கத்தோலிக்க ஆலயங்களில் மதவேறுபாடின்றி பதிக்கப்பட்டோர் பாதுகாப்பாக தங்கியருந்தனர். உதாரணமாக தும்பளை புனித மரியன்னை ஆலயத்திலும், புனித லூர்த்தன்னை திருத்தலத்திலும் இவ்வாறான நிகழ்வு நடைபெற்றது. போர் கால நிலைமைகளினால் 1995 லும் 2000ம் ஆண்டிலும் கத்தோலிக்க ஆலயங்களில் பாதிக்கப்பட்டோர் தஞ்சமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

2004ல் டிசம்பர் 26 ஏற்பட்ட பயங்கர ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டோரும் சில கத்தோலிக்க ஆலயங்களில் தஞ்சமடைந்தமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டோருக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் பல நிவாரண உதவிகளை இவ்வாலயங்களில் தங்கியிருந்தோருக்கு வழங்கினர். அவற்றுள்ளே கத்தோலிக்க நிறுவனமான CARITAS, HUDEC அளப்பெரிய நிவாரணப் பணிகளை வடமராட்சி வடக்கில் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கியுள்ளமை எல்லோருக்கும் தெரிந்ததே. மேலும் தேவைக்கேற்ப பருத்தித்துறை மறைப் பங்கு அருட்பணியாளர்களும் பாதிக்கப்பட்டோருக்கு அவ்வப்போது நிவாரண உதவிகளை வழங்கி வந்துள்ளனர்.

**பழமொழிகள் சில...**

- ஆத்தை பிச்சை எடுக்குதாம் - பிள்ளை
  கந்தவனக் கடவையில் அமுது கொடுக்குதாம்.
- ஆசை மருமகன் தலை போனாலும்
  ஆதிகாலத்து உரல் வேண்டும்.
- காட்டுக்கம்பே கணக்கற்றை மாடே
- முயல் பிடிக்கிற நாயை மூஞ்சையில தெரியும்.
- கெடுகுடி சொற்கேளாது.
- கழுவுகிற தண்ணியில நழுவுகிற மீனைப்போல
- வைத்தால் குடுமி சிரைத்தால் மொட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது நிர்வாகத்துறையில் மீள் - பொறிமுறை நிர்வாகம்
## (Re - Engineering Process in Public Administration)

**பேராசிரியர் மா. நடராசசுந்தரம்**
கல்லூரி வீதி,
தம்பசெட்டி,
பருத்தித்துறை.

பொது நிர்வாகத்துறையில் புதிய தூரநோக்கு (Vision) புதிய பரிகாரம் என்ற தொனிப்பில் நிர்வாகமானது தனி நபரினதும், கூட்டு மொத்த மனிதர்களினதும் தேவைகளுக்கு அடிப்படையில் அமைய மக்களின் உணர்வுகளுக்கு தலைசாய்க்கும் வண்ணம் தொழிற்பட தொடங்க வேண்டிய சூழ்நிலை உருவாகி வருகின்றது. எந்த ஒரு நிறுவனமோ, துறைகளோ தமக்கென தூரநோக்கு, செயற்பாடுகளை (Mission) உருவாக்கி காலபரிமானங்களுக்கு ஏற்ப சேவைகளை செய்துவருகின்றன. இந்நிலையில் பொது நிர்வாகத்துறை ஒரு அபிவிருத்தி நிர்வாக துறையாக மாறி (Development Administration) தமக்கென பிரத்தியேகமாக தூரநோக்கு, செயற்பாடுகள், நோக்கங்களை வெளியிட்டுள்ளன. இவற்றை சுருக்கமாக ஆராயுமிடத்து அதன் எதிர்கால சிந்தனை செயற்பாடுகளை இலகுவில் இனங் காணமுடியும்.

### தூர நோக்கு (Vision) :-

"தரமான பொதுச்சேவையை நாட்டிற்கு வழங்கல்."
(An Excellent public Service to the Nation)

### செயற்பாடுகள் (Mission) :-

ஆற்றல் மிக்க மனித மூலவளங்களை பயன்படுத்தி பலமான தேசிய பிராந்திய நிர்வாக அமைப்பை உருவாக்கி, அதனூடாக தரமிக்க பொதுச்சேவையை மக்களுக்கு வழங்குவதனை உறுதிப்படுத்தல்.

(``To ensure an excellent public service through sound national and regional administrative system with competence human Resources")

இவை இரண்டையும் அடைவதற்கு பல வகையான நோக்கங்களை பொதுநிர்வாக அமைச்சு தன்னகத்தே கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோக்கங்கள் (Objectives) :-

- பொதுத்துறையில் மனிதமூலவள முகாமைத்துவத்தை மேம்படுத்த வினைத்திறன்மிக்க கொள்கைகளை குறிப்பாக, ஆட்சேர்த்தல், சம்பளக் கொடுப்பனவு மற்றும் சேவைகள் சம்பந்தமான நிபந்தனைகளை வலுவூட்டல்.

- மக்களுடைய தேவைகளை இனம்கண்டு, அதற்கு ஏற்ற முறையில் தற்பொழுது சேவையில் இருக்கின்ற அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இக்கட்டான வேளையில் விரைந்து முடிபு செய்யும் ஆற்றலை உருவாக்கும் தந்திரோபாயங்களை விருத்தி செய்தல்.

- பொதுத்துறையின் உற்பத்தித் திறணையும் தரத்தையும் மேம்படுத்துவதற்கு ஏற்ற முறையில் புதிய முகாமைத்துவ ஒழுங்குமுறைகளை (Management Structure Systems) உருவாக்கி நடைமுறைப்படுத்தல்.

- விழுமிய ஒழுங்குகளை (System Values) உருவாக்கி அதில் பங்கு கொண்டு செயற்படல், இறுதி முடிவை நோக்கிய மனோநிலை, வகை கூறல், மூலவள விவேகம், (Resource Prudence) பக்கச் சார்பின்மை, ஒளிவு மறைவின்றி தெளிவான (Transparency) செயல்முறைகளை உருவாக்கல்.

- பொதுத்துறை ஆளணியினருக்கு தேவையான பயிற்சிகளை இனம் கண்டு, பயிற்சி நெறிகளை நடத்துவதற்கு அனுசரனையாக இருத்தல்.

- பொதுத்துறையில் சேவையாற்றுபவர்களின் இளைப்பாற்று சம்பளத்தையண்டிய திட்டங்களை உருவாக்கி அந்தக் கொள்கைகளை நெறிப்படுத்துதல்.

- நடைமுறையிலிருக்கும் உள்ளக நிதிச்சொத்து முகாமைத்துவ அமைப்பை (Financial Asset Management System) மேலும் செம்மைப் படுத்த உதவுதல்.

- விளைதிறன், வினைதிறனுள்ள பிராந்திய நிர்வாக கட்டமைப்பை மேம்படுத்த (enhance) நடவடிக்கை எடுத்தல்.

- அரசாங்கத்தினால் இனம் காணப்பட்ட அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்கு ஏதுவான பொதுத்துறையில் ஒரு நிர்வாக கட்டமைப்பை உருவாக்கி நடைமுறைப்படுத்தல்.

- பொதுவாக நடைமுறைப்படுத்தப்படும் நிர்வாகத்தை தொடர்ந்தும் பேணுவதற்கு தேவையான சேவைகளை வழங்குதல்.

- உற்பத்தித்திறண், தராதரம் யாவற்றையும் மேம்படுத்துவதற்கு நவீன கணணி தொழில்நுட்ப வசதியை பயன்படுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ பொதுமக்களுக்கும், அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கும் தேவையான நடைமுறை அம்சங்களை மேம்படுத்தல்.

- ❖ பொதுமக்களின் தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்வதற்கு, வேண்டிய நடைமுறை செயல் முறைகளை (operational procedures) தரம் உயர்த்தி, எளிமைப்படுத்தி (simplifying), வழிகாட்டி செயற்படுத்தல்.

- ❖ பிரதேச செயலகங்களை பிராந்திய செயலகங்களுடன் ஒருங்கிணைத்து செயல்முறைகளை வழிநடத்த உதவுதல்.

- ❖ பிரதேச பிராந்திய நிர்வாகங்களில் அடைவு மட்டத்தை (performance) மேம்படுத்த உதவுதல்.

- ❖ உத்தியோகபூர்வ மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்.

- ❖ பொதுநிர்வாகத் துறை அமைச்சின் உள்நாட்டு வெளிநாட்டு நிதியிட்ட செயற்திட்டங்களை, ஒருங்கிணைத்து கண்காணித்தல்.

- ❖ தேசிய சுதந்திரதினம், மற்றும் ஏனைய உத்தியோக பூர்வ விழாக்களை நடாத்துவதற்கு ஒருங்கிணைந்து செயற்படல்.

**தந்திரோபாயங்கள் (Strategies) :-**

நோக்கங்களை அடைவதற்கு பல்வேறு வகையான தந்திரோபாயங்களை அமைச்சு நடைமுறைப்படுத்துகின்றது.

- ❖ மனித மூலவள கொள்கைகளையும் சட்ட திட்டங்களையும் முகாமை செய்தல்.

- ❖ பொதுநிர்வாகத் துறையில் விளைதிறன், வினைதிறனை அதிகரிப்பதற்கு, தரமாக முகாமைத்துவ ஒருங்கமைப்பை உருவாக்க (management system) தேவையாக நிர்வாக மறுசீர் அமைப்பை உருவாக்கல்.

- ❖ பயிற்சி நெறிகளை நடாத்துவதன் மூலம் பொதுத்துறை ஊழியர்களின், உணரும் தன்மையை (sensibility) அதிகரித்தல்.

- ❖ பொதுமக்களின் அவாவினை பூர்த்தி செய்து, அவர்கள் உணரக்கூடிய முறையில் பிராந்திய நிர்வாகத்தை பேணுதல்.

- ❖ குடி உரிமை மற்றும் ஆவணங்கள் பதிவு முறையினை இலங்கையில் பொருத்தமான முகாமைத்துவத்தின் கீழ் உருவாக்கல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு வகையான தந்திரோபாய செயற்பாடுகளின் ஊடாக புதிய ஒரு வடிவத்தை வழங்குவதற்கு அமைச்சு தயாராகி வருகின்றது. இயந்திர உலக காலத்திலிருந்து தகவல் தொழில்நுட்ப காலத்தில் (machine age to information or digital age) அடி எடுத்து வைக்கும் இந்த நூற்றாண்டில் பல புதிய நவீன செயல்முறைகளுக்கு தம்மை மாற்ற வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகி எல்லா துறைகளும், அதில் போட்டி போட்டு முன்னேறி வருகின்றன. இதன் ஒரு விளைவு தான் பொதுத்துறை நிர்வாக அமைச்சினால் உருவாக்கி நடைமுறைப்படுத்தப்படும். "மீள் நிர்வாக பொறிமுறை அரசு" (Re - engineering Government) என்ற புதிய நோக்கில், தகவல் தொழில்நுட்பத்திற்கு (information technology) முக்கிய பங்கு வழங்கி, தனது நிர்வாக செயல் முறைகளில் பாரிய மாற்றங்களை குறிப்பாக தரம், சேவை நேரம், நம்பகத்தன்மை யாவற்றிலும் வினைதிறனை உருவாக்கி, கணணி செயற்பாட்டின் மூலம் புதிய பரிமாணத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது. இதன் விளைவுதான் மீள் நிர்வாக பொறிமுறை என அழைக்கப்படுகின்றது. இந்த எண்ணக்கருவின் தோற்றம், நோக்கம், செயல்முறைகள் எவ்வாறு எமது நிர்வாகத்தில் நவீன தகவல் தொழில்நுட்ப காலத்தில் புகுத்தப்படுகின்றது. என்பதனை சற்று விபரமாக நோக்குவோம்.

## மீள் பொறிமுறை நிர்வாக அரசு (Re - Engineering Government):-

1990 ஆம் ஆண்டுகளில் மீள் பொறிமுறை நிர்வாகம் என்ற எண்ணக்கரு பிரபலம் அடையத் தொடங்கியது. இக்காலகட்டத்தில் அமெரிக்காவில் உதவி ஜனாதிபதியாக பதவியிலிருந்த அல்கோர் (Al Gore) வின் மேற்பார்வையின் கீழ் அரசாங்கத்தின் செயல்முறைகளில் புதிய பரிமாணங்களை கால சூழலுக்கு ஏற்ப உருவாக்கி ஒரு செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்த முன் முயற்சிகள், மேற்கொள்ளப்பட்டன. இவருடைய சிந்தனையில் உருவான மீள்பொறி முறை அரசு என்ற எண்ணக்கரு உலகரீதியாக பல நாடுகளில் வர்த்தக துறையிலும், பொதுத்துறையில் நிர்வாகி மட்டத்திலும் (public administration) பிரபல்யமடையத் தொடங்கியது. ஆரம்பகாலங்களில் தனியார்துறையில், செலவை குறைப்பதற்கும் (cost cutting) விளைதிறனை அதிகரிப்பதற்கும் (efficiency enhancement) ஒரு அளவு கோலாக பயன்படுத்தப்பட்ட பொழுதிலும், மிகக் குறுகிய காலத்தில் தனியாருடன் பொதுத்துறையிலும் (private and public) உள்ள நிறுவனங்களின் செயற்பாட்டிலும் ஒரு முக்கிய கருவியாக (tool) இந்த எண்ணக்கரு பயன்படுத்தப்பட்டது.

அமெரிக்காவில் மஸ்அசெஸ்ருவட்ஸ் தொழில்நுட்ப பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி மைக்கல் கமர் (Dr. Michael Hammer) உடைய ஆய்வினாலும், பெருமுயற்சியாலும் இந்த எண்ணக்கருவுக்கு புதிய தோற்றமும் வலுவும் (Life and rigor) வழங்கப்பட்டு அவருடைய சிறப்பு வெளியீடான ``Re - Engineering the corporation'' கூட்டுத்தாபனங்களில் மீள் நிர்வாக பொறிமுறை வர்த்தக புரட்சியில் ஒரு விஞ்ஞாபனம் (A manifesto for Business Revolution) என்ற தலைப்பில் வெளியானது. வர்த்தக துறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற வியாபார செயல்பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள் பொறிமுறை (Busines Process Re - engineering) ஒரு புதிய எண்கரு அல்ல. இதனை மீள் நிலைப்படுத்தி வர்த்தக நிறுவனங்கள் வினைதிறன் விளைதிறனுடையதாக மாற்றியமைப்பதற்கு இன்றும் புதிய வடிவத்தில் அத்துறையில் பயன்படுத்த முயற்சி எடுத்து வருகின்றார்கள்.

பேராசிரியர் கமர் (Hammer) உடைய விளக்கத்தில் கொடுக்கப்பட்ட வரைவிலக்கணம் அவா் நூலில் பின்வருமாறு அமைகின்றது.

``Re - Engineering is the fundermental rethinking and radical re-design of business processes to achieve dramatic improvements in critical contemporary measures of performance such as cost, quality and speed (1993)"

"மீள் நிர்வாக பொறிஅமைப்பு என்பது செயலாற்றுகையை மதிப்பிடுவதற்கு பயன்படும் தற்கால முக்கிய அளவீட்டுக் கணியங்களான விரயம், தரம், வேகம் என்பவற்றில் சிறப்பான வளர்ச்சியை எய்தும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் வியாபார செயற்பாடுகள் தொடர்பான அடிப்படையான மீள்சிந்தனையும் / ஆய்வும் வியாபார செயற்பாடுகளின் அடிப்படையான ஒழுங்கமைப்பும் ஆகும்.

இதனைத் தொடர்ந்து, மீள் நிர்வாக பொறிமுறையை நிர்வாகத்துடன் இணைத்து செயல்ப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் தான் பொது நிர்வாகத்துறை அதிகாரிகள், அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு அமைய புதிய ஒரு வரைவிலக்கணத்தை வழங்கினார்கள். இரண்டு வருடங்களுக்கு பின்னர் 1995ஆம் ஆண்டு அமெரிக்காவில் பொது நிர்வாகத்துறையின் தேசிய அக்கடமி, (National Academy of Public Administration) புதிய வரவிலக்கணத்தை வரைந்தது.

``Government business processes re - engi neering is a radical improvement approach that critically examines, rethinks, and redesigns mission product and service processes within a political environment. It achieves dramatic mission performance gains from multiple customer and share holder perspectives. It is a key part of a process management approach for optimal performance that Continuously evaluates, adjust or removes processes" 1995.

"அரச / வியாபார நிகழ்முறை மீள் நிர்வாக பொறிஅமைப்பு என்பது அரசியல் சூழல் ஒன்றினுள் பணித்திட்டம், உற்பத்தி மற்றும் சேவை செயன்முறைகளை விமர்சன ரீதியாக ஆராய்ந்து, மீள் ஆய்வு செய்து, மீள் ஒழுங்கமைக்கும் வளர்ச்சி தொடர்பான அடிப்படை அணுகுமுறையாகும். வாடிக்கையாளர் மற்றும் பங்குதாரர் தொடர்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்முக நோக்கில் இது பணித்திட்ட செயலாற்றுகை பெறுபேறுகளை எய்துகிறது. நிகழ்முறைகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யும், செப்பனிடும் அல்லது நீக்கிவிடும் செயலாற்றுகையின் உச்ச பெறுமானத்தை எட்டும் நோக்கில் நிகழ்முறை முகாமைத்துவ அணுகுமுறையின் ஒரு பகுதியை இது பூர்த்தி செய்கிறது"

நிர்வாக சிந்தனையில் (administration thought) ஒரு சாரார் உடைய கருத்தில், அரசாங்க செயற்பாடுகள் யாவும் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதே தவிர எந்தவகையான சிறந்த பொறிமுறைகளை பயன்படுத்துவதனை அவர்கள் தவிர்த்துக் கொள்வார்கள் என்றும் இதனால் எந்தவிதமான ஒரு பெறுமதியினையும் அந்த செயல்முறைகளில் ஏற்படுத்த முடியாது என வாதிடுகிறார்கள். இருந்தாலும், அவற்றை நாம் முற்றாக புறக்கணிக்க முடியாது. இந்தக் கருத்தை ஏற்கின்ற அல்லது நம்புகின்றவர்கள், எந்தவகையிலும் மீள்நிர்வாக பொறிமுறை பொதுத்துறையில் (public sector) நடைமுறைப்படுத்த முடியாததொன்று என வாதிடுவார்கள். நாம் மிகவும் கவனமாக இதனை பரிசீலிப்போமானால் வர்த்தக துறையில் இருந்து அரசாங்கம் விலகி நிற்பதாயின் அது அவர்கள், அவர்களுடைய வாடிக்கையாளர்களையும், சேவைகளையும் நடைமுறைப்படுத்தும் கட்டுப்பாடுகளையும் கொண்டு தான் வேறுபடுத்தப்படும். தனியார்துறை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் சேவைகள், பொருட்களில் தமக்குகந்த வகையான செயல்முறைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

அரசாங்கத்துறையில், அதன் செய்பாடுகளை உற்றுநோக்கி ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மீள்நிர்வாக பொறி செயல்முறை நிச்சயமாக ஒரு தொடர்ச்சியான செய்முறையாக (continuous process) நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை பல நிர்வாகிகள் இன்று உணர்த்தியிருக்கின்றனர். NAPA கொடுத்த வரவிலக்கணமும் இதனையே உணர்த்தி நிற்கின்றது. அரசாங்கம் ஒழுங்குபடுத்தப்பட்ட சேவைகளை மக்களுக்கு தொடர்ச்சியாக வழங்கி வருகின்றது. இதற்கு மாற்றீடாக பொதுமக்கள் வரி, (taxes) மற்றும் சேவைக் கட்டணங்களை (fees) கொடுக்கின்றனர். இருந்தாலும், அரசாங்கம் பொதுமக்களுக்கு வழங்கும் சேவையில் முழுமையாக திருப்தி அடைந்து கொள்ள முடியாது. அதனுடைய செயற்பாட்டில் தொடர்ச்சியாக முன்னேற்றம் காணப்படல் வேண்டும்.

மக்களுக்கு பொதுச்சேவைகளை வழங்குவதில் அரசாங்கம் தன்னுரிமையை (monopoly) பேணுகின்றது. ஆகவே, பொதுமக்களுக்கு தரமான ஒரு சேவையை வழங்க வேண்டிய கடப்பாட்டை அது கொண்டிருக்கின்றது. இதனால் அரசாங்கம் வழங்குகின்ற சேவைகள் விளைதிறனாகவும், வினைதிறனாகவும் அமைய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதற்கு எந்த வகையான எதிர் கணிய கருத்து வேறுபாடும் இருக்க முடியாது.

எமது பொதுத்துறை தொடர்ச்சியாக கடுமையான விமர்சனத்துக்குள்ளாகி வருவதனைக் காணலாம். குறிப்பாக அத்தியாவசிய சேவை என வழங்கும் பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுகின்ற கால தாமதங்கள் (delays), ஊக்கமின்மை (lethargy), பண்பான செயலின்மை (lack of courtesy), சில சந்தரப்பங்களில் கைலஞ்சம் பெறல் (At times for corruptions) போன்றவை, இத்துறையில் ஊடுருவியிருக்கின்றன. ஒவ்வொரு பிரஜையும் அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்கும் சேவைகளில் வினைதிறனையும் (Efficiency) பண்பான செயல்முறைகளையும், கைலஞ்சமற்ற சேவையையும் விரும்புகின்றார்கள் பெரும்பாலும் அரசாங்கத்தில் தொழில்புரிபவர்களிடமிருந்து இத்தகைய சூழல்களை மதிப்பாய்வு செய்யும் பொழுது,அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்கு ஏற்படும் காலதாமதத்திற்கு முக்கியமான காரணம், செயற்பாடு யந்திரத்தில் (processes mechanisim) உள் இணைந்திருக்கும் தகுதி பெற்றிராத (inbuilt inefficiencies) செயன் முறைகளே காரணம் எனக்கூறுகின்றனர். செயல்முறைகள் தரமானதாகவும் தகுதி பெற்றிராதவையாகவும் காணப்படும் பொழுது, ஊழல்கள் (corruption) மலிந்து காணப்படுவதுடன் ஊழல் அதிகரிக்கும் வேகமும் அதிகமாக இருக்கும். இந்தக்கட்டத்தில் தான் மீள் நிர்வாக பொறிமுறை என்ற எண்ணக்கரு ஒரு முக்கிய செயல் மையமாக கருதப்பட்டு நடைமுறைக்கு கொண்டு வரப்படுகின்றது.

ஒருவருடைய பிறப்புச் சான்றிழ் ஒன்றினை எடுப்பதற்கான முறையினை அவதானிப்போம். சான்றிதழை எடுப்பதென்பது சிக்கல் நிறைந்த செயல்முறையானது (cumbersome process) டன், சில சந்தர்ப்பங்களில், நீண்ட காலத்தை எடுப்பதுடன், மறக்க முடியாத அனுபவத்தையும் (unforgettable experience) பெறக் கூடியதாக இருக்கும். இன்றைய காலத்தில் பிறப்புச்சான்றிதழ் பிரதிகளை பெறுவதற்கான கேள்வி பலமடங்கு அதிகரித்திருப்பதுடன் அவற்றை விரைவாக பூர்த்தி செய்வதற்கான ஒரு பொறிமுறை முழுமையாக எல்லா இடங்களில் (machanism) உருவாக்கப்பட வில்லை. ஒரு பிரதேச செயலகத்திலோ (Dirisional Secretariat) அல்லது மாவட்ட பதிவு அலுவலகத்திலோ (District Registrar's office) பிறப்பு சான்றிதழுக்கான ஒரு விண்ணப்பம் கொடுக்கப்படும் பொழுது, தூசுபட்ட நிலையில் கோவைகள் யாவும் காணப்படும் இடத்தில் இதற்கான தேடுதல்கள் நடைபெறும் மிகவும் இக்கட்டான சூழலில் அதனை தேடுபவர் ஈடுபடுவார். சிலவேளைகளில் பல விண்ணப்பங்கள் சேரும்வரை காத்திருந்து, சனிக்கிழமைகளில், மேலதிகவேலை நேரத்துடன் தேடுதல்கள் நடைபெறும். இதன் விளைவாக நேரம், செலவு இரண்டும் வீணாக்கப்படுகின்றது. சில வேளைகளில் இது ஒரு மாதம், இரண்டு மாதமாகலாம் அதே நேரம் ஒருவருக்கு அவசரமாக ஒரு பிறப்பு சான்றிதழ் தேவைப்படின், உயர் மட்ட செல்வாக்கை பயன்படுத்த வேண்டி வரும்.

ஒரு சிறிய மீள் நிர்வாக பொறிசெயல் (Re - Engineering) மூலம் சுலபமாகவும் இலகுவாகவும் இதனை செய்ய முடியும். பிறப்பு சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை (originals) எண்குறி முறையில் ஸ்கான் செய்து (digitally scanned), தரவுகள் தளத்தில் (date base) படமாக வைப்புச் செய்தல் (stored) வேண்டும். ஒருவர் தனது பிறப்புச் சான்றதழின் பிரதி ஒன்றை கேட்குமிடத்து தரவு தளத்தில் சென்று குறிக்கப்பட்ட சான்றிதழை எடுத்து எண்குறி (digital) பிம்பத்தை பெற்றுக்கொடுக்கலாம். அவருடைய தேவையை உடனுக்குடன் அந்த இடத்தில் அதே நேரத்தில் செய்து கொடுக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இந்த செயல்முறை சில பிரதேசங்களில் நடைமுறைக்கு வந்துள்ளது. ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தகவல் தொலைத் தொடர்பு தொழில் நுட்ப முகவர் (Information Communication Technology Agency) (ICTA) செயற்பாட்டில் பல பிரதேச செயலகங்களில் பிறப்பு, இறப்பு திருமண (Birth, Death, Marriage) சான்றிதழ்கள் யாவும் எண்குறிப்பிடப்பட்டு (digitised) பொது மக்களுக்கு ஒரு தரமான சேவையை வழங்கி வருகின்றது. எந்த ஒரு நபரும் 5 - 10 நிமிடங்களில் ஒரு பிறப்பு சான்றிதழை பெறுவதற்கு முடியும். இந்த செயல்முறையில் மீள் பொறிமுறை ஊடான தொழில்நுட்பம் தொழில்பாட்டை முன்னேற செய்வதற்கு உதவுகின்றது. இதேபோல பல்வேறு சந்தர்ப்பங்களில், படிவங்களை நிரப்புதல், தேசிய அடையாள அட்டையை பெறல், போன்றவற்றையும் இப்பொறிமுறை மூலம் இலகுபடுத்த முடியும். பேராசிரியர் கமர் (Hammer) உடைய கருத்துப்படி ஓர் செயல்முறையை மீள் பொறிமுறை செய்வதாயின்,ஒரு சில தத்துவங்களின் தேவைகளை நாம் பின்பற்றியாக வேண்டும். இவர் ஏழு மீள் பொறிமுறை தத்துவங்களை குறிப்பீடாக வெளியிட்டுள்ளார். இதனூடாக வேலைகளை ஒழுங்கமைத்து, சேமிப்பினை அதிகரித்து, சேவையின் தரத்தை, கூட்டி நேரமுகாமைத்துவத்தை பேணி, செயல்பட முடியும். அந்த தத்துவங்கள் பின்வருமாறு அமையும்.

1) பணியைக் கருதாது. பெறுபேற்றை மையமாகக் கொண்டு ஒழுங்கமைக்கலாம்.

2) நிறுவனத்தில் காணப்படுகின்ற எல்லாச் செயல்முறைகளையும் ஒழுங்குபடுத்தி இனம் கண்டு (identity) அதற்கு முக்கியத்துவம் கொடுத்து முன்னுரிமைப்படுத்தி (prioritise) மீள் வரையறை (Re - Design) செய்தல் வேண்டும்.

3) தகவல் நிகழ்முறையை, தகவலை வழங்கவல்ல உண்மையான / நிச வேலைத்திட்டத்துடன் ஒழுங்கிணைத்தல்.

4) புவியியல் ரீதியாக பரந்து வியாபித்திருக்கும் மூலவளங்கள் யாவும் (resources) மத்தியபடுத்தப்பட்டிருப்பதாக (centralized) கொள்ளவும்.

5) சமாந்தரமான செயற்பாடுகள் (parallel activities) யாவற்றையும் ஒன்றாக இணைத்து (link) செயப்படமுயலவும் தனித்தனியாக செய்து முடிபுகளை பெற முனைய வேண்டாம்.

6) வேலை செய்து முடிந்த இடத்தில் தீர்மானத்தை எடுத்து, அந்த செயல்பாட்டில் கட்டுப்பாட்டை உருவாக்கவும்.

7) தேவையான தகவல்களை ஒரே நோக்கில் ஆரம்பத்திலேயே பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

பரந்த அளவில் பொதுசேவைகள் மீள் பொறிமாற்றத்துக்கு உட்படுத்தப்பட வேண்டியிருக்கின்றது. உதாரணமாக வாகனம் ஓட்டும் தகுதிச் சான்றிதழ் ஒன்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவது இன்று மிகவும் சிக்கலான வழிமுறைகளை கொண்டிருக்கின்றது. நடைமுறையில் இருக்கும் படிமுறைகளை பார்க்கும் பொழுது ஒருவருக்கு இந்தச்சான்றிதழை எடுப்பது என்பது அருவருப்பு தரும் அனுபவமாக (nightmare) காணாலம். மீள் பொறி மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டு ஏன் இதனை செய்யமுடியாது? தேவையற்ற படிவங்களை நீக்குவதுடன், விண்ணப்பதாரரிடமிருந்து தீர்மானம் எடுப்பதற்கு வேண்டாத தகவல்களை பெறுவதை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். இதனூடாக பலவகையான செலவுகளை குறைப்பதுடன், முழு செயல்பாட்டுக்கும் தொழில்நுட்பத்தை பாவிப்பதுடன் தரமான ஒரு தரவுத் தளத்தை (database) உருவாக்க முடியும். குறிப்பாக சாரதி பரீட்சை முடிவடைந்ததும் இலகுவாக சான்றிதழை வழங்க முடியும். பல நாடுகளில் மீள் பொற்றி மாற்றல் மூலம் இத்தகைய சேவைகள் ஒழுங்குபடுத்தி நேர் சீர் செய்யப்பட்டுள்ளன.

கடவுச்சீட்டு வழங்குவதும் நீண்ட கால இடைவெளிக்கு பின்னர் செயல் முறைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டு குறுகிய நேரத்தில் அவை இன்று வழங்கப்படுகின்றன. முழு செயல் முறைகளும் நன்கு பரிசோதிக்கப்பட்டு தடங்கல்கள் (bottle necks), தேவையற்ற அனுமதிகள் (unnecessary approvals) இனம் காணப்பட்டு நீக்கப்படுகின்றன. இங்கு தகவல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவதனால், வழங்கப்படும் சேவைகளில் துரிதமான முன்னேற்றத்தை நேராகவே காணக்கூடியதாக இருக்கின்றது. இன்று குடிவரவு, குடிபெயர்வு இலாகாவை பற்றிய முறையீடு / குற்றச்சாட்டுகள் வெகுவாக குறைந்திருக்கின்றன.

பொதுத்துறை சேவையில் பல வகையான உதாரணங்களை நாம் எடுத்து அதனை எவ்வாறு மீள் பொறிமுறையில் இயக்கலாம் என ஆராயலாம். பொதுத்துறையின் முக்கிய நோக்கமே தரமான சேவையினை வழங்குவது ஆகும். இங்கு முக்கியமானது என்னவென்றால் மிகவும் நெருக்கமான சேவைகளை இனம் கண்டு முன்னுரிமை வழங்கி செயற்பட வேண்டும். முன்னுரிமை ( priorities) அடிப்படையில் இச்செயல் முறைகளை தகுதி வாய்ந்த வல்லுனர் குழு (panel) ஆராய்ந்து அவர்களின் விதப்புரைகளுக்கு ஏற்ப செயல்பட வேண்டும்.

நட்புரீதியான பொதுச்சேவையினை உருவாக்குவதற்கு (friendly public service) பின்வருவனவற்றை மேற்கொள்ள வேண்டும்.

அ) பொதுமக்களிடமிருந்து தகவல்களை பெற்று விண்ணப்பப் படிவங்களில் (application forms) மாற்றம் செய்தல்.
ஆ) புதிய புதிய படிமுறைகளை உருவாக்கல்
இ) தேவையற்ற விண்ணப்பப் படிவங்களை விலக்குதல்.
ஈ) தொழில் புரிபவர்களில் எந்த வகையினரை தொடர்ந்தும் வேலையில் வைத்திருத்தல் என்பதனை தீர்மானித்தல்.

இவை யாவும் நட்புரீதியான பொதுச் சேவையை உருவாக்க உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தின் முழுச் செயற்பாடுகளிலும் மீள் பொறி அரசு முறை பயன்படுத்தப்படல் வேண்டும். ஒவ்வொரு பொதுத்துறை சேவைகளும் வினைதிறன் / விளைதிறன் (Efficient / Effective) இரண்டினையும் கொண்டிருந்தால் மட்டுமே பொதுமக்களுக்கு இடையூறு இன்றி பண்பாக சேவை செய்ய முடியும். இதன் விளைவுதான் இன்று பரவலாக கலந்துரையாடப்படும். இலத்திரனியல் ஆட்சி (e.governance) ஆகும்.

**இலத்திரனியல் ஆட்சி (E. Governance) :-**

நிர்வாகத்தில் எளிமையானதாகவும் (simple) ஒழுக்க நெறித்தத்துவங்களையும் (moral) யும், வகை கூறுவதனையும் (accountability), பொறுப்பேற்பதனையும் (responsibility) ஒழிவு மறைவின்றி (transparency) செயற்படுவதனையும் தன்னகத்தே உள்ளடக்கி இருக்கும்.

இலத்திரனியல் ஆட்சி படிமுறைகளை நோக்கின் உள்ளக நிர்வாக வலைப்பின்னலில் இலத்திரனியல் - மெயில்சேவை (E-mail) பயன்படுத்தப்படும். இதனைத் தொடர்ந்து உள்ளக கட்டுமானங்களில், இத்தொடர்பு சேவைகளை விஸ்தரிப்பதற்கு ஏற்ற முறையில் வலைப்பின்னல் ஊடாக (Internet) வசதிகள் உருவாகும். மேலும், பொதுமக்கள் சர்வதேச வலைப்பின்னலை உபயோகித்து வேண்டிய தகவல்களை பெறுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். மீண்டும் இரு வழிமுறை தொடர்பாடலை (two way communicalion) பொதுமக்களுடன் ஏற்படுத்தி கருத்துக்களை பரிமாற முடியும். பொதுமக்களும் வலைப்பின்னல் ஊடாக நேரடி தொடர்பை (on - line) ஏற்படுத்தி அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்தல்.

நிர்வாகத்தில் இலத்திரனியல் ஆட்சி வலுவடையும் நிலையில் நாம் பின்வரும் நன்மைகளை அடைய முடியும். (அ) செயற்பாடுகளின் வேகம் (speed) அதிகரித்து, குறைந்த நேரத்தில் கருமங்களை முடிக்கலாம். (ஆ) அரசாங்கம் பொதுமக்கள் இருவருக்குமிடையில் வினைதிறண், விளைதிறண் இரண்டும் தாமாகவே அதிகரிக்கும். அரசாங்கத்தின் பல்வேறு துறைகளுடன் (wings) இலகுவில் தொடர்பினை மேற்கொள்ளலாம். சிக்கல் நிறைந்த (complex) செயல்பாடுகள் யாவும் பெருமளவுக்கு குறைக்கப்பட்டுவிடும். அரசாங்கத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையிலிருந்து நடுத்தர தரகர்கள் (middle men) தாமாகவே மறைந்து விடுவர். சீரழிந்த ஒழுங்கு கெட்ட (corruption) நடவடிக்கைகள் யாவும் மட்டுப்படுத்தப்பட்டு அரசாங்கத்தின் எல்லா செயற்பாடுகளும் ஒழிவு மறைவின்றி (transparency) வெளிக்கொணரப்படும். மக்கள் ஒவ்வொரு விடயத்திலும் தமது பங்கை இலகுவாக வெளிப்படுத்த முடியும். இவ்வாறான நன்மைகள் காணப்பட்டாலும் சில பிரச்சனைகளையும் எதிர்நோக்க வேண்டியிருக்கும். தகவல்களை பிழையாக பயன்படுத்தல், தகவல் தொழில்நுட்பத்தை தவறாக செயற்படவைத்தல், நிறுவனத்தின் அரசாங்கத்தின் இரகசியத் தன்மை (privacy) பாதுகாக்க முடியாமை போன்ற பலவற்றை இனம் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த முகாமைத்துவ தலைமைத்துவமும், அர்ப்பணிப்பும், தந்திரோபாய சிந்தனைகள், பொறுப்பை ஏற்று செயல்ப்படக்கூடியவர்கள் தான் எதிர்காலத்தில் இலத்திரனியல் ஆட்சியை இலத்திரனியல் நல்லாட்சியாக (e - good goverence) முன்னெடுத்து செல்லமுடியும். அதுவே இன்றைய தேவையாகவும் அமையும்.

**உசாத்துணைகள் :-**


1) Janes Allan, `` How to Develop your Personal management skills" Published by kagan page LTD, 120, Pentonville Road, London N193N.

2) Andrew Leigh, ``20 ways to mange better" published by university press (In dia) ltd, 3-5.580, Hydyrguda, hyderbad 500 - 0 29.

3) J.T. Rex Fernando the pressing neet for Accountability in Public service 0 Daily News weeknesday August 29, 2007.

4) T. Somasundaram, - Re Conditioning the public Service - Daily News saturday April 06. 2002.

5) மக்களில் முதலீடு செய்தல் - நிறுவனத்தை கட்டி எழுப்புதலும், மனிதவளமும் முன்னேற்ற அறிக்கை 2003, பொதுமாகாண சபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.


**வடக்குக் கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்ட நூல்வெளியீட்டாளர்கள்**



திரு.இரா. பஞ்சலிங்கம் (பஞ்சாலி சபதம் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்)



திரு. வை. சுந்தரேசன் (சீனத்துக் கவிதைகள் மொழிபெயர்ப்பு)



திரு. மா. நடராசசுந்தரம் (சர்வதேச நாணய முகாமைத்துவம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சிப் பிரதேசத்தை உள்ளிட்ட இயற்கை வளங்கள் ஒரு மீள்நோக்கு....

**திரு. பொன்னையா அரவிந்தன்**

B.Sc, Dip. in.Ed, MEd,
ஆசிரியர்,
யா/ஹாட்லிக் கல்லூரி,
பருத்தித்துறை.

## அறிமுகம்

இயற்கை அன்னை எமக்களித்த அரிய செல்வம் இயற்கைச் சூழல், அதில் மனித வாழ்வு பல்வேறு வழிகளில் பின்னிப் பிணைந்துள்ளது. இதனை யாவரும் மறுக்க முடியாது. இச்சூழல் வாரி இறைக்கும் வளங்கள் பல. அவை தரும் நன்மைகளை மட்டுமே சிந்தித்து அதற்கு எற்படும் அழிவைக் கண்டும் காணாது போல் இருத்தல் மனுநீதி தர்மம் என நினைப்பது எவ்வகையில் நியாயமான செயல்? இயற்கைக்கு உண்டாகும் அழிவு தரும் செயல்களை தடுக்கும் வழி பற்றிச் சிந்திக்க, இந்த ஆறறிவு படைத்த மனிதனின் மூளையிலுள்ள நரம்புக்கலங்கள் என்ன செயற்றிறன் குன்றியனவா? அது பற்றிச் சிந்திப்பது இன்றைய மனித சமுதாயத்தின் தலையாய கடமை அல்லவா?

அந்தவகையில் மிலேனிய ஆண்டில் சூழலியல்வாதிகள் கூடிப்பகர்ந்த Agenta - 2000 என்ற ஆவணத்தில் "இயற்கை வளங்களின் நீடித்த நிலைபெரும் வகையிலான பயன்பாடு" (The Sustainable use of Natural Resources) என்ற சீரிய எண்ணக்கருவின் நடைமுறைப் பிரயோகம் கருதி, எமது பிரதேசத்தின் மக்களது வாழ்வின் ஆணிவேராக அமைகின்ற இயற்கை வளங்களினை எமது எதிர்காலச் சந்ததியினரின் நன்மை கருதியும் அவ்வளங்களின் இருப்பியம் கருதியும் சிந்திக்க வேண்டிய காலகட்டத்தை நாம் எட்டியிருக்கிறோம்.

## இயற்கை வளங்கள் - எண்ணக்கரு விளக்கம் :-

இயற்கை வளங்கள் என்ற எண்ணக்கருவிற்கு "இயற்கையிற் காணப்படுவனவும் மனிதனாலும் மற்றைய அங்கிகளாலும் பயன்படுத்தப்படும் பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் உடையனவுமான வளங்கள்" என வரைவிலக்கணம் அளிக்கப்பட்டுள்ளன.

இவை இரண்டு முக்கிய பெரும் பிரிவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1) உயிருள்ள வளங்கள்.
2) உயிரற்ற வளங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கைச்சூழலில் உள்ள உயிருள்ள வளங்கள் புதுப்பிக்கத்தக்க வளங்கள் (Renewable Resources), புதுப்பிக்க முடியாத வளங்கள் (Non - renewable Resources) என வகைப்படுத்தப்படுகின்றன. அவ்வாறே உயிரற்ற வளங்கள் (இன்றுள்ள பாகுபாடு ஒன்றின்படி) பின்வருமாறு மூன்று வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1) நிரந்தரமான வளங்கள் (Permanent Resources)
2) புதுப்பிக்கத்தக்க வளங்கள்.
3) புதுப்பிக்க முடியாத வளங்கள்

சூழலியலாளர்களின் தற்போதைய கவலை என்னவெனில் புதுப்பிக்க முடியாத வளங்கள், புதுப்பிக்கத்தக்க வளங்கள் பற்றியதாகும். ஏனெனில் ஏற்கனவே ஒரு தொகுதி வளங்கள் புதுப்பிக்க முடியாத வளங்களாக இருக்க, புதுப்பிக்கத்தக்க வளங்களில் சில பெருகிவரும் மக்கள் தொகையின் அதீத நுகர்வைத் தாங்கிக் கொள்ளாது புதுப்பிக்க முடியாத வளங்கள் என்ற நாமம் ஏந்தும் நிலையை அடைந்து வருகின்றன.

இக்கருத்துக்களின் சாரப்பட இலங்கையில் பிரஜாவுரிமை பெற்றிருந்த விஞ்ஞானப் புனைகதை எழுத்தாளர் அமரர் Sir. Arthur. C.Clark அவர்கள் "பெற்றோலியம் அல்லாத மாற்று எரிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு உலகம் அதனைப் பயன்படுத்துவதனைப் பார்க்க வேண்டும்" குறிப்பிடுகின்றார். இவரது ஆதங்கம் இன்றும் முடிவிலித் தூரத்தில்தான் இருக்கிறது.

அந்தவகையில் எமது பிரதேசத்தின் இயற்கை வளங்கள் பற்றியும், அவற்றின் இன்றைய நிலை, எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைய இருக்கிறது.

## வடமராட்சிப் பிரதேசத்தை உள்ளிட்ட இயற்கை வளங்கள் :-

இப்பிரதேசத்தில் காணப்படுகின்ற இயற்கை வளங்கள் பின்வருமாறு பட்டியலிட்டு நோக்கலாம்.

01) கண்டல் காடுகள்
02) முருகைகற் பாறைகள்
03) கடல்நீர்வளம்
04) நன்னீர் வளம்
05) தாவர வளம்
06) கால்நடை வளம்
07) மீன் வளம்
08) நில வளம்
09) மனித வளம்
10) வளி வளம்
11) கனிய மணல் வளம்
12) நிதிவளம்

மேற்கூறிய வளங்கள் பின்வரும் அட்டவணைக்குள் உயிருள்ள, உயிரற்ற வளங்கள் என்ற வகைக்குள் உள்ளடக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| உயிருள்ள வளம் | உயிரற்ற வளம் |
|---|---|
| கண்டல் காடுகள் | கனிய மணல் வளம் |
| தாவர வளம் | கடல் நீர் வளம் |
| கால்நடை வளம் | நன்னீர் வளம் |
| மீன் வளம் | நில வளம் |
| மனித வளம் | வளி வளம் |
| முருகைக்கற்பாறைகள் | நிதி வளம் |

## எமது பிரதேச வளங்களின் இன்றைய நிலை :-

எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை இங்குள்ள வளங்களில் ஈரநில வளங்களே ஏனைய வளங்களுடன் போட்டி போட்டுக் கொண்டு எதிர்காலத்தில் புதுப்பிக்க முடியாத வளங்கள் ஆவோம் என்று கங்கணம் கட்டி நிற்கின்றன.

இவ்வளங்களில் கண்டல் காடுகள், முருகைக்கற்பாறைகள், மேய்ச்சல் தரைகள், சதுப்பு நிலங்கள், உவர்நீர் வளம், நன்னீர் வளம், நீர் மேவு பிரதேசங்கள், குளங்கள் ஆகியவற்றைப் பொதுவாக ஈரநில வளங்கள் என்று பொதுவாகக் குறிப்பிடலாம்.

## கண்டல் காடுகள் :-

ஈரநில வளங்களில் கண்டல் காடுகள் ஆரம்ப காலத்தில் காணப்பட்டமையை விட இன்று வெகுவாகக் குறைந்து அருகி வரும் நிலையை அடைந்து வருகின்றன. கண்டல் தாவரங்கள் விறகிற்காக, மூலிகைகளுக்காக தொடர்ச்சியாக அகற்றப்பட்டன. தற்பொழுது முடிவுறாத யுத்த மேகங்கள் கூட கண்டல் தாவரங்களில் தமது செல்வாக்கைச் செலுத்துகின்றன.

இத்தகைய நிலை தொடர்ந்து செல்லுமாயின் எதிர்காலத்தில் கண்டல் தாவர வளமானது இயற்கையாக புதுப்பிக்கப்படுகின்ற நிலைக்கு அப்பால் சென்று புதுப்பிக்க முடியாத வளம் என்ற நிலையை வெகு விரைவில் அடைந்துவிடும்.

இதற்கும் அப்பால் கண்டல் தாவரங்கள் 2004 ஆம் ஆண்டு எமது பிரதேசத்தில் நிகழ்ந்த சுனாமிப் பேரனர்த்தத்தில் இருந்து தரைப் பகுதியை காத்துள்ளது என்று மக்கள் அறிவர். அத்துடன் மண்ணரிப்பு போன்ற சூழலியல் பிரச்சினைகள் ஏற்படுவதனைத் தடுக்கின்றன. மேலும் குடிபெயரும் பறவையினங்களின் (Migratory Birds) இடைத்தங்கல் வாழ்வகமாகவும், உயிர்ப்பல்வகைமை மிக்க தேட்டங்களாகவும் விளங்குகின்றன.

எனவே புதுப்புனைவுகள் இல்லாது அருகிவரும் கண்டல் தாவர வளமானது காக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். உலக நாடுகள் எல்லாம் 1971ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டில் இவ் இயற்கை வளத்தினதும் ஏனைய இயற்கை வளத்தினதும் முக்கியத்துவத்தை உணர்ந்து ஈரானின் தலைநகரான ராம்சார் என்னும் இடத்தில் Ramsar பிரகடனத்தை உருவாக்கி அதன் மூலமாக காப்பு நடவடிக்கைகளை வடிவமைத்து வருகின்றன.

## முருகைக்கற்பாறைகள் :-

அடுத்து பருத்தித்துறை கடற்கரை தொடக்கம் காங்கேசன்துறை கடற்கரை வரை முருகைக்கற்பாறைத் தொடர் காணப்படுகின்றன. இவை மீன்வளங்களின் வளமான உற்பத்தியில் கணிசமான பங்களிப்பைச் செலுத்தி வருகின்றன. அத்துடன் உயிர்ப்பல்வகைமை மிக்க வளங்களில் ஒன்றாகக் காணப்படுகிறது. மேலும் முருகைக்கற்பாறைத் தொடர்கள் மீனினங்களின் சிறப்பான இனம் பெருக்கல் நிலையங்களாகச் செயற்படுகின்றன. அத்துடன் 2004 ஆம் ஆண்டு எமது பிரதேசத்தில் நிகழ்ந்த சுனாமிப் பேரனர்த்ததினால் இருந்து தரைப் பகுதியை இவ் முருகைக்கற்பாறைகள் காத்துள்ளது. சுனாமி அனர்த்தத்தை எதிர்கொண்ட முருகைக்கற்பாறைகள் தூக்கி வீசப்பட்டிருக்கின்றன. எனினும் இவ்வளத்தின் காப்பு தொடர்பான மாற்று நடவடிக்கைகள் இப்பிரதேசங்களில் ஏற்படுத்தப்படவில்லை. அவ்வாறே பாதுகாப்பு ஏற்பாடுகளும் இவ்வளத்தின் இயற்கையான தன்மைகளை பாதிக்கின்றன.

ஆரம்ப காலத்தில் இப்பிரதேசத்திலுள்ள மக்கள் முருகைகற்களை தமது வாழ்விடங்களை அமைப்பதற்காக பயன்படுத்தியிருந்தனர். பின்னர் முருகைகற்கள் பயன்படுத்துவது கைவிடப்பட்டது. கடற்கரையோரங்களில் நிறுத்தப்படுகின்ற மீன்பிடி இயந்திரப் படகுகளில் இருந்து வெளியேறும் எண்ணெய்க் கசிவுகள், கடற்கரையோரத்தில் மேற்கொள்ளப்படுகின்ற ஆழமாக்கல் நடவடிக்கைகள், கடற்சமர்கள் என்பன முருகைக்கற்களின் வளர்ச்சியில் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றன.

தற்பொழுது புதிதாக ஒரு பிரச்சினையை இவ்வளம் எதிர்நோக்கி வருகிறது. வடமராட்சிப் பிரதேசங்களின் மக்கள் குடியிருப்புகளில் இருந்து இயந்திரங்கள் மூலம் உறிஞ்சியெடுக்கப்படுகின்ற மலக்கழிவுகள் முருகைக் கற்பாறைத் தொடர்கள் அமையும் கடல் நீரில் கலக்க விடப்படுகின்றன. இந்நடவடிக்கைகள் காரணமாக உடனடியான பாதிப்பு இல்லாது விட்டாலும், நீண்ட காலத்தில் முருகைக்கற்பறைகளின் வளர்ச்சியில் பாதிப்புக்களை உண்டாக்குகின்றது.

முருகைக்கற்பாறைகளின் அழிவை நோக்காகக் கொண்டு உள்ளூர், சர்வதேச மட்டங்களிலே பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சர்வதேச மட்டத்திலே சர்வதேச முருகைகற்பாறை முன்னெடுப்பு (International Coral Initiative - ICRI) என்ற அமைப்பானது 1994 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் சர்வதேச வலைப்பின்னல் முகவரி http://www.icriforum.org) ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் கடந்த 2002 ஆம் ஆண்டு இலங்கை முருகைக்கற்பாறை ஒன்றியம் (Sri Lankan Coral reef Allience - SlCA) உருவாக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது. இவ் ஒன்றியம் முருகைக்கற்பாறைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனம் கண்டு தீர்வு காண்பதற்கு சந்தர்ப்பங்களை வழங்கி வருகின்றது.

எனவே எமது பிரதேசத்தின் தனிச் சிறப்பான முருகைக்கற்பாறைகளும் பாதுகாக்கப்பட சமூகநிலையில் மக்கள் மத்தியிலும், நிறுவனமயப்பட்ட நிலையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

**பனை வளம் :-**

எனவே எமது பிரதேசத்தின் மற்றொரு முக்கிய தாவர வளமாக பனை வளம் (விஞ்ஞானப் பெயர் : Borasus flabellifer) காணப்படுகிறது. இவ் வளத்தை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு தொழில் முயற்சிகள் அமைகின்றன. ஆரம்ப காலத்தில் போதுமான அளவு பனை வளம் எமது பிரதேசத்தில் நிறைந்திருந்தது. வரலாற்று ஆசிரியர்கள் எமது வடமராட்சிப் பிரதேசத்தில் பனைக்காடுகள் காணப்பட்டன என தெரிவிக்கின்றனர். இதற்கு அன்றைய காலகட்டத்தில் வழக்கத்தில் இருந்த 'பனைக்காட்டுப் பத்திரங்கள்' என்ற முறைமையைக் காரணமாக குறிப்பிடலாம். எனினும் தொடர்ந்து வந்த காலத்தில் கட்டிட உதிரிப்பொருட்களை ஆக்கல், கிணறுகளில் நீர் இறைப்புத் துலா ஆக்கல் போன்றவற்றுக்காகவும், பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவும் பெருமளவு பனைகள் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டுள்ளன.

அவ்வளம் புதுப்பிக்கப்படும் அளவு மிகக் குறைந்ததாக இருக்கின்றமை கவலை தரும் விடயமாகும். பனை அபிவிருத்தி சபையானது பனை வளம் பாதுகாப்புத் தொடர்பாக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. பனைவளத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில் விருத்தியடையாத நிலையில் காணப்படுகின்றன. இதற்கு காரணமாக புதிய தொழில்நுட்பங்களை வருவித்தலிலுள்ள பொருளாதாரச் சிக்கல்கள் அமைகின்றன. இதனால் சாதாரணமாக குடிசை நிலையிலேயே தமது தேவைகளுக்காக உற்பத்தி நடவடிக்கைகள் இடம்பெறுகின்றமையும், உற்பத்திக்கான செலவுகள் சந்தையிலுள்ள பனை உற்பத்தி நடவடிக்கைகள் இடம் பெறுகின்றமையும், உற்பத்திக்கான செலவுகள் சந்தையிலுள்ள பனை உற்பத்தியை ஒத்த பொருட்களைக் காட்டிலும் பல மடங்கு உயர்வாகக் காணப்படுகின்றன.

**தென்னை வளம் :-**

எமது பிரதேசத்தின் மற்றொரு முக்கிய தாவர வளமாக தென்னை (விஞ்ஞானப் பெயர் : Cocus nucifera) காணப்படுகின்றது. தற்பொழுதுள்ள தென்னை வளத்தின் அளவானது சனத்தொகையின் நுகர்வுத் தேவைக்கு போதாமல் இருக்கிறதால் அவை மேலும் பெருக்கப்பட வேண்டிய நிலையில் காணப்படுகின்றது. அவ்வப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென ஏற்படுகின்ற Mite attack போன்ற பூச்சித்தாக்கங்கள் தேங்காய் உற்பத்தியில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. எனவே இவ்வளத்தின் பெருக்கம் பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லப்படல் வேண்டும்.

## ஏற்றுமதிப் பொருளாதார பயிர் வளங்கள் :-

வடமராட்சிப் பிரதேசத்து மக்களின் வாழ்வாதாரத்தை, பொருளாதார மேம்பாட்டினை ஏற்படுத்துகின்ற தாவர வளங்களாக புகையிலை, வெங்காயம், நெல், பழமரங்கள், மரக்கறி வகைகள் போன்றன அமைகின்றன. இத்தாவர வளங்களினால் கிடைக்கும் உற்பத்திகள் சீரான சந்தை வாய்ப்புகள் ஏற்படுத்துவதில் உள்ள தாமதங்கள் காரணமாக (வெளியிடங்களுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டு காணப்படுவதனால்) உற்பத்தியாளர் பெரும்பாதிப்புகளை சுமக்கின்றனர். இதனால் உற்பத்தியை தொடர்ந்து மேற்கொள்ளாமல் கைவிட்டுச் செல்லும் நிலையும் காணப்படுகின்றது. அவ்வப்போது ஏற்படுகின்ற காலநிலை மாற்றங்களும் தமது சீற்றங்களைக் காட்டிவருகின்றன.

## மீன் வளங்கள் :-

உயிருள்ள வளங்களில் ஒன்றாக அமையும் மீன்வளமானது வடமராட்சிக் கடற்சூழற்தொகுதியின் சிறப்புத் தன்மை காரணமாக பெருமளவில் கிடைக்கின்றது. இங்குள்ள மக்களின் புரத உணவுத் தேவையின் கணிசமான பங்கினை இவ்வளம் அளிக்கின்றது. ஆரம்பகாலத்தில் கட்டுமரங்கள், வள்ளங்கள், வீசுவலைகள், படுப்புவலைகள் என்பன பயன்படுத்தப்பட்டு மீன்கள் பிடிக்கப்பட்டன. தொடர்ந்து வந்த காலத்தில் இயந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடிப்படகுகள் பாவனைக்கு வந்தன.

எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை ஆழ்கடல் மீன்பிடியானது இன்னமும் விருத்தியுராத நிலையில் காணப்படுகின்றன. இங்குள்ள பல மீனவர்களின் பொருளாதாரநிலை ஆழ்கடல் மீன்பிடிக்கு ஏற்றால்போல் இல்லை. மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் ஆழ்கடல் மீன்பிடிக்குரிய துணைசேவைகளான ஐஸ்கட்டி தயாரிப்பு, படகு கட்டும் வேலைகள் என்பன மேலும் விருத்தியடைய வேண்டிய நிலையில் காணப்படுகின்றன. மேலும் தற்போதைய சூழ்நிலை காரணமாகவும் ஆழ்கடல் மீன்பிடியானது பாதிப்புகளை எதிர்நோக்க வேண்டியிருக்கின்றது. அவ்வப்போது நிகழ்கின்ற கடற்சமர்கள் மீன்வள விருத்தியின் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

## கால்நடைவளம் :-

வடமராட்சிப் பிரதேசத்தில் ஆரம்ப காலகட்டத்தில் கோழிகள், ஆடு, மாடுகள் போன்ற கால்நடைவளங்கள் இங்குள்ள மக்களால் புரத உணவுத்தேவையை நிறைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதற்காக, பால் உற்பத்திக்காக வளர்க்கப்படுகின்றன. இன்று பண்ணைகளில் கோழிகள் பெரிய அளவிலே தொழில் நோக்காகக் கொண்டு வளர்க்கப்படுகின்றன. எனினும் ஆடு, மாடு ஆகியவற்றை பெயரிய அளவில் மேற்கொள்ளாமைக்கு போதிய நிதி இன்மை மற்றும் தொழில்நுட்ப அறிவுப் பற்றாக்குறைகள் என்பன காரணமாக அமைகின்றன. தற்பொழுது சாதாரண மக்களால் தமது வீடுகளில் கால்நடைகளை வளர்க்கின்ற பழக்கம், அதிகரிக்கும் உற்பத்திச் செலவினம் காரணமாக வெகுவாகக் குறைந்து செல்கின்றது. மீன்வள உற்பத்தி தொடர்பான பிரச்சினைகளுக்கான மாற்று நடவடிக்கையாக அமையும் இவ்வளம் பெருக வழிசமைக்கப்படுகின்ற போதே அதிகரிக்கும் புரத உணவுத் தேவையை நிறைவு செய்யலாம்.

**மனித வளம் :-**

வடமராட்சி மண்ணின் மனிதவளமானது தனிச்சிறப்பானது. ஆரம்பகாலம் முதல் இன்று வரை இப்பிரதேச மக்களின் நுண்ணறிவினை வியந்து வெளியூர் மக்கள் 'வடமராட்சியானின் மூளை' என குறிப்பிடுவது கண்கூடு.

இங்குள்ள மக்களில் பலர் புகழ்பூத்த மருத்துவர்களாக, பொறியியலாளராக, பல்கலைக்கழக விரிவுரையாளராக, நீதிபதிகளாக, ஆசிரியர்களாக, வங்கியாளராக, தொழில் முனைவராக, நிறுவன முதல்வராக, கல்வியலாளராக, பொருளியலாளராக, விஞ்ஞானிகளாக, துறைசார்ந்த புலமையாளராக காணப்படுவது சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும். வடமராட்சி மக்கள் தமது மனித வளவிருத்தி தொடர்பான தூர நோக்கு கொண்டவராக உள்ளனர் என்பதனை தமது மனித வள விருத்தியின் பொருட்டு உருவாக்கிய பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்களைக் கொண்டு விளங்கிக் கொள்ள முடியும்.

எனினும் மிக அண்மைக் காலங்களில் கற்றறிந்த அறிஞர்கள் பலர் நாட்டிலும் நிலவுகின்ற நிச்சயமற்ற நிலை காரணமாக இப்பிரதேசத்தில் இருந்து வெளியேறி வருகின்றனர். பலர் புலம்பெயர்ந்து வெளிநாட்டில் வாழ்கின்றனர். இந்நிலை காரணமாக எதிர்காலத்தில் சிறப்பான மனித வள விருத்திக்குரிய மனிதவளம் இல்லாமல் செல்ல, அது எமது பிரதேசத்தின் அபிவிருத்தியில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்திவிடலாம்.

வைத்தியத்துறை சார்ந்த புலமையாளர்களின் வெளியேற்றத்திற்கு தகவல் தொழில் நுட்பத்தின் அனுகூலமான அம்சங்கள் வெளிமாவட்டங்களில் கிடைப்பது போன்ற நிலை (தற்பொழுது வெளியிடத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு இருக்கின்ற காரணத்தால்) இல்லாமை காரணமாக கூறப்படுகின்றது. எனவே அவர்களின் வாண்மை விருத்திக்கான சாதனங்கள் பெற்றுக் கொடுக்கப்படல் வேண்டும்.

இன்றைய இளைய தலைமுறையினரின் போக்குகளில், இலத்திரனியல் ஊடகங்களின் செல்வாக்கு காரணமாக, குறிப்பாக சினிமாத்துறையில் ஏற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய அனுகுமுறைகள் பெருமாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றது. அவர்களிடம் உள்ள வளங்களினை ஒன்று திரட்டி, பிரதேச பற்று நிறைந்தவர்களாக மாற்ற வேண்டிய கட்டாயநிலையில் கல்வி நிறுவனங்கள் பொறுப்புடன் செயற்படவேண்டியனவாக காணப்படுகின்றன. இந்நிலை நிச்சயமாக மாற்றப்படல் வேண்டும். அல்லாவிட்டால் சமூகத்தின் சீரிய ஒழுக்கங்கள், விழுமியங்கள் என்பன தகர்க்கப்பட வாய்ப்புள்ளது.

## களிமணல் வளம் :-

எமது பிரதேசத்திலே சிலிக்கா மணல் ஆனது கற்கோவளம் தொடக்கம் நாகர்கோயில் வரையான பகுதிகளில் கடற்கரைப் பகுதிகளில் காணப்படுகின்றன. இக்கனியவளம் மூலமாக கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட முடியும். இப்பகுதியில் கண்ணாடித் தொழிற்சாலை அமைப்பது தொடர்பான விடயமானது திட்டநிலையில் காணப்படுகின்றது. இத்திட்டம் செயற்படுத்தப்பட்டால் பெருமளவு மக்கள் வேலை வாய்ப்புக்களைப் பெறுகின்றனர்.

அதேவேளை மணல் ஒரு புதுப்பிக்கத்தக்க வளமாக இருந்தபோதிலும், அதன் நுகர்வு வேகம் புதுப்பிக்கப்படும் அளவிலும் உயர்வாக காணப்படுகின்றதால் அவை புதுப்பிக்கப்பட முடியாத வளங்கள் என்ற நிலையை அடைந்து வருகின்றன.

இங்குள்ள மணல் வளங்கள் ஆரம்ப காலம் தொடக்கம் இன்று வரை தொடச்சியாக எவ்வித கட்டுப்பாடுகள் இன்றி யாழ் மாவட்டத்தில் நிகழும் பல்வேறு அபிவிருத்திப் பணிகளுக்கென இப்பிரதேசங்களில் இருந்து மணல் அகழ்ந்தெடுத்துச் செல்லப்படுகின்றது. 2004 ஆம் ஆண்டு நிகழ்ந்த சுனாமியின் பின்னராக கரையோரப் பிரதேசங்களில் நிகழும் கட்டுமானப் பணிகளுக்கென அனுமதியுடனும், சட்டவிரோதமாகவும் பெருமளவில் மணல் அகழப்பட்டன. இதன் காரணமாக கரையோரப் பிரதேசங்கள் கடலினுள் மூழ்கும் அபாய நிலையிலுள்ளன.

## நன்னீர் வளம் :-

வடமராட்சிப் பிரதேசத்திலே ஒரு சில இடங்களைத் தவிர பெரும்பாலான இடங்களில் பருகுதற்குகந்த நீர் தட்டுப்பாடான வளமாகவே காணப்படுகின்றது. மக்களின் குடி நீர்ப்பிரச்சினைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் பல நாட்டில் நிலவிய சூழ்நிலை காரணமாக வெற்றியளிக்காது போய்விட்டன. 1983 ஆண்டில் பிற்பகுதியில் வடமராட்சி கரையோரப் பிரதேசங்களுக்கான குடிநீர் விநியோகத்திட்டமானது மணல்காடு, வல்லிபுரக்கோயில் ஆகிய பகுதிகளில் இருந்து கிணறுகளை வெட்டுவதன் மூலம் மேற்கொள்ளப்பட்டு பாதியில் நிறைவேறாது கைவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் மக்களின் குடிநீர்ப்பிரச்சினைக்கான தீர்வுகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலே பௌசர் குடிநீர் விநியோகத்திட்டம் மூலமாக மேற்கொள்ளப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றன. கரவெட்டிப் பிரதேசத்தில் அத்துளு கிராம குடிநீர் விநியோகத்திட்டமானது சென்ற ஆண்டு முதல் சீர்ப்படுத்தப்பட்டு நீர்வடிகாலமைப்பு அதிகார சபையின் கண்காணிப்பில் செயற்பட்டு வருகின்றது. ஒரு சில நன்னநீர்க் கிணறுகளே தொடர்ந்தும் பெரும்பகுதி மக்களுக்கான குடிநீர் விநியோக வளமாக காணப்படுகின்றன.

2004 ஆண்டு வடமராட்சியின் கரையோரப் பிரதேசங்களைத் தாக்கிய சுனாமியினால் பல நன்னீர்க் கிணறுகளின் நீர் சவராக மாறியுள்ளது. அதிகரித்துச் செல்லும் செயற்கை உரப்பாவனையானது நிலத்தடி நீரினை மாசுபடுத்தி வருகின்றன என ஜி. ரி. சட் நிறுவனம் யாழ் மாவட்டத்தில் மேற்கொண்ட ஆய்வுகள் மூலமாகவும் புலப்படுத்தப்பட்டிருக்கிறது. இதுவும் குடிநீரின் தரத்தை மாற்றி வருகின்றன. எனவே செயற்கை உரங்களுக்கு மாற்று ஏற்பாடாக இயற்கைப் பசளைகளை பயன்படுத்துவதன் மூலம் குடிநீரின் தரத்தை உயர்த்த வகை செய்யலாம்.

உலக சூழலியலாளரது கருத்துப்படி 2015 ஆம் ஆண்டைத் தொடர்ந்து வருகின்ற காலத்திலே உலக மக்கள் குடிநீர்ப்பிரச்சினையை மிகச்செறிவாக எதிர்நோக்கவுள்ளனர். இந்நிலையில் மூன்றாம் உலகப்போரானது நன்னீர் வளத்திற்காகக் கூட உருவாகலாம். இப்பொதுப் பிரச்சினை எதிர்கொள்ளவல்ல திட்டங்கள் எமது பிரதேசத்தில் அவசியம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## கடல் நீர் வளம் :-

வடமராட்சிப் பிரதேசத்தின் கரையோரங்களைக் சூழ்ந்து பெருமளவு கடல்நீர்வளம் காணப்படுகின்றது. இவ்வளத்தை அடிப்படையாகக் கொண்டு மின் உற்பத்தி நடவடிக்கைகள், நீர்வளர்ப்புத் திட்டங்கள், கடல் நீரை நன்னீராகச் சுத்திகரிக்கும் திட்டங்கள் போன்றன செயற்படுத்தக்கூடிய சாத்தியமான தன்மைகள் உள்ளன.

## நிலவளம் :-

வடமராட்சிப் பிரதேசத்திலே பெருமளவு தரிசு நிலங்கள் காணப்படுகின்றன. அவற்றின் பயன்பாட்டை அதிகரிப்பதற்கான திட்டங்கள் இயற்றப்படல் வேண்டும். தரிசு நிலங்களில் மழைநீர் தேங்கி அதிகரிப்பதற்கான திட்டங்கள் இயற்றப்படல் வேண்டும். தரிசு நிலங்களில் மழைநீர் தேங்கி நிற்பதற்கு வழிவகைகள் செய்யப்படுவது அவசியம். அவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றபோது நன்னீரின் உவர்த்தன்மை மாற்றமடைய வாய்ப்புள்ளது. கரையோரப் பிரதேசங்களில் சுனாமிக்குப் பின்னராக மேற்கொள்ளப்பட்ட தரிசு நிலங்களில் கட்டுமானப்பணிகள் அவற்றின் அளவில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. எனவே தரிசு நிலப்பயன்பாடுகள் தொடர்பான சீரான கொள்கைகள் உருவாக்கப்படல் வேண்டும். கரையோரப் பகுதிகளிலுள்ள தரிசுநிலங்களில் இறால் வளர்ப்புப் பண்ணைகள் உருவாக்கத் திட்டமிடப்பட்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறால் பண்ணை அமைப்புத் திட்டத்தினால் ஏற்படக்கூடிய சூழலியல் பிரச்சினைகள் தொடர்பாக கூடிய கவனம் எடுக்கப்படல் வேண்டும். அவ்வாறே இனக்குழுமங்களுக்கும் இடையில் முரண்பாடுகள் தோற்றுவிக்கப்படும் சந்தர்ப்பங்கள், கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்கள் இழக்கப்படுகின்ற நிலைமைகளும் உள்ளன. எனவே பண்ணை அமைக்கின்றபோது இவ்விடயங்கள் தொடர்பாகவும் கூடிய கவனம் எடுக்கப்படல் வேண்டும்.

### வளிவளம் :-

வடமராட்சிப் பிரதேசம் கைத்தொழில் நடவடிக்கைகள் செறிவாக இடம்பெறாத ஒரு கிராமியப் பிரதேசமாகும். அதனால் வளிவளமானது பாரிய அளவிலான மாசுறும் தன்மையைக் கொண்டிருக்கவில்லை. எனினும் அதிகரித்த வாகனப் பாவனை, குப்பை கூழங்கள் எரியூட்டப்படல் போன்ற நடவடிக்கைகள், கல் உடைக்கும் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் தூசிகள் என்பன வளி மாசடைதலில் சிறிதளவில் பங்களிப்புச் செய்கின்றன. மேலும் இந்து மயானங்களில் இறந்த உடலங்கள் எரியூட்டப்படுகின்றன. இம்முறையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு மின்முறை மூலம் எரியூட்டப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். அதே போன்று எதிர்காலத்தில் `` Clean Air Policy'' போன்ற செயற்றிட்டங்கள் மூலம் எமது வடமராட்சிப் பிரதேசத்தின் வளி வளத்தின் தூண்மைத் தன்மையைக் காக்க நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

### நிதி வளம் :-

நாட்டில் நிலவுகின்ற போர்ச்சூழல் காரணமாக வெளியேறிய மக்களில் பலர் வெளிநாடுகளில் வாழ்கின்றனர். போதுமான நிதியானது வெளிநாடுகளில் இருந்து வந்து வீணடிக்கப்படுகின்றன. இதனை பிரதேசத்தின் அபிவிருத்தியின் பொருட்டு திசை திருப்பப்பட வடமராட்சி பிரதேச அபிவிருத்தி நிதியம் (Vadamaradchi Development Trust Fund - VDTF) போன்ற செயற்றிட்டங்கள் வங்கி அமைப்புக்கள் மூலம் ஆரம்பித்து பிரதேச அபிவிருத்தியை துரிதப்படுத்தலாம்.

### இப்பிரதேசத்தின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களுக்காய அறிவுரைப்புகள் :-

எமது பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டங்களின் பொருட்டு பின்வரும் அறிவுரைப்புகள் முன்னிலைப்படுத்தப்படுகின்றன.

01. வடமராட்சிப் பிரதேசத்தின் கரையோரப் பிரதேசங்களில் கடல்நீரை நன்னீராக மாற்றும் செயற்றிட்டங்கள் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

02. வடமராட்சிக் கரையோரங்களில் கடல் அலைகளின் தாக்கத்தில் இருந்து பாதுக்க காப்பரண்கள் அமைக்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. வடமராட்சிப் பிரதேசங்களில் தரிசு நிலங்களில் மரநடுகைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

04. வடமராட்சி பிரதேச மக்களின் கல்வி மேம்பாட்டிற்காக தகவல் தொழில்நுட்ப கிராமம் ஒன்று உருவாக்கப்படல் வேண்டும்.

05. இங்குள்ள முதியவர்களின் நிலன்களைக் காக்கவென பொருத்தமான திட்டங்கள் வரையப்படல் வேண்டும்.

06. வேலைக்குச் செல்கின்ற பெற்றோர்களின் குழந்தைகளைப் பராமரிப்பதற்கென குழந்தைகளின் பகல் நேர நலன் காப்பகம் - Child's Day Care Centre ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் குறைந்தது இரண்டாவது ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

07. கரையோரப் பகுதிகளில் அனர்த்த காலத்தில் செயற்படக்கூடிய அனர்த்த முகாமைத்துவ ஆளணி ஒன்று உருவாக்கப்படல் வேண்டும்.

08. பாடசாலை மட்டத்திலே பிரதேச பற்றினை வளர்க்கும் செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்படல் வேண்டும்.

09. மக்களின் பொழுதுபோக்குகளுக்கான நேரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையினால் அவர்களின் உள மேம்பாட்டிற்கென ஆற்றுப்படுத்தல் மையங்கள் நிறுவப்படல் வேண்டும்.

10. வருடா வருடம் பிரதேசத்தின் அபிவிருத்தியை ஊக்குவிக்கும் வகையிலான கண்காட்சிகள் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

11. கடல் அலையைப் பயன்படுத்தி மின் உற்பத்திக்கான செயலமைப்புகள் உருவாக்கப்படல் வேண்டும்.

12. எமது பிரதேசத்திற்கு தனித்துவமான பாரம்பரியக் கலைகள், விளையாட்டுகள் என்பன வழக்கொழிந்து செல்லாது பாதுகாக்கப்படல் வேண்டும்.

13. பிரதேச அபிவிருத்திக்கான வங்கி முறைமை ஒன்று உருவாக்கப்படல் வேண்டும்.

14. மழை நீரானது வீணாக கடலில் சென்று கலப்பதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

15. வழிபாட்டு ஆலயங்கள் யாவும் பொதுவான ஒரு நிருவாக முறைமையின் கீழ் கொண்டுவரப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. பிரதேசத்திற்குப் பொருத்தமான கைத்தொழில் முறைமைகளை உருவாக்கக் கூடிய நிபுணத்துவ அமைப்புகள் உருவாக்கப்படல் வேண்டும்.

17. வடமராட்சிப் பிரதேசத்தின் கால்நடை வளர்ப்புத் திட்டங்கள் மேலும் விரிவுபடுத்தப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

18. இளைய தலைமுறையினருக்கான தொழில் வழிகாட்டல் அமைப்புகள் உருவாக்கப் படல் வேண்டும்.

19. வடமராட்சியிலுள்ள எல்லா பிரதேச செயலர் பிரிவுகளிலும் ஆவணக் காப்பகங்கள் நிறுவப்படல் வேண்டும். முன்னோடித் திட்டமாக கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை :-**

தொகுத்துப் பார்க்கின்றபோது எமது பிரதேசத்து வளங்களின் பாவனையானது நெறிப்படுத்தப்பட வேண்டிய நிலையில் உள்ளன. அத்துடன் பிரதேச வளங்களின் முகாமைத்துவ அமைப்புகள் அவ் வளங்களின் எதிர்கால இருப்புக் கருதி செயற்படவேண்டிய நிலையில் உள்ளது. இல்லாவிட்டால் வளம் செழிக்கும் வடமராட்சி மண் பெயர் என பையவே சென்று வரண்ட வடமராட்சி மண் என்ற நிலை எதிர்காலத்தில் உருவாகும்.

**துணை நின்றவை :-**


01. மனிதனும் சூழலும் - க.பொ. த உ/த உயிரியல் ஆசிரியர் கைந்நூல்
02. மனிதனும் சூழலும் சூழற்கல்வி பற்றிய அறிமுகம் - மத்திய சூழல் அதிகார சபை
03. ஈரநிலச் சிறப்பு காப்புச் செயற்றிட்டங்கள் - மத்திய சூழல் அதிகார சபை.
04. Coral reefs a resource book for Secondary School teachers.
05. Clean Air Action plan for air quality management in the Colombo metropolitan area.


சூத்திரனுக்கொரு நீதி - தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொருநீதி
சாத்திரம் கூறிடுமாயின் - அது
சாத்திரம் அன்று சதி என்று கண்டோம்.

- பாரதியார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி மாவட்ட பதிவகங்களின் செயற்பாடுகளும் பணிகளும்

**திருமதி தி. சரஸ்வதி**
காணி மேலதிக மாவட்ட பதிவாளர்,
பருத்தித்துறை.

**அறிமுகம் :-**

இலங்கையில் தற்போதுள்ள அரசாங்க திணைக்களங்களில் வரலாற்றுப் பெருமைமிக்க பழமையான நிறுவனம் காணி மாவட்டப்பதிவகமாகும். 1864 ஆம் ஆண்டு காணிப்பதிவு தொடர்பான சட்டமும் 1867 ஆம் ஆண்டு விவாக, பிறப்பு, இறப்பு, தொடர்பான சட்டமும் உருவாக்கப்பட்டது.

இதனது பிரதான செயற்பாடாக அசைவுள்ள அசைவற்ற ஆதனம் தொடர்பான சட்டரீதியான ஆவணங்களை பதிவு செய்தல், மற்றும் வாழ்க்கையின் பிரதான நிகழ்வான விவாக, பிறப்பு, இறப்பு, பதிவு செய்தல் மற்றும் அவற்றை பாதுகாத்தலும் அதிலிருந்து பிரதி வழங்கலுமேயாகும்.

நிர்வாகத்தினை மக்கள் இடத்திற்கு எடுத்துச் செல்லும் பன்முகப்படுத்தப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ் விவாக, பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள் எளிதாக மக்களுக்கு கிடைக்கக்கூடியதாக அப்பதிவேடுகள் அவ்வப்பகுதி பிரதேச செயலகங்களுக்கு கையளிக்கப்பட வேண்டும். என்ற நடைமுறை 1992 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் யாழ் குடாநாட்டிற்கு 2005ம் ஆண்டு புரட்டாதி மாதத்திலேயே நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருந்தது.

பருத்தித்துறை காணிப்பதிவகம் 1955ஆம் ஆண்டிலிருந்து பருத்தித்துறையில் இயற்குகின்றது. பிறப்போ, இறப்போ, விவாகமோ, அது நடைபெறும் இடத்தில் தான் பதிவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். வாழ்க்கையின் பிரதான நிகழ்வுகளை பதிவு செய்ய வேண்டியது ஒவ்வொரு பிரஜைகளினதும் முக்கிய கடமையாகும்.

**முக்கியத்துவம் :-**

பிறப்பு சான்றிதழ் ஒன்று பின்வரும் தேவைகளுக்காக முக்கியம் பெறுகிறது.

1) பாடசாலை சேர்வதற்கு
2) அடையாளத்தை நிருபிப்பதற்கு (அடையாள அட்டைபெறுவதற்கு)
3) கடவுச்சீட்டு பெறுதற்கு (வெளிநாட்டு பயணத்திற்கு)
4) பரீட்சைக்கு தோற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) வேலைவாய்ப்பு பெற.
6) தேர்தலில் வாக்களிப்பதற்கு
7) சாரதி அனுமதிப்பத்திரம் பெற.
8) ஓய்வூதியம் பெறுவதற்கு
9) நட்டஈடு பெற
10) வங்கிலிருந்து பணத்தை மீளபெறுவதற்கு
11) திருமணம் செய்தவற்கு (வயது குறைந்த திருமணங்களை தடுப்பதற்கு)
12) காப்புறுதி பணத்தை பெற்றுக்கொள்ள.
13) ஊழியர் சேமலாபநிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியிலிருந்து பணத்தை பெற.
14) சிறுவர் உரிமையைப் பாதுகாக்க.

சிறுவர் உரிமை நிறுவனங்கள், சமூக பாதுகாப்பு நிறுவனங்கள் பிறப்பு பதிவை வலியுறுத்துகின்றன. பெற்றோர் பிள்ளைகளின் பிறப்பை பதிவு செய்யாது விடுதல் பாரிய குற்றச் செயலாகும். எனவே தான் இத்தவறை குறைப்பதற்கு பிரதேச செயலக மட்டத்திற்கு இவ்நடவடிக்கையை விரிவுபடுத்தி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி 100% பிறப்பு, இறப்பு, திருமண பதிவுசெய்தலை ஊக்குவிக்க வேண்டும். இதன்மூலம் சரியான புள்ளி விபரங்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.

- வீட்டில் குழந்தை பிறந்தால் 7 நாட்களுக்குள் கிராமசேவையாரிடம் அறிவித்து கிராம சேவையாளர் அறிக்கையை பெற்று பதிவாளரிடம் பதிவு செய்ய வேண்டும்.

- வைத்தியசாலையில் பிறந்தால் 3 மாதங்களுள் பிரதிக்கினையைப் பதிவாளரிடம் சமர்ப்பித்து பிறப்பை பதியலாம்.

- பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும் சட்டப்படி திருமணம் செய்யமுடியும். (குறைந்த வயது திருமணங்கள் தடை செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் பதிவாளர்கள் இருபாலார்களது பிறப்பு சான்றிதழ், அயைாளஅட்டையை பெற்று பரீசிலித்து பதிவுமேற்கொள்ள முடியும்)

- காணி மாவட்ட பதிவகங்களில் பிறப்பு, இறப்பு சான்றிதழ்களில் திருத்தங்களை செய்து கௌ்ள முடியும். எதிர்காலத்தில் இத்திருத்தங்களை தடுப்பதற்கு. பதிவாளர்கள் பிறப்போ, இறப்போ, திருமணமோ, உரியவர்களின் பிறப்பு சான்றிதழ்களை பெற்று பதிவு செய்தல் மிக மிக முக்கியமானதொன்றாகும்.

- திருமண சான்றிதழில் திருத்தமாயின், திருமணம் நிகழ்ந்த பிரதேச மாவட்ட நீதிமன்ற மூலமே திருத்தம் செய்ய முடியும்.

- பிறப்பு, இறப்பு, விவாக முதற்பிரதி பதிவாளர்களால் கட்டனமின்றி வழங்கப்படும்.

- மேலதிகமாக ஒரு பிரதியைப்பெற, 25 /- பெறுமதியான முத்திரை ஒட்ட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 விண்ணப்பத்திற்கு 3 பிரதிபெற முடியும். தேடுதலாயின் 1 பிரதியைப் பெற 50- பெறுமதியான முத்திரை ஒட்டவேண்டும். (அதற்கு பிறந்த இடமும், ஆண்டு, மாதம் திகதியும் தெரிந்திருத்தல் வேண்டும்)

- ❖ இலங்கை பிரஜை ஒருவருக்கு வெளிநாட்டில் குழந்தை பிறந்தால் அந்நாட்டிலுள்ள, இலங்கை தூதரகத்தின் மூலம் பதிவை மேற்கொள்ள முடியும்.

- ❖ இந்தியாவில் அகதிமுகாம்களில் பிறந்த குழந்தைகளின் பிறப்பு, காணாமல் போனவர்களின் இறப்பு என்பன பிரதேச செயலகங்களிலேயே பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாவட்டப் பதிவகக் கருமங்களைத் தவிர, அசைவுள்ள அசைவற்ற ஆதனங்கள் தொடர்பான பதிவுகளும், உறுதிகளின் இணைப்பிரதிகளைப் பாதுகாத்தலும் அது சம்பந்தமான பிரதிகளை வழங்கலும் காணிப்பதிவகத்தின் முக்கிய கடமைகளாகும். உறுதிகள் என்று (Deeds) குறிப்பிடும்போது பிரசித்த நொத்தாரிசு / சட்டத்தரணிமாரால் முப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு உறுதிப்படுத்திய பிரதிகளாகும். இவற்றில் மூலப்பிரதி (Original) காணிப்பதிவகத்திலுள்ள காணிப்பதிவேட்டில் (Volume) உரிய பக்கத்தில் (Folio) பதிவுசெய்யப்படுவதற்காகக் காணிப்பதிவகத்தில் ஒப்படைக்கப்படும் உறுதிகளில் முன்னைய பதிவுகளின் தொடர்பு முற்பதிவு எனப்படும். உறுதிகளில் முற்பதிவு கட்டாயமாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். அவ்வாறு குறிக்கப்படும் புத்தகங்களில் பதிவு செய்தால் தொடர்பதிவுகள் ஏற்படும் மூலப்பிரதி உரிய பதிவுகள் மேற்கொண்டபின்பு ஒப்படைத்தவர்களிடம் திருப்ப ஒப்படைக்கப்படும்.

உறுதிகளின் 2வது பிரதி இணைப்பிரதி (Duplicate) எனப்படும். இது காணிப்பதிவகத்தில் பேணிப் பாதுகாக்கப்படுவதற்காக நொத்தாரிசுமாரால் சமர்ப்பிக்கப்படும். இந்த இணைப்பிரதிகளின் அடிப்படையிலேயே உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் வழங்கப்படுகின்றன.

உறுதிகளில் உரித்துடையவர்கள் அல்லது பிரசித்த நொத்தாரிசுமார் உறுதிகளின் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

உறுதிகள் எந்த மாவட்டங்களில் எழுதப்பட்டாலும் காணி அமைந்துள்ள மாவட்டத்திலுள்ள காணிப்பதிவகத்திற்குப் பதிவு செய்வதற்காக நொத்தாரிசுமாரால் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

உறுதிகளின் 3வது பிரதி ஆதாரப் பிரதி (Pohocol) யாகும். இப்பிரதி உறுதியை நிறைவேற்றிய நொத்தாரிசுவின் பாதுகாப்பில் அவரால் பேணப்படும். அவருடைய சேவை முற்றுப்பெற்ற பின் உறுதிகள் புத்தகமாகக் கட்டப்பட்டு காணிப்பதிவகத்தில் ஒப்படைக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணிப்பதிவகத்திலுள்ள புத்தக்கங்களில் பதிவு செய்யப்படும் பதிவுகள் சுருக்கப்பிரதி (Encumbrance) என்றும், இணைப்பிரதிகளிலிருந்து எடுக்கப்படும் பிரதிகள் உறுதிப்படுத்தப்பட்ட உறுதிப்பிரதிகள் என்றும் கூறப்படும். சுருக்கப்பிரதிகளில் காணிகளின் தொடர்பான வரலாறு காணப்படும். இவற்றைப் பெறுவதற்குரிய விண்ணப்பங்களைக் காணிப்பதிவகத்தில் பெற்று, காணிப்பதிவாளரால் நிர்ணயிக்கப்பட்ட முத்திரைகளை ஒட்டிப் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

வடமராட்சி பிரதேச பதிவாளர் பிரிவுகள் வருமாறு :-

❖ பருத்தித்துறை, கட்டைவேலி, வல்வெட்டித்துறை - வடமராட்சி வடக்கு, பிரதேசசெயலகம்.

❖ கரவெட்டி , உடுப்பிட்டி - வடமராட்சி தெற்கு மேற்கு, பிரதேசசெயலகம்

❖ குடத்தனை, நாகர்கோயில் - வடமராட்சி கிழக்கு, உதவி அ.அ. பிரிவு.

## கடந்த 10 வருடங்களில் வடமராட்சிப்பிரதேச மொத்த பிறப்பு, இறப்பு, விவாகம் வருமாறு.

| வருடம் | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பிறப்பு B | 1263 | 1597 | 489 | 1388 | 1513 | 1045 | 1047 | 1128 | 941 |
| விவாகம் M | 574 | 598 | 675 | 820 | 887 | 975 | 1061 | 765 | 308 |
| இறப்பு D | 443 | 570 | 527 | 468 | 470 | 573 | 801 | 607 | 339 |

❖ 2007 ஆம் ஆண்டு தை 1ஆம் திகதி தொடக்கம் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தற்கு பொறுப்புக்கள் கைளிக்கப்பட்டதனால் அவ்விபரம் சேர்க்கப்படவில்லை.

ஆசு இல் பரதாரம் அவை அம் சிறை அடைப்பேம்
மாசு இல் புகழ் காதலுறுவேம்; வளமை கூரப்
பேசுவது மானம் இடை பேணுவது காமம்
கூசுவது மானுடரை நன்று நம் கொற்றம்.


- கும்பகர்ணன் கூற்று - இராமாயணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயத்தை எடுத்தியம்பும் பண்பாட்டுச் சின்னங்கள்

**திரு. பா. மீனாட்சிசுந்தரம்**
வல்வெட்டித்துறை.



## 1) தண்ணீர்த் தொட்டிகள் :-

மனித நேயத்தைக் கருத்திற் கொண்டு மக்களின் தண்ணீர்த்தேவையைப் பூர்த்திசெய்யும் நோக்கோடு பாதையின் இடையிடையே கிணறு தோண்டப்பட்டிருந்தன. இக்கிணற்றிலிருந்து பெறப்படும் நீர் மனிதனுக்கு மட்டுமன்றி ஆடுமாடுகளுக்கும் பயன்படவேண்டும் என்ற நோக்கில் இக்கிணறுகளுக்கு அருகிலேயே தண்ணீர்த் தொட்டிகள் அமைக்கப்பட்டு அதனுள் நீர் நிரப்பப்பட்டிருக்கும்.

## 2) ஆவுரோஞ்சிக்கல் :-

ஆடு மாடுகள் உடம்பில் ஏற்பட்டிருக்கும் நமைச்சலைப் போக்கிக் கொள்வதற்காக மூன்று அல்லது நான்கு அடி உயரமும் ஒன்றரை அடி அகலமும் கொண்ட கல் தண்ணீர்த் தொட்டிக்கு அருகாமையில் அமைக்கப்பட்டிருக்கும் ஆடுமாடுகள் நீர் அருந்தியபின் கல்லில் உரோஞ்சி தமது நமைச்சலைப் போக்கிக் கொள்கின்றன.

## 3) சுமைதாங்கி :-

வாகனங்கள் பாவனைக்கு வருமுன்னம் மாட்டு வண்டியிற் பொதிகளைக் கொண்டு செல்ல முடியாத நிலையில் உள்ளவர்கள் கால்நடையாகவே தலையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டதூரங்களுக்கு பொதிகளை சுமந்து செல்லும்போது பொதிகளை இறக்கி வைத்துவிட்டு இளைப்பாறுவதற்கு ஏதுவாக பாதை ஓரங்களில் ஐந்து அடி அகலமும் நாலரை அல்லது ஐந்து அடி உயரமும் கொண்ட மேடை போன்று சுமைதாங்கி அமைக்கப்பட்டிருக்கும்.

சுமைதாங்கி பெண் ஒருவர் கர்பமாக இருக்கும் காலத்தில் குடும்பத்தவர்கள் அப்பெண் சுமந்து கொண்டிருக்கும் குழந்தை (சிசு) சுகப் பிரசவமாகப் பிறந்தால் சுமைதாங்கி அமைத்து கொடுப்பதாக குறிப்பிடப்படுகிறது.

## பருத்தித்துறைப் பலகாரங்கள்

பலகார வகைகளுக்கும், ருசிக்கும், தரத்துக்கும் பல காலமாகப் பருத்தித்துறை பேர் போனது.

**பருத்தித்துறை வடை :**

அதிலும் 'பருத்தித்துறை வடை' இலங்கை முழுவதிலுமே பிரசித்தமானது. இந்த நூற்றாண்டின் ஆரம்பம் முதலே 'வள்ளியாரின்' பருத்தித்துறை வடை எங்கும் புகழ் மணம் பரப்பத் தொடங்கி விட்டது. துறை முகத்துக்குத் தெற்கே மிக அண்மையில் கொட்டடிப் (பெரிய) பிள்ளையார் கோயில் இருக்கிறது. கோயிலின் கிழக்காகப் பிரதான வீதியிலே அமைந்திருந்தது, வள்ளியாரின் வடைக்கடை.

பிற்பகல் 2 மணி ஆனதும், வடக்கே துறைமுகம் வரையிலும், தெற்கே சந்தை முழுவதிலும் வள்ளியாரின் வடை மண மணக்க தொடங்கிவிடும். மாலை 7 மணி வரையில் மணம் எங்கும் வீசிக்கொண்டேயிருக்கும். துறைமுகத்திலிருந்து சந்தை வரை அந்த வீதியால் போவோர் வருவோர் எல்லாரும் வள்ளியார் வடையின் நறுமணத்தைச் சுமந்த வண்ணமே போய்க் கொண்டிருப்பார்கள்.

'பருத்தித்துறை வடை' என்பது சாதாரண உழுந்து வடை அல்ல. உடைத்த உழுத்தை ஊறப் போட்டுக் கழுவிச் சுத்தப்படுத்திய வெள்ளைப் பருப்பில் நாலிலொரு பங்கை நன்றாக அரைத்து அதனுடன் மிகுதி முழுப்பருப்பையும், இடித்த பச்சை அரிசி மா கொஞ்சமுஞ் சேர்த்து, அதனுடன் இடித்த பச்சைச் செத்தல் தூள், குறுணலாக அரிந்து உலர வைத்த பிஞ்சு மிளகாய், வெங்காயம், கருவேப்பிலை, கசக்கிய கன பெருஞ்சீரகம் உப்புத்தூள் எல்லாவற்றையும் கலந்து, சிறிது தண்ணீர் தெளித்துப் பிசைந்து கலவையை மிகச் சிறிய சிறிய உருண்டைகள் ஆக்கி ஒரு மண்பானையை அடுப்பின் முன் கவிழ்த்து அதன் மேல் வெள்ளைத் துணியைப் பரப்பி அதில் உருண்டையை வைத்து மெல்லியதாகத் தட்டியதை, தாச்சியில் கொதிக்கும் தேங்காயெண்ணெயில் போட்டுப் போட்டுப் புரட்டி சிவக்க எடுப்பதே மணம் பரப்பும் பருத்தித்துறை தட்டை வடை.

ஐம்பது வருடங்களாக இந்தத் தட்டைவடை வள்ளியாரின் கை வண்ணத்தில் 'பருத்தித்துறை வடை' என்ற பெயரோடு பவனி வந்தது. இலங்கை முழுவதும் புகழ் பரப்பி நின்றது. 'பொலித்தீன்' என்ற பெயர் கூடத் தெரியாத அந்தக் காலத்திலேயே ரின்களில் அடைத்து இலண்டனுக்கும், சிங்கப்பூருக்கும் பிரயாணம்போனது. இப்போ அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, பிரான்ஸ், சுவிஸ், ஜேர்மனிக்கும் கூட பொலித்தீன் பக்கெற்றுக்களில் போகிறது. அங்கே கடைகளில் பருத்தித்துறை வடை விற்பனையும் செய்யப்படுகிறது.

வள்ளியாருக்குப் பின் அம் மூதாட்டியின் மகளாலும், பிறகு பருத்தித்துறை முழுவதுமே இந்த வடை பரவி விட்டது. ஆனால் அரிசி மாவுக்குப் பதிலாக உழுத்தம் பருப்புடன் வெறும் கோதுமை மாவை பெரிதாகச் சேர்க்கத் தொடங்கி விட்டார்கள். 'பருத்தித்துறை வடை' என்ற பெயர் மாத்திரம் மிஞ்சி நிற்கிறது. இப்போதைய தட்டைவடை எல்லாம் வள்ளியாரின் வடைக்கு புரையிடவும் போதாது. இன்று பருத்தித்துறை வடையின் நிறமும் இல்லை; மணமுமில்லை; குணமுமில்லை; தரமுமில்லை. அப்போ அந்த வடை இரத்தச் சிவப்பாய் இருக்கும். முதலில் ஒரு வடை ஒரு சதம் பிறகு 2 சதம், ஒரு ரூபாவுக்கு 50 வடை. இப்போ ஒன்று ஒரு ரூபா ஆனால் அதில் நூறில் ஒரு மதிப்புத்தானும் கிடையாது!


**அமரர். பண்டிதர் க. ஏரம்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய சித்திரத்தேர்ச் சிற்பங்கள்

**திரு. வே. அம்பிகைபாலன்** M.Phil
செயற்திட்ட அலுவலர், முறைசாராக்கல்வி,
வடமராட்சி வலயக்கல்வி அலுவலம்.



திருாவிட எண்கோண முகபத்திர வடிவில் உருவாகிய இத்தேர், ஆறு சில்லுகளுடன் கூடியதாகும். 32 அடி உயரமுடைய இத்தேர் திரிதள விமானத்துடனும் அதில் கெந்தர்வன்களுடனும் அமைந்திருப்பது ஓர் சிறப்பம்சமாகும். இவ்வம்சம் யாழ்ப்பாண பாணியில் புதுமையுடையதாகும். இதனை இன்னோர் வகையிலும் நோக்க முடியும். ஆறு சில்லுகளும் விமானத்தில் கெந்தர்வன்களும் அமைந்த யாழ்ப்பாண பாணியின் முதலாவது யாழ்ப்பாணத் தேர் இது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் 3வரி சிற்பங்களும் மேற்படி அம்சங்களுடன் இணையும் சிறப்பு, மற்றுமோர் தனித்துவமாகும்.

ஆறு சில்லுடன் கூடிய பார் விதானத்தின் மேல் சித்தூர் மட்டம், பேரூர்மட்டம், நராசனமட்டம், தேவாசன மட்டம், சிம்மாசன மட்டம், என்பவை ஒன்றின் மேல் இன்னொன்று தேரின் புறவுருவத்தோற்றத்திற்கு ஏற்ப இறுகிய நிலையில் உயர்ந்து விரிந்து சரி யாழ்ப்பாணத்தில் வேறெங்குமே கண்டிராத தனிச் சிறப்பம்சமாகும்.

அதேபோன்று முகபத்திர மடக்கை மீட்பு என்னும் தொழினுட்பமும் குறிப்பிடப்படவேண்டியதாகும். தெல்லிப்பழை துர்க்காதேவி (1978), கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியர் (1983), கோண்டாவில் அன்னுங்கை சிவபூதவராசர் (1988) ஆகிய தேர் அமைப்புக்களின் வரிசையில் இடம்பெறும் தனித்துவம், சந்நிதித் தேர் மடக்கைத் திறனுக்கும் உண்டு.

வெளிச்சுற்று வட்டமைப்பில் அமையும் 8 பிரதான பவளக்கால்கள் விமான்தைத் தாங்கும் நிலையில் அமைந்துள்ளன. அழகிய மணிமண்டப விதானம் கண்கவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்ணத்திறன்களுடன் அமைந்துள்ளன. விமானத்தைத் தாங்கி நிற்கும் அழகியல் தூண்கள் என்னும் பெரிய யாளித்தூண்கள் எட்டும் தேரின் புறவுருவ வரைபினை நெறிப்படுத்துகின்றன. இவற்றின் அடிப்படை வடிவமைப்பு, முற்றிலும் புதுமை தழுவிய செடிகளின் வரைபினை இணைத்துள்ளது. யாளியின் பாதங்களின் கீழ் இருந்து வளர்ந்து உயர்ந்து செல்லும் செடிகளின் மத்தியில்பாடும் பறவை இனங்களின் ஜோடித் தோற்றம், இலாவக ஓட்டத்திற்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தத் தேர்த்திருப்பணி, யாழ்ப்பாணத் தேர்க்கலை உலகில் பேசப்படுவதற்குரிய முக்கிய இரு காரணிகளில் திறன் மிகு திட்டமிடற்பணி, முகாமைத்துவத்திறன் என்பன இடம்பெறுகின்றன. கொழும்பில் உருவாக்கப்பட்ட பாகங்கள். உப உறுப்புக்களை எல்லாம் உரிய காலத்தில் சந்நிதி ஆலய வளாகத்திற்கு கொண்டு வந்து நிர்மாணத் தளத்தில் பொருத்தமுற அமைத்திட்ட திறனை யாழ்ப்பாணம் மட்டுமல்ல இந்தியாவின் புகழ்பெற்ற கலைஞர்களுமே வாயைப்பிளந்து நின்று பார்த்தும் வாழ்த்தியும் உள்ள நிகழ்வு, எமது யாழ் கலை உலகையே தலை நிமிரச் செய்வதாகும்.

## பருத்தித்துறைப் புளிய மரம்

- 1952ஆம் ஆண்டு வீசிய புயலில் வீழ்ந்த பருத்தித்துறை சந்தையடி புளி பல வரலாற்று சம்பவங்களை நினைவு கூறும் இயல்புடையது.
  - போர்த்துக்கேயர்
  - டச்சுக்காரர்
  - ஆங்கிலேயர்

  இப் புளியடியில் தங்களது நினைவுகளை விட்டுச் சென்றுள்ளனர். அந்த வகையில் பருத்தித்துறைக் கல் வரலாற்று ரீதியாக முக்கிய பதிவாக அமைந்துள்ளது.
- இது பொதுவாக சந்தை புளி என அழைக்கப்பட்டாலும் இந்த மரத்திற்கும் துறைமுக வளர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. வெளிச்ச வீடு கட்டப்படுவதற்கு முன்னர் இப் புளியமரத்தின் உச்சாணிக் கொப்பில் ஒரு விளக்கு கட்டப்பட்டு இருந்ததாம், அது கடலோடிகளுக்கு கலங்கரை விளக்காக இருந்ததாம்
- இப்புளியடியில் போர்த்துக்கீச, டச்சுப்பாதிரிமார்கள் தங்களது பிரசங்கங்களை ஆற்றி இருக்கின்றார்கள். அச்சந்தர்ப்பங்களிலே தற்சமயம் காணப்படுவதுபோல புளியடியை சுற்றிய பகுதிகளில் குடியிருப்புகள் இருக்கவில்லை. துறைமுகத்துக்கு வந்துபோகிற மக்களும், பொருட்களை விற்றுவாங்குவோரும் இவ்விடத்தில் கூடியிருக்க வேண்டும். அதனைப் பயன்படுத்தி கிறிஸ்தவ பாதிரிமார் தங்களது போதனைகளைச் செய்து இருக்க வேண்டும் என ஊகிக்கலாம். அதனாலேதான் புனித சவேரியமரம், போல்டியல் மரம் என அழைக்கப்பட்டது.
- முற்குறிக்கப்பட்டதுபோல ஆரம்பகால சந்தை இப்புளியமரத்திற்கு கீழேயே இயங்கியுள்ளது.
- கிடைக்கப்பெறும் செவிவழிக் கதை மூலம் பிறநாட்டாரது ஆட்சியின்போது இப் புளியம்மரத்திற்கு கீழேதான் நீதிவிசாரணைகள் இடம்பெற்றுள்ளன.
- ஆகவே இப்புளியமரம் வெளிச்சவீடாய், சந்தையாய், மதபோதனை செய்யும் இடமாய், நீதி ஸ்தலமாய், இளைப்பாறும் இடமாய் பல நடிபங்குகளை வரலாற்றிலே வகித்து வந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியின் தனித்துவம் மிக்க இயற்கைத் தோற்றங்கள்

## 1) பொந்துக் கிணறு :-

தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலத்திற்கு அருகில் அமைந்துள்ள இக்கிணறு மிகவும் பிரச்சித்தமானது. இடிவிழுந்து பொந்துக்கிணறு தோன்றியதாகக் குறிப்பிடப்படுகின்றது. நிலாவரைக் கிணறுபோல இறைக்க இறைக்க வற்றாத கிணறாகும். நாளொன்றுக்கு 42000 லீற்றர் நீர் தொண்டைமானாற்றிலிருந்து வல்வெட்டித்துறை நகரப்பகுதி, பொலிகண்டி ஊறணி வரையான பகுதிகளுக்கு குழாய் மூலம் 24 நீர்த்தொட்டிகளுக்கு பொதுமக்களின் பாவனைக்கென நீர் வழங்கப்படுகிறது. தொடர்ந்து இக்கிணற்றிலிருந்து நீரை எடுப்பதனால் அண்மையில் உள்ள விவசாயக் கிணறுகள் நீர்மட்டம் குறைவடையும் என விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றனர். இவ்விடயம் ஆய்வுக்குரியது.

## 2) மண்டபக்காடு :-

கற்பாறைகள் நிறைந்துள்ள கெருடாவில் தெற்குப் பகுதியில் காணப்படுகிறது. குகையின் உட்புறத்தில் அரசசபை போன்ற அமைப்பைக் கொண்டதாகவும் பல மண்டபங்கள் இருப்பதாக இவ்வூர் மக்கள் குறிப்பிடுகின்றனர். நான்கு பக்கமும் குறுகிய வாயில்கள் காணப்படுகின்றன. ஏறக்குறைய ½ மைல்களுக்கு இம்மண்டபம் பரந்துள்ளது. வரலாற்று ரீதியாக சுமார் அறுநூறு வருடங்களுக்கு முன் சிங்கை ஆரியனின் மூத்த மகன் பரராசசேகரன் போர்த்துக்கீசருக்கு அஞ்சி இக்குகைக்குள் ஒளிந்திருந்ததாக இப்பகுதி மக்கள் குறிப்பிடுவர்.

## 3) சின்னமலை :-

தொண்டைமானாறு கடற்கரைப் பகுதியில் கற்பாறைகள் கொண்டு அமைந்த வனப்புமிக்க பாறைகளால் ஆனது மழை காலத்தில் பாறைகளுக்கூடாக நீர்பாய்ந்து வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். முன்னர் இப்பாறைகளில் பிராமி எழுத்துக்கள் காணப்பட்டதாக இப்பகுதி மக்கள் குறிப்பிடுவர். தற்போது சுனாமியின் பின்னர் எழுத்துக்களைக் காணமுடியவில்லை. மண்டக்காடு குகையிலிருந்து ஒரு பாதை சின்னமலைவரை செல்வதாகக் கூறப்படுகிறது.

## 4) ஊறணி ஊற்று :-

பொலிகண்டி ஊறணி வைத்தியசாலைக்கு வடக்கே கடலுடன் இணைந்து காணப்படுகிறது. முன்னர் மழை கலத்தில் ஊற்றிலிருந்து தண்ணீர் சீறிப்பாய்ந்து கொண்டிருக்கும் காட்சி மிகவும் அற்புதமானது எனவும். இந்நீர் மருத்துவகுணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னமலை




பொந்துக்கிணறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இயற்கைத் தாவரம்

Doum Palm

மண்டபக்காடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்ததாகவும் சிரங்கு, வாதம் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் இங்குவந்து நீராடிச் செல்வதாகவும் இப்பகுதியிலுள்ள முதியோர் குறிப்பிடுகின்றனர்.

### 5) இயற்கைத் தாவரம் - Doum palm Chyphaene - Thebaica :-

வல்லிபுரம் பகுதியில் காணப்படும் Doum palm (Chyphaene - Thebaic) இயற்கைத் தாவரம் ஆனைவிழுந்தான் சந்தியில் இரு மருங்கிலும் முன்னர் காணப்பட்டதாக இப்பகுதி மக்கள் குறிப்பிடுகின்றனர். தற்போது ஒன்றினை மட்டுமே காணமுடிகின்றது.



ஊறணி ஊற்று

## சந்நிதி மத அநுபவம்

இங்குள்ள மத அநுபவமானது பௌராணிக ஐதீகக் கதைகளில் நம்பிக்கை வைக்காததால் அவற்றைப் பற்றியே சிந்தியாததால் பக்தனுக்கும் - அத்தெய்வத்துக்குமிடையிலான ஒரு தனிப்பட்ட பாச இறுக்க மனநிலையினை தோற்றுவனவான நிகழ்வுகளைத் தளமாகக் கொண்டதாக அமைகின்றது. அந்நிகழ்வுகள் சமகால வாழ்வினடியாக முகிழ்ப்பவையாக அமைகின்றன. தனித்தனி மனிதர்களின் அன்றாடத் தேவைகள் இலட்சியங்கள் நடத்தையுந்தல்களினூடாக ஏற்படும் மத அனுபவமாகவே இவ்வநுபவம் காணப்படுகின்றது.

- பேராசிரியர் கா. சிவத்தம்பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி வடக்கிலுள்ள மக்களால் ஆக்கப்பட்ட நூல்கள் :-

தகவல் : திரு. பா. மீனாட்சிசுந்தரம்
திரு. இ. து. குலசிங்கம்
பரு. நகரசபை நூலகர்

தொகுப்பு :- திருமதி சு. விஜயரத்தினம்
கலாசார அலுவலர்.

| நூலை ஆக்கியோர் | நூலின் பெயர் | வெளியீடு செய்யப்பட்ட ஆண்டு |
|---|---|---|
| ❖ இயற்றமிழ் போதகாசிரியர் ச. வயித்திலிங்கம்பிள்ளை | - சிந்தாமணிநிகண்டு | 1876 |
| | - நம்பியகப்பொருள் உரை | 1878 |
| | - கந்தரலங்காரம் உரை | 1878 |
| | - கந்தபுராணம் அண்டகோசப்படலம் உரை | 1885 |
| | - கந்தபுராண தெய்வயானை அம்மை வள்ளியம்மை திருமணப்படலம் உரை | |
| | - கல்வளையந்தாதி உரை | |
| | - கள்ளுக்குடிச்சிந்து | |
| | - தெய்வத்திரு | |
| | - சாதிநிர்ணய புராணம் | |
| | - செல்வச்சந்நிதி திருமுறை | |
| ❖ மேலைப்புலோலி சதாவதானி நா. கதிரவேற்பிள்ளை | - தமிழ் பேரகராதி எனும் தமிழ்மொழியகராதி | 1899 |
| | - பழனி தலபுராணம் பொழிப்புரை | 1903 |
| | - நைடதம் - விருத்தியுரை | 1914 |
| | - மதுரை பேரகராதி | 1921 |
| | - சுப்பிரமணிய பராக்கிரமம் | 1922 |
| | - கருவூர் மான்மியம் | |
| | - சிவாலய மகோற்சவ விளக்கம் | |
| ❖ ச. சுப்பிரமணியசாஸ்திரி | - கந்தபுராணம் உற்பத்திக்காண்டம்உரை | 1907 |
| | - சொற்பொருள் விளக்கம் | 1924 |
| | - கந்தபுராண அசுரகாண்டம் உரை | 1928 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கந்தபுராண மகேந்திரகாண்டம் உரை 1929
- சமஸ்கிருத முதற்பாடம் 1948

❖ ஞா. கணேசபண்டிதர் - திருத்தாலாட்டு 1921

❖ ஸ்ரீமதி. ந. பத்மாசனி அம்மாள்- புலோலி பசுபதீஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதி 1925

❖ வே. கணபதிப்பிள்ளை - ஈழமண்டலச் சதகம் 1930

❖ சு. சிவபாதசுந்தரம் - திருவருட்பயன் விளக்கவுரை 1932
- திருவாசகமணிகள் 1933
- அகநூல்
- சைவபோதம்
- கந்தபுராண விளக்கம்
- அளவைநூல்
- சைவக்கிரியை விளக்கம் 1978
- திருப்பெருவடிவம்

❖ புலோலி வ. கணபதிப்பிள்ளை - வில்கணியம் வடநூல்மொழிபெயர்ப்பு
- இரகுவம்சம் சுருக்கம் வடநூல் மொழிபெயர்ப்பு
- இந்திரசேன நாடகம்
- மார்க்கண்டேய புராணம்
- தருக்க சாஸ்திர வினாவிடை

❖ வ. குமாரசாமிப்புலவர் - நன்னூற் காண்டிகை உரைவிளக்கம்.

❖ வே. சிதம்பரப்பிள்ளை - கந்தபுராணம் - சூரபன்மன் வதைப்படலம் உரை

❖ ஜோன் உவெஸ்லி - மொழியாக்கக் கட்டுரைத் தொகுப்பு 1938 பருத்தித்துறை மெதடிஸ்தசபை வெளியீடு

❖ வல்வை க. ஏகாம்பரம் - கந்தரந்தாதி உரை

❖ திக்கம் செல்லையாபிள்ளை - துகளறுபோதம் 1950

❖ புலோலி பண்டிதர் மகாலிங்கசிவம் - யமகவந்தாதி

❖ வல்லிபுரம் நாராயணபிள்ளை- கௌரி நூற்றெளிவு
- விட்டுணு நூதன புராணம்
- சிவநூதன பரிகாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ❖ முத்துச்சாமிக்குருக்கள் | - சிவபெருமான் அலங்காரம் | |
| | - பசுபதீஸ்வரர் அந்தாதி | |
| ❖ கற்கோவளம் வேதநாயகம்பிள்ளை | - உழவர் சிறப்பு | |
| | - மலேசியாக்கும்மி | |
| ❖ பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | - காதலியாற்றுப்படை | 1950 |
| | - மாணிக்க மாலை | 1953 |
| | - நானாடகம் | |
| | - இருநாடகங்கள் | |
| | - சங்கிலியன் நாடகம் | |
| | - ஈழத்து வாழ்வும் வளமும் | 2001 |
| | - இலங்கைத் தமிழர் வரலாறு | 1956 |
| | - வாழ்க்கையின் விநோதங்கள் | |
| ❖ யாழ்ப்பாணன் வே. சிவக்கொழுந்து | - கண்ணன் பாட்டு (கவிதை) | 1955 |
| | - பாலர் கீதம் (கவிதை) | 1955 |
| | - முல்லைக்காடு (கவிதை) | 1957 |
| | - கவிதைக்கன்னி (கவிதை) | |
| | - யாத்திரை | |
| | - மாலைக்குமாலை | |
| | - அன்னைக்கு | |
| ❖ வியாபாரிமூலை வே.த. தியாகராஜபிள்ளை | - ஸ்ரீ கந்தலீலா | |
| | - திரு. நல்லூரலங்காரம் | |
| ❖ தும்பளை வ. சுப்பிரமணியம் | - சிவபூசைத்திரட்டு | 1967 |
| ❖ தும்பளை பண்டிதர் வித்துவான் க. கிருஸ்ணபிள்ளை | - புலோலி பதிற்றுப்பத்தந்தாதி | 1982 |
| ❖ சே. ஏகாம்பரநாதன் | - கேதாரகௌரிவிரதம் மூலமும் உரையும் | |
| ❖ பண்டிதர் க. சச்சிதானந்தன் | - ஆனந்தத்தேன் | 1955 |
| | - தியாகமாமாலை | 1959 |
| | - எனது யாழ்ப்பாணமே | 1980 |
| | - யாழ்ப்பாண காவியம் | 1998 |
| | - மஞ்சுகாசினியம் இயங்குதமிழில் | 2001 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பருவப்பாலியர்படும்பாடு இலங்கைக் காவியம் முதற்தொகுதி 2002
- MANCHU HASINIYAM FONDANENTAL OF TAMIL PROSODY 2002
- மஞ்சு மலர்க்கொத்து (சிறுவர் பாட்டு) 2003
- எடுத்த மலர்களும் தொடுத்த மாலையும் (கவிதை) 2004
- பறவைகளே...........

❖ பேராசிரியர் அ.சண்முகதாஸ்
- தமிழ்மாழி இலக்கண இயல்புகள் 1997
- இலங்கைப் பேராசிரியர்களின் தமிழியற்பணிகள் 2001
- தமிழ்மொழியியல், இலக்கியம், பண்பாடுபற்றிய ஆய்வுக்கட்டுரைகள் 2001
- சங்க இலக்கிய ஆய்வுகள் 2002

❖ தும்பளை கலாநிதி தாவீது அடிகள்

சொற்பிறப்பியல் ஒப்பியல் அகராதி முதலாம் பாகம் 1970

An Etymological and Comparative Lexieon of Tamil Sinhala and sanskrit 1972

தமிழ், சிங்கள இலக்கண சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி - மூன்றாம் பாகம் 1973

An Ethymological and Coparative Lexican of Tamil and Sinhala Part - 4 1974

❖ கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
- 19ம் நூற்றாண்டின் தமிழ் இலக்கியத்தின் போக்குகள்
- சாதியும் துடக்கும் (பண்டைத் தமிழர் தொடக்கம் யாழ்ப்பாணத்தமிழர்வரை)
- பண்டைத்தமிழர் வாழ்வியற் கோலங்கள்
- தமிழ்மொழி அகராதி தந்த சதாவதானி
- காலம் தந்த கைவிளக்கு
- சி. வை. தாமோதரம்பிள்ளை

❖ கலாநிதி மனோன்மணி
- இத்திமரத்தாள் 1985



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| | சண்முகதாஷ் இணைந்து ஆக்கியவை | - தமிழர் திருமண நடைமுறைகள் | |
| | | - ஆற்றங்கரையான் | 1989 |
| | | - தமிழ்த்தோணி | |
| ❖ | பேராசிரியர் கா.சிவத்தம்பி | - யாழ்ப்பாணம், சமூகம், பண்பாடு, கருத்துநிலை | 2000 |
| | | - தமிழிலக்கியத்தில் மதமும் மானிடமும் | 2001 |
| | | - விமர்சன சிந்தனைகள் | 2001 |
| | | - பேராசிரியர் கணபதிப்பிள்ளை பற்றிய அறிமுக ஆய்வு | 2001 |
| | | - இலக்கணமும் சமூக உறவும் | 2002 |
| | | - பண்டைய தமிழ் சமூகத்தில் நாடகம் | 2004 |
| | | - தமிழ் பண்பாட்டில் சினிமா | 2004 |
| ❖ | பண்டிதர் தென்புலோலியூர் கந்தமுருகேசனார் | - நல்லைநாவலன் கோவை | 1999 |
| ❖ | பண்டிதர் பரந்தாமன் | - தமிழ் அகரமுதலி | 2004 |
| ❖ | வல்வை ந. அனந்தராஜ் | - வடபுலநாட்டார்வழக்கு | 2002 |
| ❖ | புலோலி தில்லைநாதநாவலர் | - திருவள்ளுவர் சமணர் அல்லர் என்றும் கொள்கை மறுப்பு | |
| ❖ | ஆங்கில விரிவுரையாளர் வை. சுந்தரேசன் | - EVERYDAY CONVERSATIONS | 1997 |
| | | - பிள்ளைப்பாமலர் (கவிதைத்தொகுப்பு) | 1998 |
| | | - சீனத்துக் கவிதைகள் | 1998 |
| | | - பிளேக் கவிதைகள் | 2008 |
| ❖ | புலோலியூர் க. வீணுகோபால் (கணபால சுவாமிகள்) | - அருட்கனி | 1997 |
| ❖ | தும்பளை பா. இரகுவரன் | - ஊரும் வாழ்வும் | 2001 |
| | | - கல்லூரி நாடகங்கள் | 2007 |
| ❖ | க. சிவானந்தசுந்தரம் | - இலங்கையின் இனப்போராட்டம் | 1988 |
| ❖ | பூ.க. முத்துக்குமாரசாமி, செ. வயித்தியலிங்கம்பிள்ளை | - வல்வெட்டித்துறை ஊரின்னிசை | 1982 |
| ❖ | வல்வை பா. மீனாட்சிசுந்தரம் | - வரலாற்றில் வல்வெட்டித்துறை | 2006 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ தும்பளை த. இராமநாதபிள்ளை - உலக வரலாறு 1, 2, 3
- உளநூலும் கல்வியும்
- அளவை விளக்கம்
- யவன மஞ்சரி

❖ தும்பளை ச. வீரசிங்கம் - THE GUIDE OF TRANSLATION

❖ பருத்தித்துறை க. அருள்நந்தி - இடைநிலைப் பௌதீகம்.

❖ மா. நடராச சுந்தரம்
- சர்வதேச நாணய முகாமைத்துவம் 2001
- துடுப்பாட்டம் 2004
- முகாமை நுட்பங்கள் 2006

❖ செ. கிருஸ்ணராசா
- தொல்லியலும் யாழ்ப்பாணத்தமிழர் பண்பாட்டுத் தொன்மையும் 1998
- இலங்கை வரலாறு 1999

❖ டாக்டர் எம். கே. முருகானந்தம்
- சிறுவர்களின் கண்களைக் காப்போம் வாரீர் - வைத்திய நூல் 1986
- பாலியல் நோய்கள் " 1989
- தாயாகப் போகும் உங்களுக்கு " 1989
- எயிட்ஸ் " 1989
- வைத்திய கலசம் " 1994
- சாயிகாட்டிய ஆரோக்கியவாழ்வு " 1994
- நீங்கள் நலமாக " 1998
- எடையைக் காத்து நலத்தைப் பேணுவோம் " 2003
- ஒரு டாக்டரின் டயறியிலிருந்து....... " 2004

❖ புலோலியூர் க. சதாசிவம்
- யுகப்பிரவேசம் சிறுகதைத்தொகுப்பு 1973
- நாணயம் - நாவல் 1980
- ஒரு அடிமையின் விலங்கு அறுகிறது சிறுகதைத் தொகுப்பு 1982
- மூட்டத்தினுள்ளே - நாவல் 1983
- ஒருநாள் பேர் - சிறுகதைத் தொகுப்பு 1995
- புதிய புரிமாணம் - சிறுகதை 1998
- அக்கா ஏன் அழுகிறாள் - சிறுகதைத்தொகுப்பு 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| ❖ | புலோலியூர் செ. கந்தசாமி | - மெல்லத்தமிழினி...... | 1999 |
| ❖ | புலோலியூர் செ. தம்பையா | - அழியும் கோலங்கள்<br>ஐம்பதிலும் ஆசைவரும் | 1999 |
| ❖ | பருத்திநகர் பொ. மகாதேவா | - இளமையின் இரகசியம் | 2000 |
| ❖ | புலோலியூர்<br>க. இரத்தினவேலோன் | - அறிமுகவிழா சிறுகதைகள் | 1984 |
| | | - புதிய பயணம் ” | 1996 |
| | | - விடியட்டும் பார்ப்போம் | 1997 |
| | | - புதிய சுதந்திரம் புலர்வின்முன்<br>ஈழத்து சிறுகதைகள் (கட்டுரை) | 1999 |
| | | - அண்மைக்கால அறுவடைகள் (கட்டுரை) | 2001 |
| ❖ | இரா. பஞ்சலிங்கம் | PANCHALI SABATHAM | 1999 |
| | | SILENT BURIAL | 2001 |
| ❖ | உள்ளூராட்சித்<br>திணைக்களம் | பருத்தித்துறை பிரதேசமலர் | 1999 |
| ❖ | கி. சிவநேசன் | கற்பூரவிநாயகர் | 2002 |
| ❖ | தென்புலோலியூர் பா. ரதீஸ் | - பாண்டியன் பாவை (நாடகம்) | 2004 |
| | | - அவன் ஒரு மெழுகுவர்த்தி (கவிதைகள்) | 2004 |
| ❖ | தென்புலோலியூர்<br>பெரியஜங்கரன் | - எனக்கு மரணம் இல்லை (கவிதைநூல்) | 2007 |
| | | - கைக்கூ கவிதைகள் ” | 2007 |
| | | - ஞானக்கண் ” | 2007 |
| | | - வானவில் ” | 2007 |

❖ குறிப்பு :- மேற்குறிப்பிடப்பட்ட நூல்கள் பற்றிய விபரங்கள் பூரணமான தகவல்கள் அல்ல தவறவிடப்பட்ட நூல்கள் அடுத்துவரும் மலரில் இடம்பெறும். மேலும் இதில் குறிப்பிடப்பட்ட நூல்கள் சிலவற்றிற்கான ஆண்டுகள் சரியாகத் தெரியாத காரணத்திற்காக ஆண்டுகள் குறிப்பிடப்படவில்லை.

''அறிவை உயர்த்திட வேண்டும் - மக்கள்
அத்தனை பேருக்கும் நன்றாய்''

- பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியில் சிறுதெய்வ வழிபாடு

## - சில அறிமுகக்குறிப்புகள் -

**திரு. பா. இரகுவரன்**
B.A. (Hons)
ஆசிரியர்,
ஹாட்லிக் கல்லூரி.

"மனித சமுகங்களில் காணப்படும் வழிபாட்டு முறைகள் இதனுடன் தொடர்புடைய சடங்குகள் புராண ஐதீகக் கதைகள், கிராமியக் கதைகள், மற்றும் கற்பனைக் கதைகள் என்பவற்றில் இருந்து பொய்களை நீக்கி வடித்தெடுப்போமேயானால், காலத்தை மறைத்து நிற்கும் திரையூடே உண்மையான சமுக வரலாற்றைப் புரிந்து கொள்ளமுடியும்.

- அலெக்சாண்டர் கோத்திரோவ் -

### அறிமுகம்

தற்போதைய இந்து சமயத்தில் உள்ள ஆகம விதிகளுக்குப் புறம்பாக நடைபெறும் தெய்வ வழிபாடுகள் 'சிறுதெய்வ வழிபாடு' எனப்படும். இந்து சமயத்தின் ஆகம வழிப்பட்ட கிரியைகளுடனான வழிபாட்டு முறை 'பெருந்தெய்வ வழிபாடு' எனப்படும். சைவ, வைஷ்ணவ சமயங்களின் இணைப்பினால் உருவான இந்து சமயத்தில், சிவன், விஷ்ணு போன்ற தெய்வங்களே முதல்நிலைப்பட்ட தெய்வங்களாக உள்ளன.

சிறுதெய்வ வழிபாடானது கிராமிய வழிபாடு, நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு, குல தெய்வ வழிபாடு, காவல்த்தெய்வ வழிபாடு, எல்லைத் தெய்வ வழிபாடு எனப்பல பெயர்களில் அழைக்கப்பட்டாலும், 'சிறு தெய்வ வழிபாடு' என்ற பெயரினுள் அடங்கியிருக்கும் சமுக வரலாற்றுப் பின்னணி கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். சிறுதெய்வ வழிபாடு தமிழரின் (திராவிடர்) தொன்மையான வழிபாட்டு முறையின் தொடர்ச்சியாகும். சங்க காலத்தின் பின் (கி.பி. 250) வட இந்தியாவின் ஆரியக் கலாசாரத்தின் மேலாதிக்கம் எமது வழிபாட்டு முறைகளில் படிப்படியாக மாற்றத்தை ஏற்படுத்தி, ஆரியரின் சமஸ்கிருத மயப்பட்ட மந்திரங்கள், கிரியைகளுடன் கூடிய இந்து சமயத்தின் ஆகம முறைப்பட்ட வழிபாட்டு முறையை மேலோங்கச் செய்தது. இவ்வழிபாட்டு முறைத் தெய்வங்கள் 'பெருந்தெய்வங்கள்' எனவும், ஏனையவை 'சிறுதெய்வங்கள்' எனவும், உயர்வு தாழ்வுடன் நோக்கப்பட்டன. சிறுதெய்வம், பெருந்தெய்வம் என்ற பெயருடன் ஆரிய நிலைப்பட்ட பிராமணியத்தினதும் சமஸ்கிருதத்தினதும் மேலாதிக்கம், ஒடுக்குமுறை என்பனவற்றின் நீண்ட வரலாறு தொக்கி நிற்பதைக் காணமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சியிலும், மற்றும் தமிழ்ப்பிரதேசங்களிலும் உயர்நிலைச் சாதியினர் ஆகம முறைப்பட்ட கோயில்களை அமைத்து, அக்கோயில்களுக்கு தாழ்த்தப்பட்டவர்கள் செல்ல முடியாதவாறு தடைசெய்தனர். தாழ்த்தப்பட்ட மக்கள் ஆகம முறைப்பட்ட கோயில்களை அமைப்பதையும் இவர்கள் அனுமதிக்கவில்லை. இதனால் தாழ்த்தப்பட்ட மக்கள் தொடர்ந்தும் சிறுதெய்வ வழிபாட்டு முறையையே பேணமுடிந்தது. எனவே, 'சிறு தெய்வ வழிபாடு' என்ற சொற்பதம் தற்செயலாகத் தோன்றியதொன்றல்ல. ஆரிய, சமஸ்கிருத, மற்றும் சாதித்துவ மேலாதிக்கத்தின் வரலாற்றை தன்னுள் பொதிந்து வைத்துள்ள சொற்பதமாகும். இதேவேளை உயர்நிலை மக்களிடையேயும் ஓரளவு விடுபட்டுப்போன சிறுதெய்வ வழிபாடு மீண்டும் இக்காலத்தில் குடும்ப, குல ரீதியாக ஆரம்பித்தது.

வடமராட்சியில் காணப்படும் சிறுதெய்வங்களில் ஆண் தெய்வங்களாக - வீரபத்திரர், வைரவர், காத்தவராயன், ஐயனார், அண்ணமார், அனுமான், விறுமர், பூதராயர், முனியப்பர், பணிக்கர், பெரியதம்பிரான், மாடன், மதுரைவீரன், குறுப்பர், வீரவாகுதேவர், நரசிங்கர், வதனமார் போன்ற தெய்வங்களும், பெண்தெய்வங்காளக - முத்துமாரி, காளி, கண்ணகி, நாச்சிமார், பேச்சி, செவ்வாச்சி (அடுப்பு நாச்சி) கொத்தி, கடலாச்சி போன்ற தெய்வங்கள் வழிபாட்டு நிலையில் உள்ளன.

**சிறுதெய்வ வழிபாடு மீள உச்சம்பெற்ற காலம் :-**

போத்துக்கீசரின் வருகைக்கு முன் யாழ்ப்பாண அரசர்களின் காலத்தில், வடமராட்சி வடக்கில் மக்களின் குடியிருப்புக்கள் மிகமிக குறைவாகவே காணப்பட்டன. வடமராட்சி வடக்கின் முக்கியத்துவம் பருத்தித்துறைத் துறைமுகத்தின் வர்த்தக ரீதியிலான ஏற்றுமதி - இறக்குமதி நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டது. போத்துக்கீசரின் வருகைக்கு முன்னுள்ள காலப்பகுதியில் ஆகம முறைப்பட்ட வழிபாட்டு நிலை மக்கள் மத்தியில் முதன்மை பெற்றிருக்க வாய்ப்புக்கள் அதிகமுண்டு.

போத்துக்கீசர் 1505 இல் இலங்கையின் கரையோரப் பகுதிகளையும், வடமராட்சியையும் கைப்பற்றிய பின் கிறீஸ்தவ மதத்துக்கு மக்களை மாற்றுவதில் தீவிரமாக ஈடுபட்டனர். ஆகம முறைப்பட்ட பல இந்து ஆலயங்கள் இடிக்கப்பட்டன. கிறிஸ்தவ மதத்துக்கு மாறியவர்கள் போக, ஏனைய மக்கள் இவ்வேளை குடும்ப, குல ரீதியான தெய்வ வழிபாடுகளில் ஈடுபடத்தொடங்கினர். வீட்டு வளவிலுள்ள மரத்தையும், மரத்தின்கீழ் கல், பொல் என்பவற்றை தெய்வத்தின் குறியீடாகவும், படிவமாகவும் கொண்டு வணக்க முறைகளை நடத்தினா். வணங்கி, கற்பூரம் கொழுத்தி, தீபம் ஏற்றி வழிபட்டனர். பானைக்குள் தீபம் எரியத் தேவையான காற்று வந்துபோக குடத்தில் துளைகள் இட்டுவைத்து வழிபட்டனர்.

மேற்படி நிலமை ஒல்லாந்தர் காலத்தின் முற்பகுதியிலும் நிலவியது. ஒல்லாந்தர் புரட்டஸ்தாந்து மதத்தைச் சேர்ந்தவர்கள். இதனால் இந்து சமயம் மட்டுமன்றி கிறீஸ்தவ மதத்தவர்களின் வழிபாட்டு முறைகளும் இரகசியமாகவே நிகழ்த்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போத்துக்கீசர், ஒல்லாந்தர் காலத்தில் "சூலம்" முக்கியத்துவம் பெற்றிருந்தது, இதன் பக்கச் சிறகுகளை விரித்துவிட்டால் சிலுவைபோலக் காட்சியளிக்கும் வணங்கும்போது பக்கச்சிறகுகளை மடித்து சூலமாக்கி, தமது குல தெய்வத்தை நினைத்து வழிபட்டனர். சூலம் - சிலுவை என ஏமாற்று வேலைக்கும் நன்கு கைகொடுத்தது. வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்கு ஞாயிற்றுக் கிழமை விசேடமாக செல்லும் வழக்கம்கூட கிறீஸ்தவர்களின் ஞாயிறு பிரார்த்தனைக்கு செல்வதுபோல தாமும் கோயிலுக்குசென்று ஆகம விதிமுறையற்ற வழிபாடு செய்துவிட்டு வருதலின் தொடர்ச்சியாகவே தெரிகின்றது.

போத்துக்கீசர் காலத்திலும், ஒல்லாந்தர் காலத்தின் முற்பகுதியிலும் கடுமையான சமய ஒடுக்குமுறை இருந்த காலமாகும். இக்காலமே ஆகமம் சாராத வழிபாட்டு முறையின் உச்சமாகக் காணப்பட்டது. இப்பொழுதுள்ள பல சிறு தெய்வக்கோயில்களின் உருவாக்கக் காலமாகவும் இக்காலம் இருந்ததாகக் கருதப்படுகிறது.

குடத்துக்குள் தெய்வப் படிமங்களை வைத்து வழிபட்டதன் தொடர்ச்சியாக குடத்தையே தெய்வமாக வழிபடும் நிலையை தும்பளை மேற்கு காய்க்கணாந் தோட்ட வளவில் இன்றும் காணலாம். கொற்றாவத்தை சமரபாகுப் பகுதியில் 5 இடங்களில் இவ்வாறான குடத்தை வழிபடும் மரபை அவதானிக்கலாம். அடுப்பில் பல துளைகள் கொண்ட குடத்தை வைத்து, சட்டியால் மூடப்பட்டிருக்கும். இதனையே தெய்வமாக வழிபடுகின்றனர். ஒரு இடத்தில்மட்டும் குடத்துக்குப் பின் உள்ள சுவரில் வண்ணத்துப் பூச்சியின் உருவம் வரையப்பட்டிருந்தது. மேற்படி வழிபாட்டை "அடுப்பு நாச்சி வழிபாடு" அல்லது "செவ்வாச்சி வழிபாடு" எனக்கூறுகின்றனர். செவ்வாச்சிக்கு நீர்க்கஞ்சி, வடை, கள், சுட்ட மீன் என்பன படைக்கப்படுகின்றன. இமையாணன் பகுதியில் நீருள்ள மண்குடம் வழிபடப்படுகின்றது. இதனைப் "பகவதியம்மன்" என்று அழைக்கின்றனர்.

**சிறுதெய்வ வழிபாடும் - நாவலரின் கந்தபுராணக் கலாச்சாரமும் :-**

நாவலர் முன்னேடுத்த கந்த புராண கலாச்சார மரபில், சிவனே தனிப் பெரும் தெய்வம். பார்வதி அம்மனும், பிள்ளையாரும், முருகனும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தெய்வங்களாயின. திரௌபதி, கண்ணகி சீதையம்மன் வழிபாடுகள் யாழ்ப்பாணப் பகுதியில் இல்லாதுபோயின. "திரௌபதியம்மன் வழிபாடு" மட்டக்களப்பில்மட்டும் காணப்படுகின்றது. "கண்ணகி வழிபாடு" வன்னியிலும், வடமராட்சியிலும் காணப்படுகின்றது. ஆயினும் வன்னியில் உள்ளதுபோல் சிறப்பான வழிபாட்டு நிலை வடமராட்சியில் இல்லை. மாதனை, மந்திகை கண்ணகி அம்மன் கோயில்கள் ஓரளவு கண்ணகி வழிபாட்டை இங்கு நிலைபெறச் செய்தன எனலாம். இக்கோயில்களில் இன்று நடப்பதுபோல நாவலர் காலத்தில் 'வருடாந்த வேள்வி' நடந்திருக்குமா என்பது கேள்விக்குரிய விடயமாகும். அதேவேளை வல்லிபுர ஆழ்வாரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாக்குள்ள வடமராட்சியில் திரௌபதியம்மன் வழிபாடு அற்றுப்போனது ஏன். கண்ணகி வழிபாடு நிலைபெற்றது ஏன். ஆராயப்படவேண்டிய விடயமாகும்

யாழ்ப்பாணப் பகுதியில் தற்போது இருக்கும் அம்மன் கோயில்கள், முன்பு சிறு தெய்வ வழிபாட்டிற்குரிய முத்துமாரி, காளி, கண்ணகி கோயில்களின் உருமாற்றமாகவே உள்ளன.

**சிறுதெய்வ வழிபாடும் தொழில்சார் சாதிப்பிரிவுகளும் :-**

அண்ணமார் என்ற சிறுதெய்வ வழிபாடு வடமராட்சியில் பள்ளர் சமூகத்தினரால் மட்டுமே வழிபடப்படுகிறது. இத்தெய்வத்திற்குரிய குறியீடாக கல்லும் பொல்லும் காணப்படுகிறது. வன்னியில் மிகக்குறைந்த அளவிலேயே காணப்படுகிறது.

வியாபாரிமூலை வீரபத்திரர் கோயிலுக்கு முன்னால் முன்னர் அண்ணமார் கோயில் பச்சைமால்கோயில் என அழைக்கப்பட்டது.

**பெரியதம்பிரான் வழிபாடு :-** பெரியதம்பிரான் வழிபாடு சலவைத் தொழிலாளர்களுக்கு உரியதாய் கூறப்படுகிறது. மட்டக்களப்பில் சலவைத்தொழிலாளர் தவிர வேறு எந்த சாதிப்பிரிவினரும் இவ்வழிபாட்டைச் செய்வதில்லை. வன்னியில் இவ்வாறே காணப்படுகிறது. பூநகரி பெரியதம்பிரான் ஆலயத்தில் வருடாந்தப் பொங்கலுக்காக தேவையான நெல்லை வேளாளரிடம் சலவைத்தொழிலாளர்கள் மங்களகரமாகச் சென்று பெற்றுக்கொள்வர்.

ஆனால் வடமராட்சியிலும் சலவைத்தொழிலாளருக்குரிய தெய்வமாகக் கருதப்பட்டாலும் உயர்நிலை சாதி, பிறதாழ்த்தப்பட்ட சாதிமக்களிடையேயும் இவ்வழிபட்டைக்காணமுடிகிறது. தும்பளை மேற்கு பெரியதம்பிரான் கோயில், புலோலி கிழக்கு சவனாய் பெரியதம்பிரான்கோயில், மாயக்கை பெரியதம்பிரான் என்பன வேளாள சாதியினருக்குரியதாகக் காணப்படுகிறது. வராத்துப்பளை நெல்லித்துறை பெரியதம்பிரான் வயல்களுக்கு பாதுகாப்பு தெய்வமாக உள்ளது. நெல்லு அறுவடைக்காலம் வேளாளர் அன்னதானம் கொடுப்பர். கதிர்காமத்தீர்த்தத்துக்கு அடுத்தநாளும் இங்கு அன்னதானம் கொடுக்கப்படும்.

இமையாணன் வட்டவளவு பெரியதம்பிரான் கோயிலில் நாகம்படமெடுத்த நிலையில் பெரியதம்பிரானின் மேலாக நிற்கிறது. நாகச் சொரூபங்கள் பல இங்குண்டு இப்பகுதியில் சமுகத்தினர் வழிபட்டாலும் இன்னொரு சமுகத்தவரின் தாழ்த்தப்பட்ட காணியிலே இது அமைந்திருப்பதாகக் கூறுகின்றனர். பெரியதம்பிரான் வழிபாட்டையும் நாகவழிபாட்டையும் வடமராட்சியில் தொடர்புபடுத்தி கூறும் வழக்கம் உள்ளது. சலவைத்தொழிலாளரை "துறைப்பாம்பு வெட்டி" என அழைக்கும் மரபும் இருந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மதுரைவீரன் :-** வடமராட்சி மதுரைவீரன் கோயில் கொற்றாவத்தை, சமரபாகு கிராமப்பகுதியில் காணப்படுகிறது. மதுரைவீரன் வழிபாடு இலங்கையில் இந்திய வம்சாவளி மக்கள்வாழும் இடங்களில்தான் பொதுவாகக் காணப்படுகின்றது. வடமராட்சியில் இந்தவழிபாடு உருவாகியதன் பின்னணி ஆராயப்பட வேண்டும். மேற்படி கோயிலில் மதுரைவீரன், காளி, வைரவர் என்பன சூலங்களாகவே வைக்கப்பட்டுள்ளன. அருகில் உள்ள அம்மன் கோயிலுக்கு காவல் தெய்வமாக மதுரைவீரன் வைக்கப்பட்டதாகக் கூறுகின்றனர்.

**ஐயனார் :-** ஐயனார் வழிபாடும் வடமராட்சியில் காணப்படுகிறது. ஐயனார் வணிகர் குலத்தெய்வமென மட்டக்களப்பு ஐயனார் அகவல் கூறுகிறது. வன்னிப் பகுதியிலும் ஐயனார் வழிபாடு சிறப்பான நிலையில் உள்ளது. வன்னிமக்கள் ஐயனாரின் உறைவிடம் காடு எனக்கருதுகின்றனர்.

வன்னிச்சிங்கள மக்களும் ஐயனாரை வேளாண்மைத் தெய்வமாகவும், சில இடங்களில் பிரயாணக் காவல் தெய்வமாகவும் வழிபடுகின்றனர். அறுவடையின் பின் சிங்கள மக்கள் வயல்கள் தோறும் ஐயனாருக்கு பானைகளுள் தீபம்ஏற்றி வழிபடுவர். இது முட்டிமங்கல்ய எனப்படுகிறது.

வடமராட்சி மக்களின் முற்கால வன்னி வியாபாரத் தொடர்பு காரணமாக வன்னி, வடமராட்சிப் பகுதிகளில் வணிகர்கள் பரஸ்பர உந்துதலுடன் இத்தெய்வத்தை வழிபட்டிருக்கலாம். எனக்கருத இடமுண்டு. ஐயனார் கலட்டி என்ற இடமும் வடமராட்சியில் உண்டு.

**கொத்தி வழபாடு :-** பெரியதம்பிரான், அண்ணமார் போன்று வீரபத்திரரின் கோபத்துக்கு அஞ்சி பிரசவம் நிகழ்ந்து கொண்டிருந்த வீடொன்றில் ஒழித்து, பிரசவம் பார்க்கும் மருதுவிச்சியினால் காப்பாற்றப்பட்டதால், பிரசவம் பார்க்கும் வேளைகளில் மருத்துவிச்சிக்கு உதவும் தெய்வமாக கொத்தித் தெய்வம் கருதப்படுகிறது. வடமராட்சியில் நளவர் சமுக, சலவைத்தொழிலாளர் மற்றும் தாழ்ந்த சமுக பெண்களே சிறந்த மருந்துவிச்சிகளாக இருந்தனர். வீட்டில் பிரசவம் நிகழ்ந்த காலத்தில் கொத்திக்கு கழித்தல் என்ற நிகழ்ச்சி நடைபெறும். கொத்தித் தெய்வம் குழந்தைக்கு ஏதாவது சிக்கல்களைக் கொடுக்காது வணங்கி கௌரவமாக துரத்திவிடுதல் என்ற நிகழ்வாகும். கொத்தி ஆல் என வல்வெட்டித்துறையில் காணப்பட்டதாகக் கூறுவர். கொத்தியை தெய்வமாக அல்லாது கொத்திப்பேய் என்ற நிலையிலும் பிரசவத்தில் வணங்கி உதவிபெறுதலும் பின்கழித்து விடுவதுமான நிகழ்வு நோக்கப்படுகிறது.

**முத்துமாரி – காத்தான் வழிபாடு :-** காத்தவராயன் வழிபாடு முத்துமாரியுடன் தொடர்புபட்டதாக உள்ளது. மாரி என்றால் மழைத்தெய்வம் வரட்சியைபோக்கவும், பொக்கிளிப்பான் அம்மை, சின்னமுத்து போன்ற வெப்புநோய்கள் தீரவும் கண்நோய்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வராமல் இருக்கவும் முத்துமாரி வழிபடப்படுகிறாள். மட்டக்களப்பில் மிக மலிந்த தெய்வக் கோயில்களாக மாரியம்மன் கோயில்கள் யாழ்ப்பாணம், வடமராட்சிப் பகுதியிலும் அதிக அளவு மாரியம்மன் கோயில்கள் உள்ளன.

காத்தான் முத்துமாரியம்மன் கோயில்களில் மட்டுமன்றி ஏனைய பெண் தெய்வக் கோயில்களான பத்திரகாளி, கண்ணகி, சக்தி, சாமுண்டீஸ்வரி, பண்டாரி அம்மன் போன்ற கோயில்களில் காத்தான் பிரகாரத் தெய்வமாக வடமராட்சியில் காணப்படுகிறது

இலங்கையின் ஏனைய பகுதிகளைவிட வடமராட்சிப் பகுதியிலேயே இன்று காத்தான்வழிபாடு சிறப்பான நிலையில் உள்ளது. காத்தான் கல், மரம், கழுமரம் என்பவற்றில் அமர்த்தப்பட்டுள்ளார். கழுமரம் காத்தானின் அகோர நிலையான கழுவேறியைக் குறிக்கின்றது என்பர். வல்வெட்டித்துறை மத்தி மாவடிக்கிராமத்தில் காத்தான் கோயிலுக்குள் கழுவேறியும் (கழுமரம்) அருகில் காத்தான் சூலமாகவும் காணப்படுவது இரண்டு வெவ்வேறு தெய்வம் எனக்கூறப்படுவதற்கு சான்றாக உள்ளது.

கற்கோவளம் கும்பி அம்மன் கோயிலடியில் உள்ள காத்தானை விக்கிரக நிலையில் உருவமாக வழிபடுகின்றனர்.

கழுவேறியை ஞானக்காத்தான் என்றுகூறி இதற்கு மச்சப்படையல் படையாத கோயில்களும் உண்டு. இது பிற்காலத்தைய ஆகமவழிபாட்டின் எச்சமாக மச்சமாமிசங்கள் படைக்கும் வழக்கம் இல்லாதொழிந்து காணப்படுகிறது.

தம்பசிட்டி பண்டாரி அம்மன் கோயிலில் இருந்த காத்தான் கோயிலும் முன்னர் புகழ்பெற்று விளங்கியது. பொதுவாகக் காத்தானுக்கு மச்சப்படையல், கள், சாராயம், கஞ்சாரொட்டி என்பன படைப்பர். நளவர் சமுகம் இந்தப் படையலில் முன்நிற்பர். மச்சச்சாப்பாடு பலருக்கும் பகிர்ந்தளிக்கப்படும் (காசுகொடுத்து வாங்குவர்) இது சிவமருந்து என அழைக்கப்பட்டது. நோய்பிணிகள், மற்றும் ஆபத்துக்களில் இருந்து காக்கும் சக்தி இந்த சிவமருந்து (மச்சப்படையல்)க்கு உண்டு எனக்கூறுவர்.

அல்வாய்தெற்கு காத்தான் கோயிலில் நேர்த்தியை நிறைவுசெய்ய ஏராளமான பட்டாசு வெடிகளைக் கொளுத்துவர். இதனால் இது வெடிகாத்தான் கோயில் என அழைக்கப்படுகிறது.

மாதனைக் காளிகோயிலுக்கு அருகில் உள்ள காத்தான், அக்காணியில் உள்ள பனம் பாத்திகளின் காவலனாக இருக்கின்றார். இக்காத்தானுக்கு ஒடியல்பிட்டு விசேடமாகப் படைக்கப்படும். இந்த சிவலிங்கம் போன்ற கல்லில் காத்தான் உறைந்துள்ளார்.

வல்வெட்டித்துறை மானங்கானை காத்தான் கோயில் வேள்வியன்று கட்டுக்கப்பல் செய்து அதனைத் தூக்கி அசைத்து ஆட்டி வீதி வலம் வருவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வூர் மக்களுக்கும் கப்பல் காசுக்கும் உள்ள தொடர்பையும், அதற்கான பாதுகாப்பை வேண்டி வழிபடுதலையும் இக்கப்பலாட்டம் வெளிப்படுத்துகிறது. வடமராட்சியில் காத்தான் காவல்த்தெய்வமாக மக்களின் இதயங்களில் குடிகொண்டுள்ளார்.

1) தொழில்வள காவல் - பயிர் செய்கை, சீவல், சலவைத்தொழில், கடற்தொழில்... பனம்பாத்தி.
2) இயற்கைச் சீற்றங்களில் இருந்து காவல் - கடற்கொந்தளிப்பு, கடும்காற்று, வெள்ளம், வரட்சி.
3) போக்குவரத்துக்கான காவல்த்தெய்வம்.
4) நோய்களில் இருந்து காவல்
5) எதிரிகளிடமிருந்து காவல்
6) விலங்குகளிடமிருந்து காவல்

காத்தானுக்கு மச்சப்படையல், கள், சாராயம் கஞ்சா ரொட்டி என்பனவற்றுடன் 07 வகை பிட்டு படைக்கப்படும். ஒடியல் பிட்டு, குரக்கன் பிட்டு, அரிசிப் பிட்டு, தினைப்பிட்டு, சாமைப்பிட்டு, உழுத்தம் பிட்டு, மரவள்ளிப்பிட்டு (பின்னாளில் கோதுமைப்பிட்டு) பள்ளர், நளவர் சமுகங்களில் பனையோலையால் செய்த தட்டுவங்களில் (பிளாப்போன்றது) படைப்பர்.

வடமராட்சியில் முத்துமாரி, காத்தான் வழிபாட்டுடன் உடுக்கிசைப்பாடலும், காத்தான் கூத்தும் சிறப்புற்றுக் காணப்படுகிறது. குறிப்பாக தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி கோயிலை சூழ்ந்த கிராமமக்களிடையே அதிகம் சிறப்பு நிலையில் உள்ளது.

1942 இல் மாதனைக் கலைஞர்களே காத்தான் கூத்தை வடமராட்சியில் அறிமுகப் படுத்தினர். அதுமட்டுமன்றி இலங்கையின் பல இடங்களிலும் மாதனைக் கலைஞர்களால் பல்லாயிரம் தடவைகள் காத்தான் கூத்து அரங்கேற்றப்பட்டுள்ளது.

## சிறுதெய்வ வழிபாடும் – கலைகளும்

வடமராட்சியில் பத்திரகாளி, முத்துமாரி, கண்ணகி..... போன்ற சிறுதெய்வவழிபாட்டுக்குரிய கோயில்களில் நேர்த்திக்காக ஏராளமான நாடகங்கள் ஆடப்பட்டு வந்துள்ளன. இந்த நாடக வகைகளாக 1) நாட்டுக்கூத்து 2) விலாசக்கூத்து 3) இசைநாடகம் 4) காத்தான் கூத்து என்பன அடங்கும். இதனால் ஆடல், பாடலில் வல்ல கலைஞர்களும், நடிப்பாற்றல் உரையாடல்திறன் மிகுந்த நடிகர்களும் பலர் உருவாகினர். ஈழத்து தமிழ் நாடக வளர்ச்சியில் மேற்குறிப்பிட்ட நான்கு நாடக மரபுகளை வலிந்த பெருமையில் வடமராட்சியின் சிறு தெய்வக் கோயில்களுக்கு முக்கிய பங்குண்டு. குறிப்பாக தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் கோயில், அல்வாய் முத்துமாரியம்மன் கோயில், தம்பசிட்டு பண்டாரி அம்மன் கோயில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்வாய் சாமணத்தறை பிள்ளையார் (அண்ணமார்) கோயில் போன்றன விதந்து கூறப்படக்கூடியவை ஆகும்.

சினிமா மற்றும் தொலைக்காட்சிகள் இல்லாத அக்காலத்தில் இந்நாடகங்கள் மக்களின் பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்தன. நாடகத்துடன் தொடர்பாக ஒப்பனைக் கலைஞர்கள், வேடஉடைகள் மற்றும் அணிகலன்கள் தயாரிக்கும் கலைஞர்கள், காட்சித்திரை (சீன்) வரையும் ஓவியர்கள், காட்சித்திரை, நாடகக் கொட்டகை என்பவற்றை வாடகைக்குவிடும் தொழிலாளர் என்போரும் வளர்ந்தனர்.

சிறு தெய்வக் கோயில் வேள்விகாலத்தில் தாளக்காவடி, கரகம் போன்ற நாட்டுப்புற நடனங்களும் உடுக்கிசைக் கலைஞர்களும், பறைஇசைக் கலைஞர்களும். வளர்ச்சி அடைந்தனர். காவடிக்கு பறை இசையும், கரகத்துக்கு உடுக்கிசையும் பயன்பட்டன.

சிறுதெய்வ வழிபாட்டு முறைசார்ந்த செல்வச்சந்நிதி முருகன் கோயிலிலும் திருவிழாக் காலத்தில் பறை இசையுடன் கூடிய காவடி ஆட்டம் முக்கிய இடம்பெற்றது. யாழ்ப்பாணப் பகுதியில் இன்று காவடிக்கு தவில்நாதஸ்வரம் என்பனவே பயன்படுத்தப்படும் நிலையில் வடமராட்சியில் காவடிக்கு பறைஇசை பயன்படுவது குறிப்பிடத்தக்கதாகும். பறை இசைக் கலைஞர்களை ஊக்குவித்து இதை வளர்க்க வேண்டிய கடமையும் எம்முன் காணப்படுகிறது.

நாடக மரபின் வளர்ச்சிக்கும் ஏனைய பாரம்பரிய கலைகளின் விருத்திக்கும் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பகுதிகளூடாக தமிழ் நாட்டுடனான தொடர்பு முக்கிய காரணமாய் அமைந்தது. கலைஞர்கள் வடமராட்சிக்கு வந்து போயினர். ஒப்பனை வேட உடைகளை இந்தியாவுக்குச்சென்று வாங்கி வந்தனர். கூத்துக் கலைஞர்கள் இங்கு வந்து பயிற்சி அளித்தனர். கர்னாடக சங்கீதக்கலைஞர்களும், ஆர்மோனிய வித்துவான்களும் வடமராட்சிப் பகுதியில் தங்கியிருந்து கர்நாடகசங்கீதம், ஆர்மோனியம் என்பவற்றில் பயிற்சி அளித்தனர்.

பாரம்பரிய நாடக வளர்ச்சியில் தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் கோயிலில், வேறு கோயில்களிலோ இல்லாதபடி அதிக அளவு கூத்துக்கள் ஆடப்பட்டன. வடமராட்சி தாண்டி இலங்கையின் கலைஞர்களும், இந்தியக் கலைஞர்களும் இக்கோயிலில் நாடகம் ஆடி நாடகத்துறையை வளர்த்தெடுத்த பணியில் மிகப்பெரிய பங்காற்றியுள்ளது.

மாதனைக் கண்ணகி அம்மன் கோயிலில் கோவலன் கண்ணகி இசைநாடகமாய் அதிகம் ஆடப்படும் தும்பளை அண்ணாவி தம்பையா விலாசக் கூத்தில் விற்பன்னராக இருந்தார். இவரின் குழுவினர் இராமாயணத்தின் 07 காண்டங்களையும் நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவிலில் ஒன்றுவிட்ட இரவு ஆடியுள்ளனர். தும்பளை தெற்கு பறை இசைக் கலைஞர்கள் மத்தியிலும் இசை நாடகமாக இராமாயணத்தில் 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்டங்களும் நெல்லண்டையில் ஆடப்பட்டுள்ளது. புட்டளை தாமப்பா விலாசக்கூத்துக் குழுவினரும் இங்கு விலாசக் கூத்து ஆடியுள்ளனர். அல்வாய், வதிரி, கரவெட்டி, புறாப்பொறுக்கி கலைஞர்களும் இசை நாடகங்களை இங்கு ஆடியுள்ளனர். கிருஷ்ணாழ்வார், கரவெட்டி நற்குணம், தம்பிஐயா, அண்ணாசாமி மாஸ்ரர் போன்ற பிரபல வடமராட்சிக் இசைநாடகக் கலைஞர்கள் புகழ் ஓங்குவதற்கு நெல்லண்டையில் அரங்கேற்றிய நாடகங்கள் பெரிதும் உதவியுள்ளன. மந்திகை கண்ணகி அம்மன், பொலிகண்டி வீரபத்திரர் கோயில்களில் சிலம்படி விளையாட்டு குதிரை ஆட்டம், என்பனவும் இடம்பெற்றுள்ளன.

**வடமராட்சியில் ஏனைய சிறுதெய்வ வழிபாடுகள்.**

**சிங்கள வைரவர் கோயில் :** வடமராட்சியில் ஆங்காங்கு சிங்கள வைரவர் கோயில்கள் காணப்படுகின்றன. இங்கு கலையாடுபவர் சிங்களம் போன்று உச்சரித்து, புரியாத மொழியில் பேசுவதால் இக்கோயில் இப்பெயர் பெற்றதென்பர்.

முற்காலத்தில் நடைசாரியாக பொதிமாடுகளின் உதவியுடன் வியாபார நோக்கமாக வன்னிச் சிங்களப் பகுதிகளுக்குச் செல்லும்போது காவலாக வைரவர் சூலத்தையும் , யந்திரத் தகட்டையும் கொண்டுசெல்வதுண்டு. வன்னிப்பகுதியில் இச்சூலத்தை பொருத்தமான இடத்தில் வைத்து வழிபாடு செய்வார்கள். சிங்கள மக்களும் இதனை வழிபாடு செய்வார்கள். பல மாதங்களின்பின் திருப்பி இங்கு வரும்போது, மீண்டும் அந்த வைரவரைக் கொண்டுவருவர். வன்னி வியாபாரிகளுக்கு நன்கு சிங்களம் தெரியும். கலையாடும்போது சிங்களத்தில் பேசுவர். இதன் தொடர்ச்சியாக, பின்னால் வந்த சிங்களம் தெரியாத சந்தியினர் கலையாடும்போது சிங்கள உச்சரிப்புப் போன்ற மொழியில் பேசுவர். இதனால்த்தான் இக்கோயில் 'சிங்கள வைரவர் கோயில்' எனப் பெயர் பெற்றது என்பர். வராத்துப்பளை சிங்கள வைரவர் கோயில், குசவெட்டி சிங்கள வைரவர் கோயில் என்பன குறிப்பிடத்தக்கனவாகும்.

**வீரபத்திரர் கோயில்** :- வீரபத்திரர் கோயில்கள் வடமராட்சியில் பல உண்டு. இத்தெய்வம் எதிரிகளை இல்லாதொழிக்கும் தெய்வமாக வழிபடப்பட்டது. சோழர் காலத்திலிருந்து வீரபத்திரர் வழிபாடு வடமராட்சியில் சிறப்புற்றுக் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. பேய், பிசாசுகளால் துன்பம் ஏற்படாதவாறு காக்கும் கடவுளாக வீரபத்திரர் உள்ளார். பொலிகண்டி வீரபத்திர் கோயில் பொங்கலன்று 'சிலம்பம்' (சிலம்படி), 'குதிரையாட்டம்' என்பன சிறப்பாக இங்கு நடைபெற்று வந்துள்ளன. வியாபாரிமூலை வீரபத்திரர் கோயிலில் கூத்துக்கள் பல ஆடப்பட்டு வந்துள்ளன. கற்கோவளம் வீரபத்திரர் கோயில் மிக ஆதியான கோயிலாக காணப்படுகிறது.

**வதனமார்** : மந்தைகளைக் காத்து, இனம் பெருக்கும் தெய்வமாக வதனமார் கருதப்படுகின்றார் வடமராட்சியில் மிகக் குறைந்த அளவிலேயே இவரை மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபட்டு வந்துள்ளனர். ஆனால் மட்டக்களப்பில் இவ்வழிபாடு அதிகமாக உள்ளது. எனினும் வதனமாருக்கென நிரந்தரமான வழிபாட்டிடம் ஏதும் இங்கில்லை. மக்கள் மனங்களே வதனமாருக்குரிய கோயிலாகும். வடமராட்சியில் மந்தை மேய்ப்பு முக்கியத்துவம் பெறாமல் இருந்தமையால் வதனமாரும் முக்கியத்துவம் அடையவில்லை எனலாம்.

**மாடன், மதுரைவீரன்** : மிகவும் குறைவாக இங்கு காணப்படும் வழிபாடுகளில் இதுவுமொன்றாகும். கற்கோவளம் புனிதநகர், பருத்தித்துறை கோணத்தீவு (அவ்வொல்லை) பகுதிகளில் மாடன் வழிபாட்டை அவதானிக்க முடிகின்றது. ஒருவர் இறந்த பின் எட்டாம் சடங்கில் 'கழிப்புச் சடங்குடன்' 'சந்திமாடன்' எனும் தெய்வம் தொடர்புபட்டுள்ளது. கொற்றாவத்தை கிராமத்தில் மட்டும் மதுரைவீரன் கோயில் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. மாடன் மதுரைவீரன் வழிபாடு இந்தியத் தமிழர் மத்தியில் இவ்வழிபாடுகள் அதிகம் பேணப்பட்டு வருகிறது.

**வீறுமர் :** இலங்கையின் ஏனைய பகுதிகளைவிட வடமராட்சியில்த்தான் விறுமர் கோயில்களைக் காணக்கூடியதாயுள்ளது. இது மிகவும் கோபங்கொண்ட தெய்வமாகும். ஆலமரங்களிலும், அதன் கீழுள்ள கல், மரம் போன்றவற்றிலும் விறுமர் குடிகொண்டுள்ளார். 'விறுமற்றை ஆல்' என கற்கோவளம், தும்பளை தெற்கு, மாயக்கை போன்ற இடங்களில் காணப்படுகின்றது. 'விறுமக் குணம் கொண்டவன், சரியான விறுமன்' எனும் சொற்றொடர்கள் இன்றும் பேச்சு வழக்கில் நிலவிவருகிறது. வல்வெட்டித்துறையிலுள்ள 'வேர்க்குத்தி விறுமர் கோயில்' குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

**பணிக்கர்** : திக்கம் கிராமத்தில் பணிக்கர் கோயில் காணப்படுகின்றது. இவர் இந்தியாவிலிருந்து தோணியில் இங்கு வந்தவராகக் கூறப்படுகின்றார். கோயில் மண்டபச் சுவர்களின் வெளிப்புறம் ஓவியமாக, தோணியொன்றில் கடலில் பயணிக்கும் நரைத்த தாடியுடன் கூடிய பணிக்கரும், 3 சீடர்களும் வரையப்பட்டுள்ளனர். இக்கோயிலின் ஒரு பக்கம் அண்ணமார் கோயிலும், மறுபக்கம் பிள்ளையார் கோயிலும் அமைந்துள்ளனது. பணிக்கர் கோயில் வேளாளர் சாதியினருக்குரியதாயினும், ஏனைய சமூகத்தினரும் வேள்வியில் பங்குகொள்வர். அல்வாய் 'வெடிகாத்தான் கோயிலில்' பணிக்கராக சூலம் உள்ளது. இன்பருட்டி மீன்பிடித்தொழிலில் செய்யும் மக்கள் பணிக்கரைத் தமது காவல்த்தெய்வமாகக் கொண்டுள்ளனர். இவர்கள் 'பணிக்கரப்பா' என அழைப்பர். வருடாவருடம் கடற்கரையில் பணிக்கருக்குரிய சடங்குகளை நிகழ்த்திவருகின்றன.

**வீரவாகு தேவர், குறுப்பர்** : தும்பளை மூக்கம் பகுதியில் உள்ள சமூகத்தவரிடையே மேற்படி தெய்வ வழிபாடுகள் காணப்படுகின்றன.

**முதலிப் பேச்சி** : வடமராட்சியில் பேச்சி வழிபாடு பரந்துபட்டுக் காணப்படுகின்றது. கற்கோவளம் 'பேச்சியம்மன் மடை' பெயர்பெற்றதாகும். தும்பளை மேற்குப் பகுதிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல வீடுகளில் போத்துக்கீசர் ஒல்லாந்தர் காலத்தில் உருவாக்கப்பட்ட பேச்சி கோயில்களிலுள்ள தெய்வம் மரமாகவும், சூலமாகவும் காணப்படுகின்றது. புலோலி கிழக்கு ஞான சம்பந்தர் கலைமன்றத்துடன் இணைந்த ‘முதலிப்பேச்சி கோயிலில் முதல்வியம்மன் என்ற பெயர் மாற்றத்துடன் மிகச்சிறப்பாக வழிபாடுகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. பேச்சியில் 3 வகையுண்டு. முதலிப் பேச்சி, கடற் பேச்சி, சுடலைப்பேச்சி (ஆகாசப் பேச்சி) ஆகியன அவையாகும்.

கற்கோவளம் பகுதியில் சுடலைப்பேச்சி காணப்படுகின்றது. கலையாடுபவர் சுடலைக்குச் சென்று எலும்பு எடுத்து வருவதுமுண்டு. தற்போது அங்கு ஒரு பெண் கலையாடும்போது படைக்கப்பட்ட கள்ளுப் போத்தலை எடுத்துக் குடித்தபடி கலையாடுவாள். பல உடுக்குகள் சேர்ந்து இசைக்கப்படும்போது நரம்புகளில் முறுக்கேறி ஆட்டம் வரும். முன்னர் கலையாடிய ஆண் பூசாரியாருக்கு கலையாடும்வேளை நெஞ்சுப் பகுதியிலிருந்து முலைப்பால் சுரக்கும். மச்சப் படையலுடன் கூடிய பேச்சிமடை சாப்பாடு மிக அருமையானதாகும்.

**பூதராயர், நரசிம்மர்** : பருத்தித்துறை பூதராயர் ஒழுங்கையில் பூதராயர் கோயில் ஒன்று காணப்படுகிறத. இது தவிர நரசிம்மர் கோயிலும் ஐயனார் கலட்டியில் உள்ளது. இவ்வழிபாடுகள் வடமராட்சியில் அல்வாய் பகுதியிலும் காணப்படுகிறது.

**நாச்சிமார்** : அண்ணமார், நாச்சிமார் வழிபாடுகள் வன்னிப் பகுதியிலிருந்து வடமராட்சிப் பகுதிக்கு வந்திருக்கலாமெனக் கருதப்படுகின்றது. இந்தியாவிலிருந்து வன்னிக்கு உதவிக்கு வந்த வன்னியர்கள் போரின்போது மாண்டதும், அவர்களைத் தேடிவந்த வன்னிநாச்சிமார் கணவர்மார் இறந்த செய்தியறிந்து, தீயில் விழுந்து மாண்டனர். இவர்களுக்கு பாதுகாப்பாக குதிரைகளில் வந்த 60 பள்ளர்களும் தீயில் விழுந்து மாண்டனர். வன்னி நாச்சிமார் வழிபாடே ‘நாச்சிமார் வழிபாடாகி’ இன்று சப்த கன்னியர் என்று பெயர் மாற்றம் பெற்றுள்ளனர். 60 பேரும் ‘அண்ணமார்’ என்று வழிபாட்டுக்குரியவராயினர். வன்னிப்பகுதிகளுடனான வடமராட்சி மக்களின் தொடர்புகள் காரணமாக இங்கும் அவ்வழிபாடு பரவியிருக்கலாமெனக் கருதப்படுகின்றது

**நாகவழிபாடு** : நாகவழிபாடும் வடமராட்சிப்பகுதியில் குறிப்பிடத்தக்களவில் காணப்படுகின்றது. ‘நாகதம்பிரான் - பெரியதம்பிரான் இணைப்பு வழிபாடும், நாகதம்பிரான் - வல்லிபுர ஆழ்வார் இணைப்பு வழிபாடு மட்டுமன்றி வடமராட்சி கிழக்கில் நாகர்கோயில் இவ்வழிபாட்டின் தனித்துவத்தை வெளிப்படுத்தும் கோயில்களாக உள்ளன. மட்டக்களப்பில் கண்ணகி வழிபாட்டுடன் நாகதம்பிரான் வழிபாடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. சிங்கள மக்களிடையேயும் ‘நாக தெய்யோ’ என வழிபடப்பட்டுவருகின்றது. திருமணமாகாத பெண்களும், குழந்தைப் பாக்கியமில்லாத பெண்களும் நாக வழிபாடு செய்தால் ‘நாகதோசம்’ நீங்கி பேறு கிட்டும் என நம்பப்படுகின்றது. வீடுகளில் நாகபாம்பைக் கொல்லாமல் குடத்தில் பிடித்துக் கொண்டு சென்று வல்லிபுரக்கோயிலிலும், நாகதம்பிரான் கோயிலிலும் விடும் மரபு இருந்துவருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுதெய்வ வழிபாட்டில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள்.

1. செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் அல்லது தினசரி ஆகம முறைப்படி பூசைகள் நடைபெற்றுவருகின்றன.
2. ஆகம விதிப்படி கோயிலின் கட்டிடம் அமைக்கப்பட்டு, விக்கிரகம் பிரதிஸ்டை. செய்யப்பட்டு நித்திய பூசைகள் இடம்பெற்று வருகின்றன.
3. கட்டிடம் கதவுகள் என்பனவற்றின்மூலம் பக்தனுக்கும் தெய்வத்துக்குமிடையே உறவு குறைவடைந்து வருகிறது.
4. இக்கோயில்களிலும் தேர், தீர்த்தம் உட்பட திருவிழாக்கள் பல நடைபெற்றுவருகின்றன.
5. உயிர்ப்பலிகள் தவிர்க்கப்பட்டு வருகின்றன.
6. மச்ச மாமிசம் படைத்தல் தவிர்க்கப்பட்டு வருகின்றது.
7. கோயிலிலுள்ள சிறுதெய்வங்களை அகற்றிவிட்டு, பெருந்தெய்வங்கள் பிரதிஸ்டை செய்யப்பட்டு வருகின்றன. (அண்ணமார் - பிள்ளையாராகவும், பூதராயர் - சிவன், பிள்ளையாராகவும், பேச்சி - முதல்வி அம்மனாகவும், நரசிங்கர் - சிவனாகவும்)
8. கோயில்களில் கும்பாபிசேகங்கள் நடாத்தப்பெறுகின்றன.
9. சிவராத்திரி, திருவெம்பாவை, பிள்ளையார் கதை போன்றன விசேட பூசையாக நடாத்தப்படல்.
10. வருடாந்த மடை தவிர்க்கப்பட்டு, திருவிழாக்கள் மட்டும் நடாத்தப்படுகின்றன.

## முடிவுரை :

தமிழ் மக்களின் ஆதியான வழிபாடுகளில் தற்போது சிறுதெய்வங்களாக இருக்கும் தெய்வ வழிபாடுகள் காணப்பட்டன. ஆரியரின் சமஸ்கிருத ஆதிக்கததின் விளைவாக சிவன், விஷ்ணு தெய்வ வழிபாடுகள் முதனிலைப்பட்டன. அடிநிலைமக்கள் மத்தியல் சிறுதெய்வ வழிபாடும் அதிகம் பேணப்படக்கூடிய சூழல் நிலவியது. இதில் சாதிக்குரிய சிறு தெய்வ வழிபாடும் முக்கியமானது. சிறுதெய்வ வழிபாட்டுடன் தொடர்பாக பல கலைகள் வளர்த்தெடுக்கப்பட்டன. சிறு தெய்வ வழிபாட்டில் இடம்பெறும் கலையாடுதல், கட்டுச்சொல்லுதலின் ஊடாக நோய் நீக்கம் பற்றிய கவனமெடுத்து செயற்படவேண்டும். இவ்வழிபாட்டைப் பேணுதல், ஆய்வுக்கு உட்படுத்துதல் மூலம் எமது பண்பாடு மற்றும் உடல் உள நலம் என்பவற்றை வளர்த்தெடுக்கும் முயற்சிகள் தொடரப்படுவது அவசியமாகும்.

பண்பாடு கருத்தியலினை வெளிப்படுத்தி நிற்பது
கருத்தியலினால் பண்பாடு மாற்றமடையும்.

- இத்தாலி அந்தோனியோ கிறாம்ஸ்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி மண்ணின் சாதனையாளர்கள்

**திரு. பா. மீனாட்சிசுந்தரம்**
வல்வெட்டித்துறை.

## ஆழிக்குமரன் ஆனந்தன்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் கல்வி பயின்று அத்துறையில் தொழில் தேடுவதைவிட்டு சாதனைகள் புரிந்து "கின்னஸ்" புத்தகக்கத்தில் தனது பெயர் இடம்பெறுவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தவர் வல்வை செல்வக்குமார் ஆனந்தன். பத்துக் "கின்னஸ்" சாதனைகளை "கின்னஸ்" புத்தகத்தில் பதித்ததன் பின்னரே எனது சாதனைகளைக் கைவிடுவேன் என்ற உறுதியோடு அதற்கான பயிற்சிகளில் ஈடுபடத்தொடங்கினார். வல்வெட்டித்துறைக்கு பேராதனையிலிருந்து துவிச்சக்கர வண்டியிலேயே வந்து திரும்பிச்செல்வது, பாரத்தைச் சுமந்த வண்ணம் மலையேறுவது போன்ற கடுமையான பயிற்சிகளை மேற்கொண்டார். அவரது சாதனையில் முதலாவதாக 20.03.1963 லிருந்து 22.03.1963வரை வல்வெட்டித்துறையிலிருந்து 38 மைல் தூரமான கோடிக்கரைக்கு பாக்குநீரிணையை நீந்திக்கடந்தது. இச்சாதனை "கின்னஸ்" புத்தகத்தில் பதியப்படாதபோதும் 18.04.1975 - 20.04.1975 வரை தலைமன்னாரிலிருந்து தனுஸ்கோடிக்கு நீந்திச் சென்று நீந்தியே திரும்பிவந்த நிகழ்வு அப்புத்தகத்தில் பதியப்பட்டது. மொத்தமாக இவரது எழு சாதனைகள் "கின்னஸ்" புத்தகத்தில் பதியப்பட்டது அவை :-

1) 2 - 10.05.1979 இல் விகாரமாதேவி பூங்காவைச் சுற்றி 1487 மைல் தூரத்தை 187 மணி 28 நிமிடம் இடைவிடாது சைக்கிள் ஓடியது.

2) 26.12.1979 - 01.01.1980 வரை தொடர்ச்சியாக 136 மணி 28 நிமிடங்கள் "போல் பஞ்சிங்" (Ball Punching) செய்தது.

3) 15.05.1980 இல் இரு நிமிடநேரத்தில் 165 தடவை இருந்து எழும்பியது கொழும்பு வை. எம். சீ.ஏ மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது தொடர்ந்து உடனடியாக

4) 15.05.1980 லிருந்து 17.05.1980 வரை 33 மணிநேரம் தொடர்ச்சியாக ஒற்றைக்காலில் நின்று சாதனை.

5) 31.12.1980 - 01.01.1981 வரை கொழும்பு காலிமுகத்திடலில் 6 மணி 51 நிமிடத்தில் 9100 தடவை High Kiclis என்னும் உலக சாதனை.

6) 30.06.1981இல் தொடர்ச்சியாக 80 மணிநேரம் சென்னை அண்ணா நீச்சல் தடாகத்தில் தண்ணீரில் மிதந்து சாதனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே "கின்னஸ்" புத்தகத்தில் இடம் பெற்ற சாதனைகளைத் தவிர இவரால், மேற்கொள்ளப்பட்ட "கின்னஸ்" புத்தகத்தில் இடம்பெறாத இதர சாதனைகள்.

1) 01.01.1979இல் காலிமுகத்திடலில் தொடர்ச்சியாக 180 மணித்தியாலம் டுவிஸ்ட் டான்ஸ் (Twist Donel) இச்சாதனை மேற்கொள்ளப்பட்ட சமயம் இலங்கை குடியரசுத் தலைவர் கௌரவ ஜே. ஆர். ஜயவர்தனா அவர்கள் நேரில் சமூகமளித்துப் பாராட்டியுள்ளார்.

2) ஆகஸ்ட் 1981இல் 159 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக 296 மைல்கள் நடந்து சாதனை

3) 31.12.1982 இல் 22 அவுன்ஸ் நிறையுள்ள பிலியட்ஸ் தடியை ஒற்றைக்கையினால் 2520 தடவைகள் மேலும் கீழுமாக உயர்த்தி 2 மணி 29 நிமிடங்கள் யாழ்மண்ணில் கடைசியாக நிகழ்த்திய சாதனை.

4) 1978 இல் தொடர்ச்சியாக 128 மணி நேரம் Twist Dance

5) 1980ல் 70 இறாத்தல் எடையுள்ள இரும்பை 26நிமிடம் 10 செக்கனில் 2000 தடவைகள் கீழிருந்து மேலே தூக்கியது.

இளம் வயதிலேயே கால் ஒன்று பாதிக்கப்பட்ட நிலையிலும் இலங்கையிலேயே முதன்முதலில் "கின்னஸ்" புத்தகத்தில் இடம்பெற்ற பெருமையையும் உடையவர் ஆனந்தன். 1981 இல் மோட்டார் கார் விபத்தில் சிக்கி இடுப்பெலும்புகள் உடைந்து சுவாசப்பை பாதிக்கப்பட்டது. அப்படியிருந்தும்கூட 1982இல் சாதனையொன்றைநிலை நாட்டியிருந்தார்.

தனது முழு இலட்சியமான ஆங்கிலக் கால்வாயை நான்கு தடவைகள் நீந்திக்கடக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் ஆங்கிலக்கால்வாயில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த சமயம் எதிர்பாராத விதமாக 1984 ஆகஸ்ட்மாதம் மரணத்தைத் தழுவிக்கொண்டார்.

## நீச்சல் வீரர் மு. நவரத்தினசாமி

தொண்டைமானாறு நவரத்தினசாமி அவர்கள் 1953 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 32 மைல் அகலமான பாக்குநீரிணையை முதன்முதல் நீந்திக்கடந்தவர் என்ற பெருமையைப் பெற்றவர். வல்வெட்டித்துறையிலிருந்து தனது நீச்சல் பயணத்தை ஆரம்பித்து தென் இந்தியாவில் கோடிக்கரையினை 26 மணி 30 நிமிடத்தில் கடந்து முடித்துள்ளார். திரு.மு. நவரத்தினசாமியின் சாதனையைக் கேள்விப்பட்ட பிரிட்டிஷ் மகாராணி அவரைப் பாராட்ட விருப்பம் தெரிவித்தபோது ஆட்சியாளர் பெரும் எதிர்ப்பைத் தெரிவித்ததோடு பலமுட்டுக்கட்டைகளையும் போட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தவிடயத்தில் பிரிட்டிஷ் மகாராணி அவர்கள் உறுதியாக இருந்ததைத் தொடர்ந்து ஆட்சியாளர் அனுமதித்தனர். மகாராணி நவரத்தினசாமியுடன் கைகுலுக்கியதோடு கார் ஒன்றை அன்பளிப்புச்செய்து சான்றிதழும் வழங்கிச் சென்றார். திரு. நவரத்தினசாமி அவர்களையே ஆழிக்குமரன் ஆனந்தன் தனது குருவாக ஏற்றவர்.

## திரு. க. தம்பிப்பிள்ளைத் தண்டயல்

இரண்டாம் உலகப்போர், போர்த்துக்கேயர் காலம் ஆகியனவற்றிற்கு முன்னரே பல நூற்றாண்டு காலமாகத் தமிழ்ப் பேரரசர் ஆழ்கடலை தங்கள் வலிமையாலும், கடலோடும் மற்றும் கப்பல் கட்டும் திறமையினாலும் கட்டி ஆண்டிருக்கின்றார்கள். வல்வெட்டித்துறையைச்சேர்ந்த தண்டயல்கள் கடல் பற்றிய அறிவு, அனுபவம், ஆளுமை, அலைகள், சூறாவளிகள் போன்றனவற்றிற்கு ஏற்றவாறு கப்பல்களைச் செலுத்துவதில் வல்லவர்களாக இருந்துள்ளார்கள். இந்தவகையில் வல்வை திரு. க. தம்பிப்பிள்ளைத் தண்டயல் 89 அடிநீளமான இரட்டைப்பாய்மரக் கப்பலாக "அன்ன பூரணி" என்னும் பாய்க்கப்பலை இயந்திரம் பூட்டப்பட்டநிலையிலும் அதனைப் பாவிப்பதைத்தவிர்த்து பாய்களின் உதவியுடனேயே அமெரிக்கா கொண்டு சென்று ஒப்படைத்துள்ளார். மிகக்குறைந்த மாலுமிகளுடன் 27.02.1937இல் வல்வெட்டித்துறையிலிருந்து புறப்பட்ட அன்னபூரணி 02.08.1938இல் அமெரிக்காவின் "மசாசூசெற்ஸ்" மாகாணத்தில் உள்ள குளோசெஸ்டர் துறைமுகத்தை அடைந்தது. இந்து சமுத்திரம், அரபிக்கடல், செங்கடல் சூயெஸ் கால்வாய், மத்தியதரைக்கடல், அத்திலாந்திச் சமுத்திரம் போன்றவற்றினூடாகச் சென்ற "அன்னபூரணி பாய்க்கப்பல் இடையில் பயங்கரச்சூறாவளியையும் சந்தித்தது எதுவித பாதிப்புகளும் இல்லாமல் திரு. தம்பிப்பிள்ளை அவர்களினால் கொண்டு செல்லப்பட்டு கப்பல் உரிமையாளர் திரு. வில்லியம் அல்பேட் றொபின்சன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

பிரிட்டிஷாருக்குச் சொந்தமான Brig. Atlantic King என்னும் கப்பல் நீரில் மூழ்கிய சமயம் உரிமையாளர்களால் அதனை மீட்டெடுக்க முடியாது போகவே அக்கப்பலை கடலில் மூழ்கிய நிலையிலேயே விலைகொடுத்து வாங்கி மீட்டெடுத்த திரு. திருமேனியார் வெங்கடாசலம்பிள்ளை என்பவரின் சகோதரரான தம்பிப்பிள்ளை என்பவரின் பேரனே தண்டால் க. தம்பிப்பிள்ளை என்பவராவர்.

### இலங்கைத் தமிழ்

க்ரியாவின் தற்கால தமிழ் அகராதியில் விரிவாக்கித் திருத்திய பதிப்பு என்ற ஓர் புதிய பதிப்பு வெளிவந்துள்ளது. இதில் ஓர் புதுமையான அம்சம் உள்ளது. 1700 இலங்கைத் தமிழ் வழக்குச் சொற்கள் இவ்வகராதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ் இலங்கைத் தமிழ் வழக்குச் சொற்களைத் தொகுத்து வழங்கியவரில் ஒருவர் இ. து. குலசிங்கம் என்பவராவார். இவர் உதயன் புத்தகசாலை உரிமையாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் நிறைந்த நன்றிகள்

பருத்தித்துறை பிரதேச செயலக கட்டடத்திறப்புவிழா காணும் இந்நன்நாளில், இக்கட்டடம் அமைப்பதற்கான காணியை கொள்வனவு செய்ய தியாக சிந்தனையுடன் நிதி உதவி வழங்கிய மக்களுக்கும், வர்த்தக அன்பர்களுக்கும் கிராம மட்ட நிறுவனங்களுக்கும், பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும் நிறைவான பணியாற்றிய காணிக்கொள்வனவு குழுவினருக்கும் முதற்கண் நன்றிகள்.

புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் விழாவிலும் அதனைத்தொடர்ந்த வேலைகளிலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அந்நாள் பிரதேச செயலாளர் திரு. ஆ. சிவசுவாமி அவர்களும் ஆரம்பகட்ட நிதியினை ஒதுக்கித்தந்த அந்நாள் அரசாங்க அதிபர், திரு. செ. பத்மநாதன் அவர்களும், அடிக்கல் நாட்டி ஆசிவழங்கிய இராமகிருஷ்ண மிஷன் இலங்கைக் கிளையின் தலைவர் சுவாமிஜி ஆத்மகணானந்தர் மகாராஜி அவர்களும் தேவையான நிதி ஏற்பாடு செய்து கூடிய விரைவில் கட்டி முடிக்க வேண்டுமென்று அயராது பாடுபட்ட இந்நாள் அரசாங்க அதிபர் திரு. க. கணேஷ் அவர்களும், மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஆ. சிவசுவாமி அவர்களும், சிறப்பாக மேற்பார்வை செய்த கட்டடத்திணைக்கள (மத்தி) அலுவலர்களும், எமது விருப்பங்களுக்கமைய மாற்றியமைத்தும் மிக நேர்த்தியாகவும் வேலைகளை நிறைவேற்றிய V.T கட்டட ஒப்பந்தகாரரும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிக்குரியவர்கள்.

கட்டடத்திறப்புவிழா சிறக்க உதவிய பருத்தித்துறை நகர வர்த்தக அன்பர்களுக்கும் விழா அழைப்பிதழ் அனுசரணைவழங்கிய வல்வை ஒன்றியத்திற்கும் பத்திரிகை சிறப்புமலர் அனுசரணை வழங்கிய பருத்தித்துறை இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, நெல்லியடி ஹற்றன் நஷனல் வங்கி, வர்த்தக வங்கி, சுன்னாகம் EUT ஆகியோருக்கும் மதிய உணவு அனுசரணை வழங்கிய Blue Ribbon Hotel உரிமையாளருக்கும் சிற்றுண்டி, குளிர்பானம் வழங்கிய பருத்தித்துறை, புலோலி ப. நோ. கூ. சங்கங்களுக்கும் திறப்புவிழா மலர் வெளியீடு என்பவற்றிற்கு நிதி வழங்கிய எமது உத்தியோகத்தர்கள், எமது பிரதேச வர்த்தகர்கள், வடமராட்சி மணல் ஏற்றும் சங்கத்தினர், கெருடாவில் வடக்கு கி. அ. சங்கம், தொண்டைமானாறு கடற்றொழிலாளர் சங்கம், ஆதிகோவிலடி மாதர் கி. அ. சங்கம், ஆதிகோவிலடி சன சமூக நிலையம், ஆதிகோவிலடி ஆதிவைரவர் தேவஸ்தானம், ஆதிகோவிலடி சமூக அபிவிருத்திச்சபை, வல்வெட்டித்துறை கடற்றொழிலாளர் சங்கம், ரேவடி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக அபிவிருத்திச் சபை, மற்றும் சிறப்புப் பிரதி பெறும் அன்பர்களுக்கும், விருத்தினர் அழைப்பு ஊர்வலத்திற்கு பாண்ட் இசை வழங்கிய பாடசாலைகள், புலோலி தெற்கு கிராம அலுவலர் திரு. நா. குமரகுருநாதன் ஆகியோருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகள்.

உங்கள் கைகளில் தவழும் இச் சிறப்பு மலரின் மலர்வுக்கு அரும்பாடுபட்ட மலர்க்குழுவினருக்கும் ஆசியுரைகள், வாழ்த்துரைகள் வழங்கிய மதகுருமார்களுக்கும் அரச உயர் அதிகாரிகளுக்கும் ஆக்கங்களைத் தந்துதவிய பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்விமான்கள், உத்தியோகத்தர்களுக்கும் அழகிய முறையில் கணனி வடிவமைத்த திருமதி. சி. பத்மலோஜினி அவர்களுக்கும் கவர்ச்சியாக அட்டைப்படத்தினை வடிவமைத்துத்தந்த பருத்தித்துறை திரு ஸ்ரூடியோ உரிமையாளருக்கும் உரிய நேரத்தில் நேர்த்தியாக அச்சுப்பதிப்பு செய்துதந்த நெல்லியடி தமிழ்ப்பூங்கா அச்சகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இறுதியாக பிரதேச செயலக கட்டடத்திறப்பு விழா சிறப்பாக நடைபெற அயராது பாடுபட்ட எமது அலுவலக உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள் அனைவருக்கும் இதயம் கலந்த நிறைவான நன்றிகள் உரித்தாகட்டும்.

**~ விழாக்குழு ~**
**பிரதேச செயலகம்**
**வடமராட்சி வடக்கு,**
**பருத்தித்துறை.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப்பூங்கா அச்சகம்,
நெல்லியடி, கரவெட்டி.
T.P : 021 - 226 4014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org